நாட்டுப்பாடல் வெளியீடு—5

# ஐவர் ராசாக்கள் கதை

பதிப்பாசிரியர்
நா. வானமாமலை, எம் ஏ.,எல்.டி.

மதுரைப் பல்கலைக்கழகம்
மதுரை-2

முதற் பதிப்பு : ஜனவரி, 1974

நாட்டுப்பாடல் வெளியீடு—5

ஐவர் ராசாக்கள் கதை

விலை ரூ. 7-50

அச்சிட்டோர் :
நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்
சென்னை-58.

# பொருளடக்கம்


பக்கம்

1. முன்னுரை

ஆராய்ச்சியுரை, செவிவழிச் செய்திகளும் தொல்பொருட் சான்றுகளும், சாசனச் சான்றுகள், பஞ்ச பாண்டியர், பாண்டியர் ஏற்றம், பாண்டியர் தாழ்வு, மாலிக்காபூர் மதுரை சுல்தானிய ஆட்சி, சுல்தானிய ஆட்சியை ஒழிக்கக் கன்னடியர் வருகை, தொன்காசிப் பஞ்ச பாண்டியன், பராக்கிரம பாண்டியன், கன்னடியர் படையெடுப்பு, வெட்டும் பெருமாள், வள்ளியூர் குலசேகரன், கன்னடியர் வந்ததேன், இப்போர்க் காலம், கதைப் பாடல் இயல்பு, கதையமைப்பு, மூலப்பிரதிகள் பெயர்த்தெழுதல் ... *1—32*

2. மூலம் (TEXT) ... *33—218*

3. வீணாதி வீணன் கதை ... *219—248*

பிற்சேர்க்கை

# ஐவர் ராசாக்கள் கதை

## முன்னுரை

1957-ல் முத்துப்பட்டன் கதை பற்றிய சரித்திர உண்மைகளை ஆராய்ந்து வந்தேன். அப்பொழுது கல்லிடைக்குறிச்சியில் வாழ்ந்து வந்த முத்துப்புலவர் என்ற வில்லுப்பாட்டுப் புலவரைச் சந்தித்து இக்கதை விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தேன். அவர் முத்துப் பட்டன் கதை சம்பந்தமான பல அபூர்வமான தகவல்களை எனக்குச் சொன்னார். அது முடிந்ததும் வீணாதிவீணன் கதையைப் பற்றி கேட்டேன். அவர் அக் கதையை வில்லுப் பாட்டாகப்பாடும் வழக்கம் நின்று விட்டதென்றும், வள்ளியூர், பணகுடிப் பகுதிகளில் இக்கதையைப் பற்றி விசாரிக்கலாமென்று சொன்னார். அதோடு சிங்கம்பட்டியில் வாழ்ந்துவந்த ஒரு முதியவரிடம் கேட்டால் ஒரு வேளை இக்கதையின் விவரங்களை அறியலாம் என்றும் சொன்னார். அவர் பெயர் சிவசுப்பிரமணியத் தேவர். வயது 94.

அவர் நாட்டுக் கதைப்பாடல்கள் பலவற்றை அறிந்திருந்தார். வீணாதிவீணன் கதைக்கும் ஐவர் ராசாக்கள் கதைக்கும் தொடர்பு உண்டு என்று அவர் கூறினார். ஐவர் ராசாக்கள் கதை என்ன வென்றே எனக்கு அப்பொழுது தெரியாது. அவர் ஐவர் ராசாக்கள் கதை, பஞ்சபாண்டியர் கதை, கன்னடியன் படைப் போர், உலக முழுதுடையாள் கதை, வெட்டும் பெருமாள் கதை என்ற ஐந்து கதைப் பாடல்களும் ஒரே வரலாற்றைச் சொல்லுவன என்று தெரிவித்தார்.

இக் கதைகளின் சுருக்கத்தையும் கீழ்வருமாறு தெரிவித்தார்.

தென் தமிழ் நாட்டில் பாண்டிய குலச் சகோதரர்கள் ஐவர் ஐந்து கோட்டைகள் கட்டி ஆட்சி செய்து வந்தார்கள். அவர்களுள் மூத்தவன் குலசேகரன். இவன் கழைக்கூத்தி ஒருத்தியைக் காதலித்து மணந்து கொண்டான். அவளுக்கு உலக முழுதுடை யாள் என்ற அரசபட்டமும் வழங்கினான். சில நாட்களுக்குப் பின் வெங்கல ராசன் என்ற கன்னடிய மன்னன் ஐந்து பாண்டியர்

கோட்டைகளையும் கைப்பற்றப் படையெடுத்தான். ஐந்து சகோதரர்களும் படைதிரட்டி அவனை விரட்டினார்கள். கன்னடியன் தோற்றோடிய பின் குலசேகரன் கோட்டைப் பாதுகாப்பை காளிங்கன் என்ற தளபதியிடம் ஒப்படைத்துவிட்டு மதுரைக்குச் சென்று விட்டான். படையெடுப்பு அபாயம் மறைந்ததும், வள்ளியூர் அரசாங்க நிர்வாகத்தில் ஊழல்கள் மலிந்தன. லஞ்சமும், அநியாயமும் தலை தூக்கின. இக் காலத்தில்தான் வீணாதிவீணன் கலகம் தோன்றியது. அவன் குலசேகரன் ஆணையென்று பறை சாற்றி குடக்காசும், கலியாண வரியும், சாவு வரியும் வசூலித்தான். இதையறிந்த குலசேகரன் நாடு திரும்பினான். இதற்குள் வீணாதி வீணன் கோட்டையெழுப்பி போட்டியாட்சி நடத்தத் துவக்கினான். குலசேகரன் தனது தம்பிமாரை வரவழைத்து அவன்மீது படையெடுத்தான். வீணாதிவீணன் கைதியானான். தன் கதை முழுவதையும் சொன்னான். நியாயமான வழியில் வாழ வகையற்றுப் போனதால் கொள்ளையடித்து அதில் காவலருக்கும், ராணுவத்திற்கும், அதிகாரிகளுக்கும் பங்கு கொடுத்து தானும் பெருஞ் செல்வம் சேகரித்ததாகச் சொன்னான். இந்நிலைமை அரசனுக்கு விளங்கும்படி செய்யவே பகிரங்கமாகக் கோட்டை கட்டியதாகவும் கூறினான். அரசன் கொடுத்த தண்டனைக்கு உட்படுவதாகக் கூறி வணங்கினான். அரசன் அவனை இளைய மந்திரியாக்கிக் கொண்டான். பின்னர் நடந்த கன்னடியன் போரில் வீணாதிவீணன் குலசேகரனுக்காக போராடி உயிர் துறந்தான்.

இரண்டாவது கன்னடியன் போர் திருமண மறுப்பால் தொடங்கியது. கன்னடியன் தன் மகளைக் குலசேகரனுக்கு மணம் பேசித் தூதனுப்பினான். குலசேகரன் மறுக்கவே போர் தொடங்கிற்று. வள்ளியூர் கோட்டை அழிந்தது. குலசேகரனைத் தவிர, அரசகுலத்தினர் அனைவரும் போரில் மாண்டனர். குலசேகரன் சிறைப் பட்டான். அவனைப் பல்லக்கில் தூக்கிச் சென்று தன் மகளுக்கு மணம் செய்விக்கக் கன்னடியன் முயன்றான். ஆனால் குலசேகரன் பல்லக்கிலேயே வைரம் தின்று உயிர் விட்டான். கன்னடிய இளவரசி இதையறிந்து உயிர்நீத்த குலசேகரனுக்கு மாலையிட்டு உடன் கட்டையேறினாள்.

இக்கதையை சிவசுப்பிரமணியத்தேவர் சொல்லக் கேட்டு நான் அக்கதைப் பாடல் பிரதி கிடைக்குமா என்று தேட ஆரம்பித்தேன். பல நண்பர்களிடம் சொல்லி வைத்தேன். வில்லுப்பாடல் புலவர்களை விசாரிக்கச் சொன்னேன். தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் தேடினேன். பலவாண்டுகளாகத் தேடியும் இக் கதைப் பாடல் பிரதியெதுவும் கிடைக்கவில்லை.

ஆனால் சாதி வரலாறுகள் பற்றிய சில நூல்களில் இக்கதையைப் பற்றிய குறிப்புகள் கிடைத்தன. "மறவர் வரலாறு" என்ற நூலில் பஞ்சபாண்டியர் கதைச் சுருக்கத்தைப் படித்தேன். அப்பெயருடைய வில்லுப்பாட்டு இருப்பதாக ஆசிரியர் குறிப்பிட்டிருந்தார்.

"நாடார் மன்னரும், நாயக்க மன்னரும்" என்ற நூலில் 'ஐவர் ராசாக்கள்' கதை என்ற கதையின் சுருக்கத்தைக் கண்டேன். 'சண்பகராமன் பள்ளு' என்ற புத்தக விளம்பரத்தைப் பார்த்தேன். விளம்பரத்தில் "வில்லுப்பாட்டின் கதையை வசனத்தில் எழுதியது" என்று குறிப்பிடபட்டிருந்தது. அந்த நூல் அச்சான அச்சகத்திற்கு எழுதினேன். அவ்விலாசத்தில் அச்சகம் இல்லை என்று கடிதம் திரும்பி விட்டது. நாகர்கோவிலில், அச்சக விலாசமிருந்தால் அந்நகரிலுள்ள நண்பர்களுக்கு எழுதினேன். அந்த விலாசத்தில் 20 வருஷங்களுக்கு மேலாகவே ஒரு ஜவுளிக்கடை இருப்பதாகவும், அதற்குமுன் ஒருவேளை அங்கே அச்சகம் இருந்திருக்கலாமென்றும் நண்பர்கள் தெரிவித்தார்கள்.

இச்சமயத்தில் என் நண்பர் நல்லகண்ணு "ஐவர் ராசாக்கள் கதை" என்று முகப்பு வரையப்பட்ட ஏட்டுப் பிரதியொன்றை மிகவும் சிரமமெடுத்துக் கொண்டு யாரிடமோ வாங்கிவந்தார். பழையகாலத்து ஏடு. சிற்சில இடங்களில் கரையானும், பூச்சிகளும் அரித்த துவாரங்கள். முழுதும் இரண்டு நாளில் படிந்து முடித்தேன்.

நான் பல வருஷங்களாகத் தேடிக் கொண்டிருந்த கதைப் பாடலின் முதல் பகுதி இது. சுமார் 20 ஏடுகளில் குலசேகரப் பாண்டியன் பிறப்பு வளர்ப்பு மட்டும் வில்லுப்பாட்டு வடிவத்தில் வரையப் பட்டிருந்தது. கதையாரம்பம் மட்டும்தான் அது. சில நாட்களுக்குப் பிறகு ஒரு நண்பர் 'மாலையம்மை கதை' என்றோர் கதையை எனக்கு அனுப்பி வைத்தார். மாலையம்மை குலசேகரனின் தாயார். அவள் ஐந்து குழந்தைகள் பெற்ற கதையைத்தான் இப்பாடலும் சொல்லுகிறது.

கன்னடியன் சண்டையைப்பற்றியும், வீணாதி வீணன் கலகத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியாதபடி பல ஏட்டுப் பிரதிகளும்அழிந்து விட்டனவோ என்று நான் வருந்தினேன். நாட்டுக் கதைப் பாடல்கள் காலத்தால் முந்தியதும் பெரியதும், வரலாற்றுச் சம்பவங்கள் பற்றியும், சமூகவாழ்க்கை பற்றியும் நாம் அறியாத புதிய விவரங்கள் அளிப்பதுமான இக்கதை கிடைக்காமலே போய் விடுமோ என்று எண்ணினேன்.

ஒருநாள் தற்செயலாக எனது பழைய தமிழாசிரியரும் இலக்கிய ரசிகருமான திரு. அருணாசலக் கவுண்டர் அவர்களைக் கண்டு

பேசிக் கொண்டிருந்தேன். எனக்குத் நாட்டுப் பாடல் துறையில் ஆர்வம் உண்டென்பதும், இரண்டு தொகுப்புகள் நான் வெளியிட்டிருந்ததும் அவர்களுக்குத் தெரியும்.

"நீ நீண்ட கதைப் பாடல்களை வெளியிட எண்ணியிருக்கிருயா? என்னிடம் ஐவர் ராசாக்கள் கதையொன்று இருக்கிறது. கதை முழுவதும் இருக்கிறது. எழுதிய தாள் மிகவும் பழமையானது. கைப்பட்டாலே நொறுங்கிவிடும். நீ வெளியிடுவாயானுலோ, அல்லது ஆராய எண்ணிஞலோ உனக்கு அதனைக் கொடுத்து விடுகிறேன்" என்ருர்கள்.

எனக்குப் பேசவே ஓடவில்லை.

"எத்தனை வருஷங்களாக இது உங்களிடம் இருக்கிறது?" என்று கேட்டேன்.

"பத்து வருஷமாக" என்ருர்கள்.

நான் பத்து வருஷமாக இக்கதையைத் தேடியலைந்து அலுத்துப் போன விவரங்களையெல்லாம் கூறினேன்.

"என்னிடம் கேட்டிருக்கக் கூடாதா?" என்ருர்கள்.

"உங்களுக்கு இத் துறையில் ஆர்வமுண்டு என்று எனக்கு எப்படித் தெரியும்? இலக்கிய வரலாற்றிலும், இலக்கிய ரசனையிலும், தமிழர் வரலாற்றிலும் உங்களுக்கு ஆர்வமுண்டு என்பது எனக்குத் தெரியும். நான் தேடிக் கொண்டிருக்கும் கதை உங்களிடம் இருக்கு மென்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும்?" என்றேன்.

கதைப்பாடல் எழுதிய நோட்டுப் புத்தகங்களை அனுப்பி வைத்தார்கள்.

அது 1828ல் எழுதப்பட்டது. ஆனுல் பாடல் முதலில் தோன்றியது. அதற்கு சில நூற்ருண்டுகளுக்கு முன்ஞல், இப்பிரதி ஏட்டுப் பிரதியிலிருந்து பெயர்த் தெழுதப்பட்டது.

முழுதும் படித்துப் பார்த்தேன். முழுக்கதையும் இருந்தது. சிற்சில இடங்களில் துளைகள் இருந்தன. ஆயினும் முழுவதும் வாசித்து விட முடிந்தது.

இக்கதையின் ஒரு கிளைக்கதையாய் வீணுதிவீணன் கதை காணப்பட்டது. ஐவர் ராசாக்கள் - கதையும், வீணுதிவீணன் கதையும் நாட்டுப் பாடல் இலக்கியத் துறையில் மிகச் சிறந்த படைப்புகள்.

இதற்கு பிறகு என் நண்பர் ராமச்சந்திர டோகோ அகஸ்தீசு வரம் ஆறுமுகசாமி நாடாரிடமிருந்து ஒரு பிரதியை வாங்கி புதி தாக எழுதவித்து அனுப்பினர். அப்பிரதியில் ஆரம்பத்தில் சில பக்கங்களும், முடிவில் 40 பக்கங்களும் இல்லை. இந்நூலின் மூலத்தை எழுத பல பிரதிகளையும் நான் பயன்படுத்தியுள்ளேன்.

## ஆராய்ச்சியுரை

கன்னடியர் படையெடுப்பின் போது பாண்டியர்கள் எதிர்த்துப் போராடிய வரலாற்று நிகழ்ச்சியே ஐவர் ராசாக்கள் கதையின் கருவாகும்.

இக் கதையொன்று மட்டுமில்லாமல் இன்னும் பல கதைகளும் இந்நிகழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டு வழங்கி வந்திருக் கின்றன. "பஞ்ச பாண்டியர் கதை" "வெட்டும் பெருமாள் கதை" "கன்னடியன் படைப்போர்" முதலியன அவை.

இவையாவும் பலவிடங்களில் பாண்டியரும் கன்னடியரும் போராடியதாகக் கூறுகின்றன. முடிவில் பாண்டியர் உயிர் நீத்த தாகவும் கூறுகின்றன.

எனவே இக்கதைகள் ஒரே ஒரு நிகழ்ச்சியை குறிப்பிடுவனவல்ல, பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்த ஆதிக்கப்போராட்டத் தில், சிற்சில பகுதிகளில் நடந்தவற்றை முதன்மைப்படுத்தி, பல் வேறு நிகழ்ச்சிகளையும் கதையோடு பொருத்திக் கற்பனையால் இணைத்துக் கூறுகின்றன.

## செவிவழிச் செய்திகளும் தொல்பொருள் சான்றுகளும்

கன்னடியன் பாண்டியன் போர் பலவிடங்களில் நடந்ததாக நெல்லை மாவட்டத்தில் செவிவழிச் செய்திகள் வழங்கி வருகின்றன. அதற்கு ஆதாரமாகச் சிற்சில தொல்பொருள் சான்றுகளும் கிடைத்துள்ளன,

கயத்தாற்றின் அருகில் வெங்கல ராசனுக்கும், வெட்டும் பெருமாள் ராசாவுக்கும் போர் நடந்ததாகவும், அப்போரில் கயத் தாற்றுக் கோட்டை அழிந்ததாகவும், வெட்டும் பெருமாள் போரில் மாண்டதாகவும் செவிவழிச் செய்திகள் அப்பகுதியில் வழங்கி வருகின்றன. இதற்குச் சில கல் வெட்டுக்களும் இளவேலங்

...லில் காணப்படும் சிற்பங்களின் சித்திரங்களும், தொல்பொருள் சான்றுகளாகக் காட்டப்படுகின்றன. கோட்டையின் சில பகுதிகள் இன்றும் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன. எனவே கயத்தாற்றில் ஒரு போர் நிகழ்ந்தது என்றும் அப்போரில் வெங்கல ராசன் ...ற்றி பெற்றான் என்றும் முடிவு செய்யலாம். இப் போரைப் பற்றிய கதைதான் "வெட்டும் பெருமாள்" கதை. இக் கதை சாதி வரலாற்று நூல்கள் சிலவற்றில் காணப்படினும், அச்சு நூலாகவோ, ஏட்டுப் பிரதியாகவோ இதுவரை எங்கும் அகப்படவில்லை. இக்கதைப் பாடலில் வெட்டுமாறன் என்னும் அரசன் கதாநாயகனுக்குப் பெண் கொடுத்த மாமனாராகப் போற்றப்படுகிறான். கன்னடியருக்கும் பாண்டியருக்கும் போர் நிகழ்ந்த இடமாகக் காட்டப்படும் மற்றோரிடம் நெல்லை மாவட்டத்தில் நாகர்கோவில் செல்லும் பாதையில் நெல்லையிலிருந்து முப்பது மைல் தூரத்திலுள்ள வள்ளியூர் என்னும் சிறு நகரமாகும். இங்கு குலசேகரப் பாண்டியன் வாழ்ந்ததாகவும், அவனுடைய கோட்டையைக் கன்னட அரசன் அழித்து அவனையும் சிறைப் பிடித்ததாகவும் நாட்டுப்பாடல்கள் கூறுகின்றன. இதற்கு ஆதாரமாக ஊருக்கு வெளியே உள்ள புஞ்செய் நிலங்களில் இன்று கிணறு வெட்டும் பொழுது புதைந்து கிடைக்கும் கற்றூண்களைக் காணலாம். அவை நாயக்கர் காலத்திற்கு முந்தைய சிற்ப அமைப்புடையவை. இப்பகுதியில் மூன்றுயுகங் கொண்ட அம்மன் என்ற பெயரில் ஒரு பீடம் இருக்கிறது. அதனை "மூன்றுலகுங் கொண்டாள்" என்ற பெயரின் திரிபு என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் வள்ளியூரிலிருந்து கண்டெடுத்த கல்வெட்டும், நாகர்கோவிலின் ஒரு பகுதியான ஒழுகின சேரியிலிருந்து கண்டெடுத்த கல்வெட்டும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டு பிடித்து இவையிரண்டும் ஒரே மன்னன் காலத்தில் அவனுடைய ஆசைநாயகியால் வெட்டப் பெற்றவை என்றும், அவள் பெயராலேயே 'உலகமுழுதுடையாள் சேரி' என்ற பெயரோடு அக் கோயில் கட்டப்பெற்ற இடம் வழங்கப் பெற்றதென்று கூறுகிறார்கள். எனவே வள்ளியூரில் நாயக்கர் காலத்திற்கு ...ரே தமிழ் மன்னர் குலத்தின் கிளையொன்று ஆண்டு வந்தது ...கு, செவிவழிச் செய்திகளும், புதை பொருள்களும் ...களும் ஆதாரமாக அமைகின்றன.

நெல்லை மாவட்டத்தின் மேல் பகுதியில் சேரன் மாகாதேவி யென்னும் ஊரின் அருகில் சில பகுதிகள் கன்னடியர் போரில் தொடர்பு கொண்டதாக செவிவழிச் செய்திகள் வழங்கிவருகின்றன. தாமிரவருணியின் முக்கிய கால்வாய்க்கு கன்னடியன் கால் என்றே பெயர் வழங்குகிறது. தனக்கு கப்பம் கட்டி வந்த தென்காசிப்

பாண்டியனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை அக்கிரமித்துப் பிடித்துக் கொண்டதற்காக, கேரள மன்னனைத் தாமிரவருணிக் கரையில் எதிர்த்து வெற்றி கொண்டு தாமிரவருணிக் கரையில் வெற்றித் தூண் நாட்டியதாக அச்சுதராயனுடைய சாசன மொன்று கூறுகிறது. இவ் வெற்றிக்குப் பின்னர் பாண்டியன் மகளை அவன் மணந்து கொண்டு இரு மன்னர் குலத்திற்கிடையே உறவு ஏற்படுத்திக் கொண்டான் என்றும் விஜய நகர சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். 'இப்பகுதிகளில் கன்னடியர், கேரள அரசர்களோடும் அவர்களோடு நேசம் கொண்டிருந்த வேறு சிற்ற ரசர்களோடும் போராடியிருக்க வேண்டும்.

இவ்வாறு பல போர்கள் கன்னடியருக்கும் பாண்டிய குலத் தினருக்கு மிடையே நடை பெற்றிருக்கின்றன என்பது பல ஆதா ரங்களின் மூலம் நமக்குத் தெளிவாகிறது. இப்போர்கள் எப் பொழுது தொடங்கின? இப்போர்களில் பங்கு கொண்டவர்கள் யார் யார் என்ற வினாக்களுக்கு நமக்கு கிடைக்கும் ஆதாரங்களி லிருந்து ஓரளவு தெளிவான விடை கூற முடிகிறது.

## சாசனச் சான்றுகள்

பாண்டியர்கள் மதுரையையும் கொற்கையையும் தலைநகர் களாகக் கொண்டு ஆண்டு வந்தார்கள் என்பதைச் சங்க நூல்களும் பிற்காலக் கல்வெட்டுகளும் நமக்குத் தெளிவாக்குகின்றன. சோழர் களின் ஆதிக்க காலத்தில் பாண்டியர்கள் பெருமை குன்றித் தங்கள் தலைநகரைக் கைவிட்டு தெற்கே குடிபெயர்ந்து தென்காசி, கரிவலம் வந்த நல்லூர் முதலிய ஊர்களில் தங்கி ஆட்சியை நிறுவிக் கொண்டனர் என்று கருதச் சான்றுகள் உள்ளன. ஆயினும் அவர்கள் மதுரையைக் கைவிட்டு விடாமல் பல சோழ மன்னர்கள் காலங்களில் மதுரையைக் கைப்பற்றி ஆண்டு வந்தனர் என்பது, சோழ மன்னர்கள் பன்முறை மதுரைமீது படையெடுத்துச்சென்று மதுரையிலிருந்து பாண்டியர்களை விரட்டி விட்டதாக தங்கள் மெய்க் கீர்த்திகளில் கூறிக்கொள்ளுவதிலிருந்து விளங்குகிறது. முத லாம் ராஜேந்திரன் தனது இரண்டாவது மகனை சுந்தரச் சோழ பாண்டியன் என்ற பட்டப்பெயரோடு மதுரையை ஆள நியமித் தான் என்பது அவனது சாசனங்களால் விளங்கும். ஆனால் அவனுடைய காலத்திற்குப் பிறகு பல சோழ மன்னர்கள் மதுரை யைக் கைப்பற்றித் தீக்கிரையாக்கியதாக தமது கல்வெட்டுக்களில் சொல்லிக் கொள்ளுகிறார்கள். எனவே வலிமை குன்றிய போது மதுரையை விட்டு வெளியேறிய பாண்டியர்கள், தெற்கே சென்று

படை திரட்டிக் கொண்டு வந்து மறுபடியும் மறுபடியும் தங்களது புராதனத் தலைநகரைக் கைவசமாக்கிக் கொண்டுள்ளார்கள் என்று தோன்றுகிறது.

## பஞ்ச பாண்டியர் — பெயர்க்காரணம்

இனி 'பஞ்சபாண்டியர்,' 'ஐவர் ராசாக்கள்' என்ற தொடர் எப்பொழுது தோன்றியது என்று காண்போம். 'கௌரியர்' 'பஞ்சவர்' என்ற பெயர்கள் 7ம் நூற்றாண்டிற்கு முன்னரே பாண்டியர்களுக்கு வழங்கிய பெயர்களாகத் தோன்றுகிறது. அவர்கள் தம்மை சந்திர குலத்தவர் என்று கருதிக் கொண்டதும் அருச்சுனனோடு தம் குலப்பெண் ஒருத்தி மண உறவு கொண்டதாக மகாபாரதம் கூறுவதைக் கொண்டும் இப்பெயர்களை அவர்கள் மேற்கொண்டனர் என்று கருதலாம். ஆனால் இச்சொற்களும் 'ஐந்து' என்ற பொருள் இருந்ததாகத் தெரியவில்லை.

'ஐந்து மன்னர்கள்' என்ற பொருளில் முதன் முதலில் முதலாவது குலோத்துங்க சோழன் சாசனமொன்றில் பாண்டியர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். ஐந்து பாண்டிய மன்னர்களை ஒரு போரில் வென்றதாக அச்சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. இது குறித்து கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், "ஐந்து பாண்டியர்களுக்குள் நாட்டைப் பாகுபாடு செய்து கொண்டு, அவர்களுள் ஒருவனைத் தலைவனாகவும் முடிமன்னனாகவும் ஒப்புக் கொண்டு நாட்டைப் பரிபாலனம் செய்துவந்த முறை பல காலமாக வழக்கத்திலிருந்தது" என்று கூறுகிறார்.

முதலாம் ராஜேந்திரனுடைய காலத்தில் மதுரையை இழந்த பாண்டியர்கள், குலோத்துங்கன் காலத்திற்குள்ளாக ஐந்து சிற்றரசுகளை நிறுவி, ஒரு முடி மன்னனையும் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று முடிவுக்கு வருவது தவறல்ல.

## பாண்டியர் ஏற்றம்

இவர்களனைவரும் சோழர் ஆட்சி வலிமை குன்றிய காலத்தில் ஒன்று பட்டு தமது தலைவனை ஆதரித்து நின்றதால் பாண்டியர் வலிமை பெருகி தமது ஆட்சி நிலத்தை வடக்கு நோக்கி விஸ்தரித்துக் கொண்டார்கள். அக்காலத்தில் தான் சுந்திர பாண்டியன் (I) ராஜராஜனை (III)த் தோற்கடித்து சோழ சாம்ராஜ்யம் முழு

வதையும் வென்றடிப் படுத்தினான். ஹொய்சாலர்களை கண்ணனூர் கொப்பத்திலிருந்து விரட்டினான். மூன்றாம் குலோத்துங்கன் வீழ்ச்சிக்குக் காரணமாகி, அவனது ராஜ்யத்தின் வட பகுதியைக் கைப்பற்றிக் கொண்ட காடவர் குலாதிபதி கோப்பெருஞ்சிங்கனை வென்று கொங்கு மண்டலத்தைக் கைப்பற்றினான். தமிழ் நாடு முழுவதும் அவன் ஆளுகைக்குட்பட்டது. காஞ்சியில் ஆண்டு வந்த கண்ட கோபாலனைக் கொன்று காஞ்சியை கைப்பற்றினான் வடக்கே படை நடத்திச் சென்று நெல்லூரைக் கைப்பற்றினான். அவன் இறக்கும் போது அவனுடைய ஆட்சி "கொல்லத்திலிருந்து நெல்லூர் வரை பரவியிருந்தது" என்று மார்க்கோபோலோ கூறுகிறார்.

அவன் காலத்திலேயே வடக்குப் பகுதியில் தெல்லூரில் தெலுங்குச் சோழர்களும், கொங்கு நாட்டில் கோப்பெருஞ் சிங்கனும் தலைதூக்கி தங்கள் தலைநகரங்களை மீண்டும் கைப்பற்றிக் கொண்டனர்.

சுந்தர பாண்டியனோடேயே கூட்டாக ஆண்டுவந்த குலசேகர பாண்டியன் மறுபடியும் வடக்கே சென்று இழந்துவிட்ட நாடுகளை மீண்டும் வென்று பாண்டியர் ஆளுகைக்குக் கீழ் கொணர்ந்தான். 50 ஆண்டுகளுக்கு மேலாகவே அவன் ஆட்சி பீடத்தில் வீற்றிருந் தான். சுந்தரபாண்டியன், குலசேகர பாண்டியன் ஆகிய பாண்டிய மன்னர்கள் காலத்தில் பல ஊர்களும், கோயில்களும் நிர் மாணிக்கப்பட்டன. வலிமை மிக்க இவ்வரசர்கள் காலத்தில், பாண்டியர் கிளைக்குலங்களைச் சேர்ந்த சிற்றரசர்கள் அடங்கிப் பணி கேட்டு நடந்தனர்.

## பாண்டியர் தாழ்வு

குலசேகரன் இறந்ததும் அரச பதவிக்குப் போட்டி ஏற்பட்டது. அவனது ஆசைநாயகி மகனான வீர பாண்டியனுக்கும், பட்டத்து அரசியின் மகனான சுந்தரபாண்டியனுக்கும் பதவிப் போட்டி காரணமாக போர் தொடங்கியது. இப்போரைப் பயன்படுத்திக் கொண்டு கேரள ரவிவர்மன் குலசேகரன், படை கொண்டு காஞ்சி புரம்வரை வந்தான். வீரபாண்டியன் அவனோடு சேர்ந்து கொண் டான். சுந்தர்பாண்டியன், காகதீய மன்னன் பிரதாபருத்திரனைத் துணைப்படை கொண்டுவர அழைத்தான். முப்பிடி நாயக்கன் என்ற நெல்லூர்த் தளபதியை, பிரதாபருத்திரன் பெரும் படை

யோடு அனுப்பி வைத்தான். ரவிவர்மனும் வீரபாண்டியனும் தோற்றோடினர். சுந்தர பாண்டியன் வீரத் தலைவன் பட்டினத்தில் மணிமுடி சூடினான்.

## மாலிக்காபூர்

ஆயினும் வீரபாண்டியன் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியில் ஆட்சி செலுத்தி வந்தான் என்பது மாலிக்காபூரின் படையெடுப்புக் காலத்தில் அவனிடமிருந்து ஏராளமான செல்வத்தை டில்லி ராணுவம் பறித்துக் கொண்டு சென்றது என்று சமகால முஸ்லிம் ஆசிரியர்கள் கூறுவதிலிருந்து தெரிகிறது. சுந்தரபாண்டியன் போரிடாமல் பதுங்கிக் கொண்டு செல்வத்தையும் காப்பாற்றிக் கொண்டானென்றும், அவனுடைய மாமன் விக்ரமபாண்டியன் பெரும் படை சேகரித்து வந்து மாலிக்காபூரை தோற்கடித்து விரட்டியடித்தான் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இதற்குள்ளாகவே ஒரே காலத்தில் நாம் மூன்று பாண்டியர்களை பற்றிக் கேள்விப்படுகிறோம். விக்ரமன் வீரபாண்டியனையும் சுந்தரபாண்டியனையும் ஒன்று படுத்தி, மாலிக்காபூரை விரட்டியதைப் பற்றிப் பல சரித்திராசியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாலிக்காபூர் டில்லி நோக்கித் திரும்பியதும் சகோதரச் சண்டை முதிர்ந்து விட்டது. 1311 ல் அவன் மறுபடி திரும்பினான். கொள்ளையடித்துச் சென்ற பொருள்களைக் கண்டு ஆசை கொண்டு மீண்டும் கொள்ளையடிக்க டில்லி சுல்தான்கள் அவனை யனுப்பினர். அவன் வீரபாண்டியன் அரசு வீற்றிருந்த காஞ்சி நகரையும், சுந்தர பாண்டியன் அரசு வீற்றிருந்த மதுரை நகரையும் கொள்ளையடித்து விட்டு ராமேசுவரம் சென்றான். அங்கே யுள்ள புராதனக் கோயிலை இடித்து அதன் செல்வத்தைக் கொள்ளை கொண்டு டில்லிக்கு பயணமானான்.

அவனே மதுரையில் ஒரு பிரதிநிதியை நியமித்துச் சென்றான் என்று மதுரைத் தல வரலாறு கூறும். ஆனால் அது உண்மையல்ல வென்றும் 1323ல் தான் கியாஸுத்தின் துக்ளக் அனுப்பிய படை மதுரையைக் கைப்பற்றியது என்று கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார். சாம்ராஜ்யத்தின் பிரதிநிதி மதுரையில் ஆட்சி புரிய நியமிக்கப்பட்டான். இப்பிரதிநிதிகளின் ஆட்சி 1323 முதல் 1334 வரை நடைபெற்றது. 1334ல் ஜலாலுதீன் அசன்ஷா டில்லி சாம்ராஜ்யத்தின் மேலாதிக்கத்தை உதறியெறிந்துவிட்டு தானே சுதந்தர சுல்தான் என்று பிரகடனம் செய்து கொண்டான்.

## பாண்டியர் மதுரையைக் கைவிடல்

மதுரைச் சுல்தான்களின் ஆட்சிபற்றி மதுரைத் தல வரலாறு கூறுவதாவது :

"சாலிவாகன சகாப்தம் 1246ல் கொல்லமாண்டு 500 (கி. பி 1324) ருத்ரோத் காரி வருஷம் ஆனிமாதம் வடக்கே இருந்து வந்த ஆதிசுல்தான் மலுக்கு நேமி என்பவனும் மதுரை வந்து வாளால் விழித்துறங்கும் பாண்டியன் என்ற பராக்கிரம பாண்டிய தேவரைச் செயித்து பிடித்துக் கட்டிக் கொண்டு டில்லியில் அனுப்பிப் போட்டு ராச்சியத்தை கட்டிக் கொண்டான்."

'மலுக்கு' என்ற பெயரொற்றுமையைக் கண்டு இவனே மாலிக் காபூர் என்று ஒரு சாரார் கருதுகிறார்கள். மாலிக்காபூரின் படை யெடுப்புக் காலத்தை முஸ்லிம் ஆசிரியர்கள் 1309, 1311 என்று வரையறுத்துக் கூறுகிறார்கள். இதனையே தென்னிந்திய வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அவன் படையெடுப்புக் காலத்தில் வீரபாண்டியனும், சுந்தர பாண்டியனும் தாயப் போரில் ஈடுப்பட்டிருந்தனர். விக்ரம பாண்டியன் மாலிக்காபூரை முறி யடித்து விரட்டினான். ஆனால் மதுரையை முஸ்லீம் சுல்தான்கள் கைப்பற்றிக் கொண்ட காலம் 1324 என்பது தலவரலாற்றுச் செய்தியால் தெரிய வருகிறது. அது மாலிக்காபூரின் படை யெடுப்புக்கு 13 ஆண்டுகளுக்குப் பின்னர் என்றே படுகிறது. மாலிக்காபூரின் படையெடுப்பு அல்லாவுதீன் கில்ஜி டில்லியை ஆண்ட காலத்தில் நிகழ்ந்தது. 1324ல் கில்ஜி வம்சம் அழிந்து, துக்ளக் வம்சம் ஆளத் தொடங்கிவிட்டது. எனவே முகமது-பின்-துக்ளக் தட்சிண ராஜ்யங்களை அடக்கி டில்லி ஆட்சியின் கீழ் கொணர்வதற்காக அனுப்பிய "மாலிக்ஸாதா" என்ற புகழ் பெற்ற தளகர்த்தனை அனுப்பி வைத்தான். இவன்தான் மலுக்கு நேமி என்று மதுரைத் தல வரலாறு குறுப்பிடும் ஆதிசுல்தானவான் அவன்தான் மதுரைச் சுல்தானிய ஆட்சியை நிறுவியவன். இவ் வாட்சி கி. பி. 1324 முதல் 1372 வரை நிலவி இருந்தது.

## மதுரைச் சுல்தானிய ஆட்சி

இவ்வாட்சி குறித்து மதுரைத் தல வரலாறு மேலும் கூறுவ தாவது !

"சகாப்தம் 1246 முதல் 1294 (கி. பி 1324-1372) சாதாரண வருஷம் வரையான 48 வருஷம் அல்லாவுடீன் உடயூஜி, முபரக்ஷா.

அல்லாவுடீன் சிக்கந்தர்ஷா என எட்டு மகமதிய ராசாக்கள் மதுரையை ஆண்டார்கள். நாடு துலுக்காணியமாயிற்று. மதுரைக்கு வாய்த்த பெருமாளும் நாஞ்சிநாடு போனூர். பெரிய ஆலயத்துப் பஞ்சாட்சர மதிலும் பதினூன்கு கோபுரங்களும், தெரு வீதியும் இடிப்பட்டன. கற்பக்கிரகம், மகாமண்டபம், அர்த்த மண்டபம் வரைக்கும் தப்பியிருந்து, இப்போது பரியந்தம் துலுக் காணியமாயிருந்தது.''

இக்காலத்தில் மதுரையைச் சுற்றியுள்ள பகுதியில் சுல்தான்கள் ஆட்சி நடை பெற்றது. ஆனுல் அதே காலத்தில் பாண்டிய நாட்டின் தென்பகுதிகளிலும், திருப்பத்தூர் காளையார் கோவில் முதலிய பகுதிகளிலும் இந்த சுல்தான்கள் மதுரையில் ஆண்ட காலத்திலேயே பராக்கிரம பாண்டியனும், அவனது வழிவந்த பாண்டியர்களும் வெளியிட்ட சாசனங்கள் கிடைக்கின்றன. எனவே பாண்டியர்கள் மதுரையினின்றும் பின் வாங்கி பல பகுதிகளில் தங்கள் கிளைக் குடும்பங்களை நிலை நிறுத்தி மதுரைப் பாண்டியர் களது வழிவந்தோராாக தம்மைக் கருதிக்கொண்டு ஆண்டு வந்தார் கள் என்பது தெளிவாகிறது. பலமுறை மதுரையினின்றும் பின் வாங்கியப் போதிலும் அவர்கள் மீண்டும் மதுரைக்குத் திரும்பி விட்டனர் என்று கண்டோம். ஆனுல் சுல்தானிய ஆட்சிக் காலத் தில் தான் அவர்கள்மதுரைக்கு மீண்டும் வரும் முயற்சியைக் கை விட்டு தெற்கே பல தலைநகர்களை நிறுவிக் கொண்டனர்.

## சுல்தானிய ஆட்சியை ஒழிக்க கன்னடியர் வருகை

### 1. பல்லாள தேவன்

மதுரைச் சுல்தானிய ஆட்சியை அகற்ற ஹாய்சால மன்னன் மூன்றும் பல்லாள தேவன் 1342ம் ஆண்டு முயன்றுன். சுல்தான் கியாத்துடீனுக்கும், பல்லாள தேவனுக்கு மிடையே நடந்த போரில் சுல்தான் உயிர் நீத்தான். இவன்தான் மதுரைவரை படை யெடுத்து வந்த முதல்கன்னட மன்னன். வெற்றி பெற்றுத் திரும்பு முன் இவன் கண்ணனூர் கொப்பத்தில் தண்டிறங்கியிருந்தபோது முஸ்லீம் படையொன்று திடீரென்று படையைத் தாக்கி, இவனைக் கொன்று விட்டது. ஹாய்சாலப் படைகள் சிதறியோடின.

### 2. பக்க தேவன்

இதற்கு பிறகு "பகன் என்ற இளவரசன் குர்பத் ஹஸன்கங்கு என்ற மதுரை சுல்தானைப் போரில் கொன்றுன்'' என்று ஷாம்ஷி

ஸிராஜ் அபீப் என்ற முஸ்லீம் வரலாற்று ஆசிரியர் கூறுகிருர். இவன் விஜயநகர சாம்ராஜ்யத்தை நிறுவிய அரிகரன், புக்கன், என்ற இரு சகோதரர்களுள் இளையவனே என்று பேராசிரியர் திரு வேங்கடாச்சாரி, 'மதுரா விஜயம்' என்ற நூலின் முகவுரையில் கூறுகிருர்.

## 3. குமார கம்பணன்

மூன்ருவது, மதுரை மீது படையெடுத்த கன்னடிய இளவரசன், மேற்குறிப்பிட்ட புக்கதேவனது மகன் குமார கம்பணன் உடையாராவான் இவன் மதுரையின் கடைசி சுல்தாஞ யிருந்த முபரக் என்பவனே 1371ல் தோற்கடித்துக் கொன்ருன். அவனுடைய வெற்றியைக் குறித்து அவனது மனேவியார் ஸ்ரீ கங்கா தேவி 'மதுரா விஜயம்' என்ற பரணி நூல் பாடியுள்ளார்.

இக்காலத்தில் மதுரையிலும், மதுரையின் சுற்றுப் புறங்களிலும் பாண்டியர் கல்வெட்டுக்களோ, காசுகளோ கிடைப்பதில்லே. ஆனுல் தென் தமிழ்நாட்டில் பலவிடங்களில் தென்காசி, கரிவலம் வந்த நல்லூர் பாண்டியர்களின், கல்வெட்டுகளும் திருநெல் வேலிப் பாண்டியர்களின் கல்வெட்டுகளும் கிடைக்கின்றன. "கம்பண உடையார் வடதிசையிலிருந்து வந்து மதுரையில் அமை தியை நிலைநாட்டிஞர்" என்று மாறவர்மன் பாரக்கிரம பாண்டியன் சாசன மொன்று கூறுகிறது. எனவே மதுரையில் சுல்தானிய ஆட்சி முடிகிற காலத்தில் வீரபாக்கிரம பாண்டியன் என்ற பாண்டியர் வழித்தோன்றல் தென்பாண்டி நாட்டில் அரசு செலுத்தி வந்தான் என்று விளங்குகிறது.

## தென்காசிப் பஞ்ச பாண்டியர்

இப்பாண்டியன் 1340 முதல் 1380 வரை ஆட்சி செலுத்தி ஞன். அவனுடைய சாசனங்களில் தன்னே விஜய நகராட்சிக்கு உட்பட்ட சிற்றரசன் என்று அவன் கூறிக் கொள்ளவில்லே. அவனுடைய பரம்பரையினர் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு சுதந்திர மன்னர்களாகவே ஆண்டு வந்தனர். 1370 முதல் 1422 வரை ஐந்து பாண்டியர்கள் தென்காசியிலிருந்து தென் பாண்டி நாடு முழுவதையும் ஆண்டுவந்த செய்தி அவர்களுடைய சாசனங்களிலிருந்து புலனுகிறது. அதன் விஸ்தீரணத்தை அவர் களுடைய சாசனங்கள் தெற்கே கோட்டாறிலும், வடகிழக்கே திருப்பத்தூரிலும், வடமேற்கே கரிவலம் வந்த நல்லூரிலும்

மேற்கே குற்ருலத்திலும் கிடைப்பதே அளவிட்டுக் காட்டும் அவர்கள் பழங்காலப் பாண்டியர்களின் பட்டங்களான கோமாறன் ஜடிலவர்மன் என்பவற்றை மாறிமாறிச் சூட்டிக் கொண்டனர். இவர்களனைவரும் சுதந்திர மன்னர்கள் என்பதை இவர்களுடைய சாசனங்கள் அனைத்தும் காட்டும். இவர்கள் ஒருவருக்குப்பின் ஒருவர் ஆண்டனரா, அல்லது இருவர் மூவர் ஒரே காலத்தில் பல தலைநகர்களிலிருந்து, ராஜ்யத்தைப் பிரிவு செய்து கொண்டு ஆண்டனரா என்பது நமக்குப் புரியாத புதிராகவே உள்ளது. இவர்களது பெயர்கள் :

1. கோமாறன் வீரபாண்டிய தேவர்.
2. கோ. ஜடாவர்மன் பராக்கிரம பாண்டிய தேவர்.
3. ஜடிலவர்மன் குலசேகர பாண்டியதேவர்.
4. ஜடாவர்மன் விக்ரம பாண்டியதேவர்.

இவர்கள் புகழ்பெற்று விளங்கியதோடல்லாமல் நீண்ட காலம் ஆட்சி செய்தார்கள். இவர்களைப் பஞ்ச பாண்டியர் என்றும் சகோதரர் என்றும் அழைக்கும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். கதைப்பாடல்களும் மூத்த சகோதரனை குலசேகர பாண்டியன் என்றே அழைக்கின்றன.

## பராக்கிரம பாண்டியன்

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் 1371 முதல் 1422 வரை 50 ஆண்டுகாலம் தென்காசியில் ஆண்டான் அவனது சாசனங்கள் மிகப்பல. அவனே தென்காசிக் கோவிலைக் கட்டியவன். சிறந்த தமிழ்ப் புலமையும், கவித்துவ சக்தியும் வாய்ந்தவன். அவனுடைய சாசனங்களில் தன்னைப் பழைய பாண்டியர் குலப்பட்டங்களாலேயே வருணித்துக் கொள்ளுகிருன். அவன் விஜய நகரத்துக்குட்பட்ட அரசனல்லன் என்பது அவனது சாசனங்களால் விளங்குகிறது. இவனது காலமும் விஜயநகர அரசன் தேவராயன் காலமும் ஒன்று.

## கன்னடியர் படையெடுப்பு

### 4. நரச நாயக்கன்

1485-ல் சாளுவ நரசிம்மன் ஹரிஹரனுடைய பரம்பரையை அழித்துவிட்டு தனது தளபதி நரச நாயக்கன் உதவியால் ஆட்சியைக் கைப்பற்றினன். வடக்கே வலிமை பெற்றிருந்த

பிஜாப்பூர், கோல்கொண்டா, பாமினி முதலிய முஸ்லிம் அரசுகளின் தாக்குதலைச் சாமாளிக்க நரசிம்மன் தமிழ் நாட்டிலுள்ள அரசுகளை தனக்குக் கீழ்படியச் செய்வதற்காக நரச நாயக்கனைப் படையோடு அனுப்பினான். இதுவரை சுதந்திர ஆட்சி நடத்திய பாண்டியர்களை அடக்கி அவர்களை விஜயநகர ஆட்சிக்குக் கீழ் சிற்றரசர்களாக ஆக்குவது இப் படையெடுப்பின் நோக்கங்களில் ஒன்று. இப் படையெடுப்பு முடிந்தபின் நரச நாயக்கன் வெளியிட்ட சாசனம் ஒன்றில் அவன் "சேர சோழ பாண்டியர்களையும்" மானபூஷணனையும் கொடுந்துருக்கனையும் வென்று விட்டதாக"க் கூறிக் கொள்ளுகிறான். அக்காலத்தில் சோழர் பரம்பரை மறைந்து போய்விட்டது. சோழர் ஆட்சி மறைந்து போனபிறகு காடவர் குலத்தைச் சேர்ந்த கோனேரி ராஜன்தான் சோழ மண்டலத்தின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். அவனைத்தான் 'சோழன்' என்று சாசனம் குறிப்பிடுகிறது, அங்குப் பதவிப் போட்டி ஏற்பட்ட குழப்ப நிலையில் அவன் சுயாதிகத்தை ஸ்தாபித்துக்கொண்டான். நரச நாயக்கன் அவனோடு போர் செய்து அவனை கப்பங்கட்டுப்படி செய்தான். நரச நாயக்கனால் தோற்கடிக்கப் பட்ட பாண்டியன் யார்? என்று அறிவது கன்னடியனோடு போரிட்ட பாண்டியன் யார்? என்று அறிவதற்கு அவசியமாகும். 1480ல் அரசு கட்டிலேறிய ஜடாவர்மன் குலசேகரன் பராக்கிரம பாண்டியன்தான் நரச நாயக்கனால் தோற்கடிக்கப்பட்ட பாண்டியன். அவன் 1507வரை அரசாண்டான். பஞ்ச பாண்டியர்கள் தென்காசிப் பாண்டியர்களே என்று இப்பகுதியில் வழங்கும் கர்ண பரம்பரையைச் செய்திகள் கூறுகின்றன. நரச நாயக்கனது சாசனம் கூறும் மானபூஷணனும், பாண்டியனும் பஞ்ச பாண்டியர்கள் என கதைப் பாடல்கள் குறிப்பிடும் பாண்டிய மன்னர்கள் தாமா? நரச நாயக்கன்தான் கன்னட படையெடுப்பாளனா? இவ்வாறு முடிவு செய்வதற்குத் தடையாகச் சில பிரச்சினைகள் எழுகின்றன.

கதையில் குலசேகர பாண்டியன் விஷம் தின்று இறந்து போகிறான். ஆனால் நரச நாயக்கனோடு போரிட்ட மானபூஷணன் இப்போருக்குப் பின்னும் பல ஆண்டுகள் சாசனங்கள் வெளியிட்டிருக்கிறான். படையெடுத்து வந்த கன்னடியன் மகளை பாண்டியனுக்கு மணம் செய்து கொடுத்ததாக எந்தச் சாசனமும் கூறவில்லை தவிர, கன்னடியனும் பாண்டியரும் போரிட்ட இடங்கள் வள்ளியூரும், கயத்தாறும் என்று இரண்டு கதைப்பாடல்கள் கூறுகின்றன

இப்போருக்குப் பின்னர் திருவனந்தபுரமும் அரசன் பூதல வீர உதய மார்த்தாண்டன் படை கொண்டு வந்து தென்காசியைக் கைப்பற்றி ஜடில ஸ்ரீவல்லபதிரிபுவன ஸ்ரீவல்லப பாண்டியனை

விரட்டினன், ஸ்ரீவல்லபன் விஜயநகர மன்னன் அச்சுதராயனுக்கு உதவிகோரித் தூது அனுப்பினன். அவன் தனது தளபதி சின்ன திருமலையை அனுப்பி வைத்தான். சின்ன திருமலையும் பாண்டியனும் தாமிரவருணிப் போரில் பூதலவீரனைத் தோற்கடித்தனர். இவ்வுதவிக்காக ஸ்ரீவல்லபன் தனது மகளை அச்சுதராயனுக்கு மணம் செய்வித்து அளித்தான்.

இப்போர் பாண்டியரை எதிர்த்துக் கன்னடியர் நடத்திய போரல்ல. அவர்களது அரசு நிலையிட உதவிக்கு வந்த போராகும். மேலும் இவ்விரு அரச பரம்பரைகளும் மண உறவினால் தொடர்பு பெற்றன. தாமிரவருணிப்போர் 1532-ல் நிகழ்ந்தது.

## கன்னடியர் படையெடுப்பு

### 5. வித்தலராயன்

1544-ல் மறுபடியும் விஜயநகர மேலாதிக்கத்தை எதிர்த்து திருவனந்தபுரம் அரசர்கள் கலகக்கொடி உயர்த்தினர். விஜய நகர மன்னன் சதாசிவராயன் தனது உறவினனும் தளபதியுமான வித்தலராயனை படையோடு அனுப்பினன். அப்பொழுது திருவனந்தபுரம் அரசனும், கயத்தாற்றில் ஆண்டுவந்த பாண்டியனும் ஒப்பந்தம் செய்து கொண்டு தென்காசி விஜயநகரோடு நேச உறவுடையதாக இருந்தது. இவர்களிருவரையும் கலகக்காரர்களாகக் கருதி வித்தலராயன் அவர்களை ஒடுக்க தெற்கே வந்தான். கயத்தாற்றுப் போரில் வெட்டும் பெருமாள் பாண்டியன் தோற்று திருவனந்தபுரம் அரசன் உன்னி கேரளவர்மனிடம் தஞ்சம் புகுந்தான்.

வித்தவராயனேடு உடன் வந்த சின்ன திருமலை உன்னி கேரள வர்மனேடு போராடத் திருவனந்தபுரம் நோக்கிப் படைகொண்டு சென்றன். உன்னி கேரளவர்மன் சரணடைந்தான். வெட்டும் பெருமாள் அங்கிருந்து தப்பியோடி மறுபடியும் கயத்தாற்றுக்குத் திரும்பி போர் செய்தான்.

## வெட்டும் பெருமாள்

அவன் தோல்வியுற்றுச் சிறைப்பட்டான். கதைப் பாடல் வெட்டும் பெருமாள் ராஜாவும் வெங்கலராசனும் போரிட்டதாகக் கூறுகிறது. கன்னடியனை வெங்கலராசனே, விஜயநகர் தளபதி வித்தலராயன் என்று நாம் உறுதியாக கூறலாம். இதற்குக் கல்

வெட்டு ஆதாரமும் உண்டு. கயத்தாறுக்கு அருகேயுள்ள இள வேலங்கால் என்னும் ஊரில் சில குத்துக் கற்கள் காணப்படு கின்றன. அவற்றில் குதிரை மேல் ஒருவனும், காலாள் ஒருவனும் சண்டையிடுவதாகச் சித்திரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற் றின் கீழ் வெட்டும் பெருமாள் வெங்கல ராசன் போர் என்று தமிழ்க் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இக் கல்வெட்டின் காலம் 1547 என்று குறிப்பிட்டுள்ளது.

இச் சம்பவங்கள் வெட்டும் பெருமாள் ராஜனின் கதைப் பாடல் சம்பவங்களோடு பெரிதும் பொருந்துகின்றன. வள்ளியூர் குலசேகர பாண்டியனைப் பற்றிய 'ஐவர் ராசாக்கள்' கதையோடும் ஓரளவு பொருந்துகின்றன. கன்னடியரிடம் பாண்டியன் தோற்றுப் போனான் என்பதும், பாண்டியன் மரணமடைந்தான் என்பதும் கதைப்பாடல் நிகழ்ச்சிகள் வரலாறு மூலம் நாமறியும் நிகழ்ச்சி களுக்குப் பொருத்தமாக இருக்கின்றன. வரலாற்றில் போர் நடந்த காலம் 1544. இளவேலங்கால் கல்வெட்டு அக்காலத்திற்கு அணித்தான காலத்தைக் குறிப்பிடுகிறது. அதன் காலம் 1547.

## வள்ளியூர் குலசேகரன்

### 6. ஐவர் ராசாக்கள் :

வள்ளியூர் கோட்டையைக் கைப்பற்ற நடந்த போரைப் பற்றி ஐவர் ராசாக்கள் கதை கூறுகிறது.

மாலையம்மையின் புதல்வனான குலசேகரபாண்டியன் கொல்லம் 442 ல் (கி.பி. 1226ல்) வள்ளியூரில் கோட்டைகட்டி, கோட் டாற்றில் தான் மணந்து கொண்ட ஆசைநாயகி உலக முழுதுடை யாளோடு சிறிது காலம் வாழ்ந்தான். அவனது வம்சத்தினர் 60 ஆண்டுகளுக்குப் பின் அங்கு ஆண்டு வரும் பொழுது கன்னடிய தேசத்தரசன் ஒருவன் தன் சேனைகளுடன் பாண்டிய நாட்டிற்கு வந்தான். அப்பொழுது வள்ளியூரில் ஆண்டு வந்த குலசேகரனுக்கு நான்கு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் பெயர்கள், முத்தும் பெருமாள், முகிலம் பெருமாள், முடிசூடும் பெருமாள், பாண்டியப் பெருமாள் என்பன. முதல் படையெடுப்பு கன்னடிய அரசனுக்குத் தோல்வியில் முடிந்தது. அவன் நாடு திரும்பினான். பின்னர் குல சேகரன் வள்ளியூர்க் கோட்டையை காளிங்கன் என்ற அதிகாரியின் பொறுப்பில் விடுத்து மதுரை சென்றான். இடைக் காலத்தில் வள்ளியூர் கோட்டையின் ஆட்சியில் ஊழல்கள் மலிந்தன. அறம்

குன்றியது. அதிகாரிகள் ஆணைமீறி நடந்தனர். இரக்கமின்றி ஏழையெளியவர்களைக் கொடுமையாக நடத்தினர். இக் காலத்தில்தான் வீரனுதி வீரன் வள்ளியூர்க் கோட்டைக்கு வந் தான். வீரனுதி வீரன் இளைய மந்திரியானதற்குப் பின், கன்னடி யன் படையெடுக்கச் சந்தர்ப்பம் நோக்கியிருந்தான். முதற் படை யெடுப்பில் குலசேகரன் காட்டிய தீரத்தைக் கேள்விப்பட்ட கன்னட இளவரசி அவனையே மணப்பதெனத் தீர்மானித்து, தன் தந்தையிடம் தனது ஆசையைத் தெரிவித்தாள். கன்னடிய அரசன் திருமணத்திற்கு இணங்குமாறு இறைஞ்சி குலசேகரனுக்கு ஓலையனுப்பினான். குலசேகரன் தூதுவனிடம், "பகைவர் வீட்டில் பெண் கொண்டு அவர்களுக்கு அடிமையாக மாட்டேன்" என்று மறுப்புக் கூறி அனுப்பினான். இதனையறிந்த கன்னடிய அரசன் சீற்றம் கொண்டு அவனைச் சிறை பிடித்து கட்டாயமாக தனது மகளுக்கு மணம் செய்விக்க படை கொண்டு வந்தான். பல ஆண்டு கள் முற்றுகையை எதிர்த்து நின்ற பின் வள்ளியூர்க் கோட்டை கன்னடியன் வசமாயிற்று பஞ்ச பாண்டியர் தப்பியோடி தங்கள் உறவினனான திருவாங்கூர் மன்னனிடம் அடைக்கலம் நாடினர். அவன் கன்னடிய அரசனது சீற்றத்துக்கு அஞ்சி அவர்களுக்கு தஞ்ச மளிக்க மறுத்தான். அவர்கள் மேல்மலைக் காடுகளில் அலைந்தனர். குலசேகரன் படைகளைக் கலைத்துவிட்டு நான்கு சகோதரர்களோடும் ஒரு சிறு படையோடும் இரண்டொரு முறை வள்ளியூர்க் கோட் டை மீது திடீர் தாக்குதல் நடத்தினான். பாண்டியர்களின் மறை விடத்தை ஒற்றர் மூலம் அறிந்து கொண்ட கன்னடியன் பெரும் படையனுப்பி அவர்களைச் சூழ்ந்துகொள்ளச் செய்தான். அவர் களைச் சிறைப்படுத்த முயலும் பொழுது நடைபெற்ற போரில் நான்கு சகோதரர்கள் மாண்டனர். குலசேகரன் சிறைப்பட்டான். குலசேகரனை பல்லக்கில் அமர்த்திக் கொண்டு செல்லும் பொழுது அவன் தனது கத்தியால் கழுத்தில் குத்திக்கொண்டு உயிர்விட்டான். கன்னடிய இளவரசி உயிர் நீத்த குலசேகரனைக் கண்டு அவனையே மணந்து கொள்ள உறுதி பூண்டு நகரை அலங்கரித்து, தானும் மண விழாக்கோலம் பூண்டாள். மங்கல உடையணிந்து, குதிரை மீதேறி குலசேகரனது சடலத்தை அலங்கரித்து அதற்கு மாலையிட்டாள். பின்னர் அச்சடலத்தைஎரிக்கும் பொழுது உடன்கட்டை யேறினாள்.

இதுவே ஐவர் ராசாக்கள் கதைப்பாடலின் சுருக்கம்.

## கன்னடியர் வந்ததேன்?

கன்னடிய மன்னர்கள் எதிர்த்து நின்ற பாண்டியர்களைப் பற்றி அக்கால மக்கள் அறிந்திருந்தனர். கன்னடிய மன்னர்கள் தமது

நாட்டிற்கு வடக்கேயிருந்து வரும் முஸ்லிம் மன்னர்களின் படை யெடுப்பைத் தடுக்கும் நோக்கமுடையவர்கள் என்பது தென் தமிழ் நாட்டு மன்னர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் தெரியாது. ஏனெனில் 42 வருடங்களாக மதுரையில் நடைபெற்ற சுல்தானிய ஆட்சியின் கொடுங்கோன்மையை இப்பகுதி மக்களோ மன்னர்களோ கண்ட தில்லை. எனவே முஸ்லிம் ஆட்சியையும், தொன்மையான மரபு வழி நாகரிகத்தையும் பாதுகாக்க வேண்டுமென்று விஜயநகர அரசர்களுக்கு ஏற்பட்டிருந்த உணர்வு போல இப்பகுதி மக் களுக்கும், மன்னர்களுக்கும் ஏற்படக் காரணம் இல்லை. எனவே கன்னடிய மன்னர்களை எல்லை மீறி நுழைந்த பகைவர்களாகவே அவர்கள் கருதினர்.

கதைப் பாடல்கள், குலசேகரனைத்தான் கதைத் தலைவனாகக் கொள்ளுகின்றன. அதற்குக் காரணம் தமிழகம் முழுவதும் ஒன்று படுத்தி ஆண்ட குலசேகரனின் பெருமையை, நாடு சிதறி சுருங்கிச் சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்துவிட்ட பின்னரும் சிற்றரசர்கள் மறக்கவில்லை. அவனையே தங்களது முன்னோன் எனக் கருதினர். தமிழ் நாடு முழுவதும் பாண்டியர் ஆட்சி மீண்டும் பரவ வேண்டும் என்ற கனவு அவர்களை விட்டு நீங்கவில்லை.

ஒவ்வொரு கதைப் பாடலும் வெவ்வேறு சம்பவத்தை அடிப் படையாகக் கொண்டிருப்பினும், பொதுவாகக் கன்னடியர்களது பல படையெடுப்புக்களையும் அவற்றில் தொடர்பு கொண்ட அரசர்களையும் கால வேறுபாடுகளை ஒதுக்கி சகோதரர்களாகவே பாவித்துக் கூறுகிறது. ‘பஞ்ச பாண்டியர்’ என்ற பண்டைப் பெருமையைக் கன்னடியரை எதிர்த்து நின்ற ஒவ்வொரு பாண்டியர் குல அரசனுக்கும் சிற்றரசனுக்கும் கதைப் பாடல்கள் பொருத்திக் கூறுகின்றன.

## இப்போர்களின் காலம்

கயத்தாற்றுப் போர் நடந்த காலத்தில்தான் வள்ளியூர்க் கோட்டைப் போரும் நடந்திருக்க வேண்டும். ஏனெனில் அதற்குப் பின்னர் நாயக்கர் காலம். அக் காலத்தைப் பற்றி கயத்தாறு வரலாற்றில் மறுபடியும் விஸ்வநாத நாயக்கன் காலத் தில் ஒற்றை மற்போரில் தோற்று பஞ்ச பாண்டியர்கள் நாட்டை விட்டுச் சென்றதாக அறிகிறோம்.

ஆனால் வள்ளியூர் வரலாற்றில் நாயக்கர் கால சம்பவங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே இப்போர் நாயக்கர்

காலத்திற்கு முன்னர் நடைபெற்றிருக்க வேண்டும். அவ்வாருனல் கயத்தாற்றுப் போர் நடந்த பின் (1544) வெட்டும் பெருமாள் நாஞ்சில் நாடு சென்ருனென்றும் அவனைப் பின்பற்றிச் சின்ன திருமலை சென்ருனென்றும் முன்னர் கூறினேம். அவ்வாறு நாஞ்சில் நாடு செல்லும் வழியில் வள்ளியூர்க் கோட்டை தாக்குதலுக்கு உட்பட்டிருக்கலாம். இதுதான் சான்றுகளினின்றும் நாம் வரக் கூடிய முடிவு.

ஆனல் 'ஐவர் ராசாக்கள் கதை' ஏட்டுப் பிரதி வள்ளியூர்க் கோட்டையைக் குலசேகரன் கட்டிய காலம் கொல்லம் 412 (கி. பி 1226) என்று தெளிவாகக் கூறுகிறது கோட்டையழிந்தது 60 ஆண்டுகளுக்குப் பின்னர் என்றும் கூறுகிறது. அப்படியானல் 1286 ஆகிறது. இக் காலம் புகழ், பெற்ற சுந்தர பாண்டியனும் குலசேகர பாண்டியனும் ஆண்டுவந்த காலம். குலசேகரன் காஞ்சியைத் தெலுங்குச் சோழர்களிடமிருந்து மீட்டான் என்று சாசனங்கள் தெரிவிக்கின்றன. கதைப் பாடலும், காஞ்சியில் குலசேகரன் வீராபிஷேகம் செய்துகொண்டான் என்று கூறுகிறது. குலசேகரன் வேணுடு மன்னனை யடக்க தெற்கே வந்தான் என்றும் கோட்டாற்றில் போர் நடந்ததென்றும் சான்றுகள் கூறுகின்றன. எனவே குலசேகரன் வள்ளியூர் வழியாக மதுரை சென்றிருக்கக் கூடும். புகழ் பெற்ற இக் குலசேகரனுக்குப்பின் தென்காசிப் பாண்டியர் வம்சத்திலும் இரண்டு குலசேகரர்கள் ஆண்டனர். இவர்கள் குலசேகரன் இறந்து 70 ஆண்டுகளுக்குப் பின் ஆண்டனர். ஆனல் இவர்கள் காலத்தில் எல்லாம் கன்னடியர் நெல்லை மாவட்டத்தினுள் படையெடுத்து வரவில்லை. எனவே கதைப் பாடல் ஆசிரியர் தமது கதா நாயகனுக, கதை சம்பவங்கள் நடைபெறுவதற்கு சுமார் 300 வருஷங்களுக்கு முன்பிருந்தவனை ஏற்றுக்கொண்டார். ஆனல் கோட்டை கட்டியது அவனே தவிர, கோட்டையை கன்னடியர் பாதுகாப்புக்கு எதிராகப் பாதுகாத்தது பாண்டிய கிளைப் பரம்பரையில் வந்த வேறேர் குலசேகரனுவான். இடையே 60 ஆண்டுகள் என்று இவ்விடைவெளி இரண்டு மூன்று நூற்றுண்டுகளாக இருக்கலாம். அப்படியானல் கதைத் தொடக்கத்தில் வரும் குலசேகரனும், பின்னல் சிறைப்பட்ட குலசேகரனும் வெவ்வேறுனவர்கள். கோட்டை கட்டிய ஆண்டு 1226 என்று கொண்டாலும், அழிந்த காலம் வித்தலராயன் கயத்தாற்றில் வெற்றி பெற்ற காலத்துக்கு அணித்தானதாகவே இருந்திருக்க வேண்டும். அக்காலம் 1544 அல்லது 1545 ஆகலாம். கோட்டை முன்னூறு ஆண்டுகள் நிலைபெற்றிருக்கலாம்.

கன்னடிய இளவரசி உடன்கட்டையேறிய ஊராக, வடுகச்சி மதில் என்ற ஊர் சுட்டிக் காட்டப்படுகிறது

அங்கு ஒரு கோவிலும் அவள் பெயரால் இருக்கிறது. ஆனல் இது தவிர அவளைப் பற்றிச் சாசனச் சான்றுகள் எதுவும் கிடைக்க வில்லை. கதைப் பாடல் குலசேகரன் சடலத்தை கன்னடிய மன்னன் தன் நகரத்திற்குக் கொண்டுபோய் விட்டான் என்று சொல்லுகிறது. இளவரசியும் கன்னட நாட்டின் தலைநகரில் தான் தன் விநோதமான திருமணத்தை நடத்திக்கொண்டாள் என்றும், உடன்கட்டை யேறினள் என்றும், கதைப் பாடல் கூறும். ஆனல் செவி வழிச் செய்திகள் வேறுவிதமாகக் கூறுகின்றன. எனவே கன்னடிய இளவரசி உடன்கட்டையேறிய கதையைச் சரித்திர நிகழ்ச்சியாகக் கருதப் போதிய ஆதாரம் இல்லை.

## கதைப் பாடல் இயல்பு

ஆனல் கதைப் பாடல்கள் வரலாறுகள் அல்ல. அவை வீர காவியங்கள். இடையே மனிதப் பண்பின் உயர்ந்த அம்சங்களைப் போற்றுபவை. சமூகச் சீர்கேடுகளைக் கேலி செய்பவை. இவற்றைக் கற்பனையால் உருவான நாட்டார் படைப்பு என்றே கொள்ள வேண்டும். ஆனல் அக் கற்பனை கட்டவிழ்ந்த ஆகாசக் கோட்டைகளல்ல. சரித்திர நிகழ்ச்சிகளையும், சரித்திர சூழ்நிலையையும் அடிப் படையாகக் கொண்டு மனிதப் பண்புகளில் உயர்ந்தனவற்றைப் போற்றி கதாபாத்திரங்களையும், கதை நிகழ்ச்சிகளையும், கற்பனை யால் படைத்திருக்கிறார்கள் நாட்டுப் பாடல் கலைஞர்கள்.

## கதையமைப்பு

ஐவர் ராசாக்கள் கதை ஓர் நாட்டுப் பாடல் காவியம் இதனுள் சில காவிய மூலங்கள் (Epic Elements) உள்ளன. அவற்றை இப்பகுதியில் ஆராய்வோம்.

### மூலப் பகுதிகள்

இக் கதையின் மூலப்பகுதிகள் (Elements) இக் கதை தோன்று வதற்கு முன்பே தனிச் செய்திகளாகவோ, கதைகளாகவோ இருந் திருக்க வேண்டும். சில மூலப் பகுதிகள் கதை உருவான பின் பாடப்படும் பொழுது சில நூற்றுண்டுகளாக இக் கதையோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

### பழைய அம்சங்கள்

மூலக் கதையின் பழைய அம்சங்கள் (1) பாண்டியர் வரலாறு பற்றிய கதைகள் (2) கோட்டை கட்டிய வரலாறு (3) கன்னடியர் போர், கோட்டையின் அழிவு முதலியன.

## குலசேகரன் பிறப்பு

குலசேகரனும் அவனுடைய தம்பியரும் பிறந்த வரலாறு இக் கதையின் முதற் பகுதியில் கூறப்படுகிறது. இக்கதை சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் குலசேகர பாண்டியன் முதலிய பிற்காலப் பாண்டியர்கள் தமிழகம் முழுவதும் ஆட்சியைப் பரப்பி புகழ் பெற்று வாழ்ந்த காலத்திற்கு அண்மையில் தோன்றியிருத்தல் வேண்டும். சோழர் ஆதிக்க காலத்தில் வலிமை யிழந்து சிற்றரசர் களாக வாழ்ந்த பாண்டியர்கள் பதின்மூன்றும் நூற்றாண்டில் புது வாழ்வு பெற்றனர். ஒரு நூற்றாண்டு பெரு வாழ்வு வாழ்ந்தபின் அவர்களது தலைநகரான மதுரையை மாலிக் காபூர், மலுக்குநேமி என்ற டில்லி தளகர்த்தர்கள் கொள்ளையிட்டனர். அதன் பிறகு டில்லி மன்னர்களது பிரதிநிதிகளாக மதுரையில் சுல்தான் ஆட்சியை மலுக்குநேமி நிறுவினான். இவ்வாட்சி சுமார் 49 ஆண்டு கள் நடைபெற்றது. இக் காலத்தில் வலிமை குன்றிய பாண்டியர் கள் தென்காசிக்குச் சென்று அங்கிருந்து பழைய பாண்டிய ராஜ்யத் தின் ஒரு பகுதியை ஆண்டுவந்தனர். அதன் பின் பல கிளைகளாகப் பிரிந்து பல சிற்றரசுகளை நிறுவினர். இறுதியில் அவர்களுக் குள்ளும், வேற்றரசர்களுக்குள்ளும் போர்கள் நிகழ்ந்தன. புகழ் குன்றிய இந்நிலையில் அவர்களும், மக்களும் புகழ் பெற்று வாழ்ந்த முந்திய காலத்தை எண்ணிப் பார்த்து அப் பெருமையை மீண்டும் பெற ஆர்வம் கொண்டனர். இக் கதைப் பாடலே அந்த ஆர்வத் தின் காரணமாகப் பாடப்பட்டதுதான். இந்த ஆர்வம் குலசேகர பாண்டியனது பிறப்பைப் பற்றிக் கூறும் இடத்தில் அவனைப் பெற அவன் தாய் இயற்றிய தவங்களை வருணித்துக் கூறுவதற்குக் காரணம், குலசேகரனைப் போன்ற ஒருவன் தோன்றி மங்கிய புகழை மீண்டும் வளரச் செய்ய வேண்டுமென்ற ஆர்வமே. இதுவே குலசேகரன் பிறப்பைப் பெரிதும் வருணித்துக் கூறு வதற்குக் காரணமாகும்.

குழந்தை பிறப்பதற்காக தாய் தந்தையர் செய்யும் தானங்கள் இயற்றும் தவங்கள் முதலியவைபற்றி எல்லா நாட்டுக் கதைப் பாடல்களும் கூறும், (ஒவ்வொரு நாட்டுக் கதைப் பாடலிலும் பாடல் தலைவனது பிறப்புக்கு முன் அவனது தாய் தந்தையர் செய்த தானமும் தவமும் கூறப்படும்.) பெற்றோரின் நல்வினைப் பயனாகக் கதைத் தலைவன் பிறந்ததாகக் கதைப் பாடல்களும் காப்பியங்களும் கூறும். இது உலக முழுவதிலும் காணப்படும் மரபாகும், குலசேகரனும் அவனுடைய தம்பிமார்களும்

பிறந்த வரலாறு 'மாலையம்மை கதை என்று தனியாக ஒரு பாடலாக உள்ளது. இக்கதைப் பாடலுக்கு முன் எக்கதைப் பாடல் வழங்கி வந்ததென்று தெரியவில்லை. ஆனால் காப்பியங்கள் இருந்தன. அவற்றிற்கு ஆதாரமாகக் கதைப் பாடல்கள் இருந்திருக்க வேண்டும். காவியங்களில் இம்மரபு காணப்படுகிறது' கதையின் பிற்பகுதியொன்றில் குலசேகர பாண்டியன் பாண்டியர் குலப் பெருமை பற்றிக் கூறுகிறான்.

## தெய்வப்பிறவி

இதைக் கூற வேண்டிய வாய்ப்பு, கன்னடியன் தன்னுடைய மகனை அவனுக்கு மணம் செய்துவைக்கும் விருப்பத்தை ஒற்றன் மூலமாகச் சொல்லியனுப்பியதைக் கேட்ட போது ஏற்படுகிறது கன்னடியன் வம்சம் தனது வம்சத்திற்கு நிகரானதன்று என்று காட்ட குலசேகரன் தங்கள் பாண்டிய வம்சம் தடாதகைப் பிராட்டி சுந்தரேசுவரிடமிருந்து தோன்றியதென்றும், வீரத்திலும், ராஜதந்திரத்திலும் சேர சோழர்களை விடச் சிறந்ததென்றும் கூறச் சில பழங்கதைகளைச் சொல்லுகிறான். இவை இக்கதை தோன்று முன்னர் வழங்கிவந்த புனைகதைகளே; அரசர்கள் தங்களை தெய்வ மரபினர் என்று மிகப்பழங் காலத்திலேயே கூறிக் கொண்டுள்ளனர். இதை உறுதிப் படுத்தப் பல புனைகதைகளும் தோன்றியுள்ளன. தமிழ் நாட்டில் அரசர்களது மெய்க் கீர்த்திகள் தோன்று முன்னரே இக்கதைகள் வாய்மொழியாக வழங்கி வந்திருக்கின்றன. (உ-ம்—மேகங்களைச் சிறை செய்தது, தூங்கெயில் எறிந்தது) அவை மெய்க் கீர்த்திகளாக புனைப்பட்டன. கி. பி. 3, 4ம் நூற்றாண்டுகளில் தெய்வங்களின் வம்சமாகத் தங்களைப் பல்லவர்கள் அழைத்துக்கொண்டார்கள் என்பதை அவர்களுடைய சாசனங்களிலிருந்து அறியலாம். இதன் பின்னர் சிறிது காலம் புகழ்பெற்றிருந்த பாண்டியர்களும் பல்லவர்களுடைய வழக்கத்தைப் பின்பற்றினர். சின்னமனூர்ச் சாசனம் போன்ற சாசனங்களில் தங்களைத் தெய்வ பரம்பரையினர் என்று கூறிக்கொள்ளுகிறார்கள்.

## பழைய வீரக்கதைகளை பயன்படுத்துதல்

தேவலோகத்தில் அவர்கள் செய்த வீரச் செயல்களையும் அவர்கள் தங்கள் சாசனங்களில் கூறிக் கொள்ளுகிறார்கள். இந்த மரபை பிற் காலச் சோழர்களும் தங்கள் சாசனங்களை எழுதுவிக்கும் பொழுது பின்பற்றினார்கள். எழுதப்படுவதற்கு முன்னாலேயே வாய் மொழியாக இப் புனைகதைகள் வழங்கியிருத்தல் வேண்டும் என்

பதை இக்கதைக் கருப் பொருள்களை நோக்கினால் தெரியும். யானையை அடக்கியது, தேவேந்திரனை மதியாமல் அவனை ஏமாற்றி வித்துக் கொண்டுவந்தது, பூதங்களை ஏமாற்றி வேலை வாங்கியது, இது போன்ற கதைகள் இன்றும் தனிக் கதைகளாகப் பாண்டிய வரலாற்றோடு தொடர்பில்லாமல் வாய் மொழிக்கதைகளாகச் சொல்லப் படுகின்றன. யானையை அடக்கிய கதை மக்கள் வரலாற்று முற்காலத்தில் வேட்டையாடும் குழுக்களாக வாழ்ந்த போதே தோன்றி விட்ட கதை. இது குழுவாகச் சேர்ந்து யானையைக் கொன்ற நிகழ்ச்சிகளின் குழுநினைவாகப் பின்னால் எஞ்சி நின்றது, தனிமனித வீரக் கதைகள் வாய் மொழியாகத் தோன்றிய பிற்காலத்தில் இந்த நினைவின் அடிப்படையில் தெய்வ லோக யானையை அடக்கிய கதைகளும் (பாண்டியர் பற்றியகதை) அல்லது, பூலோக யானையை அடக்கிய கதைகளும் (ஜீவகன்கதை, கோவலன்கதை, புத்தர்கதை) தோன்றின. இவையாவும் முந்திய குழு நினைவிலிருந்து தோன்றியவை. பூதங்களை ஏமாற்றிய கதைகள் எல்லா மொழிகளிலும் உள்ளன. இயற்கைச் சக்திகளைப் பூதங்கள், தெய்வங்கள் என்று குழுமக்கள் நினைத்ததோடு தங்களை விட வலிமையுடையனவாக எண்ணினார்கள். அதனால் அவற்றைத் தெய்வங்களாக வழிபட்டார்கள். அவற்றின் தயவால் பல நன்மைகள் பெறலாம் என்று எண்ணினார்கள். சில குழுக்கள் இப்பூதங்களை ஏமாற்றி வேலை வாங்கலாம் என்று எண்ணினார்கள். இதுவே மந்திரவாதத்தின் அடிப்படையாகும். இவ்வடிப்படையில் பூதங்களைப் பணியவைத்த கதைகள் உலகமெங்கும் குழு மக்களிடையே தோன்றின குழுக்கள் அழிந்து ஒரு நிலப்பரப்பில் பயிர் செய்து வாழ்ந்த மனிதன், அரசை ஏற்படுத்திக் கொண்டு ஆறுகளை அடக்கிப் பரவலாகப் பயிர் செய்யத் தொடங்கிய காலத்தில் மனித சக்தியை உணர்ந்தான். இச் சக்தியை ஆட்சித்தலைவனான அரசன் மீதேற்றி அவனுக்கு மக்களுக்கு இல்லாத பெரும் சக்தியுண்டென்று எண்ணினார்கள்-இந்த நம்பிக்கையில்தான் அரசன் பூதங்களை அடிமைகொண்டு கோயில் கட்டியதாகவும் பரந்த நிலப்பரப்பில் பயிர் விளைவித்ததாகவும் கதைகள் புனையப்பட்டன. மனிதன்தான் பல கோயில்கள் கட்டினான். ஆனால் இப்பெரிய காரியங்களை மனிதன் செய்ய முடியாதென்ற நம்பிக்கையில் பூதங்களைக் கொண்டு அரசன் கட்டுவித்தான் என்ற கதையை மக்கள் புனைந்தனர். இது போலவே பெருநிலப்பரப்பில் பயிர் விளைவித்ததைப் பூதங்களைக் கொண்டு பாண்டியர்கள் செய்வித்ததாக குலசேகரன் கூறுகிறான்.

இன குலப் பெருமை கன்னடியனுக்கு அக்காலத்தில் இல்லை. பழங்காலமாக வந்த பாண்டியர் குடி தனது குடியைப் பற்றிய பல கதைகளைப் புனைந்து கொண்டதோடு பல பழைய குழுக்களால்

புனையப்பட்ட புனைகதைகளையும் தங்களுடைய குலப் பெருமை கூறும் கதைகளோடு சேர்த்துக் கொண்டார்கள். கன்னடியர்கள் சிறிது காலமாக சாதாரண மனிதர்களாயிருந்து அரசர்களான வரலாறு மறைந்து பல கதைகள் தோன்றி அவர்களது தோற்றத்தைத் தெய்வ பரம்பரையாக்கும் அளவுக்குக் காலம் கடந்து விடவில்லை. அவர்கள் ஏற்றம் பெற்றுச் சில நூற்றுண்டுகளே கடந்திருந்தன. எனவே தனது குலப் பெருமைக்கு, குலப்பெருமையில்லாத கன்னடியன் குலத்தில் பெண் கொள்ளலாகாது என்று குலசேகரன் கூறுகிறுன். கன்னடியர்கள் விஜயநகர ஆட்சியை நிறுவிய சில நூற்றுண்டுகளுக் குள்ளாகவே தமிழ் நாட்டு மன்னர்களோடு பல போர்களில் ஈடுபட்டார்கள். அவர்களைப் பற்றிய பல புனைகதைகள் அக் காலத்தில் பரவி விடவில்லை.

## கோட்டையில் நிகழ்ச்சிகள்

வள்ளியூரில் கோட்டை கட்டிய வரலாறு ஒரு தனி கதையாகவும், இக்காவியத்தின் உறுப்பாகவும் காணப்படுகிறது. இக் கோட்டையின் தெற்குச் சுவரைச் சோதிடனது சூழ்ச்சியால் அழித்து அதன் பின்னர் அதனைக் கன்னடியன் கைப்பற்றியதாக இக்கதை கூறுகிறது. எனவே கோட்டையைக் கட்டிய வரலாறு கூறப்படவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் கோவிலோ, கோட்டையோ கட்டப்பட்டதுபற்றி ஓர் புனைகதை இருக்கும். எந்தக் கோட்டையின் தோற்றத்தைப் பற்றியும் ஒரு நாட்டுப் புனைகதையிருக்கும். இக்கதையில் தன் தென்னுட்டுப்பயணத்தின் போது கோட்டாற்றில் பாடும் பரசியைப் பார்த்து ஆசைக் கொண்டு அவளுக்குப் பரிசளித்து அவளோடு வாழ்ந்து வரும் பொழுது பாண்டியன் படை வேட்டைக்குச் செல்லுகிறது. வள்ளியூரில் வேட்டை நாயை முயலை விரட்டுகிறது. அரசன் சென்று பார்க்கும் பொழுது அது காளியின் இருப்படமாகத் தெரிகிறது. காளி வெற்றியளிக்கும் தெய்வம். அங்கு கோட்டை கட்டுகிறுர்கள். கோட்டை வெள்ளத்தால் அழிந்து போகிறது. அதன்பிறகு காஞ்சிபுரத்திலிருந்து செங்கல் கொண்டுவந்து கோட்டை கட்டப்படுகிறது. கோட்டை கட்டியதாக பாடலில் காணப்படும் காலக்குறிப்பில் பதின்மூன்றும் நூற்றுண்டில் இது நடந்ததாகத் தெரிகிறது. இக் காலத்தில் காஞ்சியை வீரபாண்டியன் கைப்பற்றி ஆண்டான். அதன் பிறகும் சில பாண்டிய மன்னர்கள் காஞ்சியின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

ஆனுல் கதைப் பாடலில் குறிப்பிட்ட வரலாற்று நிகழ்ச்சிகளனைத்தும் முடிந்த காலத்திற்குப் பின்தான் தோன்றியிருத்தல் வேண்டும். வரலாற்று நிகழ்ச்சிகளைப் பொதுவாக நோக்கி

ஞல் விஜயநகர ஆட்சி தமிழ் நாட்டிலும் முழுவதும் ஏற்பட்டு விட்டதை வள்ளியூர் கோட்டையின் அழிவும், பஞ்சபாண்டியர் அழிவும் காட்டுகிறது. அப்படியாஞல் வரலாற்றுச் செய்திகளின் அடிப்படையில் இதனை 15ம் நூற்ருண்டின் முடிவென்று கொள்ள லாம். கோட்டை கட்டப்பட்ட காலம், கதை நிகழ்ச்சிகளின் காலத்துக்கு மிக முந்தியது. எனவே கதை நிகழ்ச்சிகளின் காலத் திற்கு முன்பே கோட்டையைப் பற்றிய புனைகதைகள் தோன்றி யிருத்தல் வேண்டும்.

சுந்தரபாண்டியன், குலசேகரபாண்டியனது சாசனங்கள் இங்கு பழைய கோயிலில் கிடைப்பதால் இவ்வூரில் அந்தக் காலத்துக்கு அடுத்த காலத்தில் கோட்டை கட்டப்பட்டிருக்கலாம். முயல்—நாய்க்கதை பிற்காலத்தில் சேர்க்கப்படிருக்கலாம். இது ஆந்திராவில் தான் அதிகமாகக் காணப் படுகிறது. கட்டபொம்முவின் பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டை பற்றியும் இக் கதையுள்ளது. அக் கதையை அவன் முன்னோர்கள் இங்கு கொண்டு வந்திருக்கலாம்.

## கிளைக் கதைகள்

கோட்டையினுள் நிகழ்ந்ததாக இரு கிளைக்கதைகள் போருக்கு முன் இடம் பெறுகின்றன. ஒன்று, வீணாதிவீணன் கதை, மற் ருென்று இடைச்சி கதை. இவை ஒரே ஒரு பிரதியில் உள்ளன. இவை தனிக்கதைகளாக இருந்து ஐவர் ராசாக்கள் கதையில் இடம் பெற்று விட்டன. பெரும் பாலான பிரதிகளில் இக் கதைகள் இல்லாததால் இக்கதைப் பாடலில் அவை சேர்க்கப்படவில்லை. வீணாதி வீணன் கதை இக் கோட்டைக்கு வந்த ஒரு ஏழை வேளாளன் வாழமுடியாமல் தவித்துப் பின் "தடியெடுத்தவன் தண்டல்காரன்" என்ற நிலைமையிருப்பதைக் கண்டு தானே சில தடிக்காரர்களைச் சேர்த்துக் கொண்டு வரிவசூலித்துப் பணம் சேர்த் ததைக் கூறுகிறது. அரசனுக்கு நாட்டின் ஆட்சியின் ஊழல் நிலையை எடுத்துக்காட்டவே அவன் இவ்வாறு செய்கிருன். அரசன் அழைத்துக் கேட்கும் பொழுது, நியாயமாக உழைத்துச் சம்பாதிக்க வாய்ப்பு இல்லாவிட்டால் இம் மாதிரி நிலைமை தோன்றும் என்று கூறித் தான் சேரிகத்து செல்வத்தை அரசனுக்குக் கொடுத்து விடுகிருன். இக் கிளைக்கதை என்னுல் தனியாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

இன்னொரு கிளைக்கதை இடைச்சி கதை. கோட்டையை கன்னடியன் முற்றுகையிட்ட பொழுது கோட்டையிலுள்ள குளத் திற்குத் தண்ணீர் வருவதைத் தடுக்க முயலுகிருர்கள். குளத்திற்கு ஒரு கள்ள மடையிருப்பதைப் பற்றிக் கேள்விப்படுகிருர்கள். அதை யறிய அந்த மடையைப் பற்றி அறிந்தவர்களைத் தேடுகிருர்கள். இக்

கோட்டையில் மோர் விற்கும் இடைப் பெண் ஒருத்தி மலையிலுள்ள ஓர் சுனையில் தனது குடுக்கையைப் போட்டு விடுகிறாள். மறுநாள் அது வள்ளியூர் குளத்தில் அகப்படுகிறது. இதனை அவள் அதிசயம் என்றெண்ணி வெளியே சொல்லி விடுகிறாள். இதையறிந்த கன்னடிய ஒற்றர்கள் அவளைத் தேடிப்பிடித்து, ஊற்றைக் கண்டு பிடித்து அடைத்து விடுகிறார்கள். வள்ளியூர் குளத்துக்குத் தண்ணீர் வராமல் நின்று விடுகிறது. குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் தவிக்கிறார்கள். கோட்டையைப் பிடிப்பது எளிதாகிறது. இத்தகைய கள்ளமடைக் கதைகள் காதல் கதைப் பாடல்களில் காணப்படு கின்றன. இக்கதை இப்பாடலின் இறுதிப் பகுதியில் காணப் படுகிறது. சில பகுதிகளில் காணப்படவில்லை.

இவ்விருகதைகளும் கோட்டையைப் பற்றிய வரலாறாக காவியத்தோடு நெகிழ்வாக இணைக்கப்பட்டுள்ளன.

## கன்னடியர் போர்

இக்கதையின் பிரதான நிகழ்ச்சி பாண்டியர் கன்னடியர் போராகும். இப்போர்களுக்குப் பல அரசியல் காரணங்கள் இருப் பதை முன்னர் கூறினோம். ஆனால் காவியம் வேறோர் காரணத்தைக் கூறுகிறது. காவியம் வரலாற்றுப் போரைக் குறிப்பதாயினும், கற்பனையில் பலபோர்களை ஒரே போராக மாற்றியுள்ளது. வர லாற்றுக் காரணங்களைக் கூறாமல் காவியத்துக்கு அவசியமான ஒரு கற்பனைப் பாத்திரத்தைப் படைத்து, அக் கதாபாத்திரத்தின் காதலே இப்போருக்குக் காரணமெனக் கூறுகிறது. இக்காதல் சாத்தியமானதன்று. ஏனெனில் குலசேகரனும், கன்னடிய மகளும் வெகு தூரத்திற்கப்பால் வாழ்பவர்கள். எனவே கதாசிரியர் இவர்களை இணைக்க ஒரு சம்பவத்தை புனைந்துள்ளார். அதுதான் பண்டாரங்கள் குலசேகரனைப் படம் வரைந்து பல ஊர்களுக்குச் சென்ற பொழுது, தற்செயலாக கன்னடியர் பட்டணத்தில் கன்ன டியன் மகள் படத்தைக் கண்ட நிகழ்ச்சி. அவள் மனத்தில் தோன்றிய காதலை தந்தையிடம் வெளியிட்டுத் தூதனுப்பச் சொல் லுகிறாள். தூது சென்ற ஒற்றனிடம் குலசேகரன் சம்மதிக்க முடியா தென்று சொல்லியனுப்புகிறான். பாண்டியனது மந்திரிகளிங்கள் கன்னடியன் மகளை மணந்து கொண்டு, அரண்மனையிலுள்ள பல காதல் கிழத்தியருள் ஒருத்தியாக நடத்த ஆலோசனை கூறுகிறான். இச் சமயம்தான் குலசேகரன் தங்கள் குலப் பெருமைபற்றிய கதை களைக் கூறுகிறான். இத்தகை குலப் பெருமையில்லாத கன்னடியன் மகளை மணந்து கொள்ளுவது தங்கள் குலப் பெருமைக்கு இழுக்கு எனக் கூறி அவளை மணந்துகொள்ள முடியாதென மறுக்கிறான்.

இதனால் போர் தொடங்குகிறது. குலசேகரனைப் பிடித்துத் தன் மகளுக்கு மணம் செய்து வைக்கத்தான் கன்னடியன் விரும்புகிறான். அவனது நோக்கம் நிறைவேறுகிற நிலையில் குலசேகரன் வைரம் தின்று உயிர் நீத்து விடுகிறான். இதற்குக் காரணம் தனது சகோதரர்களைப் போரில் கொன்ற பகைவனது பெண்ணை மணந்து கொள்ளக் கூடாதென்று குலசேகரன் நினைப்பதே.

## கன்னடியன் மகளது முடிவும் விளைவும்

இந்தியக் காவிய மரபின்படி கன்னடியன் மகள் கற்புடையவளாகக் காட்டப்படுகிறாள். தலைவன் வீரனாகவும், தலைவி கற்புடையவளாகவும் இருத்தல் இந்தியக் காவியமரபு. இதற்கேற்ப குலசேகரன் இறந்ததையறிந்து அவனுடலுக்கு மாலையிட்டு அவனது சிதையில் ஏறி எரிந்து உயிர்விடுகிறாள் கதைத் தலைவி.

குலப்பெருமையால் பிரிந்து போரிட்ட இரு குலங்களை, தனது உறுதியாலும், தியாகத்தாலும் ஒன்றாக்கி விடுகிறாள் கன்னடியன் மகள்.

இரு குலங்களும், இரு ராஜ்யங்களும் ஒன்றுபட்டு பொதுப் பகைவர்களான பாமினி சுல்தான்களை எதிர்க்க வேண்டும் என்ற உணர்வை கதாநாயகி இறந்தவனுக்கு மாலையிடும் நிகழ்ச்சியும், அவளது இறுதித் தியாகமும் எழுப்புகின்றன.

## மூலங்களின் இணைப்புகள்

இக் காதல் கதையோடு தொடர்பில்லாத பல நாட்டுப் புனை கதைகளை கோட்டையும், போரும் இணைக்கின்றன. முக்கியமான கதை கன்னடியன் மகளின் காதலும், அதன் மறுப்பால் ஏற்பட்ட போருமே. இதனோடு தொடர்பில்லாத கதைகளான குலசேகரன் பிறப்பு, பாடும் பரசிகதை, கோட்டை கட்டிய கதை, வீணாதி வீணன்கதை, இடைச்சிக் கதை முதலியன மிக நெகிழ்வாகத்தான் முக்கிய கதையோடு இணைக்கப் பட்டுள்ளது,

## இடமும் காலமும் தொடர்பு பெறுதல்

கதாநாயகன் பிறப்பு முக்கிய சம்பவமாகக் கருதப்பட வேண்டியதால் அதற்கென ஒரு கதையையே கதைப்பாடலில் அமைத்திருக்கிறார்கள். குலசேகரன் மணமானவனாக இருப்பதாலும் கதையில் கன்னடியன் மகளைக் காதலிக்காததாலும், ஒரு காதல் கதையை கதாநாயகனுக்கென்று புனைய வேண்டியதிருந்தது. அது தான் பாடும் பரசி கதை. இக் கதைக்கு ஆதாரமாக வரலாற்று

நிகழ்ச்சியொன்றிருந்தது என்பதை தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் நிரூபித்துள்ளார்கள். இந்த வரலாற்றுச் செய்தியின் அடிப்படையில்தான் பாடும் பரசி கதை புனையப்பட்டுள்ளது.

வள்ளியூரில் தான் கோட்டை கட்டப்பட்டதும், முற்றுகையிடப்பட்டதும், அழிந்ததும். எனவே பாடும் பரசி கதையின் நிகழ்களனை கோட்டையிலிருந்து வள்ளியூருக்கு நிகழ்களனை மாற்ற வேண்டியுள்ளது. இதற்காகத்தான் வேட்டையும், நாய்—முயல் கதையும் புனையப்பட்டன. கோட்டை கட்டுவதற்குக் காரணம் ஏற்பட்டபின் கோட்டை கட்டிய விதம் வருணிக்கப்படுகிறது. அதன்பின் கோட்டையில் நடந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன

கோட்டை கட்டுமுன் நிகழ்ச்சிகள் மதுரை, காஞ்சி, கோட்டாறு ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன, இவற்றை தொடர்பு படுத்துவது குலசேகரனது பயணங்கள். ஒவ்வொரு காரணத்தால் அவன் காஞ்சிக்கும் கோட்டாற்றிற்கும் செல்லுகிறான்.

இதற்குப் பிறகு தான் கதையின் முக்கிய நிகழ்ச்சியின் ஆரம்பம் வள்ளியூரில் நிகழ்கிறது. பண்டாரங்கள் படமெழுதிய சம்பவம் அது.

இவ்வாறு பல நாட்டுப் புனைகதைகளையும், வரலாற்றுச் செய்திகளையும், வரலாற்று நினைவுகளையும் இணைத்து ஒரு நாட்டுக் கதைப்பாடலைப் படைத்திருக்கிறார்கள் நாட்டுப்பாடல் கவிஞர்கள்.

பெரும்பாலும் இக்கதைப் பாடல் குமரிமாவட்டத்தில் பாடப்பட்டதாகத் தெரிகிறது. நெல்லைமாவட்டத்தின் தென் பகுதியிலும் பாடப்பட்டிருக்கிறது. பல நூற்றாண்டுகளாக இக்கதைகளில் சில பகுதிகள் சேர்க்கப்பட்டுக் கடைசியில் சுமார் 150 ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட போது முடிவான வடிவம் பெற்றது.

இக் கதைப்பாடல் இப்பொழுது வில்லுப்பாட்டாகப் பரவலாகப் பாடப்படுவதில்லை. அகஸ்தீசுவரம் பக்கத்தில் ஐவர் ராசாக்கள் கோயிலிருப்பதாகவும் அங்கு பாடப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் இப்பொழுது 20 ஆண்டுகளாக தர்மகர்த்தாக்களுக்குள் தகராறு ஏற்பட்டு கோவிலில் விசேஷங்கள் நடைபெறாத காரணத்தால் இப்பாடல் பாடப்

படவில்லை. இன்னும் சிறிது காலம் இது அச்சேறாமல் இருந்தால் இக் கதைப்பாடலைக் காலம் மக்கள் நினைவிலிருந்து நீக்கிவிடும்.

அவ்வாறு நீங்காமல் நிலைக்கச் செய்வதற்காக இதனை அச்சேற்றக் காரணமாயிருக்கும் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும் இம்முடிவுக்குவர மதுரைப் பல்கலைக் கழகத்தைத் தூண்டிய அதன் துணை வேந்தர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாருக்கும் தமிழக மக்களின் சார்பிலும், நாட்டுப்பாடல் ஆராய்ச்சியாளர்கள் சார்பிலும் நன்றி கூறுகிறேன்.

## பிற்சேர்க்கை

வீணாதி வீணன் கதை இன்னும் வள்ளியூர்ப்பகுதியில் பரவியுள்ளது. அது உண்மை நிகழ்ச்சியென்பதைப் புலப்படுத்தும் சில சான்றுகளும் அகப்பட்டுள்ளன.

ஆனால் இக் கதைப் பாடல் ஐவர் ராசாக்கள் கதைப்பாடல் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில் காணப்படவில்லை. வள்ளியூரிலிருந்து கிடைத்த பாடல் பிரதியில் மட்டும் காணப்பட்டது.

அதனைத் தனியாக முடிவுரை, குறிப்புரைகளுடன் நான் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் மூலம் வெளியிட்டுள்ளேன்.

அது தனிப்பாடலாயிருப்பினும், இக்கதை நடந்ததாகக் கூறப்படும் இடத்தில் இக்கதையோடு தொடர்புபடுத்தப்பட்டிருப்பதால் அதனைத் தனிப் பிற் சேர்க்கையாக பதிப்பித்துள்ளேன்.

# மூலப் பிரதிகள்

## பெயர்த்தெழுதுதல்

இக்கதைப் ாடலின் பிரதிகள் மூன்று கிடைத்தன.

(1) 'மாலையம்மை கதை' — ஐவர் ராசாக்கள் கதை முதல் குதி இது. இக்கதையில் குலசேகரனும் வன் தம்பியரும் பிறப்பதற்காக அவர்களது தாய் செய்யும் தானதருமங்களும் வர்களது பிறப்பும் கூறப்படுகிறது.

(2) ஐவர் ராசாக்கள் கதை—பழைய பிரதி. இது P. K. அருணாசலக் கவுண்டர் அவர்கள் அளித்தது, (கவுண்டர் பிரதி)

இது சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. எனவே பல விடங்களில் ஒட்டை விழுந்துள்ளது. எழுத்தும் சில விடங்களில் படிக்க முடியாமல் இருக்கிறது. ஏட்டில் எழுதுவதுபோல எழுத்தமைப்பு காணப்படுகிறது. லென்ஸ் வைத்துத்தான் படிக்க முடியும். இப் பிரதியில்தான் கதை முழுதும் கிடைக்கிறது.

(3) ஐவர் ராசாக்கள் கதை—(நாடார் பிரதி) புதிய பிரதி இது. அகஸ்தீஸ்வரம் ஆறுமுகப் பெருமாள் நாடார் அளித்தது. இப் பிரதி புதிதாக ஆறுமுகநேரி ராமசந்திர டோகோ அவர்களது முயற்சியால் பிரதி செய்யப்பட்டு எனக்கு அளிக்கப்பட்டது. இப் பிரதி படிப்பதற்கு எளிதாயிருப்பினும் இடையிடையே சில பகுதிகள் காணப்படவில்லை.

இக் கதைப் பாடலை எழுத மூன்று பிரதிகளும் பயன்பட்டன முதல் பகுதிக்கு மாலையம்மன் கதையையே பழைய பிரதியாகக் கொண்டுள்ளேன். புதிய பிரதியில் வேறு பாடங்கள் அல்லது பகுதிகள் காணப்பட்டால் மாலையம்மையின் கதையிலுள்ள பாடங்கள் அல்லது பகுதிகளையே மூலமாகக் கொண்டுள்ளேன். அதற்கும் 150 ஆண்டுக்கு முன்னர் எழுதப்பட்ட பிரதிக்கும் வேறுபாடு இருந்தால் பழைய பிரதியையே மூல ஆதாரமாகக் கொண்டுள்ளேன். முடிந்த அளவு மூல நிர்ணயம் பற்றிய மேனாட்டு விமர்சகர்களின் கொள்கைகளை இப் பிரதியின் மூலங்களை நிர்ணயிக்கப் பயன்படுத்தியுள்ளேன்.

இக் கதைப் பாடலைப் பெயர்த்தெழுதுவது மிகவும் கடினமான பணி. ஒரு பிரதி மட்டுமல்லாமல் பல பிரதிகளை ஒப்புநோக்கி எழுதுதல் வேண்டும். கவுண்டர் பிரதியைப் பார்த்தெழுதுவது மிகமிகக் கடினம். லென்ஸின் உதவியோடுதான் படிக்க முடியும். மடக்கினால் தாள் முறிந்துவிடும்; பலமுறை ஒப்பு நோக்கி. எழுதவேண்டும்.

நான்கு ஆண்டுகளுக்கு முன் எழுத ஆரம்பித்து இடையில் விட்டுவிட்ட பணியைக், கடந்த 16 மாதங்களாகத் தொடர்ந்து செய்து முடித்து முழுக் கதைப் பாடலையும் அச்சிடத் தயாரித்த எனது நாட்டுப் பாடல் துறை உதவியாளர் குமாரி மங்கை பெரிதும் இப்பணியில் உதவி செய்திருக்கிறார். விடாமுயற்சியோடும், சலிப்பில்லாமலும் பிரதிகளை ஒப்பு நோக்கிப் பல தடவை எழுதி எழுதித் திருத்திப் பின்னர் முழுமையாக எழுதி முடித்த குமாரி மங்கைக்கு எனது ஆசியும், நன்றியும் உரித்து.

சில எழுத்துப்பிழைகள் உதாரணமாக ன, ண. ர, ற, ல, ழ, ள முதலிய பிழைகள் திருத்தப் பட்டுள்ளன. ஆனால் பாமர வழக்கு கொச்சைச் சொற்கள், திரிபுகள், மரூஉக்கள், அயல்மொழி வழக்குச் சொற்கள் அனைத்தும் மூலங்களில் உள்ளபடியே பயன் படுத்தப் பட்டு, குறிப்புரையில் விவரிக்கப்பட்டுள்ளன,

இச்சிறப்பான கதைப் பாடல் முழுவடிவத்தில் தமிழகத்திற்குக் கிடைக்கப் பிரதிகள் உதவிய கு. அருணாசலக் கவுண்டருக்கும் ஆறுமுகப் பெருமாள் நாடாருக்கும் எனது நன்றி.

பாளையங்கோட்டை
26-1-72

நா. வானமாமலை

# ஐவர் ராசாக்கள் கதை

## நாட்டுக்கதைப் பாடல்

(வில்லுப்பாட்டு)

மூலம்

Text

தோன்றிய இடம் :

நெல்லை, குமரி மாவட்டங்கள்

வழங்குமிடம் :

நெல்லை தென்பகுதி

குமரிமாவட்டம் வடபகுதி

ஹரிஓம் நன்றாக குருவே துணை

# ஐவர் ராசாக்கள் கதை

## தெய்வ வணக்கம்[28]

அலை உலவு செந்தில்வாய் வந்து செக்கடியில்
அருள் வளரும் கருணைசால் கீழ் மனதில்
மிகுதினந்தோறும், மகிழ்ந்து கூடி என்நாவில்
வளர் மன்னன் கந்த பிரான் மனையோட
சேர் பத்துலகில் மெய்தவ மறக் களிறே
தமிழ்க்கு உரை தெரிவுறு மயில் வாகனு
பாவு செந்தினில் வந்துதவு கந்தா
மாறு கொடு வரு சூரனுடல் உருளவேதான்
வளர் சிவ கடல் மருகு வேலை விடு குமரா!
ஆறுசடை மீதில் அணிந்தானுட மகனே,
வெளி வந்து அளிதங்கு நிலமடந்தை புதல்வா,
ஆசுடனே மதுரகவி சித்திர வித்தாரம்,
அரிய தமிழுஞ்சை பெற வரிசை செய்வாயே.
வரிசை தந்தருளுலகு பிரிசமுந்துரையே,
மனதிலந்தாதி, தாவுலவு கலை மாதே,
அதியசந்தகமது விடாத புலவர்கள் தன்
அடிமையென் னெளியனுரை மகிழ்ந்தருள்வாயே
வண்டமிழ்க்குரை தெரியும் வல்ல புலவோர்கள் முன்[29]
மன்னனரவர் தன் கதையை
வருத்துவேன் நான் என்பதெல்லாம்
கொண்டல் பெய்யக கண்டுமணி
மேகங்கூடிப் பெய் வதெல்லாம்
குரைகடலில் குசவன் கூளி
சாதிக்கும் என்பதொக்கும்,

கடவுள் வணக்கம். செந்தில் முருகனை வணங்கும் பாடல் இது. கதை எழுந்த பகுதி திருச்செந்நூர் வட்டாரம் என்பதைக் காட்டும். நாஞ்சில் நாட்டில் வழங்கும் கதைப் பாடலில் வணக்கம் முதல் அவையடக்கம் வரை இருக்கும் பகுதி காணப்படவில்லை. வட்டார வழக்கைப் பார்த்து, பிரதி நாஞ்சில் நாட்டில் வழங்கிவந்ததென் பதை அறிய முடிகிறது.

20 முதல் அவையடக்கம். இது முற்றிலும் நாட்டுப் பண் பாட்டை யொட்டிய உவமைகளைக் கொண்டது. சிற்சில பகுதிகளில் இலக்கியத்தில் காணப்படும் உவமைகளை இங்கு காணலாம். ஆயினும் மக்கள் பேச்சு வழக்கில் காணப்படும் பழமொழிகள் பல இங்கு கையாளப்படு வதை நோக்கலாம்.

நண்டிலும் கடிதாயோடி
நத்தை சென்றெதிர்ப்ப தொக்கும்
புண்டரீகப் பூக் கிணையாக
எட்டிப்பூ பூப்பதொக்கும்
வண்ணமாத்துக்கு இணை
செம்பு சரி என்பதொக்கும்
சாரி வரும் யானை முன்னே,
பூனை சென் றெதிர்ப்ப தொக்கும்
மன்னர் பாண்டியர் கதையை
இயம்பிடுவேன் என்பதெல்லாம்
பல் நாமப் பல்கலையும் ஆய்ந்த தமிழ்வாணர் முன்னே
இராசர் ஐவர் கதைபாட
நாட்டுக கதைப் பாடலுக்கு
பொருளும் தமிழுரையும்
இம்மியும் இல்லாதடியேன்
பிரியத்தினால் தொடுத்த
சொல்லுரை எதற்கு ஒக்கும்?
கருப்பஞ்சாறு காய்ச்சிச் சேர்த்த
கட்டிச் சக்கரைக் கிணையாய்
வெட்டி வேப்பம் பிசினை
கட்டி, வட்டாகச் சேர்த்து
பொய்ம்மை பேசியே ஒருவன்
சர்க்கரைக்குத் தண்டி என்றும்
நிறை போட்டு வெள்ளிக் கோலால்
அதை நிறுப்ப தாக்கும்.
நிறுத்தானே யோட்டை வைத்து
உள்ள மாத்துப் பொன் தனக்கு
நீக்க மறையாமல் காக்காய்ப்
பொன்னைச் சரியென்ப தொக்கும்
கறுத்த கவரி மயிர்
முடிக்கு தந்த செம்பட்டை மயிர்
கண்டு கறுபடு பத்தி மாதர்கள்
கொண்டையை முடிப்ப தொக்கும்
மாறன் மரக் காவிலுள்ள
சந்தன மரந்தனக்கு
வண்டாளையும் ஆல மாமரம்
வாசனுரியென்ப தொக்கும்

31 வண்ணமாத்து - உயர்ந்த மாற்றுத்தங்கம்
33 சாரி வரும் - நகர்வலம் வரும்
49 தண்டி - (நெல்லை வழக்கு), பெரிய கட்டி

ஈடு செய் வேனென்ற புலி
தானெழும்பி பாயக் கண்டு
ஈப்புலியுஞ் சென்றெழும்பித்
தானும் பாய்வே னென்ப தொக்கும்
நாடி நான் தொடுத்த கதை
புன் சொல்லுரை நல்ல தென
நத்தமிழ் நூல் கத்தவரும்
குத்தம் பொறுத்தாண்டு கொள்வீர்
ஆண்டுலகத்தே நடந்து
பாண்டி மன்னர் வள்ளியூரில்
அன்று வெட்டுப் பட்ட கதை
யென்று படை வேட்டையாட
வேண்டு வண்ணந் தாளென்னை
யாண்டு வளத்தடிமை கொண்டு முங்கள்
வித்துவானெனச் சொல்லி
வல்ல கவி பாட வைத்த
வட்ட கூர்மை கட்டு முகனை
இட்ட இட்ட வன்னந் தீராய்
சேர்த்த செந்தமிழுரையும்,
செந்திலவன் வேலினையான்
சீர்பாத மெந்தனுட
சிரத்தில் சருதிக் கொண்டேன்
கருத்தும் பல கலையும்
காவியஞ் சீர் தளையுஞ்
கவியு மூரிய சொல்லும்
கண்டே யலங்காரமும்
வருத்து முலகளந்த பெரு
மாளிரு பாதத்தை
வஞ்ச மின்றி யெந்தனுட
வாக்கிலும், மனத்திலும் கொண்டேன்.
தேனுலாவும் மாலை மார்பன்
செந்திலாதிபன் வேலினையான்
சிந்தை மகிழ்ந்தன்புடனே
வந்த தோர் பெத்த பெருமாள்

56 ஈப்புலி சிறிய பூச்சி வகை. புலிக்குப் போட்டியாக ஈப்புலி பாய்வதொக்கும்.

70 கத்தவரும் - கற்றவரும். (நெல்லை வழக்கு)

90 முதல் 92 "திருமால் பாதத்தை மனத்திலிருத்திக் கொண்டேன்" என்று கூறுகிறார்

வேறு

மதுரை வரலாறு

100 மருவு மேனி அழகிய சொக்கநாதர்
புதுமையுடன் நீதி வளர் புகழ் மதுரை தன்னிலே
சோம குல மதனில் அமருமர் சற்குல அதிபனே
துங்க முடி மணி மார்யன் அங்கினி திருந்தான்
அங்கிதினி திருந்து புவியாண்ட பாண்டியனர்
அசையாத மணிகட்டி உலகுதனை நேரியாய்
கொங்கு, வடகெங்கை கன்யாகுமரி கொசாலம்
குச்சமிலாட தெலுங்கு குட தேசம்
யெங்கிலுள்ள அரசர் ...............

வேறு

நாளும் நாளும் நமக்குப் பின்புலகை
நடத்தி யரசாள ஒருநல்ல தலையில்லை
இல்லையென்றரசர் மொழி சொல்ல மந்திரிமார்
"எம்பிரானே ஒரு பெரிய விண்ணப்பம்
தொல்லுலகை ஆள ஒரு மன்னர் பிறந்திடவே
சொலப் பெரிய தானதர்மம் இப்பொழுதுசெய்."
(என்றார்)
நல்லதென அரசர் திருமணம் மகிழ்ந்த சொக்க
நாதனர்க் கபிஷேகம் பூசைபல செய்தார்
தில்லை யங்கயற் கண்ணி சிவகாமிக்கு
சிவ பூசை குருபூசை பலபூசை செய்தார்
குருபூசை, பரதேசி யந்தணர்களோடும்
குண்ட மதில் மங்களாகுதி வளர்த்து
அத நீதும் அஞ்செழுத்தாம் நாமம்
ஆதி வேதத்தினிலடவாய் நடத்தி

100. இது முதல் கதை தொடங்குகிறது. புராணங்களைப் போல் மதுரை அரச குடும்ப வரலாற்றை சுந்தரேசர் அங்கயற்கண்ணி திருமணத்திலிருந்து தொடங்குகிறது. இது பிற்கால பாண்டியர் வரலாற்றை புராண வாயிலாகவே கூறுகிறது. முதன் முதலில் அரச பரம்பரையை தெய்வங்களோடு புராண ரீதியில் இணைக்கும் மரபை பல்லவர்கள் காலச் சாசனங்கள் தொடங்கி வைக்கின்றன. அதனையே பிற்காலச் சோழர்களும் பிற்காலபாண்டியர்களும் பின்பற்றினர். இக்கதைப் பாடலின், ஒரு பிரதி அரசபரம்பரையை மெய்க்கீர்த்தியில் காணப்படுவதுப்போலவே கூறுகிறது. ஆனல் இப் பிரதியில் அவ்வாறில்லை.

திருமாலுக் கபிஷேகங்கள் மணிதீபம்
சிவ பூசை திருநாளும் மடைவாய் நடத்தி
அடைவான மாதான கோதானமுடனே
அன்ன தானம் பூமி தானம் தர்மங்கள் செய்து
நலமாக உலகு தனிலே நேரியதாக
இட்டுண்டு ஆறிலொன்று கடமை கொண்டு
கடவாத அலைவந்து பலபூசை செய்ய
காவலர்க்குப் புதல்வர் வந்து பிறவாமல்
நடமாடும் அம்பலவர் திருவருளு மிதுவோ ?
நாடினர் ஆடினர் ஓடினர் மன்னர்.
ஓடிமனஞ் சலித்து, அரசரப்போ
தேடி மகிழ்ந்து கண்டார் ஒரு சோதிரியை
சென்று அங்கரசனைத் தொழுதென்ன சொல்லுவான்
''வாடி முகம் சாம்ப வேண்டாம்
மக்கள் பிறந்திட மதிசொல்லக் கேள்
ஆடுமயிலாடும் வைகைக் கரையில்
அம்மை பகவதி திருக்கோயில் தன்னில்
தன்னை நிகரில்லா மன்னவா உந்தன்
தையல் தவமிருந்திடில் இப்போ
எந்நிலமும் ஒரு குடைக் குள்ளாக
ராசப் பெருமாள் வந்தவதரிப்பார்.'' (என்றான்)
சொன்னமொழி கேட்டு மன்னர் பெருமாள்
துக்கமது தீர்ந்து மனமகிழ்ந்து
மின்னிடையாள் மாலையம்மை தன்னை
விரையத்தவத்துக்கு இருக்கச் சொன்னார்

25 நாட்டுக்கதைப் பாடல்களில் சமயநெறி அதிகமாகக் காணப்படுவதில்லை. அரசர்கள் சிவபூசை, தேவிபூசை செய்ததுபோலவே திருமாலுக்கு அபிடேகங்கள் நடத்தியதாக இவ்வடி கூறுகிறது.

26 அடைவாய் - முறைப்படி

27 மாதானம் - மகாதானம்

30 34 நீதியோடு அரசாண்டு வந்த பாண்டிய மன்னன் ஆறிலொரு கடமைதான் பெற்றுக் கொண்டான். அலைகள் கரை வரை வந்து கரையிலுள்ள கோயிலை வணங்கி மீளுகின்றன. அலைகள் விதிபிறழாமல் இயங்குகின்றன. அரசனும் செங்கோல் பிறழாது அரசாண்டான். ஆயினும் அவனுக்கு மக்கட்பேறில்லை என நாட்டவர் வருந்தினர்.

35 37 பாண்டி நாட்டுச் சிற்றரசர்கள் தேடிப்போய் ஒரு சோதிடனைக் கண்டார்கள். (சோதிரி - சோதிடன்)

38 45 சோதிடன் சொல்லும் சோசியம்

49 விரைய - விரைவாக (விரைசா-நெல்லை வட்டார வழக்கு)

இருக்கும் படியந்த மாலையம்மை
எழுந்து மடவார்கள் புடை சூழ,
கருப்புக் குழல் மங்கை தீர்த்தமாடி,
வண்ணப் பட்டுடுத்தி நீறுஞ்சார்த்தி,
ஒரு காலத்துண்பதும் நோன்புமாக
உறைப்பாய் வசனத்துக் கெனச் சமைந்தாள்.
திருக்கோவில் கட்டிப் பகவதிக்கு
திருநாள் நடத்தியே பூசை நடத்தி
பூசை நடத்தியே புதல்வனுக்காய்
பொன்னுங்குழவிகள் சமைத்து வைத்து
வாசக்குழல் மங்கை மாலையம்மை தான்
மங்களமதாகுமென்று வசன முற்றாள்.
உத்த வருததங்கண்டம்மை தானும்
உகந்து திருமனங் களி கூர்ந்து
அத்தாரத் திங்கள் கணபதிபோல்
அரசன் திருத்தேவி முன்பு சென்று
புத்தி வருந்தாதே மாலையம்மா.
புதல்வன் அரசாள விதியுண்டென,
கொத்துமாலை தீர்த்தம் திருநீறுடன்,
கொடுத்தாள் இலுமிச்சம் பழமும் கையில்
கையில் சிறப்பேற்று மாலையம்மை
கமலத்திருத்தாள் தலத்து வீழ்ந்து
வைகைக் கரையம்மை மகிழ்வு காட்டி,
நிறைந்தாள் மாலையம்மை எழுந்திருந்தாள்.
உய்யும் படி கண்ட கனாத்திறத்தை
உடனே அரசனுக்குரைத்தனளாம்.
உரைக்க மனமகிழ்ந்து அரசனப்போ,
உண்மைப் பொருள் கண்ட கனா நமக்கு.
இரைத்த பரிவாரம் புடை சூழவே
எழுந்தங்கிரு பெருங் கோயில் புக்கார்.
விரைத்தார் குழல் மங்கை மாலையம்மையும்
வேந்தன் பெருமாளும் பள்ளியறையில்

50 55 மக்கட்பேறு வேண்டி மாலையம்மை தவமிருக்க முன் வந்தாள்.

60 61 மாலையம்மை வசனமிருந்தாள். வசனம் - நோன்பு (நெ. வ. ப.)

61 74 மாலையம்மை தவமிருப்பது கண்டு வைகைக் கரையம்மை மனங்கனிந்து கணபதி உருவத்தில் வந்து திருநீறும், மாலையும் எலுமிச்சம் பழமும் பிரசாதமாக அளிப்பது போல கனவு கண்டாள். கனவில் தன்னைப் பார்த்து கணபதி பிள்ளைப் பேறுண்டென்று சொல்வதாகவும் காதால் கேட்டாள்.

அறைத்த சந்தனம் பன்னீர் சவ்வாது
அணிந்தார் திருமார்பில், புணர்ந்திருந்தார்.
புணர்ந்தங்கொரு நலம் இருநலமாய்
புதல்வன் பகவதி பொருட்டினாலே
மானந்த குழல் மங்கை திருவயத்தில்,
மன்னர் பெருமாள் வந்தவதரித்தார்,
தரித்தார் கருக்குழியில் பனித்தாரை போல,
சலமும் உதிரமும் திரண்டிடுமாம்
குருத்தை இரு ரூபமாக்கி
கொண்டு வரும் அந்த நாளையிலே,
பெருத்த முலைக்கண்கள் பசலை பூத்து
பெண்மை நலம் குலைத்து அன்னம் மறந்தாள்.
விரித்த தலை முந்தி தரைக்கிடையும்,
மேனி சருகாக கூந்தல் சடையாம்
சிரித்த முகத்தொடு பஞ்சணை மீது
சென்றங்கரசனோடு உறவுமாடி,
வருத்தமாய் சத்துவாய் நீர்பாயும்.
மசங்கி விழுந்தும் எழுந்திருப்பாள்.
சொந்தத் தாதியர் மூப்பியர்கள்
எடுத்துப் பலபண்டங் கொடுத்திடுவார்.
குளிர்ந்த திருமுக மாலையம்மைக்கு
கொண்ட நாலும் அஞ்சு மாதமாச்சே,
தெளிந்தார் திரு மன்னர் பெருமான்
தெய்வ பூசை குரு பூசை நடத்தி
பூசை நடத்தியே ஏழாமாசம்
பொங்கு வளையிட வேணுமென்று
தேசத்தார்க்கும் மந்திரிமார்க்கும்
சென்று சோபனம் ஒட்டன் சொல்லுவானும்

வேறு

சொல்லுவார் அரசர் முன் சோதிடர் தொழுது நின்று
சுகமான நாளும் முகிழ்த்தமும் வல்ல பல மாதமும்
மாலையம்மை திருவயிறு வாழவே களிகூர்ந்து அந்நேரம்

95 101 நாட்டுப்பாடல் முறையில் மாலையம்மை பிள்ளைத்தாய்ச்சியான பின் அவளுடலில் காணப்படும் மாறுதல் விவரிக்கப் படுகின்றன. இதுபோலவே கருப்பமான தலைவியர் நிலை வேறு பாடல்களிலும் விரிவாகக் கூறப்படும்.
மாதாமாதம் உடலில் ஏற்படும் மாறுதல்களையும் அப்பொழுது வழக்கமாகச் செய்யும் சடங்குகளையும் 101 முதல் 111 வரையுள்ள அடிகள் வருணிக்கின்றன.

112 சீமந்த முகூர்த்தம் நடைபெறுவதற்கு முன் நிகழ்ந்த சிறப்புக்கள்

ஒல்லையில் அடுப்பு வைத்தே மெழுகி நிறை நாழி
ஒரு கும்பம் அரிகிட்டின மங்கலம்
அட்டமங்கலம் நிறைமரக்கால் பூவரிக்கும்பம்
அம்மானையளருகு கிக்கில் கனையாம
இட்ட கோலத்தருகே முத்தினால் நிறை நாழி
ரெத்தினத் திருவிளக் கேத்தினார்.
கொட்டுமேளங்குரை பறையொலிகள் சங்கொலிகள்
குரை கடலெனவே அதிர்ந்தார்ப்பவே
தட்டினார் தேங்காய் முகிழ்ந்தடுப்பிலே
தானாய் தங்கப்பானை ஏத்தினார்
ஏத்தினார் உலையில் பாலரிசி சம்பாவும்
மாத்தவே குழவி தன்னை மாலையம்மை மெழுகியே
வந்தாள் பட்டுப்பணிகள் தளதளென்ன
தூத்தியே குழல் முடித்துத் தனியாபரணங்கள்
சுடரொளிகள் மின்னவே சாத்தினார்.
கூத்தனார் வெருவுற அஞ்சனமெழுதியே
கொங்கை மீதில் அஞ்சனம் எழுதியே
நாள் கதி ரொளியெனவே மாணிக்கக் கொம்பிட்டு
ரத்தினப் பணி காதிலிட்டனள்.
வழு வழென்ற கழுகொத்த கழுத்திலே
மாணிக்கத் தாலியுங் கட்டினார்.
எழு ஞாயிறு சூட்டிய மயில் திருமேனி
அணியிலங்கு பூம்பாளையும் கட்டினார்.
இட்டனர் பொன்னரைஞாணுமிடையில் மணிமேகலையும்
ரதி மதன் மயல் கொள்ளவே சாத்தினார்.
கட்டுவம் பீலி, மயிலடி, தண்டை, பாடகம்
காலில், மோதிரஞ் சிலம்பிட்டனர்.
பட்டுனுலுத்தரிய மிட்டனர். லட்சுமி
பங்கயப் பெண் ணெனயிருந்தனள்.

115 அரி கிட்டின - அரி கிரிட்டின மங்கலம் இவை மங்கப் பொருள்கள்

116 அட்ட மங்கலம்

125 அன்று கல்குழவியை குழந்தைபோல குளிப்பட்டி உடையுடுத்துச் சடங்குகள் செய்வது நாட்டுப் பண்பாட்டு மரல்

131 மாலையம்மைக்குப் பூட்டிய அணிகள் தாலி - கழுத்திபு எழு ஞாயிறு சூட்டிய மயில் - திருமேனியில். பொன்னரை ஞாண், மணிமேகலை இடையில். பீலி, மயிலடி, தண்டை, பாடகம் - காலில், மோதிரம் கையில்.

143 கற்குழலியைக் குழந்தையாகப் பாவித்து நடத்தும் சடங்கு.

வேறு

இருந்த ராசகுல வல்லி மானை
யெழுந்தருளி மாதர்கள் சடங்கு செய்யவேதான்
விரித்தமலர் மாமலர் காவனத் தோடே
மெல்லியலாள் மாலையம்மை முன்னே நடந்தாள்.
சிறந்த புகழ் மங்கையர்கள் வெஞ்சாமரை வீச
தண்டைகள், சிலம்புகள் தகுதி யென நடந்தார்.
முருந்து நகை மங்கையர்களாட இசைபாட
மோக மணி தாளமிடை மேளமது இயம்ப
இயம்பு மறைமங் கலங்களிரண்டருகம் வாழ்த்த
ஏழு திசை ஓசை குழல் வாசனைகள்பாட
நயம் பெறு வலம்புரி சலஞ்சலென முழங்க
நாவலர்கள் பாட மஞ்ச பூவை களிமேவ
பஙண் கள மணிமேகலைகள் பம்பைகளியம்ப
பன்னி நடையென்ன மென்ன மின்னிடை நடந்தாள்
மின்னும் மணிரெத்தின் விதானப் பலகை மீதே
மெலலென மாந்தளிர் விரித்தனர், மகத்தாய்
கன்னியரும், மன்னவரும் காமனும் ரதியும்போல
கை பிடி முகிழ்த்த மென்னகண் குளிர நின்றார்.
பொன்னின் குழவியை எடுத்து மடமானார்
பூவை கை கொடுக்க ராசர் தாவியதை வாங்கி
அன்னையர்கள் தாதியர்கள் மூப்பிமார் மகிழ்ந்து
ஆண் பெறுவை யம்மையெனத்தான் குழவிமாத்த
மாற்றலர்கள் அஞ்ச வைகை நாடுகளிகூர
மங்கை யர்க்கு மாலையிட மாளிகையிலிருந்தார்.
கூற்றை உதைசெய்த சொக்கநாதர் அருளாலே
கோது குழல் மாலையம்மை மாதம்பத்து மானாள்.

வேறு

பத்தான மாதமதில பங்கயக் கொடி மாலையம்மை
மெத்த நாள் மெய் நோவு
மேனித் தாளச்சியைக் கண்ட மன்னன்
இந்தப் பொழுதிலே மன்னன்
ஈத்துப் புரை கட்ட வேணு மென்றான்.
கட்டு மெனச் சொல்லு முன் வெட்டிக்
காட்டுமரங்களைக் கொண்டு வந்து
மட்டுக் குழலார்க்கு

162 — 164 — இது குழந்தைக் காப்புச் சடங்கு. கற்குழவியை மனைவி கணவனிடம் கொடுப்பாள். தோழியர் ‘ஆண்’ பெறுகவென்று வாழ்த்து 25.

வைகை மண்டலம்
ஆள மகன் பிறக்க
இட்ட முகிழ்த்த மதில்
இமைக்குமுன் ஈத்துப் புனர தனைத்தான்.
பொற்கொடி மெய் நொந்து மூன்று சொல்வாள்
மகன் தான் பிறக்குமிப்போ
போய் மருத்துவத்தை கூட்டி வாருமென்றார்.
வருந்து மப்படிகள் கண்டு ஓட்டன்.
வடதாளில் வாழும் மருத்துவத்தை
இருந்து நடக்காமல்
இமைக்கு முன்னே கூட்டி வந்தனனே
வந்த மருத்து வழும்
மறைநூல் விதி லக்கினம்தான் பார்த்து
எந் தாயே மாலையம்மா
ஏங்காதே பிள்ளை பெறுவாயிப் போ
நொந்தாள் திருவயிறு மெத்த
நொம்பலப் பட்டு வருகுதென்பாள்
சந்துங் குறுக்கும் முட்டுதே
தளர்ந்து முகங்குறுக வேர்த் தொழுகி
வேர்த்தாள், மிகத்தளர்ந்தனளே !
விழுவாள், எழுந்திருப்பாள், மெலிவாள்
அம்மா மயங்காதே
என்றனைப்பாராய் என்று அவயமிடுவார்கள்.
அவையம் பகவதிக்குச் சொக்கர்
அங்கையற்கண்ணிக்கு அவயமென்பர்
இவள் இப்படி யிரங்க
எல்லோரு மண்ணில் விழுந்தழுந்தார்
மண்ணுள் வாமனென்று சொல்லி முன்
மகாதேவரிட்ட விதிப்படிக்கு
பெண்ணுள் திருவயிறு நொந்து
பிறக்கும் பிறவி தலை தெரிய

185 இருந்து நடக்காமல் - காலந்தாழ்த்தாமல்
187 மருத்துவம் - மருத்துவச்சி, மருத்துவப் பெண்.
193 சந்து - பிரிஷ்ட பாகம் குறுக்கு - இருப்பு (இவை இரண்டும் நெல்லை வழக்கு)
192 நொம்பலம் - வேதனை (நெ - வழக்கு)
199 அவையம் - தஞ்சம். பிள்ளை பெறுகிற பெண்ணுக்கு இடுப்பு வலி மிகும் பொழுது தெய்வங்களைப் பெயர் சொல்லி அழைத்து அபயம் என்று கூவுவர்.
எண்ணங்கள் - எண்கள்

எண்ணங்கள் சோதிடங்கள்
இருபத்தியேழான ராசி பக்கம்
பக்கமே நவக்கிரகம்
பஞ்சமி நல்ல சிவயோகம்
ஏற்ற ஒரு முகிழ்த்தம் கொண்டு
உத்திர நாளில் பிறந்தனரே
பிறந்தார் உலகம் தழைத்த
பெண்கள் குரவை யெங்குமிட
இறந்த கால மெடுக்க
வந்த ராசு குமாரனென்ன ஏத்துவாராம்.
பூமாது, நாமாது, புவிமாது, வீரத் திருமாது
மா மாது தானம் தழைக்க
மன்னர் பெருமாள் பிறந்தனராம்.
பிறந்த குழந்தை தன்னை
அஞ்சு பெண்கள் எடுத்து முகத்தணைந்து
அந்த முகிழ்த்த மதில்
சேனை புகட்டிக் கொப்புளறுத்து,
அறுத்தார் குரவையிட்டார்.
அன்பாய் மருத்துவமே செய்திடவே
நிறுத்தார் அவள் எடையில்
பொன் நிதியும் கொடுத்தார், இதை கூலியும்
இரை யேத்தங் கண்டதன் பின்
ராச பெருமாள் திரு மகனை
கரையேத்தும் பூங்குழலாள்
நன்னீராட்டிப் பொட்டுமிட்டு
பொட்டிட்டு நகையுமிட்டு
புதல் வனழகெல்லாம் பார்த்திருந்தார்.
முலைப்பால முதளித்து
முகந்து முத்திக் கொஞ்சி மொய்க் குழலாள்
கலைப்பாயின் மேல் கிடத்தி
கண்ணாளர் தொட்டில் சமையுமென்றார்
கண்ணாளர் காவலவர்
காவலனுக்குத் தான் பள்ளி கொள்ள

207 கண்ணாளர் - இங்கு தச்சர் (பஞ்சகருமார்கள்)
215 இறந்த கால மெடுக்க – பிற்கால பாண்டியர்களுக்கு இறந்த கால மெடுத்த பெருமாள் என்ற பட்டப் பெயருண்டு. சோழர் வீழ்ச்சிக்குப் பின் தமிழக முழுவதும் ஒன்றுபடுத்தி ஆண்ட பேரரசர்களாக இவர்கள் ஏறக் குறைய 130 ஆண்டுகள் விளங்கினர்.

விண்ணுளு மதயானை
கொம்பை வெட்டி இணக்கியே சட்டமிட்டு
சட்டத்திடை உருக்குத்
தங்கமதில் தங்கமணியினால் அழுத்தி
சுட்டிக் கண்ணாடி பிறை சூளக்
கடைந்துருவி நிறுத்தி
பட்டுச் சகலாத்துப்
பவள வளைகள் தான் தூக்கி
தொட்டில் சமைத் தெடுத்து
சுந்தர மாறன் முன் வைத்தனராம்
வைத்த மரியாதையை
மன்னன் அளித்தக் கம்மாளருக்கு
மெத்த உபசரித்து மகிழ்ந்தார்.
வேந்தர்கள் பொன்னின் தொட்டிலிலே
நித்தில மெத்தையிட்டு
நிரை நிறை பொன்னின் கம்பிக் கயிறும்
கொத்தாகக் குஞ்சம் மேலத் தூக்கி
குழந்தையைத் தொட்டிலில் கிடத்துவாராம்.

(வேறு)

கிடத்திய பஞ்சணைமீது பள்ளி கொள்ளவே
கிஞ்சுக வாய் திறந்து வஞ்சிப் பெண்கள் தாலாட்ட
கடுதனையுண்ட சொக்கர் அங்கயற்கண்ணி யருளாலே
காணியாள வந்த தொரு காவலனே யென்பார்.
கண்ட நாடு கொண்டு பொன்னிகரை நாடு சேர்த்து
கல்லு வெட்டி நாட்ட வந்த காவலனே யென்பார்.
சென்று அங்கு உயரும் செம்பொன் மகா மேருவினில் பதிக்க
தெய்வ பாண்டியன் குலத்துதித்த திலகனே என்பாரும்
தொண்டு செய்யும் அடியாரும் அஞ்செழுத்தும் வாழவே

240 248 புதிய தொட்டில் செய்ததை வருணிக்கின்றன.
250 மரியாதை - தச்சருக்குக் கொடுக்க வேண்டிய கூலியும் பரிசுகளும்
262 'கண்ட நாடு கொண்டு, கொண்ட நாடு குடாதான் என்ற வாசகம் விஜய நகர ராயர்களது சாசனங்களில் மெய்க்கீர்த்திப் பகுதியில் காணப்படுகிறது. கதை எழுந்த காலம் இச்சாசனங்களின் காலத்திற்குப் பின்னதாகவே இருத்தல் வேண்டும்.
பொன்னிகரை நாடு - சுந்தர பாண்டியன் I, குலசேகர பாண்டியன் இவர்களது வெற்றிகளை இது குறிப்பிடும்.
அடியார் - சிவனடியார்
260—273 அரண்மனைச் சேடியர் தாலாட்டுப் பாடினர்.

# ஐவர் ராசாக்கள் கதை

நாட்டுக்கதைப் பாடல்

(வில்லுப்பாட்டு)

மூலம்

Text

தோன்றிய இடம் :

நெல்லை, குமரி மாவட்டங்கள்

வழங்குமிடம் :

நெல்லை தென்பகுதி

குமரிமாவட்டம் வடபகுதி

சொக்கநாதர் அருளால் வந்த சுடரொளியோ என்பாரும்.
மீண்டு பேசும் மருவலரை வெட்டியிரை யேத்தவே
வெல்லும் பரியேற வந்த வேந்தனோ என்பாரும்
அண்டர் நாயகன் திருக்கோவில் பூசைக்கும்
ஆகமதத்திபடி நடத்தும் மாராசனோ யென்பாரும்.
திங்கள் மும்மாரி பொழிந்து பலபட்டறையும் வாழவே
தெய்வ சந்திரன் குலத்துதித்த திலகனோயென்பாரும்
எங்கள் குலத்துக்கு ஓர் ஆளியான தீரனோ
என்று தாலாட்ட பஞ்சணை மீது பள்ளி கொண்டார்.

(வேறு)

வேறு சந்தம்

பள்ளி கொள்ளுமந்தப் பாலகனுக் கெட்டா மாதம்
பாலும், பழமும், சக்கரை சீனிதானுமாய்
வெள்ளித் தளிகையிலிட் டொன்ருகக் குழப்பியே
வேந்தன் மடியில் வைத்து அமுதூட்டி மேவினர்
நாளும் நாளு தர்மந் தழைக்கவே, சீர் விளங்க
நாலு வேதமும் நாதமிட வாலச் சந்திரன் போலவே
ஆளுக்கழகன் அதி ஞான வல்லபமாறன்
ஆண்டு நின்று தன்புவி மீது வாழவே
நீண்ட குஞ்சி முடிக்கு அஞ்சனம் மஞ்சளை பூசி
நெத்திக்கழகாயப் பொட்டுமிட்டு சுட்டிகட்டி
தூண்டாமணி ரெத்தினமும் முத்து மாலைகளும்
ஞால முன்குழலுமே தார்வடமு மணிந்தார்.
வேண்டு விரலாழி வளைக் கச்சமும் கட்டி
வீரு தண்டைச் சதங்கைக் கிண்கிணியுமணிந்தார்.
ஆளுக் கழகனை அலங்கரிக்க, அங்கையற்கண்ணி
அழகிய சொக்க நாதரையும் போற்றி வலம் வந்து
காணிக்கையிட்டு, வைகைக் கரையம்மையைப் போற்றி
கல்யாணமுங்கூடி யஞ்சு திருவயது செல்ல.

(வேறு)

அங்கயற்கண்ணி, அழகிய சொக்கரருளால்
வஞ்சியிடைக் கொடி, மன்னவர்க் கின்னமுதான
மாலையம்மை, பின் நால்வரையும் பெற்றெடுத்தாள்.

274 294 இளவரசன் வளர்ந்து ஐந்து வயதான பொழுது நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறுகிறது

297 முதலில் பிறந்த குழந்தை குலசேகரன் அதன் பிறகு சில ஆண்டுகளில் நான்கு குழந்தைகள் பிறந்தனர். அவர்கள் பெயர்கள் 300, 301 வது அடிகளில் சொல்லப்பட்டிருக் கிறது.

பெத் தெடுத்து வளர்த்தாளே யுலகந்தழைக்க
பிஞ்சு மதி போலே யஞ்சு பேரும் வளர்ந்தார்
முத்துப் பெருமாள், முகில் நகுலப் பெருமாள்,
முடி சூடும் பெருமாள், பாண்டிய பெருமாள் தனையும்
சித்திரமாக எழுந்து ஓத, பள்ளியில் வைக்க
சீத்துவமான தொரு வாத்தியார் தமையழைத்து
முத்து நிறை நாளி முப்பது, பொன் தட்சிணையும்
மூத்த நயினுர் முன் வைத்து முகிழ்த்தமுங் கொண்டார்.
பொத்தகம், பொன்னிலெழுத்தாணியைக் கைப்பிடித்தே
தான்
போத பதினெண் சோடு ஞானமுங்கத்தனரே
கத்தார், ஆதி யாகம தாப சித்தாந்தமும் கத்து
காரிகை கத்து கவிபாட்டு வந்ததின் பின்பு
கொற்றவனுக்குக் குடை வாழ, வெற்றி வளுக்காகக்
கூட்டமாக வந்தகிலர் ஒட்டமாக கடிதாகச் சென்று
கும்பிட்டுச் சென்றுர்கள். தேவிக்குப் பூசை நடத்தி
வெட்டு வானந்தன் நிறமாக்கும் பொழுது
வேந்தனைப்போல சமத்தருண்டாக்கி
தாட்டிமையாலே திரி பொரி சக்கரை தேனும்
தந்த முகன் முன்பு வைத்து முகிழ்த்தமுங் கொண்டார்
கொம்மை முலையார் குரவையிட வாச்சியங்கள்
ஊதவே தேங்காயுந் தட்டினுர் முகிழ்த்தத்தில்
அந்த முகிழ்த்தத்தில் கச்சை கெட்டியு மிரட்டு
அண்ணவியுஞ் சென்று துர்க்கை தேவியைக் கைதொழுதார்
முத்தச்சி வாரமாய். நேரந் தொட்டு நடந்தேறின்
முகிழ்த்தம் கொண்டே வாள் பரிசை எடுத்துக் கொண்டார்
வாளும் சிறுவாள் வளைந்த வாள் செம்பொன் சுரிகை
வல்லயம் பதினெட்டுமே வருத்திய பின்பு
நாளும் நமக்குச் சுமந்தாள வேணுமே எண்ணி
நாடக சாலையும் வைத்து பலமெனக் கூட்டி
வேட மகுடம் சுருதி ராகங்கள் பாட

303 சீத்துவமான - கெட்டிக்காரரான (நாஞ்சில் நாட்டு வழக்கு) 306 - கத்தனர் - கற்றனர்.

320 322 பல பரிசுகளை பரப்பி வைத்து எடுக்கச் சொன்ன பொழுது, குலசேகரன் வாளை எடுத்தான். இக்கதை ஜான்சி ராணியைப் பற்றியும், கட்டபொம்மனைப் பற்றியும் வழங்குகிறது.

323 325 குலசேகரன் வாள் பயிற்சியும் வேல் பயிற்சிகளையும் பெற்றதைக் கூறும். வல்லயம் - வேல் போன்றதோர் கருவி

வேந்தர் பெருமாளும் கூத்தாட வென்று சமைந்தார்.
தாளம் சுர பேதம் பரதம் பல நாடகங்கள்
சக்கிலியன் களி ஆண்டு கன்னல்பா முதியன்
கன்னல்பா வென்ன அர்ச்சுனன் பொன்னுருவியும்,
கஞ்ச பாண்டு பரிசை போர், வீரபத்திரன்
மன்னுக்கரசன் சமைந்து கூத்தாடி வரவே
மங்கையர் கண்டு மருண்டு மயங்கி விழுவார்.
மங்கையர் மன்மதன் கூத்தின் சிரமும் காத்து
வன்ன வச்சிரமும் வழியோட்டமும் பலர் காத்தார்.
ஆனைப் பரி துறையாளனை கூட்டிவா என்னுமுன்
ஒட்டனும் கூட்டி வரவே குலசேகரன் கண்டிய தேவரை
வந்து தொழுதார்.
நாட்டையாள மருவலாரை நற்பீடமிட்டு வெட்ட
நற்பரியேறி படிக்க வேணுமென்றார்.
கேட்டுக்கிளர்ந்து பரித்துறையாடி அனுப்ப
கேடில்லா வீரர் கரத்தின் விதிப்படியாலே
படியாளு மன்னர் பரியேற முகிழ்த்தம்
பார்த்து இலக்கணத்தோடு............
கடிதாக கச்சணியும் நம்பிரான் தன்னை
கட்டி அலங்கரித்து வாருமென்று விட்டார்.

### வேறு

விட்ட போது சரணியும் தான் படியதாக
வேழம் பரிகள் நம்பிரான்கள் கண்டு நிற்கும்
மட்டு மாளிகைக்குள் பூட்டுப் புரை திறந்து
மாணிக்கப் பேரான மருந்து வாயு வதையும்
அட்ட மங்கலம் பகல் விளக்கு வைக்கும்
அஞ்சு வண்ண பஞ்ச கல்யாணியும்

330-340 இளவரசன் கூத்தும், நாடகமும் பார்த்துக் களித்தான். கூத்தும், நாடகமும் ஆடியவர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கூத்து சக்கிலியர் முதலிய 'கீழ்ச்சாதியார்' ஆடினரென்பது இதனால் தெரிகிறது.

340-41 நாள் முகூர்த்தம் பார்த்து நம்பிரான் என்ற குதிரையை அலங்கரித்துக் கொணர்ந்தார்கள்.

348 சரணி - குதிரை (ஊர்த்)

349 இளவரசனுக்குக் குதிரையேற்றம் கற்பிக்க குலசேகரன் கண்டியத் தேவன் என்பவனை அழைத்து வந்தனர்.

353-54 பஞ்ச கலியாணி, கார்குல்லா - குதிரைச் சாதிப் பெயர்கள், தம்பிரான் - ஒரு குதிரையின் பெயர். இதுவே பட்டத்துக் குதிரையாகும்.

நட்டுவக் கூத்தாடி வரும் கார் குல்லா நம்பிரானையும்
அவிழ்த்து பெரிதாக்கி
கொட்டு வாச்சியம் முழங்க குளந்தனிலே
கொண்டு சென்ற நம்பிரானைத் தான் சிலர்
பட்டினாலே தான் துடைத்து புனுகு, களபம்,
பன்னீரும் தான் தெளித்து மல்லம் வைத்து
மல்லமும் கல்லணை யதும் பொன்னினாலே
வட்ட வார்முகமும் ஈடும் பொன்னினாலே
சல்லி சதங்கை தண்டை பொன்னினாலே
தாப்பிணி வார், கால்படியும் பொன்னினாலே
பொன்னினால் கழுத்துக் கட்டி வீசும் வாரும்
பூக் கொண்டையும் கால்தண்டையும் பொன்னினாலே
வன்னி நடையிடும் காலில் வீர தண்டை
பையக் குறையும் சுவடுகளும் தானும் கட்டி
கன்னமயிர் பரை வாரும் கச்சை குச்சையும்
காலு நாலுக்கு மயிர்கள் தானும் கூட்டி
சன்னயமும், குப்பாயமும் தானும் பூட்டி
தம்பிரான் முன் நம்பிரானைக் கொண்டு வந்தார்.
மன்னவரும் பரியேறக் கொண்டு வந்தார்.
இந்திர லோகச் சட்டை சாத்தி பட்டுடுத்து
இரத்தினம் சவடி முத்து மாலையிட்டார்.
சந்திர வதன முதல் பொட்டுமிட்டு
சங்கிலி சரப்பணி பதக்கம்சாத்தி
முந்த விரலாழி முன் கை முதாரியும்
முத்து வளைக்.........
மந்திரி மார்............
மன்னவரை அலங்கரிக்கச் சென்று நின்றார்.
சென்ற வரும் மன்னவரை பரியாள்
சித்திரப் பரியின்மேல் ஏத்துவாராம்.
மன்றில் மன்னர் பரியேற மாற்றலர்கள்
மலையேற மாதரெல்லாம் மையலேற
குன்றும் கடலும் ஆகாசமும் தூசியேற
கொங்கு வடகெங்கை மட்டும் புகழ் எழ
வென்றி முனை நம்பிரானும் அபிமானித்து

358-59 குதிரையைக் குளிப்பாட்டி பட்டினால் துடைத்தார்கள்
360-370 குதிரையை அலங்கரிக்கப் பயன் படுத்திய பொருள்கள்.
381-86 குலசேகரன் பரியேறி ஓட்டி மீண்டதை உயர்வு நவிற்சி உத்தியால் கூறும் பகுதி இது.

மீள வட்டமிட்டு மெள்ள கொஞ்சிக் கொஞ்சி
விதானமாய்த் தான் மிதிக்க தண்டை பம்ப
தாள வட்டமிட்டு தித்தி தித்தி யென்ன
தக கிட கிரிதி தக கிட கிரிதி என்று ஆடும்
ஆணழகன் இந்த வண்ணம் தம்பிமாரும்
ஆடல் பரியேறி மன்னர் வீற்றிருந்தார்.
பரியேற்றும் பலகலையும்
கரியேத்தும் மல்போரும் கற்று
தெரிசனையில் சிவப்பொருளை
தென்கலையும் வடகலையும்
தரியலர்கள் மணவாளன்
தட்டுமறித்து பந்தெறிந்தார்.
பந்தாட்டும் களம் காட்டும்
பாடி யோடி அசந்தார்.
கந்தன் கண்ணனென்பார்.
காமனென் பார் மடவார்கள்.
அந்த வண்ணம் பதினாறு
அரசருக்கு வயது செல்ல
மருமணக்கும் குழலாளை
மணம் செய்ய வேணு மென்றார்.
மணம் செய்யவே மச்சினத்தார்
வகை தன்னிலே பெண் பேசி
கணமிதிலே யியம்பிடவும்
கடுகவிட்டார் ஒட்டனையும்
ஒட்டனும் நிலமாளும்
மன்னருக் குகந்த சில மந்திரி மாரும்
தாட்டிமையாம் வெட்டு மாறன்
தன்னை நிகரில்லா மன்னு
தம்பிரானெண்ணம் பெண்களை

381-389 பரியேறி மீண்ட நிகழ்ச்சி கூறப்படுகிறது.

395 பரியேற்று - குதிரையேற்றம். இளவரசர் பயில வேண்டிய கலைகளில் ஒன்று.

396 கரியேத்து - யானையேற்றம். (பேச்சு வழக்கு)

405 406 இளவரசனுக்கு பதினாறு வயதானபோது மணப் பேச்சு எழுந்தது.

408 மச்சினத்தார் - மைத்துனர். இவர்கள் வேணாட்டரசர்கள் பத்மனாபபுரத்திலிருந்து தென் திருவிதாங் கோட்டை ஆண்ட பரம்பரையினர்

412 ஒட்டன் – ஒற்றன் (பேச்சு வழக்கு - நெல்க, நாஞ்சல்)

உன்னுடைய மருமகனும்
உலகாளுங் குலசேகரர்
மன்னர் மணஞ் செய்ய இங்கே
அவர் விடுத்தார் அடியேனை
அடி தொழுதங்கவனு ரைக்க
அகமகிழ்ந்து வெட்டு மாறன்
"உடையாருடைய படி
ஒருவரையுஞ் சொல்ல வேண்டாம்.
சடுகியே செல்லுமங்கே
கன்யா தானஞ் செய்ய"வென்றால்
என்று மந்த வெட்டுமாறன்
இயம்பு மொழி தனைக் கேட்டு
சென்று வந்து குல சேகரர்
திரு முன்பிலேது சொல்வார்
"மன்றல் செறி மாலை மார்பா
மன்ன வனே பாண்டியனே
என்று தலை மாலையிட்டே நீ
உறுதிப் பாடுஞ் சொல்லி விட்டார்
சொல்லி விட்ட வார்த்தை தன்னை
மனமகிழக் கேட்ட போது
நல்லதெனக் குலசேகரர்
நளினமுடனேது சொல்வார்
வல்லபடி கலியாணம்
வரிசை பெற நடத்த வென்ன
கலியாண முகிழ்த்த மிட்டார்.
கலியாண முகிழ்த்த மிட்டுக்
காதலியைக் கைப்பிடிக்கச்
சலியாமல் அரிசி கிடாய்
தயிர் நெய் பாலிளந் தேங்காயும்
பொலிவாகத் தானேத்தி
மரகதக்கால் பந்தலிட்டு
பந்த லிட்டுத் தூண்களெல்லாம்
பவள முத்தால லங்கரித்து
சந்தனமும் புனுகு பன்னீர்
தரைகளெங்கும் மெழுகிடுவார்

421-430 ஒற்றனையனுப்பி வெட்டு மாறப் பாண்டியனை பெண் கேட்டார்கள். அவரும் சம்மதித்தார்.

419 பகளம்—பவளம். (நெல்லைப் பேச்சு வழக்கு)

451-468 திருமணத்திற்காக நகரை அலங்கரித்தல்.

பங்கயம் பொன்னும் போல
சீர் வாய்த் தொன்றாய்க் கலந்து
சிறப்புடன் வாழ்ந்திரு மென்றார்
அந்தணர் வாழ்த்தப் புலவோர்
ஆசு கவி நின்றுபாட
நற்றமிழ்ப் பெரியோர்கள்
நடன கீதம் பாடுவாராம்.
பைந் தொடியும் மன்னவனும்
பள்ளியறை சென்றே புகுந்தார்.
பள்ளியறை மீது மன்னன்
பாவாடை மீதிருத்தி
வெள்ளிரு சாணைக் கலந்து
விரித்த பொற் கலமும் வைத்து
பூதக் கலத் தமுதுடனே
பொரி கறி, நெய்யும் படைத்து
ஆதரவோடே களித்து
அமுது பொலிந்தாரே மன்னர்
மன்னவனாரிப் படியே
மணவாளத் தோழரோடு
அன்னமிட்டுக் கலியாண
மடைவுடனே நடத்திய பின்
ஏழாம் நீர் கூடியபின்
கூட்டமிட்ட படை சேருமிக்
குரு வன்னியர் புடைசூழ
ஈட்டி, வேல் பரிசை குந்தம்
எடுத்து முன்னே சேவிப்பாரும்
சேவிக்கும் பரிகலமும்
சேனை பரிவாரமதும்
பரவிக் குந்தமடிப்பாரும்
பல்லாக்கு முன்னடக்க
பல்லியங்கள் வெடி திடிமன்
பல குடையுஞ் சேருமிவர்
மல்லியரும் தடம் புயத்தான்
மாமதுரைப் பதியில் வந்தான்
மாமதுரைப் பதியில் வந்து

523 பாவாடை—விரிப்பு

534-547 குலசேகரன் பரிவாரங்களோடு மதுரை வந்து சேர்ந்து தாயை வணங்கினான்.

மாலையம்மை தனைத் தொழுது
காமனும் ரதியும் போலக்
கை கலந்து வாழ்ந்திருந்தார்.
சோமகுல வங்குசபதி
சுகமாக இருந்திருந்தார்.
அன்னாளி லமைச்சர்களும்
அரிய திருத்தம் பிமாரும்
இகல் வேந்தர் தமக்கிணங்க
செங்கோலு மர சிருக்கை
முடி சூட்டத் திட்டமிடுகிறார்கள்.
செலுத்த அவர் சால நன்றாய்
அங்கையற்கண்ணி யருளாலே
அபிஷேகம் வைக்க வேணும்
கருவூலக் கணக்கரையுஞ்
ராயசக் காரரையும்,
திரு முகத்துப் பிள்ளைமாரை
திட்டெனவே வர வழைத்து
பண்டு வைத்த கருவூலமும்
பணப்பெட்டி நாகமணியும்
கொண்டு வாரும் அறை திறந்து
கொற்றவர்க்கு முடி சமைக்க
கொற்றவன ருளாலே
கொண்டு வந்தார் நன் மணிகள்
அத்தனையில் நல்லதெல்லாம்
அடைவுடன் இவர் தெரிந் தெடுத்து
பங்கயக் கனகம் இடை கலந்து
பதிப்பாராம் நாகமணி
நாகமணி ஒரு பத்தி பச்சை யொருபத்தி
நாகரத்தின நீலமணிகளொரு பத்தி
மாகமதில் அணி கிரண வொளி வெளிப் பரந்திடவே
மணிகள் பல வொளி வீச வைத்தார்.

551 சோமகுல வங்குசபதி—சந்திரகுல வம்மிசத்தலைவன் குலசேகரன்

553-559 குலசேகரன் தம்பியரும், அமைச்சர்களும் அவனுக்கு முடிசூட்டத் திட்டமிடுகிறார்கள்.

560 - 563 கருவூலக் கணக்கர் ராயசக்காரர் திருமுகத்துப் பிள்ளைமார் — இவர்கள் உயர்தர அதிகாரிகள். பொக்கிஷம், அரண்மனை நிர்வாகம், கட்டளைகளை நிறைவேற்றுவோர் முதலியவர்கள்.

570 - 672 பலமணிகள் பதித்து, தேவர் உருவங்களமைத்து பொன்னால் மகுடம் செய்து முடித்தார்கள்.

மூவர், மலைமகள், மலரின் மகள், கலையின் மகளும்
வைத்தார்கள் பத்தி முத்தி சித்திர ஞானியர்கள்
பகவானு மறுபத்து மூவர் முதலியரும்
அத்தி முனிகளிட்டப்பதி இந்திரனும் ஆறுமுகன்
அடைவதிலே தும்புரு நாதரை யிருத்தி
பத்தி பல பத்திகள் பதித்து திசை தோறும்
பல மணிகள் காண ஒளி வீசி நிலையொப்ப
சுத்தி வெளி வட்டம் இடைவட்டம் நடுவட்டம்
சுடரகிமபுரி முகந் தூவிகளும் வைத்தார்.
மத்தமு மடித்திலே மடித்திசை வெளிக்கே
மதி யிரவியின் ஞயகம் பதித்தனரே
பதித்தனர் பணிக்குறை முகிழ்த்த முடி தன்னை
படகு கிடி விடி முரசு வெடியதிரவேதான்
விதித்த விதியின்படி யெடுத்ததனை மாந்தர்-பல்
வேந்தர்கள் விருந்த ரசர் முன்பு வைத்தனர்
வைத்த முடி கண்டு மன்னன் மெய்த்து, மன்னனப்போ
மணிகள் பணி குதிரை இடைவளையல் பலசிவிகை
எத்திசையிலரசர் புகழ் நித்த கலியாணன்
இறை கூலி சவடி துகி லொளிர்ந்து அளித்தனர்.
மெத்த மன மகிழ்ந்து மாந்தரும் வேந்தரும்
வேந்தனுட விடை கொண்டு வீதியிலே போனர்
போன பொழுதரைசர் குலத்தில் தனப்போதே
புகழ் பெரிய மந்திரி மாரை முக நோக்கி
தானமுடன், அபிஷேகம் மண்டபம் வையுமென
சடுதி கொடு வானவரை மாறன் மகிழ் வைப்பார்
மன மெய்க்க மணி மகுட முடிவைக்கவேதான்
மாடமாளிகைக் கூடம் மண்டபமமைத்தான்.
கண்டு மயக்கப் பலபத்தியுரு வைத்துத் தானும்
கன்ன சாலைகள் தூவி மின்னவே வைத்தார்
தினம் தேய்த்த கடல் முத்தை படியுத்திரைத்தே
தீத்தினர் சுவரது சிறந்திலங்கிடவே
இலங்கு மணி மண்டபத்தில் சுவரெல்லாம்
ரதி மதன் எழில் பூவைக் கிள்ளையும்
திலக நுதல் வேணு தை கும்ப குடங்களும்
சிவன் உமையுந் திருமாலு மயனுமிக எழுதுவார்.
பல புன்னைப் பூ மாக்குலை வாழை எழுதுவார்

580 - 583 பல தேவர்கள் உருவங்களை மகுடத்தின் மேல் புறத்தில் செதுக்கினர்கள்.

மயில் புறு தாரா எழுதுவார்
மலையிலகு மண்டபத்தில் சுவரெல்லாம்
மணிமாலை, முத்து ரத்தினம் விதானிப்பார்
மாலைகள் பழுக்காய்கள் பூவிதிகள் கொடியுடன்
மாந்தளிர், பிச்சி இருவாட்சி புன்னை தூக்கிடுவார்
கொழுந்தான மாந்தளிர் குருவிஞ்சி பால
கோல நீலப் பட்டுச் சல்லி தூக்கிடுவார்.
சல்லி சவரங்கள் சகலாத்து வடிவரிசல்
சந்திர காந்தியுடைய மணிகள் தூக்கிடுவார்
வல்லியர்கள் புனுகு கலை பன்னீரால்
வழித்தார் பன்னீர் மண்டபம் மணம்வீச
எல்லியர்களாண்ட குருமணி விளக்கேற்ற
இந்திரன் இருக்கும் ஒளி மண்டபம் போலே
மண்டபம் குறைவில்லாத அழகுடன் முகிழ்ந்தபின்
மணிமகுட முடிசூட மன்னவனை யன்று
கொண்டு வந்தார் திருமஞ்சனம் பொலிந்து
கோல வண்ண மண்டபத்தரியாசனத்தில்
எண்டிசையும் வாழ எழுந்தருளு வித்து
இராச குரு வேந்தனை சடங்கு செய்யவேதான்
குண்டத் திலோமம் வளர்த்து திரை வளைத்து
குங்கிலிய தீபமோடு மணி மாறியே தான்
பணி மாரியுந் வேத மந்திரப் பொருளாலே
பட்டு நூல் காப்பதும் கட்டினர் கையில்,
மணியான கும்பங்கள் தாபித்து
மன்னவன் திருமுடிக்கே சொரிந்தனராம்
சொரிந்தபின் பொன்னெழுத்துத்துகி லுடுத்தித்
துய்ய திருநீறு திரு நெத்தியில் அணிந்தார்
விரிந்த குழலை மேல் தூக்கிக் கட்டி
நறுமலர் மணமாலை கடுகமலர்சூடி
மேவு சங்கிலி பாகங்கஞ்சவடி சாத்தி
மதம் பெறு திருப்புயம் அழகு பெறவே தொட்டு
வாகு வலயம் முன் கை மேல்தோளிலிட்டார்

614 - 657 முடி சூட்டு மண்டபம் புதிதாக இயற்றி அதனை பலவகையாலும் ஏவலர்களும், தொழில் வல்லவர்களும் அலங்கரித்தனர். இவற்றுள் சில தேர் திருவிழாவின் போது கோவில் அலங்காரங்களை ஒத்தவை. சில காலப் போக்கில் மறைந்து விட்டன போலும். மங்கல நாட்களைக் கொண்டாடுவதில் முடிசூட்டும் விழாவை நமது நாட்டில் கொண்டாடிப் பல நூறுண்டுகளாயின. இனி அவ்வழக்கம் தோன்றுவதற்கில்லை.

640 திருநெத்தி—திருமுகம் (நெற்றி)

இதம் பெறு முகப் பணி ரத்தின சங்கிலியும்
எழில் வளரு கெச்சம் விரலணிகளணிந்து
ஆளி லழகன் அதி சூரமன்னன்
அழகு திரு வரையிலரை ஞாண்பட்டையும்
தாழ விதம் முறை வீரதண்டை வீரக்கழல்
தரிச் சிலம் போடே சிலம் பணிந்தனராம்.
அணிந் தழகு பெறும் ராச குலத்தனையுமரசர்
அபிசேக மணி மாடமது தனி லிருத்தி
பணிந்தனர் களபிசேக முடி தனையெடுத்து
பாரேழும் வாழ மறை நால் வேதம் வாழ
மறை யோர்கள் திரு நீறு அஞ்செழுத்தறமும்
மகா தேவர் பூசை, குரு பூசைகளும் வாழ
குறியான சைவ நெறி யாறு சாத்திரமும்
குடியான அடியார்கள் மிக வாழவே தான்
திரை மேவு திங்களும், மாரி, பல்லுயிரும்
செந்நெல், கன்னல் கார் பிசான மதுவும் வாழ
முறைப் படி அடியார்கள் மறையோர்கள் வாழ
மூத்த குல சேகரர்க்கு முடியெடுத்து வைத்தனராம்.

வேறு.

மூத்த குல சேகரர்க்கு முடி யெடுக்க வேதான்
முதியோர்கள் மங்கலம் பாடவே
நாற்றிசையும் சங்கு முரசு வெடிதிடிமனும்
நாக சுரம் குழலூதவே
வாய்த்த மறை யோர்கள் கவி வாணர்
மகுட, மத்தள கையார்ப் பவே
ஏத்தி யே இருபுறமும் வெஞ்சாமரமும் ஆலத்தி
ஏந்து வார் மன்னவனைப் பாடுவார்
பாடுவார் கயிலாச வீணை கின்ன கவி
படிப்பார்கள் பலகலைகள் எங்கணும்

அரசனுக்கு அணிவித்த அணிகள்
சங்கிலி, பாகம், கஞ்சவடி, வாகுவலையம் முகப்பணி, கெச்சம் (விரலில்) அரைஞாண் பட்டை, வீரகண்டை, வீரக்கழல், சிலம்பு,

660 - 63 மன்னன் முடிசூடும் பொழுது வாழ்த்துக் கூறுகிறார்கள். இங்கு சைவமும், அடியார்களும், சாத்திரங்களும் ஆகமங்களும் வாழ்த்தப் பெறுகின்றன. மழை பெய்து உழவு பெருகவும் வாழ்த்துக் கூறப்படுகிறது.

666 திடிமன் — ஒரு ஊது குழல்

669 மகுடம் - பம்பை போல் ஓர்புறத்தோற் கருவி folk musical instrument.

நீடு வான் மட்டும் அடைய எதிர் வதன
நித்திலக் குடை வெள்ளை வட்டமும்
வெள்ளை வட்டம் பிணிபாடை கயர் செருடி
விரி கதி ரோனை மறைந்தார் வரவே
பள்ளிக் குடையும் பவள முத்துக் குடையும்
பச்சை நீலக் குடைகள் சேரவே
உள்ளுடையர், அகம்படியர், துறைக் காரர்
எட்டார், காலையார் கூட்டமும
காளாஞ்சி, திருகை பரிசை யுடைவாளும்
கலசப் பானை யேந்தி வருவாரும்
ஆளடி மை தேவாரத்துடன்
அடங்கலு முன்னே சேவிக்கவே
தூசி வான மெட்டுமடையவே, கதிரவன்
சுடரொளி கண்களை மறை க்கவே
வில்லும் வாளும் பரிசைச் சுருகை பட்டயம்
வாண வெடி வான மிடி யென முழங்கவே
கல் மேல் துவைக்கும் மலையாங்குளத்துப் பரிகள்
கடலொலிகளென அதிர் ந்தார்ப்பவே
கொல்லத்து வித்தாரி சில தொட்டியர் வில்லுடன்
குன்று பரிசை நூல் பரிசையும்
மலையாள, துளுவர், கன்னடவர்.
கன்னடர், தெலுங்கர் துளுவர் ஆரியர் மச்சர்
கடிய தொட்டியர், மறவர், விலாடரும்,
வன்னியர்கள் செங்கர், கொங்கர் நீள்வங்கவர்
மலை வேடர் மச்சர்களும்
மலை வேடர் ராச மக்களும் அவர்
என்னிலத் தரசரும் மதுரை சுட்டியாளும்
மன்னனை இரு புறஞ் சேவித்து நிக்கவே.
மன்னன் வெட்டு மாறனும் தம்பிஞ்சி மரவிலி
வானுதும் வந்து சேவிக்கவே
சேவித்துச் சித்தூரில் சின்னய் யன் தளவாயும்
சித்த நத்தத்து லிங்கப்பனும்

680-681 ஊர்வலத்தில் வந்த படைகள் உடையார், அகம்படியர், துறைக்காரர் (கடல் துறை மக்கள்) எட்டார் (எட்டைய புரத்தார்.)?

693-702 குலசேகரனைப் பணிந்து அரசாண்டவர்களின் பட்டியல், சுந்தரபாண்டியன், வீரபாண்டியன், குலசேகர பாண்டியன் ஆகிய பிற்காலப் பாண்டியர்கள் தமது வெற்றியைக் கூறிக்கொள்ளும் மெய்க் கீர்த்திகளின் போக்கிலேயே யுள்ளது.

பாவித்து மந்திரிகள் பரி கரிகள் தம்பிமார்
பல்லக்கின் மீதேறி வரு வாராம்.
பல்லக்கதில் மூத்த உடையார் வல்லவ ராசர்
பாரப் பிரபுக்கள் காலிங்க வில்லனுடன்
செல்லப் பெருமாளும் சீவலகத் திய தேவர்
தீரன் திருமங்கை ஆள்வானும், திரு வனந்தாள்வாரும்
மல்லத்து தென்புயத்தான் செஞ்சயனும் தொண்டை மானும்
மருவார் மணவாளன் சம்பிரிதிப் பிள்ளையுடன்
நல்லார் புகழ்ந்திடு கரைகண்டார் காங்கயனும்
நாயனைப் பிரியாத தொண்ட மானும் சேவிக்கவே
பக்கத்திலுள்ளோர் பழைய பளிக்கண் மாரும்
பாண்டியார் பின்புறத்தில் தாண்டிப் பரி மீது.
தெக் குத்துப் பணிக்கர் பரிசைக் கட்டியலுமாய்
சிங்காரத் தி னொடு சிரமங்கள் செய்குவார்
வன்னப் பரியும் யானையும் அலங்கரித்து
மாகுத்தன், ராகுத்தன் மார்கள் ஏறிடுவார்
சின்னம், தவில் தாரை திடிமனொடு பொட்டியம் மேளம்,
தென்னன் திருத் தம்பி மார்கள் முன் சேவிக்கவே
என்னிலத் துள்ள படை களும் ஒன்றாய்க் கூடி
ஏழு கடலும் வளைந்தாப் போலே செரும,
அன்ன பரிபாலன குலசேகரப் பெருமாள்
அந்தப் பொழுதிலே யானையைக் கொண்டுவா என்றார்
சொன்ன மொழி கேட்டு மாகுத்தன் தொழுது கொண்டு
சுந்தரமுடையான யானை முன்னே செல்லுவான்
சென்று தறி கெடமே சங்கிலியை அவிழ்த்துவிட்டு
தீர்த்த மாடி மேனி மினுக்கியே நாமமிட்டு
வென்றி புனை நெத்தியதிலே வீரப்பட்டம் கட்டி,
நன்றாய் அலங்கரித்தார்.
வந்த மதயானை யைக் கண்டந்த நேரமே
வானவர் கோன் ஐராவதத்தில் ஏறினாற் போலவே
சுந்தரத்துடையான் யானைமீ தேறிக் கொண்டு
சுற்றும் முற்றும் திருத் தம் பிமாரும் தானுமாக
இந்திர நீல முத்தின் குடையொத்த குடைகளும்

722 அரச பவனியின் போது, பல்லக்கில் வருவோர், குதிரை மீது வருவோர் ஆகியோரின் பெயர்கள் சொல்லப்பட்டது. இவை கற்பனைப் பெயர்களே. ஊர்கள் உண்மை யானவை.

725 செரும - முழங்க

இரண்டு ஐந்தலை நாகம் குடையிட முடி மீதில்
அந்தரத்தில் நின்று பூமாரி துந்துபியும்
அமரர் முழங்கிட அரம்பையர் வந்து பார்க்கவே
கொத்துலாவும் கடல் பதித் தெரு வீதியெல்லாம்
குரவையிடுவார்கள், குலை வாழை நாட்டிடுவார்கள்
பந்தல் காவணங்கள் தோரணங்கள் கட்டிடுவார்கள்
சந்தனம் சவ்வாது புனுகுநீர் இறைத்து
களிப்பார் தெருவெங்கும் தலை வாசல் தனிலே தான்.
கும்பக்குடம் நிறைநாழி குத்துவிளக் கேத்திடுவார்
குழைத்து மஞ்சன நீராடுவார் தெருத்தெருக்களெல்லாம்
சித்திரம் எழுதுவார்கள், வெள்ளை தெளிப்பார்கள்
வம்புற்றிடும் கொங்கை மடவார்கள் தங்களோடு
வட்டப் பொட்டு மிட்டு எட்டி எட்டிப் பார்த்திடுவார்
கம்பக் களியானை மீதிலேறித் தம்பிமாரும்
காவலனங் காவணத் தோடு வாரநேரம்

திருகு சிந்து

காவணத் தோடு பவனி வரக்கண்ட காசினி மாதரெல்லாம்
நாமணக்கச் செய்து காணப் போனோமென்று நன்றாய லங்கரித்தார்
பூமணக்குங் குழல் கட்டிய காதிலே பொன் மணக்கும் ஓலையிட்டார்.

பொன் மணக்கும் மேனி மினுக்கியே
வாடை புனுகு சவ்வா திடுவார்.
அன்னத்தை வென்ற நடையிடை
பாவித் தலங்கரித்தே வருவார்;
முன்னித்திடை அல்குல் மேலே
பணிப்பட்டு சேலை சுத்திடுவார்.
சன்னை நகையால் விழியால் மருட்டி
சடக்கடித் தே விழுவார்;
வாராரும் கொங்கைக் குறியோடு
மாதர் வருங் குறி காட்டிடுவார்,
சீராடித் தோழி மாரோடே
தெருவில் சறுக்கி வருவாரும்
கூர் வேல் விழிக்கு அஞ்சன மிட்டு
நெத்திக்குக் குங்குமப் பொட்டிடுவார்,
மாறேறி மஞ்சணை பூசி
மயங்கி மய லேறி யே ஒருத்தி
ஊரேறிப் பார்க்க நடுவே புறப்பட்டு
பட்டு டை குலைந்தாள் ஒருத்தி

சித்தாடை சிகப்பி ஒருத்தி
சிரித் தொழுது தன்மேல் விழ
பத்தாமல் கட்டி நெருக்கத்திலுள்
எல்லாம் பாராட்டி விட்டு விட்டார்.
வெற்றி லைதின்று செறுக்கி ஒருத்தி
விழுந்தாள் ஒருவன் மேலே
சுத்தி லே களம் பார்த்து அவளுடை
அல்லுன் தோளிலும் கையை வைத்தார்.
தண்டியல் பல்லக்கு மூடாவுக் குள்ளே
தவஞ் செய்தவோர் கள்வன்
எண்டிசை மாதர் மடவாரும்
மெத்த எதிர்த் தெருத் தனிலே
மண்டலம் போட்டு வரதுங்கர் (பாண்டியர்)
மன்மத யானை மீதிலவர்
கண்ட மட வார் கருத்தழிந்தேயிவன்
காமனோ என்பாரும்,
காமனோ சீவகனோ நளனோ கொடைக்
கன்னனோ என்பாரும்
தர்மந் தருவானோ யின்றைக்கு வந்து
தழுவுவானோ என்பாரும்,
ஊமந்தனைப் போல உரையாட மாட்டாமல்
யொயமா போலொருத்தி
ஓவியம் போல வடிவாள் நுதலாள் ஒத்த
பாண்டியன் தன்னைக் கண்டு
ஆவியும் உண்டியுடலையுருக்கி
ஆனை மேல் வந்தத தெல்லாம்
பாவியே இன்றைக் கிவனோட சென்று
படைக்கிலன் வேந்தன் என்பார்
வேத னைப் பட்டு மடவார் தெருவில்
விழுந்திடுவார் எழுந்திருப்பார்
வாதனையுண் டென்று அன்னை சேர் மகளே நீ
வாடி என்பார்
கால் வளை பாடகம் பீலி
மறந்தா ளொருத்தி அங்கே
வேடிக்கையாக ஒருத்தி ஓடிச் சென்று
வேந்தனை முன் மறித்தாள்
வேந்த நீ யானை மேல் வார பவழியும்
வேடிக்கை பார்க்க வந்தோம்

811 வார-வருகிற

கூந்தல் குலைய வெது பாணம் சொரிந்து
கொண்டாய் நீ கொள்ளை என்பார்
மாதர்கள் சேர் மையலாக
இப்படிக் காற்றம் போராக
அணிமார்பன் கையத்து பொறும் போர்
நமக்கினி வாய்த்ததே என்று சொல்ல
வாரச்சிலை வளை தூவிட வாளஞ்சி
வானமும் தானடுத்து
காரானை மேல் ஏறி கொற்றவர் தாழு
முன்பே மணி மாரன் நேராக
மாதர்கள் முன்வந்து நன்றாய்
நெருங்கிப் பொருத னராம்
நெருங்கிய பூவாளி மாதர் தனத்திலும்
கீழ நெஞ்சிலும் மூடிக் கொள்ள
தயங்கிய பூமாலை போலவே மாதர்
கருத்தழிந்தே போவார்
விழுந்த மடவார் தம் காமக் கணைக்கும் நிலை
வேலை யொலி தனக்கும்
குளிர்ந்திடும் தென்றல்
நெறி புக்கு மஞ்செம்
மேனி குங்கும வாசனைக்கும்
தன்றலை வாய் மெழுகது போலே
சரிந்தாளே தோழியர் மேல்
தோழியரும் அன்னை மாதரும் நின்று
சுருக்காய் மறைந்து அவளை
ஆளிவளர்க இருந்தாளே எங்கள் சொல்
லானது கேளாமல்
பூழியன் வார பவனி காண
புறத்துப் போகாதே என்றேனே
மீளக் கடி வைத்த சிங்கியைப் போல்
மெலிந்து விட்டாய் மகளே
மெலிவாயிப்படி இந்தத் தெருவிட்டு
மேலத் தெருத் தனிலே
கலிங்கலிங் கென சிலம்பு தண்டை கொஞ்ச

813—வெது டாணம்—சுடுகிற அம்பு.

842—சிங்கி—குற்றாலக் குறவஞ்சியில் ஓர் பாத்திரம். அவள் கணவனைப் பிரிந்து பல நாடுகள் சுற்றி மீண்டபொழுது தனது தாபத்தை அவனுக்குத் தெரிவிக்கிறாள். இப் பிரதியின் காலம் குற்றாலக் குறவஞ்சிக்குப் பிந்தியதாக இருத்தல் வேண்டும்.

காண வந்தாள் ஒருத்தி;
கொண்டாளே கையும் மடலும் பிரயாசை
கொண்டாள் மதன் கணையும்
திண்டாடி மாதர்கள் இப்படி சேர்ந்து
தெருவில் மையலாக
மண்டலம் போத்தும் வரதுங்க ராமன்
வளையப்பவனி வந்தார்
தொண்டர் தொழுதிடும் ஆலவாய் அட்ட வாசல்
சொக்கநாதர் கோவில் புக்கார்,
தெண்டம் பண்ணிக் காணிக்கை வைத்து
மீளத் தெருவில் எழுந்தருளி
எழுந்து மடவார் இருபுறமும் நின்
றிசல் கவரி வீச
குளுந்த மலரும் பழுக்காயும் வெள்ளிலை
கொண்டே சொரிந்திடுவார்
அழுந்தப் பிரம்படிக்காரர் நின்று
அடித்து இடமாக்க
அடிக்கனங் கொண்ட எழுமுலையர் இருபுறமும்
ஆலத்தி ஏந்திவர
படிப்பார்கள் சங்கீதம் வீணை பல கலை
பாடிடுவார் சில பேர்.
நடிப்பார்கள் நாடக மாதர்கள்
நாதசுரம் ஊதுவார்;
நாகங் குடையிட, அந்தணர் வாழ்த்தவே
நாலு தெருவு வந்து
மேக மனையதோர் யானைமேலே நின்று
வேந்தனும் கீழிறங்கி
ஆகமம் களிகூற தம்பிமார் வாழ்த்த
அமைச்சர்கள் புடைசூழ
மாகமடங்கலும் வாழ்த்தவே
மாளியலுக்குள் புகுந்தார்

வேறு

புகுந்தார் ராசனும் கோவிலுள்ளே
பொழுது புகுந்ததுதன் கடலினுள்ளே

852 போத்தும்—போற்றும்
359 இசல்—வரிசை
860 குளுந்த—குளிர்ந்த
863 அடித்தே இடமாக்க—வழி விலக்க
876 மாகமடங்கலும்—மனம் நிரம்ப
877 மாளியல்—மாளிகை (பா. வ)

ஜெகந்தான் மகிழ்ந்திடும் மன்னர் பெருமான்
தெய்வ பூசை குருபூசை நடத்தி
பூசை நடத்தும் அந்தணர் வேள்விக்கும்
புண்ணியத் தினவழி முறை தனக்கும்
ஆசை மிகப்பத்தி உலகு தன்னை
ஆறி லொன்று கொண்டு அரசாண்டான்.
ஆண்டார் அடங்கா துட்டதனை வெட்டி
அணையும் குளங்களும் மிகவே கண்டு
தீண்டாச் சாதி போல் நிலை நிறுத்தி
திருவுஞ் செல்வமும் தான் விளங்க
அழகு மலைதனில் முகிலெழும்பி
வைகை பெருகியே திசைகள் தோறும்
உழவரும் குழுமியது கொண்டு
உகந்து கலியாண விருந்திடுவார்.
இடுவார் பலருண்டு ஏற்பாரில்லை
நடுவு நியாயமும் மிக விளங்க
நாதர் திருநீறு அஞ்செழுத்தும் பேணி
அடைவாய் உலகத்தை ஒரு குடைக்குள்
ஆறிலொன்று கொண்டு அரசாண்டார்
காஞ்சி புர வெற்றி
ஆண்டங்கிருக்கிற நாளையிலே
அமைச்சர்கள் மன்னனோடேது சொல்வார்;
எண்திசையும் புகழ் படைத்த
இயல் மதுரைக் காவலரே,
கொண்டலொத்த கொடையானே,
குலசேகரப் பெருமானே
பண்டு முன்னாள் நங்குலத்தில்
பாண்டியர்கள் ஆண்ட சீமை
போயறிய வேணு மன்னா!
பூதலங்கள் மெத்த உண்டே
நினைவுப்படி சேனுமெல்லாம்
தென்னாஞ்சில் நாடு மட்டும்.
தென்குமரி இப்புறமும்
ராகுத்த தோளானே.

884 பத்தி—பற்றி
885 அரசன்—பங்கு ஆறிலொன்று
886 துட்டதனை—துஷ்டர்களை
894 கொள்வாருமில்லை, கொடுப்பாருமில்லை (கம்பன்) இல்லா பதரின்மையால், பிச்சை ஏற்பாரில்லை, கற்பனையின் நாட்டை வறுமையில்லாததாகக் கூறுகிறார்
913 ராகுத்தன் - வீரர், விருது.

வட கெங்கை நாடு மட்டும்
சேதுக் கரையளவும்,
தென் மதுரை நாடு மட்டும்
கன்னடியன் சீமை மட்டும்
காஞ்சி புரத் தளவும்
ஆண்டிருந்தார் உங் குலத்தில்
அன்றிருந்த சீமைகளை
பாண்டியனே நீயு மிந்த
பல சக்கரப் படையோடே
தென் மதுரைதனிலிருந்தால்
தேசுனக்குப் படியாது.
வன்மையுள்ள காஞ்சிபுரம்
நகரதில் போய் இருக்க வேணும்.
வண்மையுள்ள மந்திரிமார்
மலரடியை தொழுதிறைஞ்சி
உண்மை சொன்னோம் பாண்டியனே !
உம் ஆணையையும் கருதி
காளிங்கன் முதலாயுள்ள
கருமமுள்ள மந்திரிமார்
மேலு மங்கே வருவதெல்லாம்
விசார மிட்டுச் சொன்ன போது
மந்திரிமார் சொன்ன போது
மன்னன் குலசேகரனும்
சிந்தையுறக் கேட்டிருந்து
சிறந்ததொரு நாளையிலே
சுரணையுள்ள புரவியையும்
சிந்தாமணிப் போரானையையும்
காரி குல்லா நம்பிரானை
கல்லணை வைக்கச் சொல்லுவாராம்
சொன்ன பொழுதந்தச் சரணியும்
கொதுக்கப் பரிதன்னை அலங்கரித்தார்.
மின்னை யொத்த ஆசனமிட்டான்
மிகத் துட்டக் கடிவாளங் கட்டி
பச்சை நித்திலம் அல்ல வைததான்

914—921 குலசேகர பாண்டியனது முன்னோர்கள் ஆண்டிருந்த நிலப்பரப்பைக் கூறி அவற்றை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என அமைச்சர் கூறுவர்
924 தேசு—புகழ்
940 சிந்தாமணி—யானையின் பெயர்
941 காரிகுல்லா—குதிரையின் பெயர்
942 கல்லணை—சேணம்

பதித்த முத்தில் கல்லணை பதித்தான்.
கச்சையொத்த வார் இறுக்கிக் கட்டி
கால் படியும் தாழ வைத்தான்
வெள்ளியாலே சூத்திரமான
விளக்கிய வன் முகரை யிட்டான்
உள்ளிய செம்பூண் தண்டையாம்
ஒளி பொருந்து கால் தண்டையாம்
மாணிக்க முத்தினால் பைக்கு உரையும்
மரகதத்தால் சுவடுகளாம்
ஆணிப் பொன் நுரையிலையாம்
நுரையிலையால் தூக்குகளாம்
சதங்கை தண்டை தப்பிணி வார்
இலங்க மாண்டிலுந்தான்
நாலு காலுக்குங் சிலம்பணிந்து
நடுகாலுக் குஞ்சல்லி கட்டி
தட்டுப் புனுகு சந்தனம் கொண்டு
கெட்டிக் குதிரை முகத்திலிட்டான்.
வட்ட மிட்டோடி வலக்காலை
வடதிசையை நோக்கிடுமாம்
எட்டு திக்கிலும் யானை யஞ்சும்
எட்டடி எட்டி மிதித்திடுமாம்
கோல வண்ணப் புரவிதனை
குறையறவே அலங்கரித்து
கொண்டலொத்த சானி தன்னை
கொண்டு வந்தான் சரணி யப்போ.
வந்து நின்ற புரவி மீதே
மன்னனெங்கள் பாண்டியனும்
அந்த நேரம் முகிழ்த்தம் கேட்டு
ஏறு வாராம் நம்புரான் மேல்.
கொஞ்சும் பரி முன்னடக்க
குல யானை பிந்திவர
நெஞ்சஞ்சா வன்னியர்கள்

948 கல்லணை—குதிரை மீது வைத்துக் கட்டும் சேணம்.

950 கால் படி — மிதித்து ஏறத் தொங்கவிட்டிருக்கும் லாட உருவமான இரும்பு வளையம்.—(Stirrup).

952 முகரை—கண்டிறைப்பு

971 சானி—பெண்குதிரை

972 சரணி—குதிரைகாப்போன்

நேரியக் காரர்கள் சூழ்ந்து வர
கூட்டக் குதிரைகளும்
கொத்தளக் காரர்களும்
சேட்ட முள்ள ஈட்டிக்காரரி
சேர்வைகாரர் செருமிவர
அங்கே யிருந்த குல சேகரர்தான்.
அழகிய சொக்க நாதரை அடி வணங்கி
பங்கயத்தாள் உமை அங்கயற் கண்ணி தன்
பாதத்தைப் போற்றியே காணிக்கையிட்டு
சிங்கன் திறல் தம்பி மார்க்கும்
சேனை பரி காலாளும் மந்திரி மாரும்
கங்கைச் சடையனுர் பதம் போற்றி
காஞ்சி புரந்தனிலே போகவெண்ணி
போக வென்ற நல் முகிழ்த்தங் குறித்து
புரவி கரி பரி முன்னே நடக்க
தோகை மடவார் குரவை முழங்க
தோரணம் கட்டுவார் பூரணம் வைப்பார்.
வாகான வீதி கடந்தே நடந்து
வையையும் விட்டு வடகரை கண்டார்.
ஆகந் தெளிந்து அழகரைப் போற்றி
அரசன் குலசேகரப் பெருமாளும்
கொலையானை சூழ கொடிகள் நெருங்க
குன்றுத முத்தின் குடைகள் பிடிக்க
மலையான் நாடு தெலுங்கரும் வலையரும்
மத்துள்ள கொத்தளக் குடியில் மறவரும்
சிலையானர் எங்கும் பரந்தே நெருங்க
சித்தூர் கணவாய் தனைக் கடந்தாரம்
தலைவர்கள் வாழ்த்த பலகீத மோத
நடந்தார் மலையாங்குறிஞ்சி கடந்தார்
கடந்தார் குழல் சங்கு தாளம் நமரி
கைத்தாள் முழங்க தப்புடன் இடக்கை
அடர்ந்தவில் சின்னம், வீரானம் கொட்ட
அட்ட திசை எட்டதிர மத்தளம் முழங்க
படந்தேறு தென் கடல்துடர்ந்தேறும் அவரைப்போல
பக்தியுடன் மாமுண்டி நத்தம் கடந்து

984 செருமி—நெருங்கி

1004 மத்துள்ள—மற்றுமுள்ள
கொத்தளக்குடி மறவர்—கொண்டையன் கோட்டை மறவர்

மாமுண்டி தன்னைக் கடந்தே நடந்து
வகைப் படு திருச்சிராப் பள்ளி சென்றார்.
செம்மனம் தனக்கரிய செவ்வந்தியப்பரை
சித்த முற மெய்த்துக் கருத்தில்
இருத்தினார் பொன்முடி இலங்குமுடி வேந்தர்
ஏறினார் மாறினார் எல்லோரும் அவ்வறையிலே.
பரித்திரள் கரித்திரள் முன்னே நடக்க
பனிக் குடை நிழற்ற மன்னர் காவிரி விட்டார்.
நோயிட்ட வலை சிலர் வளைத்து மலையாளர்
நீட்டியே இட்டிட வெட்டும் அடக்கரும்
முறுக்கொடு நிமிச்சவர் எடுத்தவர் படைக்குள்
மோதினார் கூவையூர் செட்டி குளம் விட்டார்.
செட்டி குளமானபட்டியும் விட்டு
செருக்காய் நடப்பார் இருப்பார் தவிப்பார்.
முட்டியே எழும் தூசி வானிலடைய
மூரி வரி வாண மொடு தாரை சின்ன மூத
கட்டிடும் சோத்தை அவிழ்த்து உண்டிருப்பார்.
களித்தே விழியார் நெளித்தே நடப்பார்
தொண்டிய மேளம் திடிமன் முழங்க
தூசி எழு வானிடை வாசனை மணக்க
வாசி குதி கொண்டிடவே வற்றிச் சுவரும்படி
வானில் எழு இந்திரன் போல் எழுந்தருளி
ஓசை வெடி வாண மொடு தாரை சின்னம் ஊத
ஊடு பட்ட நின்ற மேகம் மேற்குத் திசையசைய
மூறி மதயானை இரு பாகமும் நெருங்க
முடிமன்னர் திருவண்ணாமலை கடந்தனராம்.
காஞ்சிபுரம் தென்குமரி வீசுபுகழ் ஆணை
கண்டு கொண்டாடினார் தொண்டை நாடு தன்னை.
தொண்டை நாடது கண்டு கன்னடிய மன்னவர்
தொலை தூரம் ஒளி வீச மணி முடி புனைந்த
கண்ட நாடதில் பகையுண்டான நாடெல்லாம்
காவலர் தொண்டை வளநாடது கடந்தார்.
பண்டை நாளிந்திரன் வென்று புவியாண்டுடன்
பங்கய வரை தனில் அங்கயல் பொறித்தோன்.
அங்கசல கொண்டாடு முகவரி வீச
ஆனைமேல் வானவர் கோன் எழுந்தது போலே
சங்கு திடிமன் தாமரை விருதூத
சங்கு குமிழிட்டு எங்கும் முழங்க
மங்காத காஞ்சிபுரத்திலே சென்று
வையகம் ஆண்டங்கினி திருந்தாராம்.

(வேறு)

ஆண்டிருந்தார் காஞ்சிபுரம்
அரசாளும் நாளையிலே
பாண் டிமன்னன் குலசேகரன்
பார் மந்திரி தலைவர் மாரும்
சஞ்சயனும் தொண்டை மானும்
திரு மங்கையாழ் வாரும்
கஞ்ச மாது சேர் புயத்தான்
காலிங்க வில்லவனும்
செண்பக வண்ணப் பெருமாளும்
செல்லம் பெருமாள் தன்னுடனும்
பெண் சிறை மீட்ட பெருமாளும்
பிரியாரிப் பிள்ளையோடு
மந்திரிமார் பிரபுக்களும்
மற்றுமுள்ள வன்னியரும்
கோங்கு செறி பூங்குழலார்
கொங்கை நல்லார் சேவிக்கவே,
காமாட்சி அம்மையும்
கச்சியே காம் பரரும்
பூவாய்த்த சோலைகளும்
புதுநீரும் வாவிகளும்
ஆணிப் பொன் அம்பலமும்
அணிசிறந்த கோபுரமும்
மாணிக்க மண்டபமும்
வாய்த்த பொன்னின் வாசல்களும்
தூண்டாத மணி விளக்காம்
தூய பொன்னின் மேடைகளாம்.
நீண்டாரும் காணாத
நித்தனையும் அடி தொழுது
ஆடாத செக்குக் கண்டான்
அறையாத அம்மி கண்டான்
கோடாத நன் முகத்தான்
குலசேகரப் பெருமானும்
கலங்காத சேனையோடே
கட்டழியா மன்னருமாய்

(வேறு) தென்திசை திரும்புதல்

இருந்து நெடு நாளாய் ராச்சியமாண்டு
எங்கும் புகழ் சேர் குலசேகன் தான்

1059 முதல் 1066 வரை பிரபுகள் மந்திரிமார்களின் பெயர்கள்.

பொருந்து கயல்விழி மங்கை நல்லாளும்
இலங்கு மணி முடி சூடி
இசலக் காஞ்சிதனில் இருந்தார்.
போருக்கு முன்னே செல்லும் தம்பிமாரும்
வந்து தினமும் பரிகலஞ் சேவிக்க
மந்திரிமாரும் திருத் தம்பிமாரும்
வாழ்த்த அங்கிருந்தானே குலசேகரன் தான்.
சேர்ந்த பரிகலம் சேர்வைகாரரும்
சேரவா வென்றங்கனுப்பி விட்டாரே.
ஆள் விட்ட போதந்த மந்திரிமாரும்
அடர்ந்த படையும் குடையும் சேரும்.
வாள்விட கனமடவார் அங்கு சேவிக்க
மன்னன் திருத்தம்பிமார்களும் தம்பியும்
இந்து நுதலார்கள் ஆலத்தி யேந்த
இருந்த குலசேகரப் பெருமானை
வந்து வணங்கியே மந்திரி மார்களும்
மன்னன் திருத் தம்பி மாரும் நின்றனர்.
அங்கு நிறை மந்திரி மாருக்கு மன்னன்
அரசன் திருத் தம்பிமாரையும் நோக்கி
எங்கும் புகழ்சேர் குலசேகரன் தான்
ரகசியமாய் ஒன்று சொல்லலுற்றானே;
முன்பு வருங் காரியம் சொல்லும் மந்திரியே
மூத்ததோர் காளிங்க வில்லவா கேளாய்.
தென் பூமியில் கன்னிமார் தீர்த்தமாட
செல்ல நமக்கு விருப்ப முண்டென்றார்.
என்ற பொழுதந்த மந்திரிமாரும்
இளைய ராசாக்களும் ஆகவே கூடி
நன்று திருவுளம் பற்றுனீரென்ன
நடத்த முகிழ்த்த மிட வேணுமென்றார்.
முகிழ்த்த மிட வென்று சோதிரி கூட
மொழிந்தானே காலிங்க வில்லவனு மப்போ
பருந்தும் பாலும் புரச்சமும் கண்டு
பறைந்தான் முகிழ்த்தம் மது நாளே என்றான்
நாளை என்ற மொழி காலிங் கவில்லவன்
நல்ல குலசேகரர்க்கு உரைத்தானும்.
உரைத்த மொழியின் திருத்தம்பி மாரும்
ஊர்தி பலதும் ராக் கொண்டு சொல்ல

1110 -குலசேகரன், மந்திரிகாளிங்கனிடம் கூறுவது
1118 -திருவுளம் பற்றினீர்—வைணவ பரிபாலை மனம் வைத்தீர்
1127 ராக்கொண்டு—இரவிலேயே

குலசேரகன் படையோடே நடந்தார்
நிரைத்த பரிசனம் சேர்வைகாரரும்
நீங்காமல் காரியங்கள் சொல்வாரும்
திக்கெல்லாம் மிக்க புகழ் கொண்ட பெருமாளும்
சென்ற திசையெங்கும் வென்ற பெருமாளும்
பக்கத்தில் நிற்கும் பரிகலத்தாரும்
பரிக்கும்; கரிக்குஞ் சமர்த்தான பெருமாளும்
இரும் புவிக்குள் வருங் காரியங்கள்
நினைத்தது சொல்லும் திருத் தம்பிமாரும்
கூடியிருந்து உலகாளு மென்ன
குலசேகரன் படையோடே நடந்தார்.
நடந்த குலசேகரர் கோட்டை தன்னை
கடந்தேகு முன்னே தொடர்ந்தது படையும்
தென் கடல் தன்னிலே போவதே யென்ன
அந்தப் படையும் பல சக்கர மூர
ஆலத்திக் காரரும் காளாஞ்சிக் காரரும்
பூண்ட மணித்திரள் ஆசுத்திரள்களும்
புரவிக் கடலும் சவளப் படையும்
சேர்ந்த மறவரும் தொட்டியர் வில்லும்
சீனர், விலாடர், கவுடர் மிலாடரும்
வேந்தர் திரளும் குறவர் தனிக் கூட்டமும்
வேடர் படையும் குறு வன்னியரும்,
கொங்கர் தெலுங்கருடன், குறவர் கூட்டமும்
கொப்பறை ஏந்திடும் பறைக் காரரும்
கிங்கிலியரும் துலுக்கர் ரர்குத்தரும்
கிடையக் காரருடன் வாணக் காரரும்
அம்பு வெடியும், பீரங்கி வெடியும்
அதிலே நெருங்கு பரிசனத்திரளும்
வெம்பு சிலையுடன் கொத்தாளர் கூட்டமும்
வீசி யெறிந்திடு பார் வளையமும்
பொன்னிட்ட வில்லும், புலித் தோல் கரிசையும்
பூரித்துடன் வரும் நேரியக் காரரும்
முன்னிட்டுக் குத்தும் பரிசைக் கடத்தலை
முப்பிடியும் சொட்டை காலிங்க பரிசையும்
தத்தாரி வில்லும் சமுதாடு காரரும்
தாண்டும் பரிகுத்தி மீள் வாரும்
மெத்த நெருங்கும் வளைதடிக் காரரும்
வேல் குத்தி ஈட்டியுடன் நூலப் பரிசையும்
கொத்தர் குடியில் மறவர்தன் கூட்டமும்

கொண்டையங் கோட்டை மறவர் படைதானும்
பத்திரகாரருடன் சொட்டைக்காரரும்
பட்டயக் காரருடன் கிடயக் காரரும்
சக்கிலியப் படை எங்கும் நெருங்க
சறுக்காமல் செல்லும் தீச்சட்டிக் காரரும்
எக்குலத்துள்ள படைகளும் சேர்
இராவு பேருங் கொண்ட சேவுகர் தானும்
வல்லன் தொண்டானுடன் இல்லன் தொண்டானும்
மலங்காத திரன் கலங்காத கண்டன்
செல்லன் தொண்டானுடன் மடியில் குருவியும்
சேமந் தொண்டானுடன் வீமன் தொண்டானும்
மன்ன மறுப்பனும் வல்லாளதேவனும்
மருவார் கண்டானும் மலியீட்டிக் காரரும்
உன்னும் பொழுதிலே செல்லும் புகழ் வீரன்
ஒட்டன் திருநீல கண்டனும் கூட்டமும்
சொல்லுக்கு மீண்டானும் வில்லுக்கு வல்லானும்
துங்கப்பரியேரும் மங்கைப் பெருமாளும்
செல்லப் பெருமாளும் கண்டியத் தேவனும்
செஞ்சடையானும் தொண்டைமானும்
திருமங்கை ஆழ்வானும்
கஞ்சமாது சேர் புயத்தான்
கரை கண்டார் காங்கயனும்
காரானைக் குடை காத்தான்
காலிங்க வில்லவனும்
வீர கேரள வலலாளனும்
விருதராசப் பெருமாளும்
சேர்களரி வீரர்களும்
மேதாளனைப் பிரியானும்
நக்கசை மாலை மார்பன்
நாயனைப் பிரியாத தொண்ட மானும்
ஈச்சம்பிற வல்லாள தேவன்
இளவரசுப் பெருமாளும்
வாய்த்த மணி மாலை மார்பன்
மன்னன் செண்பகப் பெருமாளும்
முத்தின் பெருமாள் முகிலின் பெருமாள்
முடிவிளங்கும் பெருமாள்
பத்தியுடன் நல்ல பெருமாளும்

1196 நாயன்—அரசன், தலைவன்
1198-1204 அரசனது தம்பியர் பெயர்கள் பெரிய உடையார்—அரசன்.

பாண்டிப் பெருமாளும் பெரிய உடையாரும்
தரியலரைத் துரத்தி வெல்லும்
தமிழ் வீரபாண்டியனும்
பிரிய பெரிய பிள்ளையோடே
பெண்சிறை மீட்ட பெருமாளும்
செண்பக மென்னும் மந்திரியும்
சென்ற திசை வென்ற பெருமாளும்
வென்று திரையிடும் பெருமாளும்
விருதரசைப் பெருமாளும்
மாறியாடும் பெருமாளும்
வளர்ந்து உருவாக்கும் பெருமாளும்
கூறும் புகழ் சேர் காதான்
குல சேகரப் பெருமாளும்
வன்னமாயிரம் புரவிக்கும்
மதம் பாயும் கரித்திரளும்
சென்னியரும் சேவகரும்
சிங்களரும் வங்காளரும்
துலுக்கர் மிராடர்களும்
சோனகரும், கானகரும்
மலுக்கர் தெலுங்கர்களும்
மறப்படையும் வன்னியரும்
பச்சைக் குடை விரிக்க
பள்ளச் சேராடிகளும்
உச்சக் கொடித்திரள் தான்
ஓங்கி உலாவி வர
தொண்டை வளநாடும் விட்டு
சோழனுட மண்டபமும்
கண்ட கண்ட திசைகளெல்லாங்
காவேரி பரந்தாற்போல்
விசிறிக் குமுறியெங்கும்
வேலை பரந்தாற்போல்
பல சக்கரத்துடனே
பாண்டி மன்னன் குலசேகரன்.

1140 முதல் 1230 பலவகைச் சாதியினர் தலைவர்
பெயர் வரிசையாகக் கூறப்பட்டது,
களின் பெயர்களும் இங்கு கூறப்பட்ட
மாக படைத்தலைவர் வரிசையைக் கூறும்
பாடல்களிலும் உள்ளன. (கட்டபொம
Ed. நா. வானமாமலை)

வேறு

செண்டை முரசு திடிமன் முழங்கி
திண்டி முழங்க தாள வாசினைகளும்
தண்டையுடனங்கு கிம்புரி மல்லாரி
தக்க தடக்கை இடக்கை கிடுபடி
கொக்கரியும் துந்துபியும் கரடியும்
கொம்புஞ்சுருணையும் பம்பையும் திடிமனும்
எக்காளமும்முழங்குமே.
ஒட்டிய மேளம், கொட்டிய பேரிகை,
தம்பட்டமும் தவிலும் பம்பை தாளமும்
சங்கும் துடியும் சகட குடுக்கையும்
கொம்பட்ட மத்தளமும் சல்லிகையுடன்
கின்னரி வீணை சின்னம் குழல் வாசிக்க.
வம்பிடும் கொங்கை நல்லார் எங்குஞ் சேவிக்க
வாணுதி ராசனும் மங்கலம் பாடிட
பம்பிட்டரைத்துத் தூவிடும் மேல் கடல்கள்
பரந்த தென்ன பல்லியங்கள் முழங்க
செப்பத்துடனே நடந்து முடிமன்னர்
சேவிக்கும் பெண்களும் பாவித்துடன் அவர்
அப்பர் திருப்பதி அண்ணாமலை விட்டு
அரனார் அப்படிக் கடந்து விட்டாராம்.
கடடும் பரியும் கறுத்த சிரமியும்.
காலாட்டமாய் பரி தமலாட்டமாய் அவர்
செட்டி குளம் கூவையூரும் கடந்து.
திருச்சிராப்பள்ளி கடந்து விட்டார்.
அல்லித் துறையும், மணியாங் குறிச்சியும்
வல்லிக் கொடியார் எங்குத் சேவிக்க
மாமுண்டித் தடம் கடந்து விட்டாராம்.
ஆனைப்படையும் குதிரைப்படையும்
அடர்ந்து படையும் குடையும் சேரும்
தென்மதுராபுரி தனிலே வந்தார்.
வந்து மதுரைப் பதியிலிருந்து
மன்னன் குலசேகரப் பெருமாளும்
அந்தி மதியும் அருகும் தரித்த

1236 முதல் 1248 முடிய வாத்தியங்கள், மேளங்கள், இசைக் கருவிகளின் பெயர்கள் வரிசையாகக் கூறப்படுகிறது.

1255—1267—அண்ணாமலை முதல் மதுரை வரை வரும் வழியிலுள்ள ஊர்கள் இது வரிசையாக இல்லை.

அழகிய சொக்க நாதரை அடி வணங்கி
தென் திசை நோக்கி
படை போகட்டென்ன
திருப்பரங்குன்று தன்னைக் கடந்தாராம்
கொந்து செறியும் குழல் ஆடவருடன்
கூடாரமும் கூழைப் பாளையமும் தான் அவர்
ஆனைமேலே கரும் பிடாரம்
அதன்மேலே கலசப்பானை.
சேனை மன்னன் பாண்டியனும்
சிறந்த முடி மன்னவரும்
பல்லக்கு முன்னடைக்க
பள்ளிச் சிவியார் வருத்திவர
செல்லப்பரி நடத்தி தேவன் குறிச்சி விட்டார்
வாசுதேவ நல்லூரும் விட்டு
மலை முடுக்கு நாடும் விட்டு
போதப் புகழ் வளரும்
புத்தூரும் சித்தூரும்
புத்தூர் தனைக் கடந்து
புகழ் பெரிய பாண்டியனும்
கஸ்தூரி மாலை மார்பன்
கழுகுமலை குருவி குளம்.
கங்கை கொண்டான் கயத்தாறும்
கீர்த்தியுள்ள கடம்பூரும்
கொங்கை நல்லாள் பெண் கொடியாள்
கூளைப் பாளையம் முன்னடக்க
சேனைப் பெருமாள் படையும்
சிறந்த முடி மன்னவரும்
வானவ நல்லூர் வழியாய்
வளரும் நெல்லைப் பதியில் வந்தார்.
வந்து நல்ல சிவன் தனையும்
வடிவுடைய மங்கையையும்
முந்த அடி தொழுதிறைஞ்சி
முடிசூடும் பெருமாளும்

1272 —போகட்டு — (இறுதி 'ம்' ஐ உச்சரிக்காமல் 60 ஆவது நாஞ்சில் நாட்டு வழக்கு, போகட்டு, வரட்டு, இருக்கட்டு, என்று பேசுவார்கள்)

1260 —1298—தேவன் குறிச்சி முதல் திருநெல்வேலி வரையுள்ள ஊர்கள். (பல ஊர்கள் இவ்வழியில் இல்லை)

1299 —சிவன்—நெல்லையப்பர், அம்மை—காந்திமதி வடிவு—வடிவுடையமங்கை என்பவை வேறு பெயர்,

செய்திர்த்த முள்ள நாடு
தெட்சணு பூமியிலே
தைத்திர்த்தம் ஆடவென்று
தங்களாலே சம்மதித்து
வாழ் மறையும் தீர்த்தமொடு
நாளைக் குள்ளே வருகு தென்ன
ஆவலுடன் புறப்படுவார்.
அங்கிருந்த பாண்டியர்கள்
சங்கான் குளத்தூர்
தருவை வழிதான் கடந்து
சிங்கி குளம் தேவ நல்லூர்
திரண்ட தொரு பிரண்டைமலை.
பச்சையாறு தனைக் கடந்து
பாப்பஞ் சேரி விட்டு
கச்சயானை முன் நடக்க
காவலர்கள் சூழ்ந்து வர
தையல் நல்லார் கவரிவீச
தாண்டும் பரி கூண்டுவரி
பொய் சொல்லா மெய்யருடன்
புகழ் களந்தை தனைக் கடந்தார்
பம்பை மணி முரசதிர
பவன மொடு கிடுபுடி யதிர
கெம்பியிடி போல் முழங்க
கிளர்ந்த பெரும் படையும்
தம்பி மார் புடைசூழ
தாண்டும் பரி கூடிவர
நம்பி குறுங்குடியில் வந்து
நல்ல குல சேகரரும்
வந்து குறுங்குடியில்
நம்பி மலர்ப்பாதம் போற்றிசெய்து
முந்திப் பனையபதி கடந்து
முந்து படை நடக்க.
வானம்பத்தி எழுந்தூசி
வெய்யவனைத் தான் மறைக்க
மனம் பொத்தைக் காடுவிட்டு

1311 —சங்கான் குளம் முதல் பாப்பாஞ்சேரி வரையுள்ள ஊர்கள். இவை வரிசையாக இல்லை.

1322 —களந்தை—களக்காடு

1333 — பனையபதி — பணகுடி என்று இப்பொழுது வழங்கும். முற்காலத்தில் பனைக்குடி என்ற சாசன வழக்கு உள்ளது.

வாயத்த பழவூர் கடந்து
வாரறியப் பாக்குளமும்
வக்கண்ணு மலை கடந்து
அங்கஞ் சிரமிகளும்
அழகு பரிசை காரர்களும்
துங்கப்பரி நடத்தி
சுக்குப் பாறை குளத்தில் வந்தார்.

வேறு

வந்து மன்னர் ஐந்து பேரும்
சரீர சுத்தி செய்து
வாய்த்த சுக்குப் பாறை குளத்தில் தீர்த்தமாடி
சிந்திப் பரந்த படைக்குந்தான் இடம் கொள்ளாமல்
தேச மெங்கும் தான்பரந்து வீதியெங்கும் செல்ல
தண்பொருனையும், வைகை, காவேரி, கங்கை
தாரணியிலுள்ள பல ஆறு ஒன்றாய்க் கூடி
தென் குமரித்துறையில் வந்து பாய்வதென்ன
தென்னன் குல சேகரன் தன் சேனை தீர்த்தமாட
தீர்த்த மாட வேணுமென்று மன்னன் மூன்றுபேரும்
தெக்கருகிலே இறங்கி தீர்த்தத் துறை தன்னில்
மூத்த மயிலேறும் பெருமாள் காலிங்கன்தானும்
முத்திதந்த நாதனைப் பிரியாத தொண்டை மானும்
ஏத்த புகழ் காங்கயனும் பெரிய உடையாரும்
எங்கும் புகழ் கொண்ட திருமங்கையாழ்வானும்
வாய்த்த சன்னிதி துறையில் தீர்த்த மது ஆடி
மன்னன் குலசேகரன் தன் மின்னிடையாரும்
சென்று பரப்புத் துறையில் ஒன்றித் தீர்த்தமாடி
செஞ்சயனும் தொண்டை மானும் திருநீலகண்டனும் தான்
அன்று தீர்த்தமும் பூவும், திருநீறும் காட்டும்
அண்டர் தொழுந்தன்று வாங்கயத்தீர்த்த மாடி
ஆடிக் கரை மீதிலேறி பொன் நித்தில பச்சை
ஆடை சாத்தி மாணிக்க முத்தாபரணம் பூண்டு
தேடிய கோதண்டராமன் பதக்கம் சாத்தி
சிங்காரத்துடன் அலங்கரித்து அலங்காரத்துடன் நடந்தார்.
நாதனுடன் வாதாடும் நற்குமரி தன்னை

1340 படிக்குளம் — பாக்குளம், பாறைக்குளம்.
1344 சுக்குப்பாறை — இப்பொழுது பாறைக்குளம் எனவ
சுக்குப்புல் மிகுதியும் வளர்ந்திருக்கும்
1362 பரப்புத்துறை — தற்போது 'திப்பரப்பு' என
படும் ஊர். அங்கஞ்சிரமிகள் — உடலுழைப்போர்
1363 ஒன்றி—சேர்ந்து.

ஓடிப் பிரதட்சிணம் செய்து திருத்தாளைப் போற்றி
உச்ச செம் பொன் முத்து மாணிக்கக் காணிக்கையும்
வைத்து
தானுண்ட பெரும் படையும் மந்திரி மார்தாமும்
தக்க படையும் குமரி துக்க விடை கொண்டு
கோண்டூஸ் வரத்தில் வந்த அவையெல்லாம் கூடி
கொத்தவனூர் முப் பேர்க்கும் வெற்றி முரசறைந்தார்
பச்சை நீல சித்திர வன்னப் பல்லக்கில் மீதேறி
பலசக்கரத்துடனே சுக்குப் பாறை கடந்தார்.

வேறு

கச்ச யானையும், புரவிக் கடலும் முன்னே நடக்க,
கடல்கள் உடைந்ததன்ன பரிகள் பரிந்தாற் போல்
பச்சைக் குடையும் பகளம் பதித்த பனிக் குடையும்
ஒளிசை இடக்கையங்கள் விழு சேர் உலாவி வர
செண்ட இடக்கையங்கள் தாரை விருதூதி வர
செய்ய மணங் குண்டு. புத்துக் காடும் உடங்காடும் விட்டு
கண்டு சேர் மொழியார்க்குக் காமன் என வைந்த மன்னர்
கண்ணுளர் கற்பு நிலை குன்றாத சாபத்தினால்

1368 கோதண்டராமன் — இப்பெயரில் பிற்காலப் பாண்டியர் காசுகள் வெளியிட்டுள்ளனர். இலங்கை மீது கொண்ட வெற்றியால் இப்பெயரை வைத்துக் கொண்டனர் என்று அவர்களது மெய்க் கீர்த்திகளிலிருந்து தெரிகிறது.

1374 குமரியம்மனைத் திருமணம் செய்ய தாணுமலயன் முன் வந்ததாகவும் அவள் பல நிபந்தனைகள் விதித்து, அவற்றை நிறைவேற்ற முடியாமல் அவர் தோல்வியடைந்ததாகவும், அதனால் குமரி இன்னும் கன்னியாயிருப்பதாகவும் தல புராணம் கூறும்.

1382 இடக்கை—இடங்கை என்பதை தவறாக எழுதப் பட்டிருப்பதாகத்தோன்றுகிறது. இடக்கை வாணிகர்களோடு தொடர்புடைய தொழில் புரியும் நூற்றெட்டுச் சாதிகள். அவர்களுடைய படைகள் ராஜராஜன் காலமுதல் இடங்கைமகாசேனை, இடங்கை வேலைகாரர் என அழைக்கப்பட்டு வந்தனர். இங்கு இது குழலூதி வந்த படையையே குறிக்கிறது.

1384 மணல் குண்டு — நெல்லை மாவட்டம் ஆழ்வார் திருநகரியருகிலுள்ளதோர் ஊர்

புத்தக்காடு, உடங்காடு — நெல்லைமாவட்டம் தென்கீழ்ப் பகுதியிலுள்ள ஊர்கள்.

கதைப் பாடகர் எந்த ஊரில் கதை பாடுகிறாரோ, அந்த ஊரைக் கதையோடு இணைத்து விடுவது வழக்கம். அவ்வாறு பல ஊர்கள் கதை வரலாற்றோடு தொடர்புடையனவல்ல. ஆயினும், பாடுகிற புலவர்களால் தொடர்பு படுத்தப்படும். உண்மையில் இவ்வூர்கள் இப்பாதையில் இல்லை.

வண்டு தும்பியும் மார்க்கம் மாருத மழை பொழிய
மானிடவர் காணு பொதிய மலைக் குள்ளேயிருக்கும்
மூன்று முனி பூசித்த அகத்தி சுவர புரத்தில்
முக்கண்ணனை முடி மன்னர் மூன்று பெருந்தெண்டம் பண்ணி
பண்டு முன்னாள் அபிஷேகம் சொரிந்து ஆயிரம் குடமும்
பார்தீர்த்த தொண்டிலது காணாத மன்னவர்க்கு
தண்டு வங்கியத்தில் தீர்த்தம், பூவும், திருநீறும் காட்டி
தாணுமாலைப் போற்றி செய்து சாம்போத்தைத் தெண்டம் பண்ணி
மண்டலம் நிகர் என்ன வரும் மந்திரி காலிங்கனோடே
மற்று முள்ள மந்திரி தலைவர்களும் வன்னியரும்
தொண்டர் தொழும் தென் சிவிந்தைப் பதியினுள் புகுந்து

வேறு

செம் பொன்மணியின் தரளத் தாவடமும் தானும்
மன்றிது செறியும் பதக்க மாலைகளும் கொடுத்து
வன்னப்பட்டு பொன்னித்தரளப் பரிவட்டமும் சாத்தி
அன்று சிவிந்தைப் பதியிலே அவதரித்து (தாமதித்து)
ஆதித்தனுதிக்கு முன்னே காதிப் பிறப்பட்டார்.
ஒன்றித்த பெரும்படையும், மந்திரி மார்தாமும்
ஒப்பத்துடனே வந்து முப்பந்தலில் வந்தார்.
முப்பந்தலில் வந்த போது குலசேகர மன்னர்
மூத்த மந்திரி தன்னோடே வார்த்தை ஏது சொல்வார்?
"மூப்பந்தல் இவிடத்தில் இட்டவர் ஆர்" என்ன
ஏத்த மந்திரி தலைவன் வார்த்தை ஏது சொல்வான்?
விண்ணப்ப மேன் கானகத்தில் மென் கொடியாள் இடைச்சி
மெல்லி நல்லாள் சிறையிருந்தாள் சீதன மில்லாமல்
ஒன்றொப்பமாக தகப்பன் ஊர் மாடு மேய்ப்பான்
உத்த பெத்த தாய், மோரு வித்து வரப் போவாள்
போறவர்க்கும், வார வர்க்கும் தவித்தவர்க்கும் தண்ணீர்
புளிக்க வைத்த கூழ் சுண்டைக்காய் இலைக்கறியும் கொடுப்பாள்

1386 சாபம்—வரலாறு தெரியவில்லை.

1389 அகஸ்தீசுவரம்—இது நாகர்கோவிலருகே ஓர் ஊர் இது சிவனை அகத்தியர் பூசை செய்த ஊர் எனத் தலபுராணம் கூறும்.

1394 தாணுமாலை—தாணுமாலயன் (சுசீந்திரம் உடையார்)

1397 சிவிந்தை—சுசீந்திரம் பெரிய கோயில் உள்ளது.

வேறே அவர்க்குச் சொல்லி மங்கலியம் போனார்
விதித்த விதி தப்பாமல் விதித்து ஔவையார் மழையில்—
மழையில் நனைந்து ஔவையாரும் விறைத்து வரக் கண்டு
வண்டு கட்டுஞ் சேலை கொடுத்தண்டையாலே இருத்தி
பழக்கி வைத்த கூழ் சுண்டைக்காய் இலைக்கறியும்
பசியாத்தும் இடைப் பெண்ணுக்கு முசியாமல் கடகம் கொடுத்தாள்
கடகம் தன்னைக் கழற்றி விட்டு ஔவையார் போமளவில்
காவலவர் சேரனுட ஆனை வாழச் செல்ல
"கடகவளை இளமுலையீர் தண்ணீர், தா" என்ன—,
வந்து தண்ணீர் குடிக்க வளைக்கை தன்னைக் கண்டார்
கண்டதற்பின் பெண் கொடியைக் கவிழ அங்கே தள்ளி
காவலர் திரு முன்பே கோல் கொண்டு அடித்தார்
வண்தமிழ் சேர் ஔவையாரும் மலங்கி விழுந்தழுது
"மகளே! நீ யஞ்சாதே மன்னவர் முன்பே வாடி" (என்றார்)
சென்ற ஔவையார் சேர சோழ பாண்டியர்கள் முன்னே
செப்ப முடன் கவிபாட......
நன்றியுடன்......கொடுப்பேன் என்ன
நல்ல மொழி ஔவையார்க்குச் சொன்ன மொழி கேட்டு
செப்பமுள்ள சேர சோழ பாண்டியர்கள் கூடி
செந்தமிழைப் பாடி வந்த ஔவையார்க்காக
ஒப்பமுள்ள குன்றங் கோன் மகள் தனையும் அழைத்து
உத்த இடத்துக்கு வேண்டத்தக்கதெல்லாம் கொடுத்து
உபகாரமாக மன்னன் முப்பந்தலும் இட்டு
ஒக்க இருந்து முகிழ்த்தம் ஒன்று போல நடத்தி
ஔவையார் முன்னிலையில் பெண்ணுக்குக் கலியாணம் முகித்த
அப்பந்தல் காண் மன்னவனே, முப்பந்தல் காண்" என்றார்.
சீரார் மன்னவர்கள் திருமஞ்சனம் பொலிந்து
தேவகாலம் கூடிய மூர்த்தத்துக் கூடி
பச்ச நீல வச்சிர வண்ணப் பல்லக்கின் மீதிருந்து
பக்க மதயானை சூழ் முப்பந்தல் கடந்தார்,
கடந்த படையும் தொடர்ந்த கூழைப் பாளையமும்
கூழைப் பாளையமும் செய்து கடைத் தெருவும் வைத்தார்

அரசன் முப்பந்தல் என்னுமிடத்தில் தங்கி, 'இப்பந்தலை இட்டவர் யார்?' என்று கேட்டான். மந்திரி தலைவன் முப்பந்தல் வரலாறு கூறுகிறான். அவ்வூர் ஔவையாரோடும், சேர சோழ பாண்டியரோடும் தொடர்பு படுத்தப்படுகிறது' (அது 1407 வரியிலிருந்து 1460 முடிய சொல்லப்படும்.)

கடிதாக நடந்து தொட்டிச்சி குளமும் விட்டு
அடந்த பனையப்பதி துடர்ந்த பெண்ணின் வாய்க்கால்
அருகாகப் பாளையஞ் செய்தன்புடன் இருந்தார்.
அன்புடன் இருந்து முள்ளு வழியதும் மிட்டு
ஆனை குதிரைக்கு நிக்கப் பந்தி வேறே கட்டி
பண்பான முடி மன்னவர்க்குக் கோவில்களும் கட்டி
பார மந்திரி தலைவர் சேவுகர்கள் எங்கும்
கூடார மடித்துக் கொப்பரையும் வைத்து
ஏடாறு மன்னர்கள் சிறிது நாசிதிலே
இன்பமுடன் பாளையச் செய்தன்புடன் இருந்தார்.
பாளையஞ் செய்குல சேகரப் பெருமாள்
பாவித்துத் தெய் வேந்திரன் பரிசனம் இருத்தி
வேளையத்தைத் தானறிந்த பாடு பரசி தானும்
வேந்தர் படை கூண்டிருக்கும் பாளையத்தில் வந்தார்.

வேறு

## பாடும் பரசி கதை—குருவே துணை

பாடும் பரசி குலசேகர மன்னன் பாளையத்திற்கு வந்தாள்
வேளை தானறிந்த பாடும் பரசி தானும்
வேந்தர் படை கூடியிருக்கும் பாளையத்தில் வந்தாள்.
கொங்கு வட தேசத்திலும்
குச்சரம் கொச்சி கோழிக்கூடு
கங்கைக் கரை துலுக்காணம்
காயல் தூத்துக்குடியளவும்
எங்கும் புகழ் கொண்ட தென்குமரி
ஈழநாடு யாழ்ப்பாணம்
அங்கேயெல்லாம் திரிந்தவளும்
மாறனுட பாளையத்தில்
இந்து நுதல் பெண் கொடியாள் தனக்
கெதிரில்லை என்றாளே.

1447 ஊர்கள்: தொட்டிச்சி குளம், பனைப்பதி (பனைகுடி) முள்ளுவழி
1461 பரசி—போற்றிப்பாடி நடிப்பவள் (பரவுதல்-பரசி) கழைக் கூத்தி என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பொருள் கூறுகிறார்.

வந்தாளே மன்னவர்கள்
வாழ்ந்திருக்கும் பாளையத்தில்.

பாளையத்திற்கு வெளியே பாடி நடித்தாள்

பாடும் பரசியும் பலமேளமும்
பாளையத்தில் வந்த போது
ஆடும்படி அந்தப் பாடும் பரசி
அடக்கம் பலதடித்தாளே.
அடக்கம் பலது அடித்ததையும்
ஆரவாரம் செய்ததையும்
மடக்கொடியாள் பெருமை கண்டு
வாசலாளன் விரைந்தோடி

வாயில் காவலன் கூறியது

"ஆண்டவனே நீண்ட மாலே
ஐவேர்க்கு நாயகமே
பாண்டியனே குல சேகரா
பாராளும் மன்னவரே,
தாண்டும் பரிமேல் நகுலா,
சமத்தருக்கு நலத்தானே,
எத்திசையும் புகழ் மணக்கும்
இயல் மதுரைக் காவலவா
சித்தமுடன் அடியேனும்
செப்பும் விண்ணப்பம் கேட்டருள்வாய்
நாடக கீதம் பாடுவாளும்
நட்டு முட்டுக் காரர்களும்
கூட வந்து பாடுவாரும்
கொட்டு வாச்சியக்காரர்களும்
அங்கச் செருமிகளும்
அழகு பரிசைக் காரர்களும்
சொல் பெரிய வீணைகளும்
சுருதி குழல்காரர்களும்
கொங்கையிளம் பெண் கொடியாள்
கொடியிடையாள் சேவிக்கவே

வேறு

பங்கயஞ் சேர் பெண் கொடியாள்
பதினெட்டு நாடகமும்

1479 அடக்கம்—அவையடக்கப் பாடல் பாடி நடிப்பது.
1483 வாசலாளன்—வாயில் காப்போன்
1495 நட்டு முட்டு—நட்டுவாங்கம் புரிவோரும், வாத்தியங்கள் வாசிப்போரும், மேளம் கொட்டுவோரும், பாடகரும் என்ற இவர்களோடு கூடி.

அன்ன நடையும் அழகும்
அலங்காரப் பணியழகும்
பொன்னு மணி மேகலையும்
புது வயிரத் தோடழகும்
தென்னுடு வடநாடு
சிறந்த கொல்லங் கொச்சி மட்டும்
கன்னடியன் சீமையிலும்
கடல் சூழ்ந்த வையகத்தில்
திருநாடு காவலவர்
சிறந்த முடிப் பாண்டியனே
ஒரு நாடு தன்னிலுந்தா
னுள்ளளவு தேடினுலும்
வண்டேறு பூங்குழலாள்
மங்கையிவள் தனைப்போலே
கண்டே னில்லை மன்னு !
காவலவா எனத் தொழுதான்,''

மன்னன் மனநிலை மாற்றம்

ஒட்டன் சொல்லக் கேட்டபோது
உள்ளமெல்லாம் தள்ளாடி
வாட்ட மெத்த உண்டாகி
மாரன் வந்து போர் செய்தாலும்
கலங்காத மன்னவனும்
கலங்கி மனம் தடுமாறி
"ஆகட்டும் ஆகட்டு''மென்றிருந்தான்
வம்பனைய பூங்குழலாள்
வன்ன மயில் சாயல் நல்லாள்
கொம்பனையாள் பாடும்பரசி

பரசி வந்தாள்

கூடாரமதி னிலே போனுள்.
போன போது அந்த நேரத்திலே
பொழுதும் அங்கே புகுந்திடுமாம்.
சேனை மன்னன் பாண்டியனும்
சிறந்த முடி மன்னவனும்
மன்னன் பொன்னும் பாண்டியதும்

1502 — 1509 பாடும் பரசியின் பெருமை.
1522 ஒட்டன் — ஒற்றன், ஏவலன்.
1532 கூடாரம் — அரசனது கூடாரம்.

அன்று விடியுமுன்னே
ஆதித்தனுதிக்கு முன்னே
சென்று புனலாடி தேவர்காலம்கூடி
அன்று சடுதியிலே.

அரசவை கூடிற்று

அமுதேத்தம் பொலிந்த பின்பு
செஞ்சயனும் தொண்டமானும்
திருமங்கை யாழ்வானும்
கஞ்சமாது சேர் புயத்தான்
கறைகண்டர் காங்கயனும்
செண்பக வன்னப் பெருமாளும்
செல்வப் பெருமாள் தன்னுடனே
பெண் சிறையை மீட்ட பெருமாள்
பிரியாதிப் பிள்ளை யோடே
மந்திரி மார் பிரபுக்களும்
மத்துமுள்ள வன்னியரும்
கொந்து சரி பூங்குழாள்
கொடியிடையாள் சேவிக்கவே
சேவிக்கும் பல பெண்களும்
திரு ஆலத்திக் காரர்களும்
பாவிக்கும் தம்பி மாரும்
பதி னெட்டு மந்திரி மாரும்
பக்கத்திலு ண்டு மென்று
பழைய பணிக்கன் மாரும்
ஒக்கச் செறுமி
நக்கு ஒலக்க மண்ட பத்தை
மங்காத பொன்னின் முத்து
மாணிக்கக் கல்பதித்த
சிங்காசனத்தின் மேலே
தென்னவனும் வீத்திருந்தான்
வீத்திருந்த மன்னவனும்
விளம்புவனும் ஓர் வார்த்தை.

அரசன் பரசியை வரச்சொன்னான்

"நேத்து வந்த பெண் கொடியாள்
நெஞ்சஞ்சா மங்கையவள்
அடக்கம் அடித்ததையும்
ஆரவாரஞ் செய்ததையும்

1542—1560 மன்னன் அவையில் இருந்த அரசவை உறுப்பினர்

எடுத்து வந்த விருது
தனக்கு எதிரியில்லை என்றதுவும்
மடக் கொடியாள் நம்மையெல்லாம்
மதியாமல் வந்ததுவும்
கொல்லம் கொச்சி கோட்டதிலும்
கூட்டமலை நாட்டதிலும்
கல்லுக்குக் கிழக்கு மேற்கும்
கண்டிருப்பதில்லை'' என்றார்.
''இல்லையே தனக் கெதிரி
என்னுடைய பாளையத்தில்
தென்னவன் தன் நாட்டதிலும்
சிறந்த வைகைக் கரையளவும்
கன்னடியன் சீமையிலும்
கண்டிருப்பதில்லை'' என்றார்
வன்ன மயில் சாயல் நல்லாள்
கங்குல் விடியு முன்னே
கதிரோன் உதிக்கு முன்னே
மங்கை நல்லாள் பெண் கொடியாள்
வந்தாளே பாளையத்தே

அரசவையில் பரசி ஆடினாள்

அட்ட திக்கும் தான் முழங்க
அடக்கம் பல தடித்தாளே
வட்டமுலைப் பெண் கொடியாள்
மன்னவன் தன் முன்னே வந்தாள்
பாடுவாரும், நாடகசீதம்,
பல வாச்சியக் காரர்களும்,
கால் சிலம்பு தண்டை
ஆடும் மயில் பெண் கொடியாள்
ஆலத்திக்காரர்களும்
முன்னிடைகள் தள்ளாட
கயல் விழிகள் போருஞ் செய்ய
கன்னியிளம் பெண் கொடியாள்
காவலனைத் தொழுது நின்றாள்

ஆடல்நயம்

புகழும் முலைப் பெண் கொடியாள்
பொருந்த வெண் சாமரைவீச
களரிதன்னில் வலம் வரவே
கால் சிலம்பு புலம்பிடுமாம்,
கீர்த்தி பெற ஆட நன்றாய்

கிளிமொழியாள் களரியிட்டாள்
சித்தமுடன் களரியிட்டாள்.
தேன் மொழியாள் பாடும்பரசி
மாத்தலர்கள் மாற வீரன்
மகிழ்ந்திருக்கும் வேளையிலே
தென்னன் எங்கள் பாண்டியனும்
திருநீல கண்டனோடே,
"இடமாகச் செல்லு"மென்றார்
மத்தளஞ் சல்லிகையுடனே
மகுடமது தனைக் காச்சி
சத்தம் காட்டுமென்று சொல்லி

### பரசியின் அலங்காரம்

தானவளும் அலங்கரித்தாள்
பொத்தகஞ்சேர் புறவடி மேல்
பொன்னுமணிச் சிலம்பணிந்தாள்
வித்தகஞ் சேர் பாடகமும்
விளங்கு மணித் தண்டை யிட்டாள்.
தன் காலாண்டு அழகுபெற
வன்ன மணி பொற்சலங்கை
மணி வயிரக் கச்சங் கட்டி
பொற்கதலி இணை தொடையில்
பொருந்து துடி இடைதனக்கு
நிகர் கனகபூந் தொலியன்
நல்ல மணி சேலை கட்டி
ஒப்பமுள்ள ரோம மதில்
உந்தியின் மேல் அரைஞாணும்
செப்பமுள்ள இளமுலையின் மேல்
சேர்ந்த முத்தின் கச்சணிந்தாள்
கைநிறைய வளையலிட்டாள்
கனக விரலாழி யிட்டாள்
மெய் நிறைந்த முத்து வடம்
வன்ன முத்து மாலைகளும்
நீலவர்ணச் சங்கிலியும்
பொன்னரி மணி மாலைகளும்

1610 களரி—ஆடுகளம்.
1621—1661—உடலுறுப்புகளின் மீது அணிந்த அணிகளின் பெயர்கள். 16-ம் நூற்றுண்டில் இருந்தவை.
1619 காச்சி—தீயருகில் கருவிகளில் கட்டியதோலை வெப்பமாக்கி தொனியை மிகுதியாக்குவர்.

புது வயிரச் சங்கிலியும்,
பூங்கமுகும் சங்கும் ஒத்த
பொற்கமலக் கழுத்தினிலே
ஒத்த மணித் தாலிச் சங்கு
உட்கட்டு ஒற்றை வட மணிந்தாள்
காதில் தங்க மணியு மிட்டாள்
கைக் கடய மணிக் கொப்பு மிட்டாள்
காதிலங்கு குமிழ் மூக்கில்
தரளமணி நாசியிட்டாள்.
செம்பகள வாயிலிட்ட
சிறந்த முத்தின் பல்லொளியும்
அருமையுள்ள வேல் விழிக்கு
அழகு பெற மையெழுதி
மன்மத வேள் பெருகிடவே
மணி நுதலில் திலகமிட்டாள்
பொன் மருவும் திரு வணிந்தாள்.
பூம்பாளை தானணிந்தாள்
மஞ்சனைய கூந்தலுக்கு
மயில் செண்பகம் சூட்டினளே
அஞ்சனக் கொண்டையின் கீழ்
அழகோடமைந்த ஸ்தனத்தாள்
தென்னு, தென்னு வென்னமணி
சிலம்பு கொஞ்சத் தான் நடந்தாள்.
மன்னவனூர் முன்பினிலே
வந்தாளே பாடும்பரசி
வந்த போதந்த மந்திரிமார்
மன்னவனோடு என்ன சொல்வார் ?
"பைந் தொடியாள் சங்கீதம்
பாட்டினுட கம்பீரமும்
சிந்தையுறக் கேட்டருள்வாய்
தென்னவனே" எனத் தொழுதார்
மந்திரிமார் சொன்னபோதே
மங்கை நல்லாள் பெண் கொடியாள்
எண்திசையும் தேவர்களும்
இந்திரனும் மால் கொள்ளவே

1651 நாசி—மூக்கில் அணியும் அணியெனத் தோன்
1652 பகளம்—பவளம் (பேச்சு வழக்கு—நெல்லை ந
1660 மஞ்சு—மேகத்திரள் (நெல்லை வழக்கு)
1677 மால்—காம மயக்கு.

சித்தமுடன் களரியிட்டு
சேவித்து நின்ற போது

வேறு

மங்கையர் செங்கயல் கண்ணுக் கிசைந்த
மதிமுகம் தன்னிலிட்ட
வன்ன வரிக்குறி பொன்னிட்ட சுட்டியும்.
வட்டப் பொட்டின் அழகாம்
துன்னும் கருங்குழல் போலே இலங்கவே
துய்யப் பட்டுக் கயிறும்
தொங்கல் வரிந்திட மங்கையலங்காரம்
மங்கையர் தானணிந்தாள்
யெங்கு மிலங்கவே இந்திர கோல
மெத்தச் சிலம்பணிந்தாள்,
இலங்கும் ரத்னம் பச்சை, நீலம்
இருபக்கமும் அழுத்தி
துய்ய நவமணிதானும் துலங்கவே
துய்ய பொன்னி னங்கயலாம்
துப்புர வான தோர் கொண்டை தன்னை
தொங்கல் நல்லாள் அணிந்தாள்.
சித்திரமான நடுக்காய மணிக்குழல்
சேயிழையாள் முடிமேல்
தித்தி என்ன திருவு மற்றை
செம் பொன்னிலுலணிந்தாள்.
பங்கயப் பெண் கொடி மடமயில்
சிங்காரமாய் நடந்தாள்
குமிழின் மலரொத்த நாசி மூக்குக்
குத்தி அதிலணிந்தாள்.
கொவ்வைக் கனியிதழ் வாயிலெழும்பல்
கொவ்வை முத்தின் அழகாம்
பொன் சல்லியிட்ட குழைக் காதிணங்கவே
பொற் கொடியார் தமக்கு
புத்தி மிகுந்தநல் சித்திரத் தட்டார்
பொருந்தச் சமைத்த பணி,

1629 முதல் 1772 முடிய பாடும் பரசியின் அழகும், அலங்காரமும் வருணிக்கப்படுகின்றன. இரண்டாம் முறை அணிவகை கூறப்படுகிறது.
ஒவ்வோர் உறுப்பிலும் அணியப்படும் அணிகலன்களின் பெயர்கள் இங்கு வரிசையாகக் கூறப்பட்டன.

வன்ன மழகிய முல்லைப்பூ தண்டட்டி
மாணிக்கத்திற் பதித்த
வயிரப் பணிகளும், முத்துப் பணிகளும்
மாணிக்கக் கொப்பணிந்தார்
மெய்ப்பான தோளுக்கிணங்கவே தோள்பூப்பட்டு
மெல்லி நல்லாள் அணிந்தாள்
வெய்ய பச்சைக் கமுகொத்த கழுத்திலே
ஒப்பான தாலிச் சங்கிலி பொன் மணிகளும்
உள் கடடுத்தாவடமும்
ஒத்த வடம் திருக்கண்ட மாலையும் துய்ய நறுமாலையும்
தப்பாத சந்திர மாலையும் தாவடம் தக்க முத்துமாலையும்
தச்சன் கடைந்தன்ன செப்புக் கொப்புமுலை
தாங்கியே நிற்கும் பணியும்
பணிதாங்கு கொங்கைக்கு கிணங்க பவளம்
பதித்த அணியணிந்தாள்.
பச்சை வேலொத்த பணைக்கை யிரண்டிலும்
பதித்து விரல் நிறைய
பைம் பொன் வயிரப் பணியான மோதிரம்
பாவை நல்லாள் அணிந்தாள்.
இச்சையாலொக்க இணங்க இடுகையிற்
இட்ட வெள்ளிக் கடையம்
ஏத்த பகளத்´திணங்கு சொருகு
இயல்பாய் அணிந்தனளே
அங்கர் பனைத்தாங்கி நின்ற தோர் பாலமும்
ஆலிலை போல் வயிறும்
அந்த உதரத்திலே ரோமத் தொழுங்கு
எறும் பொழுக்கென இருந்ததாம்.
வடமயிலாள் தன் துடியுடைக்கேத்த
மணிச்சேலை கட்டினளே
மங்கை இயல்பாகும் பெண் கொடியாள் தன்
மடிமீது அரைஞாணும்
அங்க ஆசை கொண்டு மனிதர் மயங்க
அரையில் வன்னப் பணியாம்
அந்த மதி நுதலாள் வன்னத் தொங்கல்
காலில் அணிந்தனளே
தெந்தரு யென்னும் மணிச் சேலையானது
செங்கனைக் காலணிந்தாள்
சேத்தில் வளர் விரலொத்த புறவடி

1710 தண்டட்டி—(பாம்படம், தண்டட்டி காதில் அணிகள்)

எத்தனைகால் பத்தியாம்
பாடகம் தண்டை சிலம்பு புலம்பவே
பாதத்தின் மீதணிந்தாள்
பத்து விரல்பணி கட்டுவம் வண்ண
மயிலடி கால் மோதிரம்
கூடியே நாடகம் ஆடவே கைமணி
கூத்து வண்ணம் பிடிக்க
கொத்தவன் எங்கள் குலசேகரன் முன்னே
கொர குல மாடிவந்தாள்
பாடவே ஆட பாதம் சவாதம்
பதினெட்டு நாடகமும்
பங்கயப் பெண் கொடி கால் பத்தியும் பொன்னும்
பாடகத்தின் அழகாம்.
நீடிய மாலுறங்கும் ஆலிலை போல்
நிறைத்த வயிறழகாம்
நெத்தியிலிட்ட வரிக்குறியும் பொட்டும்
பட்டுடையும் கண்டவர்
கூடியிருந்து கலவி செய்யக் குரல்
குங்கும் குங்கும் எழ
கொங்கார் நீல முலை எங்கே வருவாளோ
என்று ஆசை கொண்டிருப்பார்
பீடிகை தன்னிலே வாதுவஞ் செய்யும்
பெருகுலத் துவனி போல்
இணை சேர் விழியும் துணைவிழியும் கண்டு
பித்துமால் கொண்டிருந்தார்
யோகிகள் ஞானிகள் வேள்வி குலைந்து
யோகம் குலைந்திருந்தார்.
கூடியே மத்தளம், கைமத்தளங்களும்
கொட்டி வட்டம் பிடிக்க
கொற்றவன் வல்லப மாறன் முன்னே
மகாதையாள ஓடி வநதாள்
பூணிட்ட புலரு ஒப்பணி ஆட ஆட

1755 கொத்தவன்—கொற்றவன்
1756 கொர குலம்—குறக்குலம் அவள் குலம். இவள் குறத்தி அல்லது குறவச்சி என்பது நாட்டு வழக்கு.
1767 நீல முலையாள் (நீல முலையாள்) வள்ளியின் நிறம்.
1772 பித்துமால்—அதுவே பைத்தியம்
1777 வல்லப மாறன்—குலசேகரன் மூன்னோன் ஒருவன் பெயர் ஸ்ரீவல்லபன்

மேலிட்ட முத்துவடம் ஆட
மோகன அச்சு மூலை ஆட வள்ளால்
முதுகு துவண்டு ஆட
தென்னன் சேவிக்கும் நாடு
தேவாரமுந் திருத் தம்பிமாரும்
செய காரியம் சொல்லும் மந்திரிமாரும்
சிந்தைமால் கொண்டிருந்தார்
ஒன்னாரை வெல்லும் குலசேகரன்
உந்திச் சுழியைக் கண்டு
உள்ளாசை கொண்டாரே.
சேரையிட்ட பொன் மணியும்
சிறந்த முத்தின் தாவடமும்
வாரியிட்ட கை நிறைய
மதிமயங்கி ஏது சொல்வார்?
திரையிட்ட வேல் விழித்தேன்
தமிழ்பாடும் பரசிய ரின்
கரும்பை யொத்த சிலைக்காமன்,
கணைகள் பட்டே யுழந்தார்.
பொருங் கருணை சேர் விழியாலே
போமெனவே விடை கொடுத்தார்.
மன்னவனும் சொன்னபோது
மங்கை நல்லாள் பெண்கொடியாள்
தன்னுடைய பாளையத்தில்
தான்போனாள், பாடும் பரசியரே.
பாடும் பரசியும் போனபோதே
தெய்வப் பொன்முடிப் பாண்டியரும்
வாடிமுகம் சோம்பி மன்னவரும்
மந்திரிமாரைப் போகச் சொன்னார்.
ஒண்டித் தனித்தொரு மண்டபத்தே
உள்ப் புகுந்திருந்தார் மன்னவரும்
வாடைச் சிறுதென்றல் வீசவே மாரன்
படையோடே வந்து விட்டான்.
ஆழிச்சிலைதனைக் கைபிடித்து
அஞ்சு கணைதனைத் தேர்ந்தெடுத்து
வேலைத்திரை முறைய சைந்திடவே
மேவிக்க கருங்குயிலாள் இனிமேல்

1772—1834 பரசியின் அழகான உறுப்புகளைக் கண்டவர்கள் அவள் மீது மையல் கொண்டனர்.

பூகத்திளம் பூவின் கவரிவீச
பொருக்கெனத் தென்றல் சூழ
வேகத்துடன் குயில் கூவிடவே
வெள்ளை மதிக்குடைமேல் விளங்க
சாலப்பெரும் படை யன்றில்
அழற்ற இளந்தென்றல் வாடைவீச
மாலைப்பொழுதிலே மன்னவன் முன்வந்து
விளைத்தத்தானே மன்மதனும்.
நாறுமணத்து தாழம் பூவும்
மல்லிகை முல்லை மணங்கள் வீச
நாளுக் கிணங்கின பூங்கணையை
நாணுறத் தொடுத் தெய்திடவே
வெளிப் படையங்கே மெய்த்திடவே
அவர் வேற்பான வேந்தருக்கு
குளிர் தண்ணீரும் சந்தனமும்
குங்குமப் பச்சை வாடைகளும்
அழுத்தும் படியங்கே பூசப் பூச
ஆசைத் தலை மண்டை கொண்டிடுமாம்
இஷ்டம் பெருக்கவே மன்னவர்க்கு
எழுத்தங் கிருந்துரை யாற்றிடவே
ஒட்டன் திருநீலகண்டனோடே
உற்றங் கொடுவார்த்தை சொல்லுவாராம்
பாட்டினிசையாவே மனமுருகப்பாடும்
பரசி பாளையத்தே
ஒட்டத்துடன் சென்று ஒருவார்த்தை
செப்பிச்ச டுதியாய் மீளும் என்றார்.
போர விசேஷத்தை நீயுமில்போ
ஒருவரறியாமல் சொல்ல வேணும்
மாறி விடைசொல்லு நீ நமக்காய்
விரைவாயுடனே வருவாய் என்றார்.
பாராள்மன்னர் சொன்னபோதே
பளிக்கும் பட்டகலசப் பானை
ஆருமறியாமல் எடுத்துக்கொண்டு
திருநீலகண்டன் ஒற்றன
தொடர்ந்து கடிதாக ஓடிதுடிசேரிடையாள்
தன்பாளையத்தே

1804 —வரை பரசி சென்ற பின் அரசனின் மனநிலை
1815 —1835முடிய பரசிமீது மன்னவன் ஆசைகொண்டது கூறப் படுகிறது.

அடுத்துப் புகழ் மன்னன் கலசப்பானே
பரசிமுன்ஞலே வைத்தான்
ஆடும் நிகரோவ்வா வடிவழகன்
அரசன் ஆட்டந்தவிர்த்த மன்னன்
வாடும் கிளியன்ன மொழியன்ன மொழிநல்லாரே மன்னர்
சேரும்படியிங்கே வருவார் பெருமானுன்னே
யின்று செப்பிச் சடுதியாய் மீண்டும் போனன்.
மீண்டங்கவன் போன நேரத்திலே
மெய் தளர்ந்துள்ளந்தடுமாறி
இன்றிங்கரசர் தான் வந்திடில் வினேதான்
விளேயுமென்றறியாமல்
பஞ்சணே மெத்தை யிட்டாள்
பள்ளியறையிலும் விளக்கேற்றி,
வஞ்சி மனம் தடுமாறி யுறங்காமல் விழித்தேயிருந்தாள்.
விழித்தவளும் அங்கிருக்கும் நேரம்
மீண்டு வந்து ஒற்றனும் தான்
ஒளித்து நாமங்கே செல்ல வேணும் என்று
உற்ற மொழி மன்னர் தமக்குரைத்தான்.
குலசேகர வல்லியாரும் கொங்கையிள மங்கைமாரும்
வண்டினங் குழலாரும் மன்னவரும் மந்திரிமாரும்
உண்டுறங்கியொரு சாமம் உறக்கம் வைத்த நேரத்தில்

வெளியே செல்ல தயாரிப்பு

பச்சைவட மெடுத்துடுத்தார் பதக்கம் நல்ல சவடியிட்டார்
கெச்சமுடன் முறுக்கு வளே கிளர்ந்தமணிப் பணியுமிட்டார்
தரமான வளேயலிட்டார் சரப்பளியும் எடுத்தணிந்தார்
செங்கைமேல் சங்கிலியும் சிறந்த விரலாழியிட்டார்
பார முடியெடுத்தணிந்தார், ரத்தினமுத்து மாலேயிட்டார்
தொட்ட பொன்னின் மிதியடியும் தோளிலிட்ட பட்டயமும்
இட்ட பொன்னின் கிரியதும் பிடித்த பொன்னுடை வாளும்
நாட்டமொத்த பாதியிரா நடுக்கூர் சாமத்திலே
இட்டடுக்கி வைரமணி ரெத்தினங்கள் எடுத்தணிந்தார்
ஒற்றன் திருநீலகண்டனேடே ஒரு
வரறியாமல் நடக்கலுற்ருர்
நடந்து குலசேகரரும் நாட்டமுடனேட்டனுமாய்
மடந்தை நல்லாள் பாளேயத்தில் மன்னர்
பெருமாளும் செல்லு நேரம்

1857 குலசேகரவல்லி—குலசேகர மன்னனின் பட்டத்தரசி

### பரசி பாளையத்தில் வரவேற்பு

வெள்ளியாலே விளக்கெரிய வெஞ்சாமரைகள் வீச
பள்ளியறையில் விளக்கேற்றிப்
        பார்த்திருந்து ஏதோ சொல்வாள்
"நீடு புகழ் கொண்ட மன்னவனே,
        நிறைந்த முடிப்பாண்டியனே,
பாடும் பரசியைப் பொருட்டாக
        பாதிராவில் இங்கே வருவானேன்
பொன்னணிந்த மாலைமார்பா
        புகழதிலும் கடைக்குட்டியாள்,
என்னையொரு பொருட்டாக
        எழுந்தருளுவதேன் தனியே ?"
சொன்ன மொழி கேட்டபோதே
        துயரமெல்லாம் தீர்ந்தது காண்
மன்னவர் முன் புகுத் திருநீலகண்டன் ஒற்றன்
தென்னவர்க்குக் காவலாகச் சிறந்து
        புறத்தே இருந்தான்.

### பரசியின் அலங்காரம்

பட்டமேற்கட்டி கட்டில் பசும்
        பொன்னின் மேற்கட்டியிட்டு
பாதமது தெரியாமல் பசும் பொன்மணி காலிலிட்டார்
வட்டமணி மெத்தையிட்டு மாணிக்கக் கால்பதித்து
தட்டதிலே வெத்திலையும் தான் அடக்கமாய் முதலளித்தாள்

### மன்னனும் பரசியும்

விட்ட பன்னீர் புனுகுடனே கலந்து வைத்த சந்தனமும்
இஷ்டமுடனருகிருந்து இருதனத்தின் மீதணிந்தான்.
உள்ளறையில் துகில் உடுத்தும் ரோமமது பட்டாடையும்
தள்ளி எழும் காதலினால் தங்களில் ஒன்றாய்த் தழுவ
அன்புடைய மனமுருக ஆசை வெள்ளங் கரைபுரள
இன்பமுடன் ஊடுருவ ஈருடலும் ஓருருவாய்
கொங்கைகள் நெருங்கிடவே கூந்தலது துவண்டசைய
மங்கையும் மன்னவனும் மகிழ்ந்து தமது அறிவழிந்து
தங்களிலே உண்டான தாபமெல்லாம் தீர்ந்தபோது
மண்டலரும், மாலைமார்பன் பொன்னும் பாண்டியனும்

1894 பொன்னும் பாண்டியன்—ஆர்வ மொழி. நாஞ்சில் நாட்டார் பொன்னும் மகள், பொன்னும் மகன் என்று ஆர்வம் தோன்ற இன்னும் மக்களை அழைப்பதுண்டு.

### மன்னன் பரிசுகள்

இட்டுவந்த மணியெல்லாம் எடுத்தவட்கு அணிந்தாராம்
விரலாழி கழட்டியிட்டார், வீரதண்டை கழட்டியிட்டார்
தரமான வளையை யிட்டார், சரப்பளியுங் கழட்டியிட்டார்
திருக்கரத்தில் உருக்குமணி சேரவங்கே கழட்டியிட்டார்
உடுத்தி வந்த பரிவட்டமும் உள்சரமும் தானொழிய,
கொடுத்ததற்பின் மன்னவரும் தொங்கல் நடை மங்கையோடு
"கொந்துசேர் பூங்குழலே கொடியிடையே மடமயிலே
உன்னையினி மறப்பதில்லை. உன்னாணை" என்றுரைத்தார்.
மன்னவரும் போகவென்று மடக்கொடியாள் தனக்குரைத்தார்.

### மன்னன் தன் பாளையம் திரும்பினார்.

பள்ளியறை தன்னைவிட்டுப் பாண்டிமன்னர் குலசேகரர்
ஒள்ளியதோர் ஒற்றனோடே உள்ளதெல்லாம் சொல்லுவாராம்
வெள்ளியுதிக்கு முன்னே விடியவஞ்சு நாழிகையில்
நள்ளிருளு நீங்குமுன்னர் நடந்துவிட்டார் பாளையத்தில்
செண்டும் கயலும்தான் பொருந்தும் தென்னர் பொன்னும் பாண்டியனும்
பண்டுபோல மன்னவரும் பாளையத்தில் செல்லும் நேரம்

### அரசி மன்னனைக் கண்டாள்.

மங்கையர்க்கு மணிவிளக்காய் மன்னவர்க்கு இன்னமுதாய்
கொங்கையிளம் பெண்கொடியாள் குலசேகர வல்லியரும்
உறக்கம் விழித்தெழுந்து உற்றபுகழ் தேவியரும்
மறக்கவொண்ணாப் பொற்கொடியாள் மன்னர் பெருமானைத் தேடி
பகைத்தவர்கள் மனநடுங்கு பாண்டியரைக் காணாமல்
வஞ்சியிடைப் பெண்கொடியாள் மன்னர் பெருமானைத்தேடி
திகைத்து அந்தப் பெண்கொடியாள் தென்னவரைக் காணாமல்
பார்த்திருந்த அந்நேரம் பாண்டிய மன்னர் குலசேகரர்
காத்திருந்த ஒற்றனுடன் கடுநடையாய்த் தானடந்தார்
வந்திருந்த மன்னவன் தன் வளமையெலாம் கண்டிருந்து

1896 கழட்டி—கழற்றி
1899 பரிவட்டம்—வேஷ்டி ;
1908 செண்டு - போர்கருவி கயல் - மீன் இலச்சினை அரச சின்னங்கள். (குமரி - பா. வ.)
1918 கடுநடை—வேகமான நடை.
1919 கருநடை - விரைவான நடை, பொடி நடை (நெல்லை பா. வ)

செந்திருவாள் பெண்கொடியாள் தென்னவனோடேது
சொல்வாள்.

அரசியின் ஐயம்

"தென்னவரே, காவலரே தென்மதுரைப் பாண்டியரே
மன்னவரே பாண்டியரே, மஞ்சி சிறையிட்ட மன்னு
முழுப்பணியும் எடுத்தணிந்து, முழுப்பாதி ராத்திரியில்
இப்பொழுது போனவிடம் எனக்கறியச் சொல்லு"
மென்றார்

"சொல்லக்கேட்ட பெண்கொடியே நீதானதை யறியாய்.
பாளையத்துக் காவலெல்லாம் பார்த்து வரப்போனேன்
நான்"

"பாளையத்தில் போனவர்க்கு பரிமளங்கள் வீசிடுமோ?
நகர் சோதனை போனவர்க்கு நறுமணங்கள் வீசிடுமோ?
வேலையற்ற பாண்டியரே, மேனி சருகாகுவானேன்?
வாடைபுனுகு வீசிடுமோ மஞ்சள்வாடை கெம்பிடுமோ?
வேர்த்துமுகம் வாடுவானேன், மேனி சருகாவானேன்?
புகழ்பெரிய பாண்டியரே, ஆபரணமெங்கே? என்றாள்
"மெய்யிலிட்ட தாவடமும், வீரமணித்தண்டை எங்கே?
ஆண்டிருக்கும் பாண்டியரே அலங்காரப் பணிகளெங்கே?"
"கன்னலொத்த விழியாளே கழற்றிவைத்துப் போனேன்"
என்றார்.

"கழற்றிவைத்துப் போனதுண்டால், கருவூலத்தில்
காணுதோ?

உறக்கமில்லாப் பாண்டியரே, உம்களவு நானறிவேன்.
கள்ளருட வார்த்தைகளும் கல்பணியும் போனயிடம்
சிறந்த முடிப் பாண்டியரே தெரியுமெ"ன்றங் கவளிருந்தாள்
கன்றிவிழி சிவந்தெழுந்து கடுக அந்த நேரத்திலே
கோழியுமோ தான் கூவிக் கொக்கரக்கோ குரல்வாங்கி
ஆழியது மேல்வந்து ஆதித்தனும் உதித்திடுவான்.

பாண்டியன் அவை கூடுதல்.

ஆதித்தனும் உதித்து அதிகாலை நேரத்திலே
ஆடல்பரிமேல் நகுலன் ஐவரில் குலசேகரன்
காதி பெருஞ்சேனை சூழ கண்ணமதயானை சூழ
காலாளும் மேலாளும் கன்னடரும் வன்னியரும்
திருமஞ்சனம் முடிந்து தேவகாலமுங்கூடி
தெள்ளமுது போலநாடி திருத்தம்பியரும் கூடி

1922 ஞ்சி—மேகம் - புராண வழக்கு.
1923 முழுப்பணி — முழுநகைகளும்
1930 கெம்பிடுமோ?—கிளம்பிடுமோ?
1938 கல்பணி - கல்பதித்த நகை.

காரியம் பரையும் உல்ல காலிங்க வில்லவனும்
கரைக்கண்டான் காங்கயனும், காவலாட்கள் தோழனும்
திருமங்கையாள்வானும், செஞ்சையனும், தொண்டைமானும்
வலுவான மந்திரியும் மூன்றுமுடிச் சேவகனும்
மண்டலத் தரசனெனும் வல்லன் தொண்டான் வில்லந் தொண்டான்
சொல்லுக்கு மீண்டானுடனே வில்லுக்கு நல்லானுமாக
துங்கப்பரியேறிவரும் மங்கைப் பெருமாள் காலிங்கனும்
வில்லவராயனுடன் வில்லவராயன் கூட்டங்களும்,
பல்லக்குப் பிரபுக்களும் பதினெட்டு மந்திரிமாரும்
குறப்படையும் தொட்டியரும் கூட்டமிட்ட மறவர்களும்
கொல்லத்து வில்லிகளும் இல்லத்து பிரபுக்களும்
திருவாலத்தி ஏந்திநிற்கும் சேவிக்கும் பரிகலமும்
பாவிக்கும் தம்பிமாரும் தேவாரத்துத் தம்பிமாரும்
பாண்டியரைச் சேவிக்கவே பார்த்திருந்த நேரத்திலே.

வேறு (சீர்சிந்து)

அன்று விடியும் முன் எழுந்திருந்து ஆடும்படியந்தம் பாடும் பரசி
சென்று வரவேணும் பாளையத்தில் சேரப் பணிகளை எடுத்தளித்தார்
பண்டு மேகத்தை விலங்கிலிட்டுப் பகட்டிப் பூதத்தை வேலை கொண்டோன்
செண்டால் கயிலையுந் தறித்த தீரன் குலசேகப் பெருமாள்
கொண்டு சென்றங்கே அவன் கொடுத்த கோலப்பணி வரையத்தனையும்
அங்கந்தனிலங்கே அணிந்து கொண்டு, கரந்தனில் பட்ட ஒருக் குறியும்

பரசியின் அணிகளைக் கண்ட
அவையோர் ஐயம்

செங்கையில் வீரசங்கிலியுந் தென்னர் கொடுத்த பதக்கங்களும்
பண்பாகப்பணி எடுத்துப்பூட்டி பாண்டியர் திருமுன்பில் வந்தாள்.
வந்த போதந்தப் பெண்கொடியாள் மன்னர் திருமுன்பு இசைவுடனே

1949 காரியம்பரையும் - அரச ஆணையைச் சொல்லும். (பரையும் - நாஞ்சில் நாட்டு வழக்கு. மலையாளச் சொல்)
1950 முதல், 1961 வரை அரசியல் சுற்றம். சிற்றரசர், பிரபுக்கள், படை வீரச்சாதிகள், மந்திரிகள், தம்பிமார் முதலியோர்.
1965 மேகத்தை விலங்கிலிட்டு, பூதத்தை வேலை கொண்டோன் - பாண்டியகுல முன்னோர்களைப் பற்றிய புராண வரலாறுகள்.

வீரந்தவருத புகழ்வீரன் மன்னன் திருத்தம்பிமார்களோடே
சேரும்படி நல்ல மந்திரிமாரும் சேவித்து நிற்கின்ற பரிசனமும்
நாடியிவள் தன்னைப் பார்த்த போதே நாவிட்டொரு வார்த்தை சொல்லுவாராம்.
''கூடாமல் திரிவாரைத் தூத்திவெல்லும் குலசேகரரிட்ட பணியதுவும்
மூன்று புவியிலும் விலைமதியா முத்து வடங்களும் பதக்கங் களும்
துலங்கும் படியிவளணிந்த போது சூதாயிருக்குது நோக்க மெல்லாம்
அண்ணலிவன் தன்னைச் சேர்ந்ததுண்டோ, அழகுமணிச் சேலை கொடுத்ததுண்டோ!
மன்றில் மனிதர்களறியாமல், மன்னர் தனித்தங்கே சென்ற துண்டோ?
ஒன்றுஞ் சொல்ல இனிவேண்டாம், உலகத்தினிற் பேச்சாகி விடும்.''
ஒன்று மனதிலே கருதிக்கொண்டு இனிதாயிருந்தாரே மனிதரெல்லாம்.
இன்றுதயம் வந்தடுத்த போதே ... ... ...
பூண்ட கலவியிலகப்படுத்தும் பொருந்த இயல்பாடும் பரசியர்க்கு
வேண்டும் பணிவகை பரிவட்டமும் விரையக் கொடுத் தங்கே போகவிட்டார்.
கொடுத்த போதந்த பெண்கொடியாள் கொட்டுவாத்திய மேளத்தோடு
அடுத்தநாளில் வரலாமென்று அவள் தன் பாளையத்தனில் போனாள்.
அந்த வகையாலே ஆடல் பாடல் கண்டு அனைவருமிருக்கும் நேரம்
சிந்தை குளிர்ந்த மன்னவரும் சிறிது நாளங்கேயிருந் தனராம்

வேறு—(சீர்சிந்து)

வேட்டைக்கு செல்லுதல்

வீரந்தவருத வேட்டைக்காரர் ''வாணதிராயனைக் கொண்டு வா''வென்றார்
தென்னப் பொன்னும் பாண்டி மன்னர் சிறந்த நல்ல குலசேகரர்,
தீரன் சொன்ன நேரத்திலே திருநீலகண்டனெட்டன்,
உன்னு முன்னே சென்று ''கடிதாகக் கூட்டிவாரோமெ''ன்று
சீக்கிரமாய்ச் சென்று அந்த வேட்டைக்காரர் பாளையத்தே
மண்டபத்தில் கீர்த்திபெற்ற திருநீலகண்டனெட்டன்
வாணதிராயனே நீர் வரவேணுமென்றுரைத்தான்.

சென்று கயலும் பொறித்த தென்னர் பொன்னும் பாண்டிய மன்னன்,
திருவுளம் பற்றி வரச்செய்தி சொன்ன நேரத்திலே
அம்புவியையாளும் மன்னன் யாரிங்கே வந்ததென்ன,
ஓட்டமாய் நடந்துவந்த சேட்டமான வேட்டைக்காரர்
சிம்பி வருவார்கள் சினந்தெழுந்து, பொன்னும் பாண்டியர்
திருமுன்பதில் கடுகச் சென்று சேர்ந்தவந்த நேரத்திலே
முன்பு சென்று கும்பிட்டுக் குலசேகரர் முன்னிற்கவே
முன்பு பூதந்தனை வேலை கொண்டு புவியாண்ட மன்னர்
வம்புற்ற குழலர்கள் மாரனென வந்த மன்னனார்
வாணாதிராயனோடே வார்த்தையோது சொல்வாராம்.
“பாடும் பரசிக்கும் பரிகலத்துக்கும் பரிவுடன் விருந்திட வேணும்
காடுதனிலுள்ள பலமிருகம் காடை கவுதாரி முசலுடும்பு
நாடிப்பிடித்திந்த மிருகமெல்லாம் நாழிகைக்குள் கொண்டு வரவேண்டும்’’
வாணாதிராயனுடன் வந்த வேட்டைக்காரர்களும்
சேட்டமுள்ள வேட்டைக்காரர், தென்னவனைக் கைதொழுது
வேட்டையாட வேணுமென்று வேடர்படை மகிழ்ந்து தேட
துஷ்டனையும், புலியனையும், சோமனென்ற நாய்களையும்
வட்டமிடும் குமிண்டனையும், வல்லாளதேவனையும்
அஷ்டதிக்குமது வளையும் அணுகரிய பாஞ்சனையும்
பாசக்கயிறு எடுப்பாரும் பல நாயைப் பிடிப்பாரும்
நேசத்துடன் பன்றியீட்டி எரிசரங்கள் எடுப்பாரும்
சங்கிலியில் சில நாயைத் தவறாமல் பிடிப்பாரும்
பொங்கி எங்கும் பறந்தோட பொன்னுப் பாண்டியன் வேட்டைக்காரர்
வல்வரிசையெடுப்பாரும், வேல்குந்தங்கள் எடுப்பாரும்,
மல்பயில் திண்புயத்தார் வளைதடிகள் எடுப்பாரும்,
சிலைகோலும் புரிவலையாம் சிலநாய்கள் சங்கிலியாம்
வலை கோலுங்கையுடனே மணியீட்டிக்காரர்களும்,
மூஞ்சூர் வலையும், முசல்வலையும் முறுக்குவலை அருக்குவலை
பொய்த்ததொரு பல்வலையும், வட்ட வலைத்தட்டுடனே
காடைபிடிக்கும் வலை கவுதாரிதட்டுடனே,

1999 சேட்டமான—சிரேஷ்டமான, சிறப்புமிக்க.
2000 சிம்பி—கிளர்ந்து (நெல்லை பா. வ)
2006 பரிகலம்—பரிசனம். பரிகலம்—சொல் தவறானது.
2008 முசலுடும்பு—முயல், உடும்பு
2011 நாய்களுக்குப் பெயர்கள்.
2019—2092 வேட்டைக் கருவிகள்.
2023—2037—வலை வகைகள்.

மாடப்புருப்பபடுக்கும் வலையுடனே ஈட்டிகளும்,
வள்ளான் படுக்கும் வலை ஊர்க்குருவித் தட்டுடனே,
கொள்ளாமல் உடைத்தவெள்ளம் குமுறியெங்கும் பறந்தால் போல
வேட்டைக்காரர் கூட்டங்களும், மிகுந்ததொரு நாய்த் திரளும்
நாட்டமுடன் வேட்டையாட நாலுதிக்கும் பறந்திடவே
திருமாமருப்பதிலும் தென்சார்வுடன் வடசாரிவும்
பெருநாயும் சங்கிலியும் பின்தொடரும் சேவகரும்
கடமாவும் வளர்திரளும் கால்கிளர்ந்த காடதிலும்,
நிலம்பரவும் பன்றிகளும் கலைமானும், சிலைமானும்
கரடியொரு புலிகடுவாய், புல் வாயும், செந்நாயும்
விலங்கியோடும் சடமானும் வேழத்தின் குட்டிகளும்
தலங்கள்தோறும் வேட்டையாடித் தலைமலையை விட்டிறங்கி
பாரமிளமானும் பறந்தோடு அடவியாலே
படுக்கும்—வீழ்த்தும். கொள்ளாமல்—கரைக்கு அடங்காமல்
சேரவங்கே வேட்டையாடி தென்னருட வேட்டைக்காரர்
தேன்பரவு மருவிவிட்டு தெற்கும் வடக்குமாக
பாம்பணையில் பள்ளிகொள்ளும் மலைநமபி கோயில்விட்டு
எய்யும் பலவிருக்க இளமானும் பன்றிகளும்,
பாசம் பறையர்களும் பரவிவேட்டையாடிக் கொண்டு
உச்சில் பொத்தை முதலான உள்மலையில் வேட்டையாகி

நாயை முயல் எதிர்த்தது

வேறு

இச்சரிவிலேயிறங்கி எங்கும் பரந்தோட
கைநாயும் சங்கிலியும் கத்தியீட்டிக்காரர்களும்
மெய்யான சேவகரும் வேட்டைக்காரர் கூட்டங்களும்
எய்யாத நாய்த்திரளும் எய்த்துவரும் சேவகரும்
பொய்பாமல் பாளையத்தே போவமென்று வார நேரம்
நெற்குன்றுமலை தனக்கு நேரே தென்கிழக்காக
அய்யனுட கோவில்விட்டு அடகாந்த மலைச்சரிவில்
மெய்தளர்ந்து தான்குதித்து வெகுண்டதடா ஒருமுயல் தான்
பதுங்குமந்த முசல் தன்னையங்கே பலநாயும் வேடர்களும்

2029 துஷ்டன், புலியன், சோமன்—நாய்களின் பெயர்கள்
2034—35 வேட்டைக்குரிய விலங்குகள்.
2041 நம்பிகோயில்—மலைநம்பி கோயில். திருக்குறுங்குடி மலைமீதுள்ளது. ஆனால் இங்கு பள்ளிக்கொண்ட கோலத்தில் திருமால் உருவம் இல்லை
2048 எய்யாத-களைப்படையாத (எய்த்து களைத்து)

ஒதுங்குமுன்னே சுத்தியங்கே ஒக்கவளைந்திடுமாம்
கிளர்ந்த முசல் தன்னையங்கே கூர்மையுடன் தேடிடுவார்.
சிறுமுசலது தான் செல்லுதில்லை நாய்களெல்லாம்
ஏறுதில்லை நாய்களெல்லாம் எங்கும் பறந்தோடுதடா,
விட்டவிட்ட நாய்களெல்லாம் மீளவிழுத்தோடு தென்றூர்
தட்டழிந்தங்கோடுதடா, தப்பிமுசல் பதுங்குதடா.
மெத்தவந்த வேடர்களும் வீமனுடன் குமடுகளும்
அத்தனைபேர் தங்களுக்கும் அகப்படாமலந்த முசல்
பாய்ந்தோட அந்த முசல் வள்ளிநாடு தன்னைநோக்கி
ஊக்கமுள்ள நாய்களெல்லாம் நாடவிட்டார் முசலின், மேல்
வேடருட பெரும்படையும் மிகுந்தவொரு நாய்த்திரளும்,
காடு எங்கும் தான்பறந்த கால்கிளர்ந்து ஓடுதம்மா.
திருமாமருப்பு வெள்ளம் சிந்தி எங்கும் பறந்தாப்போல்
பெருநாயும் வேடர்களும் பின்தொடர்ந்தங்கோடுதடா
வள்ளிவாழும் நாடுவிட்டு வாய்த்த தந்தை வெளியுமிட்டு
கின்ளுதடா முசலதுதான் கீழ்க்கிடந்த பத்தையிலே
கசங்களது போலிகுண்டு காளியங்கே வீற்றிருக்கும்
இசல் கிடந்த பத்தையிலேயிருந்து முசல் பதுங்குதம்மா.
மாகாளிக் கடைக்கலமாய் வந்தொதுங்கும் முசலதுதான்
சாகாமல் நாயை வெல்லத் தக்கவரம் கொடுத்தாளே.
பற்றிவந்த நாய் பலதும் பரந்து வந்தவேடர்களும்
சுத்தி எங்கும் பரந்து கொண்டு துடர்ந்துகாண் முசல் மேலே
காணாமல் பத்தை எங்கும் கலந்ததுகாண் வேடர்படை.
வாணாதிராயன் வனம் வந்தடக்கம் பார்த்தபோது
துஷ்டனையும், புலியனையும், சோமனென்ற நாய்தனையும்
தூங்கிவந்து கடிக்குமந்த துஷ்டனையும் ஏவுவானும்
விட்டவிட்ட நாய்களெல்லாம் மீண்டு மீண்டு வருகுதையா.
அட்டதிக்குப்பாயுது காண் ஆள்மேலே சீறுது காண்
ஒடுதில்லை கடிக்கவது உறுமுதுகாண் முசலதுகாண்
அஞ்சுதுகாண் நாய்களெல்லாம் அடர்ந்தேறிச் செல்லுதில்லை
மிஞ்சுதுதான் முயலதுகாண் முடுகியானையைத் துரத்து காண்
பத்தையிலே கிட்டச்சென்றால் பதுங்கி மெத்தச் சீறுதுதான்
சுத்தி வந்து குதித்திட்டால், துடர்ந்து பத்திக்கடிக்குதுதான்

2073 முயல் ஓடிக்களைத்தபின் நாயை எதிர்த்தகதை, விஜய நகரக் கோட்டை கட்டவும், பாஞ்சாலங் குறிச்சி கோட்டை கட்டவும் இடம் கண்டுபிடித்த வரலாறுகளில் காணப் படுகிறது. அதுபோன்றதே இச் செய்தியும். இதுவோர் நாட்டுக்கதை மரபு.

2086 பத்தி - விரட்டி (நெல்லை பா. வி)

பாயும் புலிபோல் பறந்தும் பாம்புபோல சீறுதுதான்
நாயும் முசலுமாகவுந்தான் நாலாறு நாழிகையாய்
மீட்டநல்ல திரிகைபோலே வளையவளைய வருகுதுகாண்
கொண்டோடி ஏய்க்குதுகாண் கொல்ல மதியில்லையென
வேடர்களும் நாய்த்திரளும் மிகுத்ததொரு சேவகரும்
கூடியங்கே நின்றுகொண்டு கூறுவார் ஓர் வார்த்தையதை
முன்னறிந்த பழக்கத்திலும், மூப்பர் சொல்லக் கேட்டதிலும்
பன்னுதமிழ்ப் புலவோர்கள் பண்டு முன்னாள் சொன்னதிலும்
மெய்ப்புடனே வேட்டையாடி விருதுமெத்தக் கொண்டதிலும்
இப்புதுமை கண்டதில்லை இந்நாட்டில் நாமறிய
நாயை முசல்கடிக்க நாட்டிலேயும் கண்டதுண்டோ?
போயறியச் சொல்லவேண்டும் பொன்னும் முடிப்பாண்டியர்க்கு

### நாலு சீர் தொக்கல்
### குலசேகரனிடம் செய்தி கூறல்

அப்போது வேட்டைக்காரர் வாணாதிராயர் வர
அங்குநின்ற தொங்கலிலே அதிசீக்கிரம் ஓடுவானும்
செப்பமுள்ள வள்ளிநாடுஞ் சிறந்த இடைக்காடும் விட்டு
ஒப்பமுள்ள மன்னர் குலசேகரரும் தம்பிமாரும்
ஒருமிக்க வன்னியரும் சேரும் அகளரியிலே
தீரன்கடிதாக ஓடிச் செல்லுகின்ற நேரத்திலே
வீரந்தவறாத மன்னவரும் தம்பிமாரும்
நாடகக்கீதம் பாடுவாரும் நட்டுமுட்டுக்காரர்களும்
நவுரிகுழல் கருணை, நல்ல வீரானமுடன்
டேடைமயில் போலே பெண்கொடியாள் பாடல் பாட
பிரியத்துடன் கேட்டு மன்னன் விருப்பத்துடனிருக்கும் நேரம்
அந்தநேரத்திலே தானந்த வாணாதிராயன்

2089 — திரிகை—மாவரைக்கும் கல் இயந்திரம்

2094 மூப்பர்—மூதியவர் சுற்றிவரும் முயலைநாய் விரட்டும் கதைகள் நாட்டுக்கதைப் பாடல்களில் அடிக்கடி கேட்கப் படுவதே - அவ்விடத்தில்தான் கோட்டைகள் கட்டுவார்கள். கட்டப்பொம்மு கதையில், பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை கட்டிய வரலாறு இவ்வாறே கூறப்படும்.

2098 எய்யாத — களைப்படையாத. எய்த்து — களைத்துப்போய் போவமென்று—போவோமென்று.

நிலைகுலைய தலைகுலைய அங்கேயோடிச் சென்று
முந்தி குலசேகரர் திருமுன்பு சென்றான்
முந்தியொதுக்கித் தொழுது வாய்புதைத்து நின்றான்
அன்னநடைப் பெண்கொடியாள் ஆடல்பாடல் தன்னை
அமைத்துக் களரியையும் அங்கையினால் மாற்றி
மன்னவர்க்கு மன்னவன் தான் குலசேகரப் பெருமாள்
வாணாதிராயனோடே வார்த்தை யேது சொல்வார்

### மூன்று சீர் சிந்து

"ஏனடா வாணாதிராயனே நீயும்
இந்த நேரத்தில் வந்தாய் நீ என்ன?"
"மன்னர் மன்னவனே யார்க்குமோது காவலனே
மாரியை விலங்கிலிட்டு வைத்திடவல்லோனே
சொல்லுவென்ற குடைகார்த்தோனே தென்னவனே மன்னவனே!
செண்டும் கயலும் தரித்த மதுரை நாடி
மட்டிலா வந்த திண்புயனே குலசேகர மன்னா
வார்த்தை கேளாய் விண்ணப்பந்தானொரு கீர்த்தியுண்டு
"செல்லுமினி நீங்கள் வேட்டையாடுமினி" எனவே
"தேவரீர் திருவுளமாய்ச் செப்பிவிட்டபோது
கல்லும் மலையும் திரிந்து நாயும் வேடர் தாமும்,
கால்கிளர்ந்த மந்திரியும் காடதிலே சென்று
சேரமிருகங்கொன்று வேட்டையாடி மீண்டு
சீக்கிரத்தில் பாபாளையத்தில் அவர்கள் லாரநேரம்
வாரமுள்ள வள்ளியூர்க்கு வடகிழக்கதாக
வண்மையுள்ள பத்தைக்குள்ளே தான் பதுங்கிக் கொண்டு
சென்ற நாய்களையும் தான் துரத்திக் கடித்து
சீறும்பாம்பும் போலே வந்திங் காணாமேலே தாவி
நன்றியுள்ள மன்னர் குலசேகரரே கேளீர்,
நாலாறு நாழிகையாய் நாய்களுங் கொண்டாடி
பன்றி கடிக்க விருது பென்னப்பட்ட நாய்கள்
பத்தெட்டு நாய் குமுறியுமங் சதுக்கு எட்டுதில்லை
இன்றுகண்ட கீர்த்தி இந்த வையத்திலே தான்
எங்குமிது கண்டதில்லை என்று தொழுதானே.

2121 மாரி—மழை மேகம். மேகத்தைச் சிறை செய்தகதை.
2136—நன்றியுள்ள—(பொருளற்ற சொல்)
2138—விருது—வெற்றியற்ற
2138—பின்னப்பட்ட—என்று பெயர் பெற்ற

### பாண்டியன் முயல்காணப் புறப்படல்
நாலு சீர் சிந்து

அந்த நேரத்திலே குலசேகரப் பெருமாள்
அதிரத்நம் பட்டம் போட்டுக் குதிரைப் படை சூழ
பஞ்ச கலியாணியையும் பறக்கும் சிறு குருவியையும்
அஞ்சு வர்ணப் போனையும் அலங்கரிக்கச் சொல்லு வாராம்
அலங்கரித்துப் பரிமேலே அழகன் பொன்னும் பாண்டியனும்
தலங்கள் தோறும் இருந்தபடை தித்தகு பறந்தோட
கூட்டக் குதிரைக்காரர்களும், கொத்தளக்காரர்களும்
மந்திரிமார், பிரபுக்களும் மற்றுமுள்ள வன்னியரும்
இந்திர நீலக் குடைபிடித்து எத்திசையும் படைசேரும்.
பொன்னி வாய்க்கால் தனைக் கடந்து புகழ்மாலை பாண்டியரும்
சன்னாசிக் குளமும் விட்டுத் தாண்டு பரிதனைக் கடந்து
இடம் பெரிய குளம் கடந்து ஈத்தங்கரை வெளியும் விட்டு
திடம் பெரிய மாலை மார்பன் திட்டுமுட்டய்யன் கோவில்
அடர்ந்த மலைச்சோலையிலே ஆனைவள்ளியூர் தனிலே
தொடர்ந்த படைசெருமிடவே சோலைதோறும் குயில்பாட
வானரங்கள் விளையாட வானிலுறவே நிமிர்ந்து
பொன்தெங்குக் கனியுதிர்ந்துப் பூங்கமுகுக் நிலை சிதற
மாங்கனியும் தேங்கனியும் வாழைக்கனியும் உதிர,
தேங்கரும்புச் சோலையிலே———— சொரிய
சங்கினங்கள் சூலடைந்து தடத்துவாளை சிதைத்துப் பாய்ந்து
மங்கையர் சேர் வாவிகளும் புவனமெங்கும் முத்தாக
மங்கை நல்லார் கச்சியர்கள் வாரி முத்தைக் கொண்டு வந்து
தங்கள் உடையிருத்தே தைத்து மேல் அணியும் நாடு.
மந்தி குதிபாயும் நாடு மயிலினங்கள் ஆடும் நாடு.
கொண்டல் மாரி பொழியும் நாடு குயிலினங்கள் கூவும் நாடு
சுற்றவரைக் காக்கும் நாடு, கருணையுள்ள வள்ளிநாடு
அருமையது அறியும் நாடு, ஆரவாரமுள்ள நாடு
பண்புடனே வாழும் நாடு, பாண்டியர்களாளும் நாடு

2154 திட்டுமுட்டய்யன் கோவில்—வள்ளியூர் ஐயன் கோவில்
2152 சன்னாசி ஒரு குளத்தின் பெயர்
2160 முதல் 2272-வள்ளியூர் நாட்டு வருணனை. இக்கண்ணிகள் குறவஞ்சி நூல்களில் வரும் மலைநாட்டு வருணனையை ஒத்திருக்கின்றன இலக்கிய மரபு நாட்டுப் பாடல் மரபாகிறது.
2163 கச்சியர்கள்—கச்சணிந்தவர்கள்

புன்னை மகிழம் பூக்கும் நாடு, பூங்கமுகு காய்க்கும் நாடு
சென்னெல் கன்னல் விளையும் நாடு, செந்தமிழ் நூல் பன்னும் நாடு
வண்மையிலேறு வீரன் வள்ளியுடன் வாழு நாடு
தள்ளியங்கே நெருங்கிடவே தந்தியரி முத்திடவே
காட்டந்த மந்தையிலே காவலருஞ் செல்லு முன்னே
வேடர்களும் நாய்த்திரளும் மிகுந்ததொரு சேவகரும்
வலையெடுப்பார் சிலையெடுப்பார் வளைதடிகௌருப்பாரும்
சிலையெடுப்பார், நாய்பிடிப்பார் செருமி இடம் காணாமல்,
ஓடிவந்த நாய்களையும், ஓண்டிப் போன நாய்களையும்
கொண்டு சென்ற நாய்களையும் குலசேகரர் பார்த்து
பண்பு போலக் கடிக்குதுகாண் பாளையத்தில் நாய் தன்னை

மன்னவன் வியப்படைதல்

கண்டு நின்று மன்னவனும் கலிபுகுந்தானிதுவெனவே
புவிதனிலே-கண்டதுண்டோ, பூதலத்தில் கேட்டதுண்டோ?
செவிகளெல்லாம், நாய்களுக்கு சில்லிரத்தம் பாயுது காண்
அப்பொழுது அங்கிருந்த குலசேகரப் பெருமாளும்
அங்கிருந்த மந்திரிமார் தங்களுடன் சொல்லுவாராம்.
இப்போது தானிதற்கு ஏதுபுத்தி செய்வோம் என்று
ஏற்ற மந்திரிகள் தலைவன் வார்த்தை ஏது வார்த்தை சொல்வான்.

சோதிடனை அழைத்து வரல்

நாலு சீர் சிந்து

"வீரமுள்ள மன்னன் குலசேகரப் பெருமாளே
வையகத்திலிந்த கீர்த்தி கண்டதுமில்லை" என்றான்
"வீரமுள்ள தலமிவ்விடம் சோதிரியை அழைத்து
விசாரித்துக் கொண்டே இவ்விடம் விட்டுப்போகவேணும்"
அந்த வார்த்தை கேட்டபோது அழகன் குலசேகரனும்
ஓட்டமான ஒற்றன் திருநீலகண்டனோடே
"இப்பொழுது கூட்டி வா அவனை" என்ன
ஏற்ற திருநீலகண்டனை கூட்டிவந்து விட்டார்.
கோர்த்த முத்தமாலை மார்பன் வார்த்தையேது சொல்வான்
காட்டிலுள்ள உண்மைதானோ வேறேது மாயமுண்டோ?
கடல்சூழ்ந்த வையகத்தில் கண்டிருப்பதில்லையென்று
வாட்டமில்லாச் சோதிரியே வயனவனே கேளாய்

2023 மூஞ்சுர்—மூஞ்ஞுறு. (பெரிய எலிபோலிருக்கும்) அடுத்து வலைகளின் வகைகளைப் பற்றிக்கூறுகிறார்
2183 சில்லிரத்தம் - பச்சை ரத்தத்துளிகள்.
2286—புத்தி செய்வோம்—யோசனை செய்வோம்
2296—முத்துமாலை மார்பன்—குலசேகரனைக் குறிக்கும்

வன்மையுடனே புரச்சம் உண்மை சொல்லவேணும்
என்றபோது வயனவனும் சடுதியாயப் பொழுதே
எட்டுத்திக்குமே புரச்சம் தட்டுயூகங் கீறி
சென்றிந்த புரச்சம் வைத்துக் கண்ட பொழுது
செப்புவானும் நிச்சயமாய் வைத்த புரசத்தை
என்றுமுன்னே நவக்கிரகம் இருபத்தேழதிலும்
பன்னிரெண்டு ராசியிலும் பறல் நீக்கிப் பார்த்தாராம்

சோதிடம்

"நிச்சயமாய் சொல்லுகிறேன் நீங்கள் வந்த காரணத்தை
வைத்த புரசத்திலே மாகாளி காணுதுகாண்
ஒவ்வாது வேட்டையது உங்களுக்கும் பணியாது
தென்மண்டலந் தன்னிலும் தெட்சண பூமியிலும்
இந்த ஸ்தலந்தன்னில் இருக்க நல்ல கோட்டையிடில்
வித்தை செறி திண்புயனே வினையுனக்கில்லை மன்ன

வேறு

அம்பத்தெட்டு வருஷமட்டும் அழியாது இக்கோட்டை
பின்னின்ற கீர்த்தியிலே ஒரு பெண்ணாலே அழியவேணும்
அந்தமொழி கேட்டபோது அழகன் குலசேகரனும்,
"வந்த முசல் போகாமல் வளைய வலைகட்டும்" என்றார்
வளைய வலையுங்கட்ட வாணுதிராயனவன்
நுழையவெண்ணக் காடுதன்னை நூல்வெட்டாய் வெட்டு வாரும்
காடு வெட்டி புல்லறுத்து கானகத்தை வெளியாக்கி
பாடுபட்ட முசல் கிடக்கும் பத்தைதனை வெட்டுவாராம்
பத்தைதனை வெட்டிடவே பத்திரமா காளியம்மை
சுத்த விழியானபோது துர்க்கை வந்து தோன்றிடுவாள்.

வேறு

பச்சைப் பிடாரி திருமேனி பற்றுடையாள்
பற்பல கோவை முத்தெனவெ நகைத்த திருவாயினாள்
கச்சையிடாத மெய்வாலினகத் திருசூலியாள்
அற்புதமான முத்தணி ஆடகத்வணி காளியாள்
பத்திரமோடெழ ஏழு வாள் துர்க்கைகள் ஆனவும்

2201—வயனவன்—சோதிரியின் பெயர்
புரச்சம்— ஆருடம் — சடுதி — விரைவு — (நெல்லைப் பேச்சு வழக்கு)
'பறல்' பார்த்தல்...குறிபார்ப் பதில் ஒரு வகை

சுற்றிடவோடு சக்கரமான கம்போடு கேடயம்
எத்தனை ஆயுதத்தோடும் தானும் மெய்யுடன் ஏவலர்கள்
எட்டள வானதிக்கு உலாவவே வெட்டிப்பாய்வாள்
பத்திரகாளி சித்திர ரூபியாய் பேய் படையோடு
பக்கமெலாம் இரைத்துத் திராளான பத்தையில் வாழும் காளி

## நாலு சீர் சிந்து

எட்டு திசையில் உதித்த வல்லாயுதமாம்
வட்டதிரு முகமும் மாணிக்கச் செவ்வாயும்
கொடியிடையாள் வாழும் நாளில் குமரி பத்திரகாளி
அடிக்குள் பதுங்கிடுமாம் அனர்த்தமெலாம் செய்து மூசல்
அங்கிருந்து மன்னவரும் அதிசயித்து எழுந்திருந்து
சங்கரனார் திருமகனை தரணியளந்தோர் மருமகனை
கோபத்தால் வீற்றிருக்கும் குமரிப் பத்திரக்காளியவள்
பூத்தாளை ம்மையுடைய பொன்னடியை போற்றுவானும்
விழுவார் எழுந்திருப்பார் வீரபத்திரகாளி யென்பார்
தொழுவார் துதித்தெழுவார் சூழ்ந்து நின்று கும்பீடுவார்
அந்தப்பொழுதிலே அடர்ந்தபெரும் சேனையோடே
பத்தை சுற்றும் காடதிலே பாளையம் செய்தினிதிருந்தார்
பொழுது விடிந்தற்பின் புகழ்பெரிய பாண்டியனும்
பழுதுரைப்பார் தம்பியரும் பக்கத்து பண்டாரிகளும்
காரியம் பலவார்த்தை காவலருக்கு சொல்லுவாராம்.

## கோட்டை கட்டத்திட்டம்

வேட்டைத்தலம் இவ்விடம் வீரமுள்ள தரைதனிலே
கோட்டையிடவேணுமினி கொற்றவரே பாண்டியரே
சேட்டமுடன் ஓடுவானும் திருநீலகண்டனெற்றன்
வாட்டமில்லா சோதிரியை வயவனைதானழைத்து
கூட்டிவந்து விட்டபோது கொற்றவரும் ஏது சொல்வார்
''வந்து நின்ற சோதிரியே வயனவனே சொல்லக்கேளா
இந்த ஸ்தலந்தனிலே இருக்கநல்ல கோட்டையிட
பூமி ஸ்தலங் குறித்து பொருத்தமுள்ள நாளுமிட்டு
தாமதியாவண்ணம் ஸ்தலங் குறித்து முளையறைய''
போகவே விடை கொடுக்க புகழ் பெரிய மந்திரிமார்
ஆமெனவே சம்மதித்து அனைவோரும் சொல்லுவாராம்
முகவாயில் நாஞ்சிகளும் முக்கோண மூலைகளும்

2248—2250—கோட்டைகட்ட, கோட்டைப் பகுதிகளை வரைந்து முளையறைந்தார்கள்.

அகவாரம் புறவாரம் அகத்தையும் தான்னீக்கி
நாள் பொறுத்த நேரத்தில் நாலு திக்கு முளையரைந்து
வாள் பொருந்து மதிலுக்குத்தான் மகாளியம்மை தனக்கு
பத்தையிலே வீற்றிருக்கும் பச்சைநிற பொன் கொடியாள்
சற்றும் வெயில் தாவாமல் தனிக்கோவில் கட்டுவாராம்
திக்கெங்கும் புகழ் பெற்ற திருநீலகண்டனுமாய்
ஒக்கவெங்கே சொல்லுவானும் உன்னு முன்னே ஓடுவானும்

கோட்டை கட்ட மக்கள் திரளுதல்

போன போன திசைகளெங்கும் புதுமையுள்ள வளநாடு
வயல் நாடு முறப்ப நாடு வானவரின் சோழநாடு
செல்லநாடு பிறந்த நாடு திருவழுதி வளநாடு
நல்ல கீழ்வேப்ப நாடு நளின மலர் பூக்கும்
கல்படந்த கழர்க் கொடியும் கருங்குளமும் வளநாடு
வாரண வளநாடு வைகுந்த வளநாடு
வாரணஞ்சேர் குடகுநாடு அமிர்ந்த குணம் வாகை நாடு
முள்ளி நாடு மானோடு முகிர்ந்த பதினோழ் நாடு
வள்ளி நாடு தனைநோக்கி வருகிறார்கள் கோட்டையிட
கட்டிச் சோறும் அரிசியும் நிறைந்த நல்ல அமுதுகளும்
கூடையுடன் மண் வெட்டியுல் கோடர்ரி குந்தாலியுடன்

கோட்டை கட்டுதல்

மன்னவர்கள் வீற்றிருக்கும் வள்ளியூர் தனிலேதான்
பத்தையெல்லாம் வெட்டுவாராம் பதந்த மரம் தறிப்பாராம்
அகலப் பறித்துச் சுமப்போரும் அடிவானம் தோண்டுவோரும்
மண்பத்தைக் கொடுப்போரும் மதிலிடத்தே போடுவாராம்
மண்ணெடுத்துக் கோட்டைதனை விசும்பு முட்ட கட்டுவாராம்
அழியாத கோட்டையது அவசியத்தில் கட்டுதற்கு
ஏணி வைத்து மண்ணுருட்டி எட்டி எட்டிக் கொடுப்பாராம்
மண்ணெடுத்துக் கொடுத்து மதிலிடத்தே வைப்பாராம்
பொங்கி விண்ணைப் போவாறும் தண்ணீயுண்டன் இருப்பாராம்
அங்கிருந்து பொறி விளங்காய் யவலெடுத்துத் தின்பாரும்
காட்டகத்தே சிலபேரும் களவெடுத்துத் திரிவாராம்
கூட்டி வந்து நடையடியாய் கொண்டு வந்துவிடுவாரும்
கொற்றவனார் பெரும்படையும் கோட்டையிட வந்தபேரும்

**2268 முதல்—2275 பல நாடுகளிலிருந்தும், வள்ளிநாடு நோக்கிக் கோட்டை கட்ட பணியாட்கள் வந்தனர். பல நாடுகளின் பெயர்கள். கல்வெட்டுகளோடு ஒப்புநோக்கிக் காலம் அறியலாம்.**

வள்ளியூருக் கோட்டையிலும் மற்றுமுள்ள சிற்றூரிலும்
எள்ளும் சிறு கல்லும் போலே யெங்கெங்கோ பறந்தனர்.
காண்
வடக்கு வாசல் தெற்கு வாசல் வன்மையுள்ள மேல் வாசல்
கடக்க வல்ல கீழவாசல் கள்ள வாசல் சூழ்ச்சம் வைத்து
பாரு நல்லத் தேக்குகளை பதிதோறும் பதிப்பாராம்
தூரத்தில் ஆழப்படை—சூத்திரங்கள் பலதும் வைத்து
எண்ணியெட்டு நாளினிலே விரயப் பாண்டியரும்
கோட்டை வைத்து நாஞ்சில் வைத்து குருவித்தலைகள்
வைத்து
வாட்டமற்ற மந்திரிமாரும் மன்னர்திருத் தம்பிமாரும்
கோட்டைதனைச் சுற்றிப் பார்த்து மனமகிழ்ந்து
மன்னவர்கள்
கோட்டையிடக் கூடியதில் கோவில்கள் கட்டுவாராம்.
தம்பியுடன் சீராமர் தாக்குடைய யரக்கர்களை
தாண்டு மரக்கர் குலத்தை தானறுக்க வல்லோனே.
கெம்பியணைக் குங்கடலை யணையாகவே தான்
கெட்டியலை யெங்குமாக வைத்திட வல்லோனே
அந்தமரபிலு தித்த மாந்தை வேந்தனே…டே
ஐவரில். குலசேகரர் ஆண்டபதி வீரனே
இந்த நேரத்தில் கோவில்காலுங் கட்டி
இன்று நிறை வேற்ற வேணுமென்று சொன்ன போதே

வேறு

கோவில் கால் தலங்குறிக்கக் குழிக்கால் வெட்டி கால் நாட்டி
சீவிக் காலில் தூண் நிறுத்திச் சிறந்த உத்திரம் பதிப்பாரும்
மண்டியங்கே புறத்து நின்ற மதயானைக் கால் நிறுத்தி
தண்டியலுத்திரம் வைத்திடுவார் தான் அவர்கள்
கணங் கறுத்து
சந்திரக் கருமுட்பலகை தன்னையங்கே நிரைத்திடுவார்
பாங்குடனே பணி முடித்து படியலுஞ் சேர்த்திடுவார்
முந்த முந்த தாயம் மோட்டு வளை நிறைத்திடுவார்
வர்ண வர்ணப் பட்டியலும் வர்ண நடைப் பூட்டுகளும்
எண்ண வெண்ணத் துலையாத இரும்பாணி நிறைப்பாரும்
அருப்ப மரந்தனிலே யாளி சிங்கம் சமைப்பாரும்
நறுங் குஞ்சித்திரப் பணியும் நரகவேத வளையும் வைத்து
குருக்குஞ் சித்திரப் பணி முகித்த பலபணியும் போடுவாரும்

2395 சூழ்ச்சம்—கதவு திறக்கப் பொறி
2308 குலசேகரன் இராமர் மரபென்று கூறப்பட்டுள்ளது.
2312 பழைய கோயில்களில் இத்தகைய கதவுண்டு.
2320 மரச்சிற்பங்கள்.

சிருகருக்கல் பருங்கருக்கல் சீரறிந்து போடுவாரும்
உத்திரங்கள் போடுவாரும் உகமையுடன் பேரிகையும்
சித்திரத்தால் தூண் நிறுத்தி திண்ணையடி சேர்ப்பாரும்
தட்டொடு முத்த வெளியாம் தாக்குடைய வாசல்களும்
எட்டு திக்கும் கதவும்யிடைத் கட்டரை தொட்டி கட்டும்
ஏழரங்கு மாளிகையாம் எல்லையில்லாச் சன்னல்களாம்
சித்தமுடன் பள்ளி யறையும் தேவாரப் புரையுங்கட்டி
ஓலைக்கால் மண்டபமும் ஒழுகாத பந்தல்களும்
ஏலங் குழலார் சேவிக்கவே ஏகாந்த மண்டபமும்
சீராக மரங்களெல்லாஞ் சித்திரங்கள் பல குறிப்பார்
நீராவி வெட்டுவாரும் நிரைகல்லுக் கட்டுவாரும்
கோடாத மன்னவர்க்குக் குளிக்கப் புரை கட்டுவாரும்
தாடாளன் தம்பிமார்க்குத் தனித்தனியே கோவில்க் காலும்
சற்றுமொரு குற்றம் வைத்து விட்டுப் போனபோதே
குற்ற மற்ற பாண்டியர்கள் கூடியே வீற்றிருந்து
பாவிக்குந் தம்பிமாரும் பதினெட்டு மந்திரிமாரும்

### நகரம் அமைத்தல்

கோவில்க்கால் தனை வளையக் கோட்புடனே வீடுகட்டி
ஆனைப்பந்தி குதிரைப்பந்தி அழகாகக் கட்டுவாராம்.
சேனை தலைவர் களெல்லாம் தெருத் தெருவாய் வீடுகட்டி
பார்ப்பார் துலுக்கர்களும் பரதேசி ராகுத்தன்மார்
மெய்ப்புடைய தங்களுக்கு வெவ்வேறே வீடுகட்டி
இரண்டருகுங் கடைத் தெருவும் மிக்க கூளைப்பாளை
அட்ட திக்குங் கடைத் தெருவும் ஆனதொரு வீதிகளும்
பட்டணமா ஊரது தான் பதினெட்டுச் சாதிகளும்
கோட்டை தனக் கொரு புறமாய் குடைதிசை மூலையிலேயே
திட்டி விடும் வேல் விழியாள் செம்படர்ந்த முலைமடவாள்

2329 தேவாரப் புரை—பூசை அறை புரை—அறை (குமரி மாவட்ட வழக்கு)
2333—நீராவி—ஊருணி
2335—தாடாளன்—வீரன்

2311—2336 கோவில் கட்டிய பகுதிகள் முறை.

2336 சற்றுமொரு குற்றம் வைத்து—பூரணமாக இல்லாமல் ஒரு குறை வேண்டுமென்று விட்டு (திருஷ்டிபரிகாரம்) நம்பிக்கை.

2338—2348 நகர அமைப்பு முறை விளங்கும். (Town planning)

### பாடும் பரசிக்கு அரண்மனைக் கட்டுதல்

பாடியிடும் பரசியவள் பங்கயஞ்சேர் பெண்கொடிக்கு
ஆடரங்கு மாளிகையாம் அரைப்புறையாம் கிடைப்புரையாம்
தலைக் குடையும் புழக்கிடையாஞ் சாய்ந்திருக்கத் திண்ணைகளாம்
இலக்கமாய் வீடுகட்டி இருத்திவைத்தா ரவள் தனைத்தான்.
குலக் கொடியாள் தன்னோடே கூட பெருஞ் சேனையுமாய்
மயக்கமின்றி யன்னேரம் வாழ்ந்திருக்கும் நாளையிலே

### மழை பெய்தல்

வாட்டமற்ற பாண்டியர்கள் வள்ளியூரு தன்னிலிட்ட
கோட்டை தன்னையழிக்க மழை கொற்கை தன்னில் பெய்திடுமாம்
கொற்கையிலே பெய்த மழை கொண்டல் மாரியாய்ப் பொழிந்து
தெற்கு நோக்கி வருகுதடா தென் பொதிகை மலையை நோக்கி
மந்தி தந்தி யுள்ளமலை மாரி நித்தம் பெய்யும் மலை
சந்தனங்களர்ந்த மலை தவசியர்களுறையும் மலை
எந்தக் காலத்திலும் அந்தக்கால மழை போலே
கல்லு மலையுங் கரைந்து காடுகளும் மேடுகளும்
கனத்து முகிலிருண்டு சினத்து மழை பொழிய
அல்லும் பகலும் விடாமல் அஞ்சு ரெண்டு நாழிகையாய்
அடைத்த கதவு தன்னை திறக்கவே வொட்டாமல்

### ஈரடி சிந்து

மழையில் முடுவலைகள் நெரு நெரு நெரென்...ன.
மழையது சொரியக் குமு குமு வென்...ன
தட தட தடென தடவரை நக...ள
தரணிமால் விழுமழை சலசல சலெ...ன
குளமுடன் நதியில் ஆறுகள் பெருக
குமடுகள் தடவரை பொடிபட இடிவி...ழ

**2349** பாடும் பரசிக்கு அரண்மனை கட்டுதல்.
**2366** முதல் 2476 வரை மழை வருணனை.
இது நாட்டுப்பாடல் மரபைத் தழுவியுள்ளது. கொற்கையில் பெய்த மழை, மேடான மலைக்குச் சென்று பின் வள்ளியூருக்கு வந்ததாம். இதுபோலவே ஒவ்வொரு கதையிலும் மழை வருணனை வருதல் மரபு.

திடமுடன் முகிலினஞ் சிதறி விழ விழ
தெருவினில் வரும் புனல் திடு திடென
மனமது வெருவுற மண்ணடி சே...ர
மதில் பல திடிந்து மண்ணடிக்...க

அடி வேறு

காஞ்சியிலிருந்து செங்கல் கொண்டு வருதல்

மாற்றவர்கள் மணவாளன் மன்னவருந் தம்பிமாரும்
தூத்தலன்றி விட்டபோது சுத்தியெங்கும் பறந்தனராம்
கோட்டை யெல்லாமிடிந்ததுடா குருவித்தலை நகண்டுதடா
செஞ்சையனும் தொண்டமானும் திருநீலகண்டனுமாய்
காரியம் பரையுமூத்த காலிங்க வில்லவனும்
பாண்டியனைத் தொழுது நின்று பலவார்த்தை சொல்லுவானும்
காரணமாய் மூதாக்கள் பண்டு காஞ்சி புரந்தனிலே
ஆர்க்கு மெண்ணத் துலையாத செங்கலுண்டு என்றார்
அந்தச் செங்கலெடுத்து வந்து அடவுடனே கோட்டை தன்னை
என்னிலமுங் கொண்டாட யிடவேணும் கோட்டை யென்றார்
எட்டு நாளொரு கிழமை கட்குமடங்கச் சடுதியிலே
உன்னுடைய பெருமைகளும் மூர்க்கங்களும் தானறிய
உற்ற தம்பிமார்களுக்கு ஓலையுமாளும் விட்டு
காஞ்சிபுரந்தனிலும் கடுக வள்ளி நாடதிலும்
கைவளச் செங்கல் வரவும் காவலர்கள் விதித்திடுகில்
நாஞ்சி புகழ் தென்னர் மன்னு நல்லபுகழ் குன்றாமல்
நாளுமுந்தன் கீர்த்தியெல்லாம் நன்றாடு கொண்டாட
என் தோழர் மந்திரிமார் யேற்ற தோழன்மார்களுடன்
எப்படியுங்கள் புத்தி ஏற்ற புத்தி யென்றுரைத்தார்
நின்றநிலை தன்னோடே நீதியுள்ள குலசேகரர்

2364 முதல் 2374 வரை மழை பெய்வதை பாடல் வருணிக்கிறது. இது கருத்தும் ஒலியும் ஒன்றுபடப் பாடப்படும். இது போன்ற பாடல்களை இலக்கியத்தில் பள்ளுப் பாடல்களில் காணலாம்.

2375 தூத்தல் — தூறல்.

2380 சுந்தரபாண்டியன் காலத்தில் காஞ்சிபுரத்தைப் பற்றினான். அதற்குச் சில நூற்றாண்டுகளுக்குப்பின், தமிழகத்தின் தென்பகுதியை ஆண்ட பாண்டியர்களுக்கு பழம்பெருமை நினைவூட்டப்படுகிறது.

நீட்டு — அரசருடைய கடிதம் (மலையாளம்)

நீதியுள்ள மந்திமார் அனைவோருந்தான் கூட்டி
திருமுகத்து கணக்கர்களும் பிரியாதிப் பிள்ளை தன்னை
திட்டெனவே வரவழைத்துக் கிட்டயங்கேதா நிறுத்தி
பெரு முகத்திலே யிருக்கும் பிள்ளைமார்க்கு ஓலைவிட்டு
சென்ற திசை வென்ற பெருமாள் திசை தோறும் ஓலைபோக
இன்று செய்ய வேணுமென்று ஏற்ற திருநீலகண்டர்
என்று சொல்லிக் கோல்க்காலில் எங்களை மன்னர் எழுதச் சொனனார்
பிரியாதித் திருமுகத்துத் பிள்ளை கையில் நீட்டு வாங்கி
தரியாமலோடு வானும் தக்க திருநீலகண்டன்
கடிந்தோடிக் கயத்தாறுங் கடம்பூர் வழிகடந்து
குற்ற மற்ற கழுகுமலை குருவி குளமுங் கடந்து
தேடிய ஸ்ரீவல்லிப் புத்தூருந் தென் மதுரையுங் கடந்து
செட்டி குளத்தூரும் திருச்சினாப்பள்ளி விட்டு
ஆவலுடன் மாமுண்டியும் அல்லி துறையுங்கடந்து
உன்னு முன்னே தானோடித் திருநீலகண்டனவன்
காற்றிலும் கடிதாயோடிக் காஞ்சிபுரந்தனிலே
கடிந்தோடி திருநீலகண்டனவன் சென்ற போது
சென்றரைக்குள் நீர் பரந்து திருநீல கண்டனோட்டன்
உந்துமுன்னே சொல்லுவானும் மடக்குவானும் கோட்டை தன்னை

## 4. சிர் சிந்து

வந்து நின்ற ஒட்டன் திருநீல கண்டன் தன்னை
வாசல் காவலவன் வினவி மனம் திறந்து நன்றாய்
சென்று நின்ற ஒட்டனைத்தான் தென்னர் விட்ட யாளெனவே
மன்னுமல் கதவு தன்னை வாசலாளர் திறந்து விட்டார்
அரைத் தொட்டில் வாசல் விட்டுமாடைக் கட்டுமட்டும்
மன்னவர்கள் வீற்றிருக்கும் மண்டபத்தே செல்லுவானும்
சென்னியுறத் தொழுது கொண்டு திருமுகத்தை நீட்டு வானும்
அண்ணாவி திருநீட்டை யின்புடனே கையில் வாங்கி
கண்ணிலொத்திக் கொண்டவர்கள் ஒரு கணக்கன் வாசிப்பானும்

## கடிதம்

சென்ற திசை வென்ற பெருமாளுக்கும் திக்கெல்லாம் புகழும் பெருமாளுக்கும்
மன்னவர்கள் தமக்குரிய வரக்காட்டுங் காரியங்கள்

கன்னியாகுமரி தீர்த்தங் கடுகவே யாடிமீண்டோம்
பொன்னியாத் தங்கரைதனிலே போயிருந்தோம்
பாளையமாய்
பாளையஞ் செய்தங்கிருந்து பரவி வேட்டையாடும் நேரம்
கோழையுற முசலெழும்பிக் குதித்து விழுந்தோடிடவே
ஓடி முசல் வள்ளியூரில் யொதுங்குவது தன்னைக் கண்டு
பத்தியங்கே சென்ற நாயும் பலபேரும் சேவகரும்
ஒக்கவே முசல் வெருட்டி யுண்மைதனைக் கண்ட நாங்கள்
வீரதலமென்று சொல்லி விரைந்து நாங்கள் கோட்டை
கட்டி
கோட்டை யிட்டங் கிருந்தபோது கொண்டல் மாரிதான்
பொழிந்து
கொண்டல் மாரிதான் பொழிந்து கோட்டையெல்லா
மிடிந்தபோது
வரிசையுடன் செங்கல் கோட்டை வைக்கவென்று திருநீட்டு
இப்படி யேகுல சேகரர் யெழுதியதை வாசிப்பாராம்
வாசகங்கள் கண்டபோது மன்னவரும் மனமகிழ்ந்து
துரை துரை யானைகளும் துடந்தோடி முட்டாக்கள்
முட்டாக்கள் தேவமார்க்கு முறை முறையே நீட்டெழுதி
அலைந்தோடி நாலுதிக்கு மானபின்பு விட்டணைத்து
ஊரொக்கச் சென்றழைத்து வொரு கொடியிலே கூட்டி
வந்தால்
அண்ணல் திருமனது மெய்ப்பான் செங்கல் வேறு என்றூர்
செங்கல் செய்து அனுப்புதல்
ஒரு மாநிலந்தனக்கு னற்ற செங்கல் நூறுக
கணக்கரையுமானை வாழூர் கற்பித்தார் மன்னவர்காள்
ஐயெட்டு நாளையிலே ஆன செங்கலாராய்ந்து
நடந்தோடி வாருமென்று நாடொக்க விடையும் பெற்று
பெற்றவிடை நன்றெனவே பிரியமுடன் சம்மதித்தார்
திருநீட்டுங் கொண்டு வந்த திருநீலகண்டனுக்கு
வர்ணப் பணி கைக்கு வலை வலது காலில் வீரதண்டை
விலைமதியாப் பட்டாடை வேண்டும் வண்ணம் வரிசை
பெற்று
திட்டெனவே போய்வா நீ என்று
திருவுளங்கள் பற்றினதும்
மாதுற்ற சேர்புயத்தான் மன்னவர்கள் சொன்ன மொழி
மறவாமல் பசி தீர்த்து மாறுமலோடு வாளும்
இரவு பகலாக வோடி ஏற்ற திருநீலகண்டன்
ஒன்று ரெண்டு நாளையிலே யோடி வள்ளியூரில் வந்தான்
வந்த குலசேகரர்க்கு வார்த்தை ஏது சொல்லுவானும்

சொன்ன மொழி தன்னையெல்லாம் தொழுது நின்று ஒட்டனவன்
அண்ணல் திருவுளத் தாலடியேங்க ளொப்பதன்றான்
கல்லு வரக் குற்றமில்லை
கடுக விடுமாளை யென்றான்
இங்கொருநாள் முடக்கவில்லை
இடுமினித்தான் கோட்டை யென்றார்.

## 4. சீர் சிந்து

### செங்கல் வந்ததும் கோட்டை கட்டுதல்

அந்த மொழி கேட்டபோது அழகன் குலசேகரரும்
அன்புடன் தம்பிமார் மந்திரி மாரையும்
உற்ற துலாயாகவே திருவுளம் பற்றவே
ஒக்கவே தாங்க ளொருமித்துக் கூடியே
கல்லாலே கோட்டையிட வேணுமினிமன்னா
கருவேலம் கட்டிக் கொடு போனாரே
காஞ்சிபுரம் எத்தனை தூரம்
கனவண்டியும் ஆளும் கற்பியுமென்றார்
காவலன் குலசேகரர் எப்போது
கங்கை மட்டும் கரையாள்கிறோம்
நமக்கு மேற்பாகவே கோட்டையிடுகிறோ மென்று
விரையவே ஆளேவினார் மன்னர்
கண்ட கண்ட தேசங்களெல்லாம்
காணிக் கஞ்சாளர் கற்பித்தார் மன்னர்
வருவாரும் போவாரும் வண்டியில் கல்லேற்றுவாரும்
ஒட்டாளாய்க் கூட்டுவாரும் ஒழுக்காளாய் நிற்பாரும்
தெரிவாளாய் நின்ற வரைச் சென்றடித்து விடுவாரும்
திரைகடல் போல ரவஞ் செய்து
செங்கல்லோ வருகுதென்பார்
மருவாரும் புகழ்படைத்த மன்னரெங்கள் குலசேகரர்
தம்பிமார் மந்திரிகள் சகல படையத்தனையும்
கோட்டையிட வேணுமென்று
கூடினாரெல்லாரும்
செங்கல் வரக் கண்டபோது
தீரன் குல சேகரப் பெருமாள்

செங்கல் கொண்டு கோட்டை கட்டுவது சிறு நிலப் பகுதிகளை ஆளும் மன்னர்களுக்குப் பெரிய காரியம் ஆகையால் செங்கல்லால் கோட்டை கட்டுவதைப் பெரிதும் புகழ்ந்து பேசுகிறார் பாடகர்.

## கோட்டை கட்டுதல்

நாள் பொருந்தும் திருக்கரத்தான் நல்லவள்ளி தனிலே
மூன்று முகம்கொண்ட வம்மை கோவில் முந்த முடிப்பாளு
நாலு கட்டுஞ் சுத்த மதில் நடுக்கோவில் கட்டுவாரும்
திருமுத்தஞ் செங்கல்லாலே திட்டெனவே கட்டி முகித்து
அன்புடனே யம்மை கோவில் அரசர் மன்னர் கொண்டாட
ஒப்பமுடன் மன்னவர்கள் ஓலைக்கால் மண்டபத்தில்
வந்து நிறை மந்திரிகள் வார்த்தையேது சொல்வாராம்
சுகிதத்தால் கோட்டை வைக்க சோதிரியை வரவழைத்து
அட்டமங்கலம் பால் நீக்கி ஆராய்ந்து பார்த்த போது
தேட்டமுடன் சோதிரிதான் செப்புவானும் ஓர் வார்த்தை
படையாளும் மன்னனுக்குப் பாங்குடனே சிகரம் வைத்து
சிற்பங்கள் தானெழுதிச் சித்திரங்கள் தான் குறித்து
அற்பத்துக் குள்ளேயந்த பாளையத்தைத் தான் முகித்து
பூவணியும் மாலைமார்பன் பொன்னுமுடிப் பாண்டியரும்
நல்ல கொல்லம் நானூற்று நாற்பத்திரண்டா மாண்டதிலே
செல்வமுள்ள சிங்க முகிர்த்தத்தில் திங்கள் பதினொன்றதிலே
ஆவணி மூலத்திலே யடர்ந்த வெள்ளிக் கிழமையிலே
பணமளந்து நிறைமரக்கால் பட்டாடைமீது வைத்து
குணமுடனே முத்தளந்து கூடவைத்தார் நிறை நாழி
அட்டமங்கலம் பொன்னாலே டைக்காயும் வெள்ளிலையும்
இஷ்டமுடன் கணபதியும் எழுத்திரு விளக்கும்
பொன்னாலே கும்பக்குடம் பூவரசுக் குலைதிருத்தி
அன்புடனே யலங்கரித்து யடைவுடனே கோட்டை தன்னை
செஞ்சையனும் தொண்டமானும் திருமங்கை யாள்வானும்
இருவருந்தான் தெற்குக் கோட்டை யிடுவிப்பார் சடுதியிலே
காலிங்க வில்லவனும் கரைக் கண்டான் காங்கையனும்
பிரியாதிப் பிள்ளையோடே செம்பகவர்ண மந்திரியும்
எல்லோரும் வடக்குக் கோட்டையிடுவார் சடுதியிலே
காலிங்க வில்லவனும் கரைக் கண்டான் காங்கையனும்
இருவருந்தான் மேலக் கோட்டை யிடுவார் சடுதியிலே
பிரியாதிப் பிள்ளையோடே செம்பகவர்ண மந்திரியும்
வீரசோழன் வல்லவனும் விருதராசப் பெருமாளும்
பேருளன் படைத்தலைவன் பெரியவுடையாரும்

கோட்டைய கட்டி ஆண்டு கொல்லம் 442. அதாவது 1226-ல் எல்லாப் பிரதிகளிலும் இவ்வாண்டு குறிப்பிடப் பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிகள் சிலவற்றின் காலம் இது என்று கொள்ளலாம்

மூவருந்தான் கீழ்க் கோட்டையிடுவார் சடுதியிலே
நாலு திருமதிலும் நலமாகக் கல்லுகட்டி
பாரவடிதீரப் பதியுடனே கல்லுகட்டி
பாரியிட்ட கோட்டைபோல மன்னர் செங்கலக் கோட்டையிட்டார்

### ஊருணி வெட்டி கள்ளமடை வைத்தல்
### 4. சீர் சிந்து

கோட்டைக்குள்ளே வெட்டின் நீராவித் தன்னிலே
குதிரைப் படைக்கும் குடிக்கத் தண்ணீர் வேணுமென்பான்
மெய்ப்புடனே சீவலப் பேரிக்குளத்துத் தண்ணீர்
வெள்ளம் வந்து கோட்டைக்குள்ளே பாயவேணுமென்ன
அற்பத்திலே கடுகத் திருநீலகண்டர்
ஆருமறியாமல் கள்ள மடைவைக்க வேணுமென்றார்
கல்தச்சர் முட்டாக்கள் தங்களையுமழைத்து
கற்பிளவு பிளவுமென்னக் கருங்கல்லு வெட்டுவாரும்
மறப்பொலியும் திண்டியுத்தான் மலைக் கூடம்டிப்பாரும்
வண்டியில் கல்லேற்றுவாரும் மலைப்பிளவு பிளப்பாரும்
கண்டிப் போட்டுத் தடிபாச்சிக் கல்லுகளையேற்றுவாரும்
தெப்பத்தைத் தள்ளிப்போட்டுச் சேர்ந்த கல்லுமேற்றுவாரும்
முட்டாக் களாயிரம் பேர் முனைத்தச்சர் அதிலீரெட்டி
ஓயாமல் வேலை செய்து ஒருண்டை நாளையிலே
ஒருண்டை நாளை வேலை ஒரு மாஸ்தை வேலையாக
பாராட்டிக் கிடவாமல் பத்துமுப்பது நாளையிலே

### பண்டாரம் படமெடுத்தது
### அடி வேறு

கன்னமிடுங் கள்வரைப்போல் ராவிருட்டி வேளை வெட்டி
கள்ளமடைத்தானும் வைத்துக் கற்பன் சொரி ஐயங்கோவில்
கல்ப்பூதந் தன்னையன்று காவலாகவே நிறுத்தி
காணுமல் தண்ணீர் வந்து கோட்டைக்குள்ளே பாய
இந்த வண்ணமாக மன்னவர்கள் இசக்கநல்ல கோட்டையிட்டு
யீடேற்றமும் படைத்து வாழ்திருந்து நன்றாய்
தன் செல்வமும் புறச் செல்வமு மறியாமல் மன்னர்

2540 ஒரு ஆண்டு வேலையை ஒரு மாதத்தில் முடித்தார்கள்— மாஸ்தையில் — மாதத்தில். (நெல்லை, குமரி மா. வ)

தங்களே டெதிர்த்தவனை தானென்று மல்லாமல்
தென்குமரி மட்டும் காசி காஞ்சிபுரமளவும்
தேசமெல்லாம் நேசமுட னாண்டிருந்த நாளில்
ஆண்டிருந்த நாளிலந்தப்படை வீடுசெல்ல
அவரவர்கள் செய்த பிழை பொறுத்து
பூண்டு பொருந்தக் களித்துப்பொன் முத்தங்கொழித்து
பொன்னுலகம் போலிருந்த வள்ளியூர் தனிலே
புதுமையொன்று சொல்லுகிறேன் பூதலத்தோரே கேளும்

## 4. சீர் சிந்து

பாண்டியர் படத்தை பண்டாரங்கள் எழுதியது

கற்ற மாது நல்லாள் காரிகையாள் பூமாது
சித்த முட னீன்றெடுத்த திருவாட்டி தன்னை
வள்ளல் திருவுளந்தன்னால் மைந்தன் வயசு பதினாறில்
பண்டாரங்கள் சில பேர்கள் பாண்டிமன்னர் வடிவைக் கண்டு
கண்டிருந்த வடிவெழுதி ஓவியமாய்த்தான் சமைத்து
கொண்டு சென்று பாடிடவே குவலயத்தோர் கொண்டாட
என் திசையும் தானறிந்து இயல் மதுரை தன்னைக் கடந்து
வண்டமிழோர் கொண்டாடும் வட நாடு தரன் புகுந்தார்
தென்றிசைக்கும் மண்டலமுந்தொட்டர் வளநாடு மிட்டுச்
சோழனுட மண்டலமும் சிறந்த புகழ்நாடு மிட்டு
ஈழமுதல் கொங்குநாடு ராஜ்ஜியமெல்லாந் திரிந்து
மன்னவர்கள் வடிவையெல்லாம் வையகாமல் பாடியாடிக்
குலசேகரன் மேல் மையல் சொண்டாள்
கன்னடியன் தேசத்திலும் கண்ட கண்டயிடங்களெல்லாம்
வர்ணித்து வரிசை பெற்று மடவார்கள் வீற்றிருக்கும்
பொன்னின் மணிமாளிகைக்கே கன்னடியன் மகளருகே
சென்று நின்று பாடிடவே தேன்பயிலும் மொழிவடவாள்
மன்றல் செறி பூங்குழலாள் மங்கை நல்லாள் பெண் கொடியாள்
குங்குமஞ்சேர் கொங்கை நல்லாள் கோலவர்ணச் சாயல் நல்லாள்
கோடனைய பூமுலையாள் கொஞ்சுமொழி யஞ்சுகத்தாள்
பேடையின் மயிலனையாள் பெண்கொடியாள் பேதமையாய்

2550 — 2556. நாட்டுப்பாடல் ஆசிரியர் வள்ளியூரின் பழம பெருமையை நினைவுபடுத்துகிறார். காஞ்சிபுரத்தைப் பாண்டியர்ஆண்ட காலத்தில் இவ்வூர் சீரும் சிறப்புமாய் விளங்கியதாம்.

படமெழுதும் சித்திரத்தில் பாண்டிய மன்னர் வடிவுகண்டு
குடமுலையாளசை கொள்ளக் கோலமதன் பூவைக்கொள்ள
வண்டனையாள் தடமுலைமேல் மாரனம்பு தைத்திடவே
துடமருவின் குழலனையாள் துவண்டு மனம் நடுநடுங்கி
குலசேகரன் மேல் மையல் கொண்டாள்
பார்த்திருந்து மாது நல்லாள் பாண்டியர்கள் ஐவரிலும்
மூத்தவர் தன்னழகு கண்டு மயங்கி மெத்தமயங்கி விட்டாள்
கூந்தலது தான் குலைந்து கொடியிடையாள் தள்ளாடி நின்றாள்
பூந்துகிலும் பேணாமல் பூவணைமேல் சரிந்தாள்
ஏந்து கொங்கை மயிலனையாள் யிளமதிக்கும் தென்றலுக்கும்
சோர மதன் கணை தனக்கும் துயர்தனுக்கும் இலக்கானாள்
மன்னருட திருவழகால் வரிக்குயிலும் தென்றலுக்கும்
கன்னல் வல்லி பூங்கணையும் கடல் முரசும் குழலிறைக்கும்
கொள்ளை கொள்ள உயிர்நடுங்கிக் கொம்பனையாள் சோர்ந்து விட்டாள்
உள்ளெழுந்த நெடுமூச்சுற்ற தொன்று மறியாமல்
தெள்ளு தமிழ் பாண்டிமன்னர் திருவடிவைக் கண்ட போதே
விள்ளுமதி தானறியாள் மெல்லி நல்லாள் கொண்டமைங்
கள்ளனறுங் குழலலைந்து காமருவும் ஆத்துதிர
வள்ளல் மதன் கணையாலும் வரிவண்டி னிசையாலும்
ஆடான செம்மஞ்சள் நீரமுழுதாள் தலை முடியாள்
ஏடாருங் குழல்முடியாள் மார்தனத்தில் கச்சாணியாள்
வேல்விழி மையெழுதாள் மெய்நுதலில் செந்தூரமிடாள்
சீப்பு மிடாள் மயிர்கோதாள் சிலம்பணியாள் தலம்பாவாள்
காப்புமிடாள் கரந்தனிலே கனகமணிதான் பூணாள்
சந்திரன் தன்கதிர் விரியத் தணியாத வெகுமயலாள்
அந்தரத்தில் குளிர் வாடையனலாகவே வீச
பூசிடுவார் சந்தனத்தைப் புனுகு பன்னீர் அப்பிடுவார்
வீசிடுவார் சாமரைகள் மிகுந்ததொரு பன்னீரால்
ஆசை கொண்டதறியாமல் யனேக மெலலாஞ் செய் திடுவார்
பூசல் கொண்ட விழிமயிலாள் போகமுடகெ பூந்திருந்து
மங்கை நல்லாள் புடைசூழ வருத்தமின்றி தானடைந்து
கங்கையன்றிக் கன்னடியன் தன்னருகே செல்லுவாளாம்
கைவளைகள் கழன்றொழுகக் கால்கள் தடுமாறியவள்
எய்துமவள் உயிர்நடுங்கி விழுவாரைப் போல்நடந்து
இந்துமுகம் வியரொழுக இளந்தனத்தாள் பையவந்து

### கன்னடியனிடம் அவனது மகள் கூறுவது

அந்த வண்ணந் தகப்பனுட யண்டையிலே சென்று நின்று
மூந்தியடி தொழுதிறைஞ்சி மொய்குழலாள் ஏது
சொல்வாள்
படையாலே பெரியவனே பலசக்கர முடையோனே
அடையலரை வென்றவனே ஆள்வீரஞ் செய்தவனே
நீண்டபெரும் புகழானே நித்திய கவியாணனே கேள்
ஆண்டவரே என்னுடைய ஐயாவே ஒன்று கேளீர்
தென்னாடுதனிலே தான் சிறந்த முடிப்பாண்டியர்கள்
மன்னவர்கள் இவரிலும் வடிவுடைய குலசேகரர்
அவர் தனக்கு மாலையிட ஐயாவே அருளுமென்றாள்
புவனமெல்லாம் ஆண்டவனே புரவி கடலுடையவனே
நானிருந்து சடைத்திடினும் நரைத்தமயிர் முடித்திடிலும்
ஊனிருந்து கனிந்திடினும் உயிர் இழிவு வந்திடினும்
கொற்றவனார் பாண்டிமன்னர் குலசேகரர் தன்னையன்றி
மற்றொருவர் தனக்கினிநான் மாலையிட நினைப்பதில்லை
தொழுது நின்ற மாது நல்லாள் துடியிடையாளேது
சொல்வாள்
எழுத வெண்ணாச் சிலைவடிவு யிலங்கு முடிப்பாண்டியர்க்கு
பழுதறவே மாலையிடப் படியருளாயாமாகில்
அழுத கண்ணீர் மாறாமல் அக்கினியில் வீழ்ந்திடுவேன்
வாழ்வதில்லை யொருவனுடன் மன்னவனார் தன்னையன்றி
விழுவதுதான் நிச்சயமே வெந்தணலிலெனவுரைத்தாள்
மகள் மொழிந்த வார்த்தைகேட்டு மனம் நடுங்கி
கன்னடியன்

### கன்னடியன் தூதனுப்புதல்

புகழ் பெரிய ஒட்டனையும் போகவிடத் துடங்குவானும்
இயலற்ற குதிரைப்படை எல்லையில்லாப் பொன்
கொடுப்பேன்
மணக்குழலாளென் மகளை மாலையிடச் சொல்லு கென்றான்
கெங்கைமட்டு மாண்டிடலாம் கீர்த்திபெற்று வாழ்ந்
திடலாம்
மங்கை நல்லாளென் மகளை மாலையிடச் சொல்லுமென்றார்
ஒட்டன் வார்த்தை சொல்லி உறுதி பலதானுரைத்து
வாட்டமற ஒட்டனுந்தான் வழி நடந்தான் சடுதியிலே
கன்னடியன் ஒட்டனுந்தான் கால்கடிய சேவகனும்
உண்ணுமுன்னே காதவழியொரு நொடியிலே யோடு
வானும்
சிறுகுருவி பறந்தாப்போல் தேசமெல்லாந் தான்கடந்து

பத்து நாளைப் பெருவழியை ஒரு பகலிரவு ஓடுவானும்
கம்பையாத்தங் கரைகடந்து காஞ்சிபுரந்தானும்பிட்டு
செம்பொன் முடிச் சோழநாடு தென்மதுரைப் பதியும் விட்டு
மாயத்தாலெண்ணமிட்டு வாரானே ஓட்டனவன்
கயத்தாறும் கடம்பூரும் கங்கை கொண்டான் தான் கடந்தான்
ஓட்டமின்றி ஓடுவானும் நல்லூர் திடியூருமிட்டு
பட்டபுரம் மோலாபுரம் பாங்குடனே தான் நடந்தான்
வட்டமிட்டு மயிலாடும் வள்ளியூர் தனிலே வந்தான்
இஷ்டமுடனேடியங் கேயிளைப்புடனே செல்லுவானும்
பல்லக்கு தண்டிகையும் பரதேசிருவுத்தான் மாரும்
எல்லையில்லாப் பெரும்படையும் யேக்கமற்ற கரிபரியும்
சேவிக்கும் பரிகலமும் சேவகரும் செருமி நிற்க
கோவில்க்கால் வாசலிலே கூண்டு அங்கே செல்லுவானும்
ஆணிப்பொன் கதவடைத்து அணிவயிரத் தாழுமட்டு
மாணிக்க வாசலிலே வந்து நின்றான் ஓட்டனவன்
கன்னடியனோட்டனென்று காரியமாய்ச் சொன்னபோதே
முன்னடியில் நின்றவனும் முடிபொருந்த பாண்டியற்கு
சென்று சொல்ல ஓடுவானும் திருநீலகண்டன் ஓட்டன்
அஞ்சியடி தொழு சிறை உற்றமொழி சொல்லுவானும்
திருபயிலும் மாலைமார்பா சிறந்த முடிப்பாண்டியர்கள்
ஒருவராலும் வரக்கூடாத உம்முடைய வாசலிலே
கருத்துடனே ஒருவன் வந்து கன்னடியன் ஓட்டனென்றான்
விருப்பமுடன் வந்து நின்று வேண்டுவது சொல்லுமென்றான்

### 4. சீர் சிந்து

அந்தமொழி கேட்டபோது அழகு பொன் பாண்டியர்
அழகான திருநீலகண்டனோடு சொல்வான்
இந்த நேரத்திலே மந்திரிமார் சேர
என்னைப்பார் உன்னைப்பார் என்று பாவித்து
இப்பொழுது வரவேணும் திருநீலகண்டர்
என்று திருவிளம் பற்றியம்பி விட்டாரே
அப்பொழுது திருநீலகண்டனுடன் சொல்வார்
ஆன மந்திரிமார்களோடேது மொழி சொல்வார்
எப்பொழுதும் வாராத கன்னடியனோட்டன்

ஒட்டன் பலவூர்களைக் கடந்து சென்றான். அவ்வூரின் பெயர்களைச் சொல்வது. அவ்வூரார் முன் பாடும் போது அவர்களுக்கு மகிழ்ச்சியளிப்பதற்காகவே இதுவோர் மரபு.

இன்று நம் வாசலிலே வந்து நின்ருனே
ஒப்பமுடன் நீங்கள் வைத்தா பரணஞ்சேர
ஒன்றும் குறைவில்லாமல் எடுத்து பூண்டு
பூண்டு பொருந்துச் சுமக்க வொண்ணுமல்
பொன்னுலறை பூத்த தென்னர் பெருமாளும்
இன்று வரவேணுமென்று குலசேகரர்
இப்பொழுது திருவுளம்பற்றி விட்டாரே
வார்த்தைதனைக் கேட்ட மந்திரிமாரும்
மன்னவர்கள் சொன்னபடி எடுத்தப் போபூண்டு
கோர்த்த மாணிக்கமும் பொன்னின் முத்தாரமும்
கொள்ளாது கொள்ளவே தானெடுத்துப் பூண்டு
மூத்ததோர் காலிங்க வில்லவன் தானும்
முப்பத்திரண்டு தண்டேறிகளுஞ்சேர
பார்த்த திசையெங்கும் பகலாஞெளி போலே
பதினெட்டு மந்திரிமாரும் புடைசூழ
சேவித்து நின்றவன் கோவில் காலுள்ளே
தென்னர் பெருமாள் நல்லபொன்னு பாண்டியனும்
பாவித்திருந்த பருத்த தெல்லாஞ்சேர
பகராமெனக்குற்ற மொன்ருகிலும் பொருமேன்

அடி வேறு

முத்து மாமுடிஉச்சி மாதுறவைத்து ஒரழகாய்
கைக்குள்ளே வலே கொச்சமானது கட்டியே ஒளிசேர
கைத்த மாமணியுற்றதோர் நல்ல கணையாழி களிட்டார்
மெய்க்குள்ளே புனுகப்பி வாரி மிகுந்த சேறணிந்தார்
மிக்க தாவடமும் பணிபல தொக்கவே யணிந்தார்
பச்சைமாலே பதக்கமாலே இதக்கவே யணிந்தார்
இச்சையான பொன் பட்டிஞடையிடைக்குள்ளே மறைய
ரெத்திஞதிய முத்தின தொரு பட்டுமேலுடுத்தார்
சிறப்பான வரிப்பணிகள் விவப்பமாயணிந்தார்
சித்திர விஞேத பணிகளொக்கவே யணிந்தார்
பொற்ப மேவுவரைக்குள்ளான நல்வெறி மாலேயிட்டார்
புஷ்பராக கோமளவன்க் கை மீதணிந்தார்
வைத்த மாதரை ஏற்றகால் தனிவிட்ட நூபுரமும்
மற்றும் வீரர்கள் சித்திரம்மேழி வைத்தக்கவே யணிந்தார்
தத்தை போலவே மொழி ஒத்த மாதர்கள் மெற்றமாலே

தண்டேறி—பல்லக்கு ஏறும் உரிமை பெற்ருேர்
பொய்த்தகாது நிறைந்த பொன் குருத்திலேறிவிட்டார்
தத்தை—கிளி (மலேயாளம்)

3. சீர் தொங்கல்

பட்டுலாவும் பச்சைவானி பணிப்பட்டு உருக்குமணி
கட்டும் நல்ல கதவுத்தாரணி கால்வல்லி நீலப்பட்டு
வீரவானி மான்ந்தடிரென் வெல்லப்பட்டு கொல்லப்பட்டு
திருவை உதயராமன் தேவரங்கு மித்தனமாம்
சந்திரவல்லி யாகவல்லி சகலாத்து துப்பட்டியும்
இந்திர லோகமென்ன காசிலோக மற்ற பட்டாடையாம்
பொன்னிட்ட மாணிக்கமும் விளக்கு முத்துமாலைகளும்
பொன்னிட்ட குல்லாவும் பூவிட்ட சேலைகளும்
சில்லியிட்ட வச்சிரந் தூக்கித் தத்தித் தத்தியாய்த் தூண்
பெதிர்ந்து
வல்லி வல்லியாய் மாலைதூக்கி மண்டபத்தை யலங்கரித்து
அலங்கரித்த மண்டபத்தில் ஐந்துதலை நாகங் குடையிடவே
பவுசுள்ள மந்திரிமாரும் பக்கத்தில் நின்று சேவிக்க
தோகை நல்லாளாடல் கண்டு சுகமாக வீற்றிருந்தார்
செப்பு இள மூலைமடவார் திருவாலத்தி ஏந்திவர
முப்பத்திரண்டு தண்டேறிகளும் ஒப்பத்துடன் சேவிக்கவே
செஞ்சயனும் தொண்டமானும் திருமங்கை யாள்வாரும்
பக்கத்திலே தம்பிமாரும் பதினெட்டு மந்திமாரும்
ஒக்கச் செருமி நிற்கும் நேரம் ஒட்டன் திருநீலகண்டன்
சென்றான்

3. சீர் சிந்து

கன்னடியன் ஒற்றன் அரசனைக் காணல்

அந்த நேரத்திலே கன்னடியன் ஒட்டன்
அடைத்த கதவை திறந்து விட்டாரே
மூந்த ஓடிச்சென்று கன்னடியன் ஒட்டன்
முன்னிட்டச் சாவடி தன்னிலே வந்தான்
குந்தக்காரர் யீட்டிக்காரர் குதிரை கட்டும் சேவகரும்
பந்தக்காரர் கூட்டங்களும் மணிக்குடை களெடுப்பாரும்
தடிக்காரர் சவனக்காரர் தந்தாரி விற்காரர்களும்
முறைக்காவல் காத்திருக்கும் முன்னிட்ட சாவடியுமிட்டு
அறியாமல் சொல்லுவானும், அய்யபுரத்து வாசலிலே

கன்னடியன் ஒற்றன் பாண்டியன் யாரென்று அறியாமல்
திகைத்த செய்கை

பண்டு பூத்ததை வேலைகொண்ட பாண்டிய மன்ன
ரறியாமல்
கண்ட கண்ட இடங்களெல்லாம் கையெடுத்துக் கும்பிடு
வானும்

அந்த வாசல் தன்னை விட்டு அப்புரத்து வாசலிலே
முந்தச் சென்று கும்பிடுவான் மூன்றுமுடி சோழனை
மண்டலீகரென்று இந்த மன்னவர்களிவர் களென்று
கண்டறிய மாட்டாமல் கையெடுத்துக் கும்பிடுவான்
மூன்றுநாலு வாசல் விட்டு முத்த வெளிதான்கடந்து
ஈன்ற தாயைத் தேடியோடும் யிளங்கன்று போலாடுவானும்
அந்தவாசல் தனைக்கடந்து அப்புரத்தில் செல்லும் நேரம்
செம்பகவர்ணப் பெருமாள் செல்லப் பெருமாள்
தன்னுடனே
பெண் சிறையிட்ட பெருமாளும் பிரியாதிப் பிள்ளையோடு
அவர்களையும் தொழுவானும் யரசர்யாவர் தானெனவே
வாசல்தோறும் கும்பிடுவான் மன்னவரென்றறிமல்
தாயைப் பிரிந்தகன்று போலே தடுமாறி செல்லுானும்
அந்த வாசல்தனையு விட்டு அப்புறத்து வாசலிலே
மந்திரிமார்க் கூட்டங்களும் வாசல் துரைக்காரர்களும்
பேருள்ள படைத்தலைவன் பெரியம் டையாரும்
வீரசோளன் வல்லவனும் வீரமுடிச் சேவகரும்
அவர்களையும் தொழுவானும் ஆண்டிருந்த அரசரென்று
அந்த வாசல் தனையுமிட்டு அந்தப்புரத்து வாசலிலே
கருவேலம் கணக்கெழுதும் கையாட்சை காரர்களும்
திருமுகப் பிள்ளையாரும் செருமி நிற்கும் வாசலிலே
அவர்களையும் தொழுவானும் அரசர் இவர் தானெனவே
அந்த வாசல் தனையும்விட்டு அப்புரத்து வாசலிலே
முத்தின் பொருமாள் முகிலப் யெருமாள் முடிவிளங்கும்
பெருமாளும்
பத்தி செரிபச்சை பெருமாள் பலவாறு கூட்டங்களும்
மெத்தவங்கே வீற்றிருக்கும் வேளையதைக் கண்டபோதே
சித்தமுடன் தொழுவானும் தென்னவனுர் முன்னே நின்று
அந்த வாசல் தனையும்விட்டு அப்புரத்து வாசலிலே
உள்ளுடைய குறிப்பிருப்பும் யிற்ற துரைக்காரர்களும்
யெண்ணிய பெரும்படையும் யேக்கமற்ற வன்னியரும்
படைகட்டி நிற்கவிட்டுப் பதினாலு வாசல்விட்டு
இடத்தொட்டி வாசல்விட்டு ஏழரையும் தான்கடந்து
வலத்தொட்டி வாசலிலே வந்து நின்றான் ஒட்டனவன்

2740 முதல் 2775 வரை கன்னடிய தேசத்து ஒட்டன் நகருக்குப் புதியவனுதலால், அரசன் யாரென்று தெரியாமல், பல அதிகாரிகளையும் அமைச்சர்களையும், அரசனென்று எண்ணி வணங்கினுன். 2861—கருவேலம்—கருவூலம் கையாட்சைக் காரர்களும்—கணக்கர்கள்

கன்னடிய ஒட்டனவன் கால்கடிய சேவகனும்
மன்னவனூர் வீற்றிருக்கும் மண்டபத்தில் செல்லுவானும்

### 4. சீர் சிந்து

ஒற்றன் மன்னனைக் காணல்

வேலை சூழ்மா பூமியாதாள் வோனே
மேகவுருவா னரசனோடு மாடுவோனே
மாறிவரும் பூதம் நோக வேலையேவு வோனே
காலமாரி பூமி தன்னில் பேசவு மொண்ணாமல்
காலமேகவோட வொண்ணாமல் காவல் செய்வோனே
அலைவாயில் மாறன் வீரனான மீனவனே
ஆடல் பாடல் காமநேரம் ஒடிமெல்லச் சென்றான்

அரசனிடம் செய்தி கூறல்

வந்து நின்ற ஒட்டனவன் மன்னர் தன்னழகு கண்டு
சிந்தையுறத் தொழுவாரும் தென்னவனூர் முன்னே சென்று
அந்த வாசல் தனையும்விட்டு அப்புரத்து வாசலிலே
பெண்கள் நல்லாள் சேவிக்கவே பெருக்க முடனிருந்த போதே
எங்கிருந்து வாராயோடா என்று சொல்லிக் கேட்டமன்னர்
சிங்கமென்ற திறல்வீரன் தேசமெல்லாமொரு குடைக்கீழ்
கங்கைமட்டு மாண்டிருந்த கன்னடியன் ஒற்றனென்றான்
இங்கே வந்த காரியத்தை எனக்கறியச் சொல்லுமென்றார்
கன்னடியன் மகளொருத்தி கன்னியிளம் கொடியாள்
தென்னவனையும் முடைய திருவடியின்னழகு கண்டு
வண்ணமுற்ற திருவழகை வந்து சிலர் சொல்லக் கேட்டு
கன்னடியன் திருமகளை நீர் கையிடிக்க வேணுமென்று
என்னையிங்கே விட்டு விட்டார் என்று சொல்லித் தொழுது நின்றான்

செய்தி கேட்டுச் சீற்றம்

மடியாமலொட்டன் சொன்ன வார்த்தைதனைக் கேட்ட போதே
படையாளும் முடிவேந்தன் பொன்னும் பாண்டியருமேது சொல்வார்
நன்று நன்று சொன்னமொழி நல்லதொரு காரியந்தான்
என்று சொல்லிப் பாண்டியரும் ஏது வார்த்தை சொல்லுவாராம்
முன்னிருந்த பாண்டியர்கள் மூதாக்களான பேர்கள்

2702 — மூதா முன்னோர்

கன்னடியன் கிளைதனிலே கலியாணம் செய்ததுண்டோ
என்னமொழி சொன்னுயொட்டா முன்னில்லாத காரியந் தான்
மன்னவனுர் இது சொல்ல மறுத்துமொழி யொட்டான் சொல்வான்

ஒட்டன் பதில்

பண்டிருந்த கன்னடியன் பாண்டிய ராசாக்கள் தன்னை
கொண்டிரு நீ என் மகளை என்று கூறிவிட்ட நாளு முண்டோ?
பொன்னணிந்த மாலைமார்பா புகழ் பெரிய பாண்டியரே
உன்னுடைய நேசத்தாலே உறுதி பல தானுரைத்தான்
ஆனைபெரும் படையும் பரி நூறுயிரமும்
சேனை பரிகலமும் சேரவுமக்கே தருவார்,
கரும்பையொற்ற மொழிமடவார் கன்னடியன் திருமகளை
குரும்பையொத்த தனக் கொடியைக் கொள்ளவுந்தான் வேணுமையா
கொள்ளுமென்ற வார்த்தை கூறக்கேட்ட மந்திரிமாரும்
உத்தாரம் சொல்லிநின்ற ஒட்டனுக்கு உறுதி சொல்வார்
இத்தனை நாளுள்ளுறவு யின்னமூந்தான் போடா
மற்ருென்றும் பேசவேண்டாம் மறந்துவிடும் பேச்சையெல்லாம்
மேலுக்குச் சட்டைகுல்லா விளங்கிய முத்துமாலையிட்டான்
காலுக்குச் சட்டையிட்டான் கைக்கு வளை கெச்சமிட்டான்
முன்ன சனந்தான் கொடுத்து முடுகியே யொட்டனுக்கு
கனமான வார்த்தை சொல்லிச் சாத்திரியை யனுப்பி விட்டார்
கனத்த பெரும் பசியைக் காலிங்கனும் இளைப்பாறி
மானதிலும் கடிதாக வடக்கு நோக்கி ஓடுவானும்

அடி வேறு

ஒற்றன் கன்னட நாடு செல்லுதல்

ஓயாமல் நாமிங்கேயேன் வந்து விட்டோமென்ன
ஒன்றிரண்டுமாதஞ் செல்லுமே வழிதான்
பாராமலேயந்த கன்னடியன் ஒட்டன்
பதினெட்டு நாளதிலே சென்று விட்டனே
சென்று விட்டான் கன்னடியனேட்டன்

கன்னடிய மன்னனிடம் கூறுவது

சேவித்து நின்றவன் தானேது சொல்லுவான்
நன்று விட்ட காரியம் கண்டு மீண்டதுவும்

நல்லது நல்லதினி சொல்லடா ஒட்டா
சொல்ல வொண்ணுதே
சொல்லவு மென்றல் முகியாது வையா
எல்லையில்லாத குதிரைப் படையும் எழுபத்திரண்டு
தண்டாளுகளு மொக்க
சொல்ல வொண்ணுது அரன் கோவிலுக்காலுள்...ளே
சேரயிள ராசாக்கள் போலிருந்தாரே
வல்லவன் சென்று தான்ரெண்டு நாள்மீண்டு
வரப்பட்டபாடு வருகை முண்டென்றுன்
கண்டானவனழகைப் பேரழகைச் சொன்னல்
2840 காமனுக்கும் இப்படி வடிவு தானுண்டோ
செண்டலங்காரப் பெருமாளவன்தான்
தெய் வேந்திரனுக்கு இப்பசுவு முண்டோ
வள்ளலென்னும் கன்னடியன் தன் வார்த்தை
கேட்கும் வேளையில் கெவனிப்பார்
பள்ளியறைதன்னை பயந்தோடி அவளை

கன்னடியன் மகளின் நிலை

கொள்வதில்லையென்ற வரும் கூறிவிட்ட வாசகத்தை
கள்ள விழ்ப்பூங்குழலாள் கன்னடியன் திருமகள்தான்
களித்துமனங் குழைந்துருகிக் காமசரத்தாலுருகி
ஒளிந்துநின்ற பெண்களோடு ஒட்டன் சொல்லும்
வார்த்தை கேட்டபோது
2850 ஒட்டில் பட்ட பறவை போலேயுள்ளமெல்லாந் தள்ளாடி
மட்டிருக்கும் பூங்குழலாள் மங்கை மெத்தத்தியங்கி
விட்டாள்
பாதியுடலானுள் பருந்தெடுத்த குஞ்சானுள்
சோதிமுகம் வாடிவிட்டாள் சோர்ந்து கண்ணீராறுக
விட்டாள்
உடுத்த கலைவளை சேர்ந்தாள் ஒழுகு மயில் மண்ணளைந்தாள்
தொடுத்த மயிர் முடியாள் சோரு குழலுஞ் சோர விட்டாள்
ஊனிழந்த உடலானுள் உயிரிழந்த கூடானுள்

2833 முகியாது—முடியாது (குமரி மா. வ)
2834 தண்டாளு மொக்க—பல்லக்குத் தூக்குவோரனைவரும்
2842 தெய்வேந்திரன்-தேவேந்திரன், கெவனிப்பார்-கவனிப்பார்,
பவிசு—பெருமை
2850 ஒட்டில்—வத
2850 தியங்கி—அதிர்ச்சியடைந்து (நெல்லை பா வ)

தேனிழந்த ஈப்போல சிறகிழந்த அன்னம் போலே
அம்புபட்ட மான்போலே அலையில் பட்ட துரும்புபோலே
கொம்பில் பட்ட கலைபோலே குழியில்பட்ட யானைபோலே
சம்பி விட்டாள் திருமுகந்தான் சரிந்து விட்டாள் தோழியர் மேல்
வளைந்த மாறன் நாணேற்றி மைதுடலும் புனைந்தாளே
பச்சை நிறக்கிளியது போல் பாவையரும் வாடி விட்டாள்
இச்சையுடன் கடிவாள யிருவாச்சிப் பூவானாள்
ஆக நல்ல மல்லிகைப்பூ அதுக்கு நல்ல மல்லமாக
வாகு பெற்ற சட்டையதுதான் வாழைபிறங் குருத்தழகாள்
குருத் தெழுந்த கரும்பதுதான் கொடியிடுஞ் சிலையாக
வருத்த முல்லைக் கணையாக வரி வண்டு தான் பூட்டி
பூட்டுகின்ற அப்பொழுதே பூத்த தென்றல்தானாக
எட்டி நல்ல தோப்பாக யுற்ற நல்ல மதுகையானாள்
மதுவடைந்த காரிருள்தான் மதயானை கூட்டமதாய
புதுஇரவுக் குடையாகப் பெருங்கரகக் கோடியானாள்
வடிவான மதனுக்கு வாய்த்த மலர் படைவீடாய்
வீடாக நாலுதிக்கும் மிகு வானத்தில் படையாக
இட ஞானுமணி முரசு இத்தத் திரை கடலாக
கடலதுவே முரசாகக் காமியுளம் பூத்த தாமரையாள்
மடல் பெரிய தாழம்பூவா வயிர உடையவாளாக
வாழான முல்லை வீட்சி வாடையிளந் தென்றல் விச
காளாஞ்சி செண்பகப் பூக்கான வனந்தானாக
நாளான பூங்கணையை நாணிலுறவே தொடுத்து
முல்லையுடன் செங்கழுநீர் முழு நீலஞ் சூதம் பூவும்
அல்லியுடன் தாமரைப் பூவாக ஐந்து கணையையுந்தான்
ஐந்து கணையை யுந்தான் அவள் மேலே சொரிந்திடவே
வெந் தெழுந்த தீ மேலே விறகெடுத்துப் போட்டாப்போல்
போட்ட விறகுகளிலே பொங்கி யெழும் கனலது போல
கனலிடும் மெழுகானாள் காவி யிளங்குயில் கூவ
காவி யிளங்குயில் தனக்கும் காமனுட கணை தனக்கும்
செய்யுனுட மணி தனக்கும் சீங்குழலினிசை தனக்கும்
இசை தனக்கும் இசை தனக்கும் மிகுத்த திரைக் கடலொலிக்கும்

2860 சம்பி—கூம்பி, சோர்ந்து

2862 முதல் 2888 வரை—காமன் கன்னடியன் மகள் மீது பூங்கணை தொடுத்து எய்ததை வருணிக்கும்

2881—2886—ஐந்து மலர்க்.கணைகள்

வசதி யெல்லாங் கண்டு நின்று மங்கை நல்லாள் மயங்கி விட்டாள்
திருத்தமுடன் கன்னடியன் திருமுன்னே செல்லுவாளாம்

கன்னடியன் கூறுதல்

சொன்ன மொழி தன்னைக் கேட்டு சேர்ந்து மனந் தடுமாறு
பொன்னின் மகள் வாடாமல் புத்தி சொல்லி தேற்றுவானும்
தேற்ற முள்ள பாண்டியர்கள் தென்னவர்கள் ஐவரையும்
மாட்டோ மென்று விட்டவரை வல்லவதுந் தானிளகி
இணங்கியுந்தான் பிணங்கி யுந்தான் எந்த வண்ணமாகி லுந்தான்
மணஞ் செய்வே னுந்தனக்கு மகளே நீ மயங்காதே
ஆத்தி விட்ட கன்னடியன் ஆசனத்தின் மேலிருந்தான்
ஊக்க முள்ள பொன்னும் பாண்டியன் தன்னுறுதி யெல்லாம் கேட்கிறானும்

ஒற்றன் பாண்டியன் பெண் கொள்ள மறுத்ததை ஒற்றன் கூறுதல்

4. சிர் சிந்து

மாறி விட்டான் பொன்னும் பாண்டியன் தானும்
வார்த்தை மறுத்துச் செறுத்து நான் சொன்னேன்
கூறி விட்டானவன் யுன்னுடைய மகளை
கொள்வதில்லை தானும் மென்றே மொழிந்தான்
ஒட்டன் சொல்லைக் கேட்டு கன்னடியனப்போ
ஊழி முடிந்த தென் காலத்திலே தான்
மூட்டும் பெருங்கனல் போலே சினந்தே
காஞ்சிபுரங் கடந்தானே யொட்டன்

ஒற்றன் மறுபடியும் தூது செல்லல்

தொண்டனோடு சோழ மண்டலம் விட்டு
சொக்கனூர் கூடல்ப் பதியுங் கடந்தான்
பண்டு போலே வள்ளி யூரிலே சென்று
பாண்டியன் திரு முன்பிலே சென்று
மீண்டு வந்தங்கு நின்ற ஒட்டனை நோக்கி
மேகத்தை யன்று விலங்கிலிட்ட மன்னன்
தாண்டும் பரியான் கன்னடியனொட்டன்
சடுதியாய் மீண்டு வந்ததே தென்றார்

2917 ஆத்தி—தேற்றி (நெல்லை பா. வ)

வந்ததே தென்ற போது கன்னடியனொட்டன்
மன்னவனுடு செல்வானும்
முந்த ஓடிச் சென்று நீர் மொழிந்த தெல்லாம்
மொழிந் தேனவன் மெத்த மோதி விட்டானே
எந்த வகையாலும் என் மகனைக் கொண்டு
யிருக்க வேணு மென்று யியம்பி விட்டான்
அந்த மொழி கேட்டு நானிங்கு வந்தேன்
அதுக்கு நீர் வேண்டுங் காரியங்கள் சொல்வீர்
சொல்லு வீரென்ற தோர் கன்னடிய னொட்டன்
சொன்னதெல்லாங் கேட்டுக் கொண்டல்லவோ போனாய்

குலசேகரன் பதில்

நில்லாதே நீ யோடிச் சடுதியாய்ப் போடா
நீ வந்த காரியம் பலியாது என்றார் போற நேரத்திலே
கன்னடியனொட
பொல்லாத வார்த்தை சொல்லவும் வேண்டாம்
யோச்சமத்துப் பறயவும் வேண்டாம் யிப்போ சடுதியாய்
போடா நீ என்றார்
போடா நீ என்றந்த ஒட்டனைச் சொல்லி

ஏகாந்த மண்டபத்தில் கூட்டம்

பொன்னன் பெருமாளும் மந்திரி மாரும்
ஏகாந்த மண்ட பந்தனை யும்விட்டு
ரகசிய மண்டபஞ் சென்றப் போ கூடி
வாகாகவே வருங் காரியங் களெல்லாம்
மந்திரிமாரும் விசாரித்துக் கொண்டு
கண்ணுன மந்திரி காலிங்க வில்லவன்

மந்திரி கூறுதல்

காவலனைத் தொழுதங் கேது சொல்வான்
என்னுமலே யன்று நான் சொன்ன வார்த்தை
என் தம்பிரானே யிப்போது விண்ணப்பம்

2939 முதல் சில அடிகளில் காலிங்கராயன் என்னும் அமைச்சன் கன்னடியன் மகளை மணம் செய்து கொள்ளச் சொல்லுகிறான். இல்லாவிடில் அவனது பகை உண்டாகும் என்று சொல்லுகிறான்.

யோச்சமத்து—சமர்த்தானது என்றெண்ணி
பறைய — சொல்ல

மீறி விட வேண்டாம் நீர் கன்னடியனோடு
மிகுந்த பெரும் படையான தோர் கன்னடியன்
ஆறியெடுத்துக் கொள்ளலாமென் மேலும்
அவன் தன் படையின் வளமையைக் கேளும்
ஆனைப்படை பதினாயிர முண்டு அதினாலு ரெட்டி
குதிரையுமுண்டு
பகைத்து நம் மேல் கன்னடியன் வந்தால்
பல சக்கரத்தை மறிப்பாரு முண்டோ
மிகுந்தோடியே வந்த கன்னடியா னோட்டன்
சேனைப்படைக் கொரு லெச்சமோயில்லை
தேச மொருவிடல் கிடையாது ஐயா
வேகித்திடாமலே விட்டுவிடவேணும்
எத்தனை பெண்களைக் காவலிலே வைத்தாய்
ராசாக்களுக்கு அழகல்லோ கேளீர்
அதிலே யொன்றல்லோ கன்னடியன் மகளும்
அவள் தன்னை காவலிலே வைப்பாய் நீ என்றான்
என்ற படியே மந்திரிமாரும்
இளைய ராசாக்களும் தானொக்கக் கூடி
கூடி விசாரித்து மந்திரிமாரும்

## குலசேகரன் பதில்

குலசேகரப் பெருமாள் ஏது மொழி சொல்வார்
பார்த்துப் பறையாமல் நீர் சொன்ன வார்த்தை
பாண்டியன் தன் குலத்துக் கிழுக்கல்லோ கண்டீர்
எதிர்த்துப் பறைந்தவர் காரியஞ் சொல்ல
இணங்காத வார்த்தை எனச் சீறினாரே
சீறித் திருமுகங் கண்ட மந்திரிமாரும்
தேவரீர் சொற்ற படியே எங்களுக் கென்றார்
மறுபடியும் கன்னடிய னொட்டன்
வார்த்தை தான் மூத்ததோர் காலிங்கன் சொல்லுவான்
எதுக்குத் தானடா வீணே நடந்தாய்
இதுக்காக கன்னடியன் வார்த்தையைக் கேட்டு
முன்னிருந்த பொன்னின் பாண்டிய ராசாக்கள்
முறைமையெல்லாஞ் சொல்லக் கேளாய் நீ யொட்டா

2950 அரசியல் லாபத்துக்காக மணம் செய்து கொண்டு பல அரசகு குமரிகளை அடைத்துப் போட்டிருப்பது போல கன்னடியன் மகளையும் செய்யலாம் என்று காலிங்கன் சொல்லுகிறான்

அத்தரழகிய சொக்கனுதர் தாமும்
கால் மாறியாடும் மதுரைப் பதியில்
முத்து நகைப் பெண் கொடியா ளொருத்தி
மும்முலைத் தடாதகை யென்றிருந்தாரே
மும்முலைத் தடாதகையை கைக்கொள்ளுமென்று
மூன்று புவியிலும் ஒருவரில்லாமல் மும்முலைத்
தடாதகைக் கொண்டேயளிக்
அழகிய சொக்கனுதர் தானுக வந்து
மாலையுமீட்டுக் கலியாணஞ் செய்து
வையகம் புரிந்தரசாண்டிருந்தாரே
சோலையுற்ற விழி மும்முலைமங்கை
திருவயிறு தன்னிலே கெர்ப்பந்தரித்து
சித்தமுடன் சூல் கொண்டங்கேயிருந்து
திங்களு மாதமும் சென்றதன் பின்பு
பத்து மாதஞ் சுமந்தொரு பாலகன்
பன்னிரண்டு வருஷமாயிருந்தாரே
ஆலத்தையமார் தோழனும் வந்து
அழகிய சொக்கனுர் தானுகவந்து
கோலத்திரு வயிறு மொய் நேனுக நொந்து
கூன் பாண்டியன் தானும் வந்து பிறந்தாரே
வந்து பிறந்து வளர்ந்து முடிசூடி
வையகமாண்டு இருந்ததின் பின்பு
இந்த உலகம் பிழைத்திட வேண்டி
ஆற்றதோர் சேரருஞ் சோழப் பெருமாளும்
சிந்தை மகிழ்ந்துள்ளம் வித்து விதைவாங்கி
தேவந்திரத்தில் செல்லுகின்ற நேரம்
செல்லுகின்ற நேரத்திலே செலத்தைக் கேட்ட முதுக்கிழவி
பல்லும் விழுந்திரு கண்ணு மிருண்டு பார்மன தடி ஊன்றி

2970 மும்முலைத்தடாதகை மீனாட்சியம்மைக்கு மூன்றுமுலைகள் அவளுக்குரிய கணவனைக் கண்டவுடன் ஒருமுலை மறைந்து விடும் என்பது புராணவழக்கு. (மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்)

தேவேந்திரனிடம் சேரசோழ பாண்டியர் சென்றகதை பல நாட்டுப் பாடல்களில் காணப்படுகின்றன. பாண்டியர் மெய்கீர்த்திகளிலும் உள்ளன.

2980 கூன் பாண்டியன், மீனாட்சி மகன் என்று பரம்பரைப் பெருமை கூறப்படுகிறது.

குன்றி நடந்து தடியுமூன்றி கூன் கிழவி அவ்வையாரு
முந்தியவ னெதிரே வந்து முடக்கிடாய் போலே செரு
இந்த நேரமக்கா நீங்களெங்கே போறீரெனக் கேட்டாள்
வன்கிழவியது சொல்லவே மன்னவர்களேது சொல்வார்
மின் பயிலும் மழையும் வித்தும் வேண்டுமென்று சம்மதித்து
பதவியுள்ள தேவேந்திரன் பக்கத்திலே போறோமென்றார்
உதவியுண்டு நமக்குமினி உற்றதுணை நீங்களெல்லோ
தேவேந்திரன் தன்னைக் காணச் செகத்துடன் புறப்பட்டார் காண
வெளியிலே நடக்கமாட்டேன் விழுந்திடுவேன் அவை தாவி
என்னையுந்தான் புரவி மேலே ஏற்றிக்கொடு போங்கள் மக்காள்
உன்னையுந்தாம் சிவலோகத்திலே ஓசை மறப்பிடுவேனோ
முன் நடக்கமாட்டாய் நீ முதுக்கிழவி போடி என்றான்
என்று மன்னர் மூவருந்தான் இமைக்கு முன்னே வழி நடந்தார்
குன்றாத தேவேந்திரன் கோடைக்குள்ளே செல்லும் நேரம்
பொன்னின் கோட்டை வாசல் போறவழி தனிலே தூக்கி வைத்தான்

## 4. சீர் சிந்து

மன்னர் சேரனும் சோழப் பெருமாளும்
மடியாமலே யந்த வாசலிலே போனார்
தென்ன வலரந்தப் பொன்னும் பாண்டியனார்
செல்வதில்லை யந்த வாசலிலே என்றார்
செல்லவே கோட்டை மதில் கடந்துள்ளே
பையப் புரவிதனைக் கும்பிட்டேறி படியும்படி குதித்தேறும் போது
கசையும், குசையும், மிசையும் நிரத்த
காலோட்டமாக புரவி மேலோட்டமாக
திசையும் புரவியுங் குமடு மதிர
கிறத்திக் குறத்தி லெழும்பி நிக்கும்

3000 மக்கா—இளையவர்களை முதியவர் அழைக்கும் மெய்க் கீர்த்திகளிலும் உள்ளன. விளிச்சொல் (குமரி பா. வ)

3010 முதல்–3043 வரை பாண்டியன் திட்டி வாசலின் வழியே நுழையாமல் பறக்கும் குதிரை மீதேறிக் கோட்டையை தாண்டிய செய்தி கூறப்படுகிறது

திண்டாட்ட மெட்டுத் திசையிலும் செல்லும்
அருஞ்சேடன் முதுகு நெளிக்க மிதிக்கும்
மண்டிப்புரவியவளை தெண்டாவதெங்கே
எனச் சென்று தேடும்
தேடுஞ் சூளமரம் பொடியாகத் துவைக்கும்
அண்டர்கள் கண்டு நடுக்கமிடவே
ஆகாசம் தூசி படரமிதிக்கும் என்று மன்னர் மூவருந்தான்
யிமைக்கு முன்னர் வழிநடந்தார் குன்றாத தேவேந்திரன் கோட்டைக்குள்ளே
பொன்னின் மிதியடியைக் கோட்டை வாசல் செல்லும்நேரட
போற வழி தன்னிலே தூக்கி வைத்தான்

வேறு

தேவேந்திரன் தனக்கு மட்டாக
செல்லவே கோட்டை மதில் கட ந்துள்ளே
பையப் புரவி தனக்கும் கும்பிடறபடியும்
பயிலும் குதித் தேறும் போது
சென்றால் கயலும் பொருத்ததோர் மன்னன்
செல்லாது அந்தப் புரவியே என்று
திருமுடிச் சரத்தை அவிழ்த்தங்கெறிய
எழுந்து மதிலைக் கடந்து அந்தப்புரத்தில்
எல்லோரும் கண்டு அதிசயமாக
விழக் கண்டு தானந்த தேவேந்திரனும்
வேகித்து கோபித் திருக்கின்ற நேரம்
வானவர்கோன் தன்னருகே வழியில் கண்ட கூன்கிழவி
தானிருந்து கவிபாடித் தனித் திருந்தேது சொல்வார்
வந்தீர்களோ நீங்களப்பா மாறாப்பு போட்டீர்களோ

3046 மாறாப்பு—மார்பின் மீது ஆணும் பெண்ணும் துணி அணியக் கூடாதென்று நாடார்களை, திருவிதாங்கூர் மன்னனும் நாயர்களும் கட்டுப்பாடு செய்திருந்தனர். கிறிஸ்தவ மிஷனரிகள் பள்ளிகள் ஆரம்பித்த பொழுது நாடார்கள் இதனை மீறினர், அதற்கென்று வேண்டும். ஓர் போராட்டம் நிகழ்ந்தது. நாயகர்களும், அரசும் நாடார்களை இழிவு படுத்தி மாறாப்பை அவிழ்த்தெறிந்து கலகம் செய்தனர். தாம் பிறருக்குச் சமம் என்ற எண்ணத்தில் நடத்திய இப் போராட்டத்தின் நினைப்பாகத்தான் பாண்டியன் மாறாப்பு போட்டு சென்றான் என்று நாட்டுப்பாடல் கூறுகிறது. இப் பாடல் குமரி மாவட்டத்தில் பரவியிருக்கிறது என்பதை நினைவு கூருகிறது.

அந்தவழி நீங்கள் வந்தீர் அருமை யென்று மவள் சொல்ல
வழியில் கண்ட கூன் கிழவி வந்ததென்ன மாய மென்றால்
மொழி கேட்டவ்வையாருந் மூவர்க்கு மேது சொல்வார்
மதுரை மன்ன பாண்டியனே வார்த்தை யொன்று சொல்லக் கேளாய்
குதிரைக்குத் தான் காதவழி கூனிக் கிழவிக்கொரு நாழிகை
வண்டமிழ் சேரவ்வையாரும் வார்த்தை சொன்ன நேரத்தில்
கண்டார்கள் மூவருந்தான் கண்ணாயிரம் படைத்தோனை
பண்டு முன்னாளில் பலவகைப் பச்சை மரகதம் பதித்த பலகை
சங்கந்தன்னில் வந்த பலகை சர்வேசுரனாரிருக்கும் பலகை
எங்கும் புகழ் கொண்ட மும்மூர்த்திகளும் யியல்புடன் வந்திருக்கும் பலகை
செம்பொன்னாலே சமைத்த பலகை தெய்வீகமான பலகைகள் மூன்று
உம்பர்க் கிறையோன் கொடுத்திடவே உற்ற சேரனும் சோழப் பெருமானும்
தாங்கள் கடக்கப் பலகையைத் தலை பொரூதென்னத் தரைமீதிருந்தார்
ஓங்கும் புகழ் கொண்ட பாண்டியன் தானும்
மல்லகாமல் பலகை மீதிருந்தாரே
இருந்த பொழுதந்த தேவேந்திரனும்
ராசாக்கள் மூவரையும் முகம் நோக்கி
விருந்து சமையுது உங்களுக்கென்ன விரையக் குளித்தோடி வாருமென்றார்
சென்று திருமஞ்சனமும் போலிருந்து தேவாரமும் கூட்டிவார நோத்திலே
அன்று சுரையிலை தன்னைப்பறித்து யாருமறியாமலே வைத்துக் கொண்டு
செந்தமிழ்ப் பாண்டியன் அந்நேரந்தானும்
சிந்தை கலங்கா திருந்தது கண்டு
பந்தியிருந்துண்ண வேணுமென்று பனிங்குமா மண்டபத்தின் மீதிருந்தாரே
இருத்தி கலன்களும் பொன்னாலே வைக்க
யிவன் தான் சுரைமாலை தன்னைப் பறித்து

2980 முதல் 3020 வரை—தேவேந்திரன் பாண்டியன் மீது கோபங் கொண்டு அவனுக்குத் துன்பம் விளைவிக்கப் பூதங்களை அனுப்பினான். பாண்டியன் பூதங்களுக்கு வேலை கொடுத்து அவற்றை ஏமாற்றிவிட்டான்.

கருத்தின் படியும் தேவேந்திரன் தானும்
கரிசோறு மெத்த விளம்பவே கண்டு
மீச்ச சோறு வைத்திடாமலே யுண்டுவிட்டு
வேந்தரிருபேரும் பேசியே வைத்தார்
எச்சியெடுத்து வெளியில் வரும் யிவர்தான்
சுரைமாலை தின்று விட்டாரே
தின்று போட்டந்த பாண்டியரும்
சிந்தை கலங்காதிருந்தது கண்டு

அடி வேறு

நன்று கேட்டேனென்று தேவேந்திரனும்
நகைத்துப் பகைத்து யிருக்கின்ற நேரம்
சேரனுக்கும் சோழனுக்கும் தேவேந்திரனென்று
திட்டெனவே மழையும் வித்தும் சென்னல் விளைவதும்
வாரமுடனே கொடுத்துப் போகவிட்ட பின்பு
மடியாமலங்கிருந்த பாண்டியனார் தனக்கு
ஆயிரம் பேர் கிங்கிலிய ரெடுக்க வொண்ணாத
ஆபரணந்தன்னைக் கழற்றி யவர்கழுத்தில் போட்டால்
தாயபுரம் கொண்ட பழைய கூனதுந் திருத்தி
தனியாரந் தன்னை வைத்துப் போற்றி விட்ட நாளில்
போற்றிவிட்ட நாளிலந்த சேர சோழன் தனக்கு
பொய்யாமல் மாரியெங்கும் பொழிந்திடவே கண்டு
தெய்வ பாண்டியரும்
சூழ்ந்துவிட மேகந் தன்னைக் கண்டு
சூதானமாய் விலங்கிலிட்டு வைத்த போது
செத்தாயமா கயந்த தேவேந்திரனென்று
சேர்ந்த பூவாயிரந்தன்னை வரச் சொல்லி
மாற்றவர்கள் ஒவ்வாத பாண்டியனுக்கப்பால்
மடியாமல் வேலை செய்து வாருமென்று விட்டார்
வேலை செய்ய வேணுமென்று மன்னர் மூன்றுபேரும்
கட்டு மட்டாயங்கிருந்த பாண்டியர் தனக்கு
விட்ட விட்ட பூதமெல்லாம் பாண்டியனைக் கண்டு
வேலை கொண்டு சோறுதர வேணுமென்ற போது
கண்ட கண்ட குளங்களெல்லாம் வெட்டிவைத்த போது
குற்றமின்றி நம்முடைய கோடி கொட்டந் தன்னிலே
குப்பை சரகு புரக்கிப் போட்டு வாருமென்றார்

2997 சேர சோழருக்கு வித்துக்கள் கொடுத்தான். பாண்டிய னுக்குக் கொடுக்கவில்லை

இற்றவரை என் கணக்குயுங்களுக்குச் சோறு
ஏவிவிட்ட போதிலந்தப் பூதமெல்லாம் சென்று
ஒரு தலையிலே புரக்கி ஒரு தலையிலே வருமுன்
ஒக்கப் பண்டு போலு திர்ந்து குப்பைச் சருகு கிடக்க
இத்தனையுந்தான் புரக்கிப் போக வென்ற நேரம்
எங்கே நின்றோ பின்னு மொருதுரும்பு வந்து விழுமாம்
அந்தி யளவும் புரக்கி யலுத்ததின் பின்பு
அறப் பசித்தோம் சோறு தரவேணு மென்று கேட்க
இந்த நேரமுங்களுக்கு இன்னமொரு வேலை
எளிதான வேலை சொல்லக் கேளுமென்று விட்டார்
மாச்சவில்லை யுகங்களுக்குக் கடலருகே சென்று
வாரதிரை தன்னை யெண்ணி வாருமென்று விட்டார்
ஏத்ததென் றறியாமல் பூதமெல்லாம் சென்று
எண்ணத் துலையாமல் கண்ணைக் கண்ணை வழிக்க
கூச்ச மின்றிப் பின்பு வந்து சோறு கறி கேட்க
கூறிவிட்ட வேலையில் குறைகிடக்கு தென்றார்
ஆச்சே காரியமெனவே பூதமெல்லாங் கூடி
அப்பொழுது தேவேந்திரன் பின்னமொரு வார்த்தை
சென்று சொன்ன வார்த்தை கேட்டுத் தேவேந்திரன் தானும்
தென்னவன் தன் நாட்டினில் விளைந்த பயிரெல்லாம்
ஒன்றுங்கிடையாமல் ஒழித்துப் போடுமென்றார்
ஓட விட்டங்கொரு வெள்ளானை தன்னை
உற்றதொரு வெள்ளானை யழித்திடவே கண்டு
அழித்திடவே கண்டு தெய்வப் பாண்டியுன் தானும்
அந்த நேரத்தில் வெள்ளானையை யடி பார்த்துச் சென்று
ஒளிந்திருந்து யான்பிடிப்பேனென்று சொன்ன போதே
ஓடிப்போனா் வெள்ளானை பாரிலொளித் திடுமாம்
மறுத்துமந்த தேவேந்திரன் வெள்ளானையைக் கொண்டு
வையகத்திலுள்ள பயிரெல்லாம் அழித்திடவே
குருத்து நின்ற பாண்டிமன்னன் முன்னுகை வாள்தன்னை
கொண்டெறிய வானவர் கோன் கொடுமுடியில் படவே
எதிர்த்து நின்ற தேவேந்திரன் தானொன்று செய்யாமல்
இந்திரமா ஜாலமிட்டு யந்திரத்தே போனான்

3117 புரக்கி-பொறுக்கி (நெல்லை குமரி—பா.வ)

3120 முதல் 3045—பாண்டியன் பூதங்களை வேலை செய்ய வைத்த கதை.

3140 முதல் 3050 வரை வெள்ளானை பாண்டி நாட்டில் பயிரை அழித்தல்.

மறுத்து மந்தப் பாண்டியனும் வெள்ளானையை யன்று
வதைத் திடுவேனென் றுடை வாளுருவிச் செல்ல
துதிக்கை எடுத்தேதொழுது வெள்ளானை யன்று
சொக்க நாதர் மகன் நீயென்று தொழுதிரைஞ்சி நிற்கும்
தொழுதிரைஞ்சி யங்கு நின்ற வெள்ளானை யன்று
துங்க முடிப் பாண்டியனு மங்கேது சொல்வான்
மாத்திரைப் பொழுதிலே தெய்வப் பாண்டியனும்
வெள்ளை வாரணத்தின் மேலேறிச் செல்லுகிற நேரம்
என் மிகவே பயிலும் எற்றிசையும் சூழ்ந்து நிற்க
வானவருந் தானவரும் மறையோரும் இரருசிகளும்
அரம்பை மார்களெல்லோரும் ஆலாத்தி ஏந்தி நிற்க
சாம்பயிலும் விழிமடவார் சாமரைகள் போட்டிடுவார்
நாம் பயிலும் நாடகமும் நாக சுரங் குழலுடனே
கடுகக் கிடுபிடியுடனே கடுமையோடு தடக்கை
முரசு துடிபட முழங்கி யெங்கும் சேவிக்கவே
இந்திரன் தன் பவுஜையெல்லாம் எனக்குக் காணவேணும்
சந்திரன் வந்து தித்தெதென தாழமணிக் குடை விரிக்க
பளிங்கு மா மண்டபத்தே பத்தியுள்ள சிங்காசனத்தே
ஒழுங்கு பெற வீற்றிருந்தார் ஓலக்கால் மண்டபத்தே
அப்படியே தானிருந்த தெய்வேந்திரன் முன்னே
அயிராவதத்தின் மேலேறிக் கொண்டு சென்ற போது
செப்பமுடன் கண்டிருந்த தெய்வேந்திரனன்று
தெய்வப் பாண்டியரென்று தீரஅறிந்தாரே
அறிந்ததற் பின் மழையும் வித்துமூன்று முதல் வாங்கி
ஆரவேயவர் கொடுக்க அன்று வாங்கிக் கொண்டு
சிறந்த முத்தின் பலகை சங்கப் பலகைகளுங் கொடுத்து
தேசத்திலில்லாத சிறப்புடனே தான் வாங்கி
இருத்தாலொரு வித்தெடுத்துங் குருணிவித்துங் கொடுத்து
கொற்ற முடி வைத்திமாலைக் கோர்வை கருங்கொடுத்து
பிரிந்து வந்து தென்மதுரை தன்னிலேயிருந்து
பிள்ளையுந்தான் நாட்டவர்கள் தங்கள் பிணையாக
தேசமெங்குங்குந் திங்கள் மும்மாரி சொரிந்திடவே
திட்டெனவே மேகந்தன்னை மாட்ட விலங்கவிழ்த்து
நேச முடனங்கிருந்த தெய்வ பாண்டியரும்

3050 முதல் 3060 வரை பாண்டியன்யானையை அடக்குதல்
3070 முதல் 3090 வரை தெய்வேந்திரனிடம் வெள்ளையானை மீதேறிச் சென்று பாண்டியன் வித்து வாங்கிவந்த கதை சொல்லப்படும், சேர சோழரினும் சிறந்த பாண்டியன் கன்னடியன் குலத்தில் பெண் கொள்ளுதல் கூடாது என்று காலிங்கன் கூறுகிறான்.

நெடுநாளாய் ராச்சியத்தை யாண்டிருந்தாரே
அந்த மரபிலுதித்தவரல்லவோ ஐவரில் குலசேகரர் தானும்
சந்தேகமல்லவே கன்னடியன் மகளை
தானாகிய தொரு பாண்டியன் கொள்வதும்
வ்ந்த வழியுனக்குத் தூரமோ சொல்வாய்
மடியாமலோடி நீ போடா நீ என்றார்

குலசேகரனுக்கு ஒற்றன் பதில்

அந்த மொழி கேட்டு கன்னடியன் ஒட்டன்
ஏறுமாறி ஒரு வார்த்தை இப்பொழுது சொல்வான்
வானஞ் சூழ்ந்த வையகந் தனிலே
மாட்டோமென்றால் ஓரிடமிருக்க வொட்டானே
நான் சொல்லவில்லையென்றிருக்கவும் வேண்டாம்
நாசம் வருகிறது உங்களுக்கிப் போ
எதிர்த்துப் பொருவோரும் நீங்களோ கேட்டேன்
தோற்றதும் உங்களைச் சுகித்திருக்க வொட்டான்
சூழ்ந்தே உங்களுக்குத் தொடர்ந்து வினைதான்
சொன்ன பொழுதந்த காலிங்கன் சொல்வான்
தாழ்ந்து உரைத்தமொழி கண்டல்லோ நீயும்
தலைக்குமேல் ஏறிக்கொண்டாய் ஒட்டா
ஆண்டவன் உன்னுடைய நாயகனை யிங்கே
அம்பில்போர், சொல்லடா ஒட்டா
வேண்டாத வார்த்தை உரைத்திடுயோயாகில்
வெட்டிமடியும் மெத்தக் கொண்டல்லோ போவாய்
கொண்டல்லோ போவாய் என்றமொழி கேட்டு
கூசாமலேயந்த ஒட்டனுக்குச் சொல்வான்
பண்டல்லோ நீங்கள்தான் வெட்டி விட்டங்கே
பாருங் கொண்டிருப்பது கேட்டேன்
நண்டுகண்ட குரங்கதுபோல் தானேதுங்கி
நஞ்சு விடும்படி வெட்டி விடுவானே
கூசாமலேயந்த ஒட்டனுஞ் சொல்ல

குலசேகரன் பதில்

குலசேகரப் பெருமாள் ஏது மொழி சொல்வார்
மூர்க்கமாய்ச் சொல்ல நீ வந்தாயோ ஒட்டா

3211—நஞ்சு—நைந்து பாமரவழக்கு—தலைக்குமேல் ஏறு.
(பா. வ) குமரிமாவட்டம்
ஏறுமாறு—ஏறுக்குமாறு—மறுத்துக் கூறல்

முடிவு காலத்துக்கு வந்தாயோ ஒட்டா
ஆஸ்தானந்தனிலே நீ சொன்ன வார்த்தையில்
ஆகாத வார்த்தையனேக முரைத்தாய்
வார்த்தை விட்டு வார்த்தை கேட்கவும் வேண்டாம்
வாசலடைத்து அவனைத் தள்ளிவிடும் என்றார்.
ஏவிவிட்டாரே குலசேகரர் தான்

ஒற்றனை வெளியே துரத்துதல்

பின்னு மூன்னாக உருட்டியவனை
புடதியைப் பிடித்து அவனைத் தள்ளி விட்டாரே
வீணுக்கு நாமும் வந்தோமே என்று
வீரன் திரு நீலகண்டன் வீட்டில் சென்று
ஊக்கமுடன் கைமேலோடுவானும் ஒட்டன்

4 சீர் சிந்து

ஒப்பத்துடனே நடந்து தொக் தொக்கெனவே ஓடி
ஓடிக் கயத்தாறும் கடம்பூரு வழியும் கடந்து
உற்ற தொரு கழுகு மலைக் குருவி குளம் கடந்து
தேடி ஸ்ரீவில்லிபுத்தூர் தென் மதுரையும் கடந்து
திருச்சினாப் பள்ளி விட்டு செட்டி குளமும் கடந்து
காற்றிலும் கடிதாயோடி காஞ்சிபுரமும் கடந்து
கன்னடியன் சீமைக்கு கடுகெனவே சென்று
சித்தமுடன் அங்கிருந்த கன்னடியன் முன்னே சென்று
செங்கையினாலே தொழுது செயதியெல்லாம் சொன்னான்

ஒற்றன் கன்னடியனிடம் சொல்வது

கன்னடியன் அச் சொல்லைக் கேட்டபோது—மன்னா
காவலவன் பாண்டியனுரைத்த மொழி கேளாய்

4 சீர் சிந்து

உன்னையொரு சற்றுங் கணியாமலே தான்
ஓடிப் படைக்கு வரச் சொல்லென்றானே
என்னையங்கே விட்டு நான் பட்டபாடு
ஏட்டிலே பூதத் தலைதுமையாது ஐயா
கொள்ளாத சிங்கியும் கோரணியும் கொண்டு

3241 ஏட்டில் பூதத் தலையை வரைய முடியாததுபோல
3242 கோரணி—அலங்கோலம்

கோட்டியனேகங் கொண்டல்லோ விட்டார்.
தள்ளெனத் தள்ளியே வம்புகள் செய்து
கனமாழயக் கேடு அனேகம் கொடுத்து
அடாப்பழி போலே என் மேலே நெருங்கி
ஆகாத வார்த்தை அநேகம் பறைந்து
படாதபாடு அனேகம் படுத்தி,
பரிசு கெடுத்தென்னை விட்டு விட்டானே.
அந்த நேரத்திலே கன்னடியன் தானும்
ஆலகால விஷம் போல கோவித்து

படை திரட்ட ஆணை

இந்த நேரத்தில் படை போகட்டெனவே,
எட்டுத் திக்கும் பறையறிவித்தான்,

படை திரளல்

தம்பட்டந் தவில் பேரிகை துந்துமி
தகட தன்கை தடக்கை கிடுபிடி
கெம்பிட்ட திடிமன் ஏத்த தம்பட்டம்
கிடுபிடியுமங்கே உடுக்கையோடு கையும்
கொங்கு தாரையும், சங்கு நவுரியும்
கொட்டும் பேரிகை யொட்டிய மத்தாளம்
சிம்பியெங்கும் பறந்து நெருங்கிட
சேரவுள்ள படைகளை யேவினன்
பாயும் பரியும் கரிகளும் சேனையும்
பாரிலெங்கும் பரந்து பெருகிட,
தார்கையென்னக் கடல்கள் சுவரவே
தூசியாகாசம் எங்கும் மறைக்கவே
சேருவைகாரரும், யானை ராவுத்தரும்,
இங்காரக்கட்டுக் கட்டியிலுக்கியே
ஓட்டமாகப் படை யோடிச் செல்லவே
ஒக்கவுள்ள படை மன்னர் ஆழவே
கோட்டை வாசல் தனைக் கடந்து செல்லவே.
கொள்ளை வெள்ளம் உடைத்தது போலவே
நாட்டிலெங்கும் படைகள் பரவிட
நாலுதிக்கும் இடங்கிடையாமலே
காட்டு வாயும் கடந்து அப்புறத்திலே

3249—பரிசு கெடுதல்—மரியாதை இன்றி நடந்து கொள்ளுதல் (நெல்லைப் பாமர வழக்கு)

3552—போகட்டு—போகட்டும் (குமரி வழக்கு)

கன்னடியனும் காதவழி செல்ல
சென்ற போதந்த கன்னடியனோடே
சிறந்த சோதரி தானோடிச் சென்றங்கே
ஒன்று கேட்டுப் போ எனச் சொல்லி
உற்ற கன்னடியனுக்கு உரைப்பாறனாம்.

சகுனம்

பருந்தும் இடம் பாயுதடா, பன்றியிடம் பாயுதடா
இருந்து ஆந்தை புலம்புதடா இட்ட முசல் சருக்குதடா
பட்ட கொம்பின் மேல்க் கெவுளி பலபலெனச் சொல்லுது
கோட்டான் தான் கூப்பிடுவது கொடியிடத்தே பாயுது காண்
காட்டானை கத்துது காண் கன்னடியன் போற வழி
கெட்டானே கன்னடியன் கெவுளி சொல்லும் பலனையெல்லாம்
தாடாண்மையால் சினத்துத் தள்ளிவிட்டுப் போர நேரம்
மன்றாடிச் சொல்லுவாரும் வாசலுக்குள் சோதிரியும்
குன்றாத சோதிரியும் கொற்றவரோடேது சொல்வான்
சொன்னாலும் பலியாது சேனையெல்லாம் சிந்திவிடும்
வள்ளியூரிலிட்ட கோட்டை வரம் பெற்ற கோட்டையது
தள்ளி வெல்ல வொண்ணாது தாரரசரிட்ட கோட்டை
சோதிரி போல் மறைந்து நிற்பேன் சொல்லி விட்டால் வாருமையா
மல்லி வருதிண் பயனே வரவிடு வேனுள்ளோலே
கன்னடியன் சோதிரி தான் காரியமாய்ச் சொன்ன போது

சோதிடன் வள்ளியூருக்கு வருதல்

தந்திரமாய்ச் சோதிரிக்குத் தண்டியலுந்தான் கொடுத்து
சட்டைக் குல்லா தானுமிட்டுச் சவடி வளையலிட்டு
அட்டதிக்கும் புகழ நல்ல யலங்காரம் பணியுமிட்டு
எண்டிசையும் சோதிரியை ஏவி விட்டான் கன்னடியன்
பண்டு போலே கன்னடியன் படை வீட்டிலேயிருக்க
படை வீட்டி லவரிருக்கப் பண்பான சோதிரியும்
நடையோட்டமாய் நடந்து நாடெல்லாந்தான் கடந்து
அரசர் மன்னர் வீற்றிருக்கும் ஆன வள்ளியூர் தனிலே
விரைவுடனே விடுதிவிட்டு விடியு முன்னே தானிறங்கி

3279 கன்னடுயன் சோதிடன் துர்ச்சகுணம் கண்டு தடுத்தல்.
3280—3286 துர்ச்சகுணங்கள்

### காலிங்கனைச் சந்தித்தல்

ஒரு வீட்டில் வைத்துச் சினேகம் செய்து
ஒருமையுடன் சொல்லுவாராம் வாசலுக்கு மூத்த
தொரு மந்திரியைத்தான் சோதித்து
வீரமுடன் காலிங்கன் தன் வீட்டிற்கு செல்லுவான்
சென்று நின்ற சோதிரிக்குச் சினேகமுடன் சொல்லுவானும்
அன்று நன்று யாசனமிட்டு யாரென்று கேட்டபோது
கெங்கை தென்குமரி மட்டும் கீர்த்தியுள்ள மந்திரியை
கங்கை தனக்கப் புரத்தே கடுகவொரு மாஸ்த்தை வழி
அங்கிருந்து வுன் கீர்த்தி ஆரவாரங் கேட்டு நானும்
ஆக்கமுடனிங்கு வந்தேன் அமையுள்ள சோதிரி நான்
வாசலுக்குள் சோதிரியாய் வருவதெல்லாஞ் சொல்லி நின்றேன்
நேசமுட னென்னையுந்தான் நிறுத்திவைக்க வேணுமென்றான்
அப்படியே தானெனவே அடுத்தநாள் வரச் சொன்னான்
பித்தா நாள் விடியுமுன்னே புலருமுன்னே சென்றபோது
இஷ்டமுடன் காலிங்கன் தன் ஏகாந்த கூட்டத்திலே
சென்றிருந்து புரசம் வைத்துச் செப்புவானும் சோதிரியும்
நாலிரண்டு புரசமெல்லாம் நலமாக ஒத்தபோது

### மன்னனிடம் சோதிடனை அழைத்துச் செல்லல்

மந்திரியு மனமகிழ்ந்து மஞ்ச விலங்கிட்ட மன்னன்
தன் திருமுன் கொண்டு சென்று தனித்து யிவன் ஏது சொல்வான்
வடக்கே நின்று வந்தவன் காண் வட சோதிரியிவனும்
குடைக்கு நல்ல பாண்டியனே குலசேகரப் பெருமானே
படைக்கு நல்ல சோதிடங்கள் பறைய நல்ல சமத்தனிவன்
அடக்கி நின்ற சேவகத்தை யளவிட வேணுமென்றான்

### பாண்டியன் பரிசளித்தல்

பரிசமுடன் காலிங்கனும் பேசும் வார்த்தைதனைக் கேட்டு
வரிசையுடன் குதிரை கொண்ட மாணிக்க மாலையிட்டு
கைக்கு நல்ல வளையலிட்டு கனக தண்டியல் தான் கொடுத்து
மெய்க்கு நல்ல தண்டையிட்டு மேல் சிறந்தக் குல்லாயிட்டு
சேவுகனு மனுவுமிட்டுச் செயல் ஒன்று மறியாமல்

3308—சோதித்து—கேட்டு (மலையாளம்)
3312 மாஸ்தைவழி— 36 மாதப் பயணம்
3318 பித்தா நாள்—மறுநாள் (நெல்லை குமரி பா-வ)

காவலவன் பாண்டியனும் காலிங்க வில்லவனும்
துரையுடனே யுண்மையது சொல்லி வந்த சோதிரியும்
இருப்பவணையுந்தான் கொடுத்து யிருத்தி வைத்த நாளதிலே

## சோதிடனின் சோதிடம்

பெரும் படையில் கன்னடியன் பெண் கொள்ளாதே யிருக்கில்
வரும்படை தானிங்கே யந்த வள்ளியூர்க் கோட்டை தன்னில்
சிநேகமுள்ள தம்பிமாரும் தெய்வ குல பாண்டியரும்
வினை வருமே யென்று சொன்ன விசேஷ மதைக் கேட்டபோது
நினைவின் படி வந்ததென்று நிறைவிட சோதிரியும்
மழை முகிலை விலங்கிவிட்ட மன்னன் பொன்னு பாண்டியனே
பழைய தமிழறிந்த தெய்வப் பாண்டியாரே ஒன்று கேளீர்
கோட்டையிட்ட நாள் தொடங்கி கொடியார்களொருத்தன் வந்து
தொட்டியிங்கே பொருவதுண்டோ தோறுமல் பொருவதுண்டோ
படியதிலே நல்ல தாரை பரிந்து தெற்கே தான் கிடக்க
கெடுதியிலே கோட்டையிட்டு கிடக்குதல்லோ பாண்டியரே
சடுதியிலே கோட்டை தன்னைத் தான் பரித்துத் தெற்கில்
வெகு வாய்ப்படை வரினும் வெல்ல வொண்ணு தொருவருக்கும்
மிக்கதொரு வடக்குமதில் மேல் கீழ் மதிலதையும்
ஒக்கவுந் தானெடுக்க வேண்டாம் உமக்குறுதி சொல்லுகிறேன்
தெற்கு மதிலொன்றையுந்தான் செலுத்தித் தெற்கே பறித்திடுகில்
உனக்கு வினையில்லை மன்னு நொடிக் குள்ளிடவேணு மென்ருன்
இடவேணும் பறித்துத் தெற்கே என்று வட சோதிரி சொல்ல

3344 —தொட்டி—இது தெலுங்கரைக் குறிக்கும் ஏளனச் சொல்
3350 —3351—கன்னடியனது ஒற்றனை சோதிடன் தெற்குமதிலை இடித்துவிடச் சொல்லுகிருன். அதைக் கேட்டுக் கோட்டைக்கு கேடு வராமலிருக்கக் கோட்டைச் சுவரை இடித்துவிடக் குலசேகரன் உத்திரவிட்டான்.

கெடுமதி தானறியாமல் கெட்ட வார்த்தை தான் கேட்டு
முடி பொருத்த பாண்டியரும் முப்பத்திரண்டு தண்டேறிகளும்
கடுகவங்கே செல்லுவாராம் கள்ள சோதிரிச் சொல்லைக் கேட்டு
கேட்டபோதே அரசனவனும் கேடு வந்தாப் போலிளகி
ஓட்டமும் நடையுமாக யுடை குலையத் தலை குலைய
வாட்ட மில்லாப் பாண்டியரை வந்து கண்டங்கேது சொல்வான்
முத்தார மாலை மார்பா முடிபொறுத்த பாண்டியரே
கொற்ருருங் குழலான குலசேகரப் பெருமாளே
பத்தான சனி பிடித்துப் பதிகுலையு நேரத்திலே
பிழையறியாமல் கோட்டை தன்னைப் பிடுங்க வென்று சம்மதித்து
அலங்கார மாளிகையும் அளவில்லாக் கரு வேலமும்
கலங்காத சேனைகளும் கட்டுமட்டுங்குலைக்க வேண்டாம்
சொல்ல மாற்றஞ் சொல்லி வந்து சோதிரி சொல் கேட்க வேண்டாம்
என் வார்த்தை கேட்டருளும் பாந்தமொரு காரியத்தில்
வாய்த்ததொரு மன்னவனே வருகுது காண் வினையுமக்கு
கோட்டை தன்னைப் பிடுங்க வேண்டாம் கொற்றவரே பாண்டியரோடி
ஈசன் விதிப்படி தான் இக்கழுமம் விளைத்ததெல்லாம்
மாறிவந்த வயனவனும் மறு வார்த்தை சொல்லக் கேட்டபோது
சீறி வட சோதிரியும் சினத்தங்கெனச் சொல்வான்
வாத்து வத்தரை தனிலே வடக்கே தள்ளிக் கோட்டை வைத்தால்
சாத்திரங்கள் பறைய நல்ல சமர்த்தனு யிருந்து கொண்டு
வாச மொத்த மாலைமார்பன் மன்னவனும் காலிங்கனும்
அறுபேருங் கத்த வேண்டாம் என்று சொன்ன மொழி கேட்டு
வரிசையுள்ள வயனவரும் மன்னவனுக்கேது சொல்வான்
ஆசனத்தை யிழக்க வென்றோயவன் வார்த்தை
நேசமுற்று வயனவனும் நெடுக கேடகலுற்றீர் என்று தான் விழுந்து

3360 — 3370 வயனவன் என்னும் அமைச்சன் கோட்டைச் சுவரை இடிக்க வேண்டாமென்று சொல்லுகிறுன் குலசேகரன் கேட்கவில்லை.

விழுந்து கும்பிட்டெழுந்திருந்து விளம்புவானு
மோர் வார்த்தை
கொழுந்துவிட்ட கீர்த்தியனே குலசேகரப் பெருமாளே
எண்ணி நின்று சொல்லுகிறேன் இக் கோட்டை
பறித்திடுகில்
கன்னான சேவகரை காவலிலே வைப்பதொக்கும்
மாருக மாரீசனை வனத்திலே போகவிட்டு
கூனி சொன்ன காரியம் போல் குறுகுது காண் உன் வாழ்வு
சொன்ன சொற் கேளாமல் சோதிரி சொல்தனைக் கேட்டு
சொல்ல சொல்லத் தள்ளிவிட்டுத் தெற்கு மதில்
பிடுங்குவாராம்
பின்னையிந்தான் தள்ளத் தள்ள பிறகே நின்றென்
சொல்வான்
என்னையுந்தான் கொன்றிடினும் இன்னமொரு
வார்த்தையுண்டு
எழுதறியக் கோட்டை தன்னை எடுத்துத் தெற்கே
பறித்திடுகில்
பழுது வத்த கோட்டையிட்டு ஐவர் படுவதும் நிச்சயமே
தொழுது நின்ற வயனவனைத் துணிந்தவனைத் தள்ளிவிட்டு
அழுது கொண்டு மீண்டு போனான் அவர்கள் கோட்டை
யிடித்து விட்டார்
கோட்டை பிரித்திட்ட போதே கொடுமையுள்ள சோதிரியும்
நீட்டெழுதிப் பிரியமுடன் நிண்ணயமாய்க் கடடுங் கட்டி
நினைத்த காரியங் கண்டோ மென்று நின்ற

சோதிடன் கன்னடியனுக்கு சோதிரி மனமகிழ்ந்து ஓலையனுப்புதல்

விள்ளாம லொருவருக்கும் மிகுந்த படைக்
கன்னடியனுக்கும்
உள்ளாளும் ஓலையுமாய் ஓடவிட்டான் சோதிரியும்
விட்டு விட்டான் ஓட்டனவன் விரைவிலங்கே
செல்லுவானும்
ஓட்டமாகத் தானோடி யொன்றிரண்டு மாஸ்தை வழி
திட்டெனவே செல்லுவானும் செம் பொன்மணி வாசலிலே

ஒற்றன் கன்னடியனிடம் வருதல்

கன்னடியன் வாசலிலே கதவடியில் சென்று நின்று
பொன்னின் மணி மாளிகைக்கே பொற் கதவைத்
தள்ளுவானும்
தள்ளியந்த வாசலாளர் தங்களுடனே சொல்வானும்

வள்ளியூரிலே வாரெனன வட சோதிரி விட்டு விட்டான்
உள்ளோலே தானுமுண்டு யுறுதி வார்த்தை யுண்டு
மெள்ள வென்னை விட்டுவிடு விசேஷ மெல்லாஞ் சொல்ல வென்றான்
வார்த்தை தன்னைக் கேட்ட போதே வாசல் தன்னை திறந்து விட்டான்
கீர்த்தியுள்ள கன்னடியன் கிளர்ந்த மணி மண்டபத்தே
விசையுடைய மந்திரிமார் ரெண்டகஞ் செய்விக்கவே
வீற்றிருக்கும் நேரத்திலே விரையவங்கே சொல்லுவானும்
கொண்டு சென்ற ஓலை தன்னைக் கும்பிட்ட வன்கைக் கொடுத்து

சோதிடனது ஓலையை வாசித்தல்

கண்டு நின்று வாங்கியொரு கணக்கனவன் வாசிப்பானும்
வீரமுள்ள தரையைத் தள்ளி மிடுக்கான கோட்டை தன்னை
சேரக் கெடுதியிலே தெற்கே தள்ளி விட்டதுவும்
பாண்டிய மன்னர் சோதிரியும் பறைந்தெதிரே தடுத்ததுவும்
நீண்ட புகழ் குலசேகரர் நிகழ்ந்த யுரைத்ததுவும்
தாண்டி மன்னர் மிகச் சிதைத்துத் தள்ளிவிடச் சொன்னதுவும்
இட்டமுடன் கோட்டை தன்னை இடித்துத் தெற்கே விட்டதுவும்
அட்ட மத்துச் சனி போலே யழிவு வந்த காரணமும்
குற்றமில்லா வள்ளி நகர் கோட்டை கொள்ளலாமெனவே
உற்ற புகழ் சோதிரிதா னோலை தன்னைக் கண்ட போது
கடிதாக நீட்டு கண்ட கைமேலே கன்னடியன்
மடியா மலிப்போ வருகில் வள்ளியூரும் சொன்னோலையென்ன
நீட்டுடைய வாசகமும் நிண்ணயமும் கேட்ட போது
வேட்டை போலச் சினந்து வெகுண்டானே கன்னடியன்

படை திரளல்

பாங்க மதாய்க் கன்னடியன் பாண்டியன் கோட்டை கொள்ள
முரசக்கரம் துடிபடவே முத்து வல்லய முழங்க
வீர முரசு கொம்பு விருது மலருடனே தான்
பாரப் பெரும் படையை பாண்டியன் மேலேவுவானும்
அப்பொழுதே யந்தக் கன்னடியன் தானும்
ஆயிரம் தண்டேறி காரியப் பேரும்

3414 —மிடுக்கான—பலமான (மலை)
3428 —3429 வாத்தியங்களின் பெயர்கள்

இப்பொழுது வரவேணும் படைக் கென்னவே
எத்திசை தன்னிலும் ஆளோடிச் செல்ல
எல்லையில்லாதக் குதிரைப் படையும் சுத்திப் படையொரு
எண்பதினுயிரம்
அதனுல் ரெட்டி குதிரைப் படையும் சத்த சமுத்திரம்
போலே
தண்டேறிகளும் காரியப் பேரும் முத்து நகைப் பெண்
கொடியாள் கொடுத்து
முப்பதின் காதவழி யோட்டப் படையாய்

3. சீர் தொங்கல்

ஓடிப்படை கோபித் தெழுவார் கடல் பே .லே
ஊழிக் கடல் கால் கடல் போல படை யேறவே
ஆடர் பரியேறிச் சில ராவுத்தன் மார் சூடி
ஆனைத் திரள் வானத் தெழு மேகத்திரள் போலவே
வேலைத் திரைபோலப் பரிசேரப் படை சூழ
வேகத்துடன் ராவுத்தர்கள் யானைப்பரி ஏறவே
ஆயித் தெழு தூசிக் கனல் வானத்திரள் போலவே
ஆதித்திரள் தூசி மறைபாமல்க் கொடியாடவே
அடர்ந்த பணிக் குடையும் படர்ந்த சேருடிகளும்
வானத்திலெங்குஞ் சென்று மறைத்து நிழலிடவே
மல்லாரி திவிலை பேரிகை மதுடஞ் சகடை கொட்ட
கொட்டு முட்டு மத்தளங்கள் கூடித்திடிமன் முழங்க
கொம்பு தாரை சின்ன குழலெங்கு முழங்கிடவே
தொட்ட ரெட்டி மாரனேடே துலுக்கர் மலுக்கர்களும்
சோனகரும் வானவரும் துலையாத வன்னியரும்
குட்டு வரத் தொட்டியரும் குறவர் மறவர்களும்
பட்டியிலுள்ள நாயக்கரும் பதினெட்டுச் சாதிகளும்
பலச் சக்கரப் படை யும் பறந்து நெருங்கிடவே
குன்று பரிசைக்காரர்களும் குத்துஞ் சவளக்காரர்களும்
தண்டு யீட்டிக்காரர்களும் தத்தாரி விற்காரர்களும்
தந்தளத்துடனே வரும் கொந்தளச் சவளக்காரர்
பட்டயம் பலகையோடே தட்டுநூல் பரிசைகளும்
பற்ற வளையத் தோடே உருய் வழுதடியும்
சோட்டை தரிகை முப்படி காட்டாரி யிருப்புலங்கை
தோளு வலக்கை வணுனது மெடுத்துப் படை
அடர்ந்த மருந்திலையும் படர்ந்த சேருடிகளும்

3452—3455 படையிலிருந்த சாதிகள்

ஆத்துக்குள் கோரை போல யானைப் படைதான் மிதக்க
தடங்கள் கட்டைக் குத்திகள் கிடங்குங் கல்லுங் கரடுகளும்
தவிடு பொடியாம்க் குதிரை சுவடு படபடவே

ஈரடி சிந்து

அந்த நேரத்திலே கன்னடியன் தானும்
அங்கை கொட்டுங் கொட்டத் துங்கப்பரியேறி
குந்தக்காரனும் தன்னுடனே யீட்டிக்காரனும்
குட்ட வரத் தொட்டிய ரெட்டியர்களும்
முத்து மாணிக்கத்தாலே குடைகளும்
முறுக்குத் தேவாங்கு பட்டுக் குடைகளும்
பத்தி பாளம் பளிங்குக் குடைகளும்
பச்சை நீலம் பதித்த குடைகளும் சுற்றியெங்கும் பறந்து நெருங்கிட
திரை கடல் சாமரை வீசிட வெத்தி வீரமுரசு திடிமனும்
வெற் பொடிய பொடிய முழங்கவே
ஆனையாயிரம் குதிரைப் படையோடே
அன்பதினாயிரம் முன்னணியாகவே
சேனை எங்கும் நெருங்கி மிதக்கவே
சேடனு மஞ்சி முதுகு நெளிக்கவே
விண் கடந்து பறந்ததே தூசி தான்
வெய்யவ னொளி தன்னை மறைக்கவே
கண் கொள்ளாதே படையுடன் கன்னடியன்
கம்பை யாற்றங் கரையை மூடுகிறான்

4 சீர் சிந்து

கம்பை யாற்றங் கரைதனிலே கன்னடியன் பெரும் படை தான்
கெம்பி எங்கும் நிறைந்திடவே கேட்டு நின்ற ஒட்டனோடை
ஒட்டனோடி காஞ்சிபுரம் உற்ற தெல்லாஞ்
இஷ்டமுடன் கன்னடியன் இனிய
மாட்டோமென்ற பாண்டியர் மேல்

கன்னடியன் பெரும் படைதான் கட

3476—வெத்தி—வெற்றி
3487 —கெம்பி—பரவி
3490 மாறி வந்தான்—மனம் வேற்று கொண்டு

மன்னு தமிழ் பாண்டியனே பறந்தது கரண்டை போலே
கடலைப் போலே பறந்த தென்றுகண்டு வந்த ஒட்டன் சொல்ல
ஆடல் பரி மேலேறுவாரும் யதிர்த்தம் பட்டம் போடுவாரும்
கொடி படையாய்ச் செல்லுவாரும் குலசேகரத் தம்பிமாரும்
பச்சைப் பெருமாள் பாண்டிப் பெருமாள் பதினாயிரம் குதிரைகளும்
வைத்துப்போன தானையமும் யானை ஆயிரமும்
திக்கெல்லாம் புகழும் பெருமாளும் சென்ற திசை வென்ற பெருமாளும்
ஒக்க வங்கேயிருந்த படை ஓடியங்கே மறித்திடவே
காட்டுப் பாதைதனைக் கடந்து கம்பையாற்றின் வட கரைக்கே
தொட்டிச் சல்லோ பெரும் படைதான் தூசியெங்கும்
கூட்டுக்கிளி போலிருந்து குலசேகரர் தம்பிமார்கள்
ஆட்டுக் கூட்டத்தில் புலிபோலவே யப்புவாரும் படை தனிலே
வடகடலும் தென்கடலும் வந்தெதிர்த்துத் திங்களிலே

வேறு

போர் வருணனை

படை பொருவ தொப்பனவே பாண்டிய மன்னர் பொருதாராம்
சினத்தார் அரசர்களை செருத்தனர் படைதன்னை
எடுத்தனர் குழல் தன்னை நிறைத்தனர் சிலர் சிலர்
கொடுத்தனர் திரியது குடல் சந்தினர் சிலர்
வலித்தனர் கணை தன்னை மழைக் கணை சொரிந்தனர்
சலித்தனர் படைமன்னர் தனித்தனி தரித்தனர்
கோடிப்படை துள்ளிச் சிலர் கொடுத்தன ருயிர்தன்னை
இடிபட்ட மரமென வெடிபட்டு விழுந்தனர்
நடத்தினர் பரிதன்னை நகண்டனர்ப் பரி
கடல் தன்னைச் சுரிகைகள் படகுடல் சரிந்தனர்
பரிந்தனர் சில சிலர் எழுந்தனர் குதிரையில்
சொரிந்தனர் சரமது சரிந்தனர் குடலது
உடைந்தனர் பெரும் படையுருண்டனர் சிலர் பலர்
குடைந்தனர் கழுகுகள் குவிந்த பிணமது

3495—3498 குலசேகரர் தம்பிகள் — பெயர்கள்.
3501 தொட்டிச்சல்லா — தொட்டதல்லவா?

ஓடின குதிரை களோடினர் லக்குகள்
மூடின பறவைகள் காட்டின நரியது
காடுகள் தடவரை மேடுகள் குமடுகள்
தேடினர் சிலர் ஓடினர் சிலர் சிலர்
நால்வனர் சிலர் குடல் நழுவின சிலர் குடல்
குடலறுவார் சிலர், கரமறுவார் சிலர்
குமிழ விழுந்தனர், குதிரை யிழந்தனர்
திமில் மல்லாரிகள் சகடை முழங்கினர்
கதிரவனூர் படைகண்டு பறந்தனர்

வேறு

கட்டணியாகக் கன்னடியன் எதிர்த்து வந்து பெரும் படைதான்
மட்டடர்ந்த பெரும்படையை மாரெத்துப் போட்டவனும்
விட்டானே கன்னடியன் வேண்டும் பரி நூறாயிரமும்
வெண்பரி நூறுயிரமும் வெடிபடை நூறுயிரமும்
செம்பரிசை கரும் பரிசை சேர்ந்த வில் நூறுயிரமும்
கம்பமதயானை காலாளும் முன்னணியாம்
சேம்பொன் முடி பாண்டியன் மேல்
சினந்து விட்டான் பெரும் படையை
தங்களிலே எதிர்த்தற்குச் சற்று நிகர் சொல்லுவதோ
கடல்கள் ரெண்டும் எதிர்த்ததென்ன கல்மாரி பொழிந்த தென்ன
படைகள் ரெண்டும் தொட்டுச்சல்லோ பண்டு போலே தான் நெருங்கி

4. சீர் சிந்து

அணி விட்டவார் பரிவிட்டனர் யமனிப்படை நனி கொட்டினர்
மணிகட்டினர் கரியொக்கவே வரவிட்டனர் படையைக் கொல்ல
வெடிசுட்டனரிடி யொப்பவே விதரிச் சிலர்பட்டனர்
தடியொரு மடல்விட்டிவர் தரிபட்டிடு மரமொத்தனர்
பரிசனத் திரளையிட்டெதிர் படையைச் சிலர் சிலர் வெட்டினர்

3501—3527 போர்வருணனை — கலிங்கத்துப் பரணி — கம்பராமயாணம் அசோகவனப் போர் — இரண்டையும் நடையில் ஒப்பிடுக

3539—3545 பரசன — நடை

கரியைக் கொடுபட தொட்டியர் கணை தொட்டது
மழை யொப்பினர்
பரியைப் பரியோடு விட்டவர் படையைப் படை
முடுகிட்டனர்
கடுகச் சரமதுபட்டனர் கதிக்கக் குருதிகளாக்கின
குடலைச்சில நரிபிய்க்கவே குதிரைத் திரளதுபட்டனர்
உடலைக் கழுகுகள் கொத்தவே யொருவருக் கொருவர்
வெட்டினர்
பரிவிட்டனர் கரிபட்டனர் பதரிச் சிலர் சிலர் பட்டனர்
சரிபட்டனருட லொக்கவே தலையற்றன அளவற்ற...தே

### 3. சீர் சிந்து

மாற்றமாகக் கன்னடியன் மாரெடுத்துப் போட்டாப் போலே
ஆற்றுமல் விட்டதல்லோ ஐவராஜாக்கள் படை
கம்பையாற்றங்கரை யளவும் கன்னடியன் பெரும்படை
தான்
வடகரைக்கே கன்னடியன் தென்கரைக்கே மன்னவர்கள்
இடம் வரைக்கே பாளையஞ் செய்திருந்து அங்கே
பொருகின்றார்
அங்கிருந்து நாலாறு படையணியாகப்பொருத போதே
சங்கியுடன் வாங்குவாராம் சம்மந்தக் கூட்டத்திலே
கூட்டத்துடன் வாங்கிக் காஞ்சிபுரம் கோட்டை தனிலிருக்க
சேட்டத்துடன் கன்னடியன் சீறுட்டுப் பெருகவென்ன
சீறுட்டுப் படையாகத் தென்கரைக்கே கன்னடிய
தாருட்டும் பாம்பு போலே கன்னடியன் மன்னனோடே
பாராட்டி நாலுமாதம் படை பொருதங்கிருந்தனரே
அங்கிருந்து மாருமல் இராமட்டும் பொறுத்தலுத்து
இங்கிருந்தால் பழுதுவரும் இவிடம்விட்டுப் போகவேணும்
போக வேணுமென்று சொல்லிப் புத்திதனைக்கேட்ட போது
சாகிலும் நான்போவதுண்டோ தலத்தைவிட்டு என
மொழிந்தார்
மொழிந்தவுரைதனைக் கேட்டு மூத்த மந்திரி என் சொல்வார்
குளிர்ந்த திருமுகத்தானே கொற்றவரே பாண்டியரே
குடையானையாயிரமும் குதிரையதில் பத்துரெட்டி
மலையோடே பெரும்படையும் மன்னர்பொன்னும்
பாண்டியரே

3560 — வள்ளியூரிலுள்ள பாண்டியர்கள் — கன்னடியனை காஞ்சிபுரத்தில் எதிர்த்ததாக பாடல் கூறும். காஞ்சியிலும் பாண்டியர் ஆண்டதை இது குறிப்பிடும்.

சிலைதனிலும் வடிவழகா சேதப்பட்டுக் கெட்டுப் போச்சே
கெட்டாசு தாமெளியப் பட்டாசுதானு முண்டோ
மட்டிருக்கு மாலைமார்பன் வள்ளியூர்க் கோட்டைக்குள்ளே
சுட்டுடனே வாங்கிச் சென்றால் கண்டுகொள்ளலா மெனவே
கண்டுகொள்ளலாமெனவே காரியங்கள் கட்டுரைத்து
மண்டலீகரிது சொல்ல மன்னவரும் சம்மதித்து
பண்டு வைத்த கருவலமும் பணப் பெட்டியானதுவும்
கொண்டுபோக வேணுமென்று கூட்டபெரும் படையோடே
கூட்டப் பெரும்படையோடே கோட்டை எங்கும்
சோதிக்கவே
இஷ்டர்களும் மதியாமல் இராவழியா வாங்கி விட்டார்
வாங்கி விட்ட பெரும்படையும் மன்னர் பச்சப் பெருமாளும்
நீங்கி எட்டு நாளைவழி இமைக்கு முன்னே நடப்பாராம்
நடந்துவிட்ட விசனந்தன்னை நாட்டில்ச் சென்றங்கொருவன்
சொல்ல
அடர்ந்தபடை கன்னடியன் அடிமேலே பந்துவ ்ளும்
பத்தடிமேல் கன்னடியன் பாண்டிய ராசாக்கள் தன்னை
ஒத்தியூரும் பரப்பாடியும் உயர்ந்த வட்டப் பாறை விட்டு
வட்டப் பாறை வெளியுமிட்டு வல்லப்பனையூருமி—டு
கட்டிச் சேவித்த படையுடனே கடுகவல்லித துறையிமிட்டு
திட்டமுடன் மாமுண்டியும் சிறந் 5 தந்தம் தனையுமிட்டு
நதமது தனைக்கடந்து நரியைப் பரியாக்கிவிடும்
அத்தனு — கூடல்பதி யதிலிருந்தார் மன்னவர்கள்
மன்னவர் ்ள் மதுரை தன்னில் வைகைக் கரையொரு
புறமாய்
கன்னடியன் வடகரையும் கட்ட ஞச்சிப் புளியூரும்
பின்னையுந்தான் தொட்டிச்சல்லோ பின்பற்றி வந்த படை
அப்பொழுது மன்னவர்கள் ஆளைவிட்டார் நாலுதிக்கும்
இப்பொழுது கூட்டிவாறேன் என்று சொல்லிப்
போகலுற்றான்
கன்னப்பத்து நாட்டாரும் கணவாயில் வன்னியரும்
துள்ளுமாரி மேன் நகுலன் தொண்டமானும் சோனகனும்
வெட்டுப் பெருமாள் தும்பிச்சியம் மிக்கதொரு மறப்புலியும்
கட்டும்பரி மேல் நகுலன் காவலாட்கள் தோழனோடே
கொத்தன் குடியாரும் கொண்டையன் கோட்டையாரும்
நத்தலுத்து லிங்கப்பனும் நாயக்கர் மார்களுமே
சேத்தூரு சின்னப்பனும் சிங்கள நாயக்கரும்

3587 — 3997 பாண்டியர் படையில் போராடிய படைப் பகுதிகள். தொட்டியர், ரெட்டியர் ராவுத்தர் வன்னியர் முதலியோர்

தொட்டிய ரெட்டியாரும் துலுக்க ருவுத்தர்களும்
பட்டியிலுள்ள நாயக்கரும் பதினெட்டுச் சாதிகளும்
மூடுக்கு நாட்டு வன்னியரும் மூவரை வென்ற பெருமாளும்
எடுத்துக் கூடி பொருதல்லோ இவர் படையுமவர் படையும்
அக்கரையு மிக்கரையும் அணிவிட்டுப் பொருதிடுமாம்
பக்கத்திலே தம்பிமாரும் பதினெட்டு மந்திரிமாரும்
திக்கெல்லாம் புகழும் பெருமாளும் சென்ற திசை வென்ற பெருமாளும்
ஒக்கவங்கே யிருந்தபடை யொருமித்தார் படைக்கெனவே
கோட்டை தன்னைத் தான் திறந்து கோடிப்படை பொருதுதல்லோ
தொட்டியங்கே பொருதுதல்லோ தூசியிலே ருகுத்தன்மார்
கசையெடுக்க ருவுத்தன் மார் கண்டுதில்லை நம்பிரானை
குசை நிகழ்த்த ருவுத்தன் மார் கொண்டு பறந்தொக்கவர
காவலர்கள் வாள்வாங்கிக் கைகலந்த நேரத்திலே
வாயிலே குருதி கக்தி மடிந்து விழுவார் சிலபேர்
வெட்டுப்பட்டு விழுவாரும் தட்டுப்பட்டு விழுவாரும்
தட்டுப்பட்டு விழுவாரும் சமட்டுப் பட்டு விழுவாரும்
கன்னடியன் மகனைக் கொள்ளைக் கடல்சூழ்ந்து வையகத்தே
இன்னொருவர் தானில்லையோ என்பாரு மழுவாராம்
சென்னியிலே வெட்டுப்பட்டுச் செவியத்துப் போச்சுதென்பார்
முன்னியிலே வெட்டுப்பட்டு மூளை சிதறிச் சென்பாரும் பொருவார்
கோபத்திலே யிங்கு வந்து கொல்லக் கொடுத்தோமென்பாரும்
காட்டின் மிருகங்கள் போலே கண்ட கண்ட திசைகளெல்லாம்
விட்டுதல்லோ பெரும்படைதான் வெள்ளம் புரண்டோடிவர
கட்ட நாச்சி புளி மூடும் காடும் கடந்ததல்லோ
ஆனைத்திரள் பிடித்து ஆடல் பரிதான் விடுவார்
சேனைத் தலைவர் தன்னைச் சேர்த்துக் கொண்டு மீண்டுபோக
விட்டுப் பெரும்படையை மீண்டேற்றுங் கன்னடியன்
எட்டணியாய்ப் பெரும்படைதான் எதிரே நடத்துவாராம்
எதிரே நடத்தியன்று ஏறிவிட்ட நேரத்திலே
குதிரைப்படை சூழக் குலையானை மேலேறி
கதிரொளி போலே கன்னடியன் பார்த்து நிற்க

3619 — சமட்டு — உதை (குமரி மா. வ)

பச்சைப் பெருமாள் பாண்டிப் பெருமமாள் பதினாயிரங் குதிரைகளும்
வச்சக் கொடியூன்றி வந்து பொருதல்லோ
ஆரென்றறியாமலவர் படையுமிவர் படையும்
சூறுவளியதுபோல் சுழன்று பொருதுதல்லா
சுற்றுமனை துவையுதல்லோ தூசியெழும்புதையோ
சற்றுஞ் சறுக்காமல் சாணுக்குச் சாண்பரியமால்
தத்துங் குதிரைமேலே குத்துப் பறந்திடுமாம்
குத்துங் கலந்திடவே குதிரை விழுந்திடவே
வெட்டுங் கலந்திடவே வெடியம்பு தான் படவே
பட்டுஞ் சிலர் விழவே கெட்டுஞ் சிலரோடவே
பாரப் பிரபுக்களும் பதினெட்டு மந்திரிமாரும்
சேதப் படுகுதல்லோ தென்னப் படைதனிலே
கன்னடியன் தன்படையும் கண்டதிலும் பாதியாச்சே
தன்னிலேயுளம் நடுங்கித் தானேது வார்த்தை சொல்வார்
தம்பி படுத்தின பாடு படியே தமையனெனப்பாடு சொல்வான்
சிம்பிப் பொருதன் படைத்திட்டெனவே விட்டுதல்லோ
மன்ன பொறவே வந்து கண்ட கன்னடியன்
விட்டபெரும் படைதான் வெள்ளம் மறைந்தாற் போலே
தட்டழிந்த கன்னடியன் தன்னைவிட்டு ஓடிடுமாம்
வாழையடர்ந்த தோப்பிலே வந்தொருவன் வெட்டினாற் போல
செப்பரையாம் புட்டாபுரமும் சீருட்டுப் படை போராக
அப்படியே படைபொருது அங்கிருந்த நாளையிலே

3650 பாடு சொல்வான் (பாடு பேசுதல் செய்தி பேசுதல்) செய்தி சொல்வான். குமரி வழக்கு.

# மன்னன் மதிப்பன் கதை

செலுத்திய சாளுகிலாம் செங்கோல் நடத்துகிலாம்
தென்னர் பாளையத்தே தீராண்மையுள்ள வீரவர்கள்
மன்னனென்றும் மதிப்பனென்றும் வன்னியர்கள் பேருண்டு
இருவருநதான் பொரும் நேரம் வக்கமற்ற படைதான்
ஒருயிடமுந் தரியாமல் ஓடு வானும் காடு பாய்ந்து
திரும்பிவிட்ட கன்னடியன் செருமிமுட்டி பொரும் நேரம்
பருந்து தனை தூத்திஞனே மாயம்பல செய்தானே
வருந்தியந்தக் கன்னடியன் வார்த்தை பல சொல்லுவானும்
எடைக் கிடை பொன் கொடுத்தாலும் ராச்சியத்தைக் கொடுத்திடினும்
கடல் சூழ்ந்த வையகத்தில் கண்டதுண்டோ யிப்படிதான்
என்னருகே வந்திடுகில் ராச்சியத்தைக் கொடுத்திடுவேன்
கர்ணனைப் போல் கொடை கொடுப்பேன் கனக தண்டிகை தான் கொடுப்பேன்
எந்நலமும் கொண்டாட ராச்சியத்தைக் கொடுத்திடுவேன்
என்று சொல்லிக் கன்னடியன் யிதக்க நாலு கிளியும் கட்டி
வென்று வரத்தக்தொரு வீர வாள்கள் தானுமுண்டோ
கன்னயனது சொல்வே கண் கொள்ளாத பெரும் படைக்குள்
முன்னொருவன் சொல்லுமுன்பே மொழிந்தானே தானொருவன்
அப்போதே யதிலொருவன் ஆமெனவே சம்மதித்து
மெய்ப்புடனே போகவென்று விரைவுடனே தொழுது நின்றான்
தொழுது நின்ற சேவகனைத் தோலயத கன்னடியன்
பழுதறவே வார்த்தைச் சொல்லி பருக்கை பச்சைவடங் கொடுத்தார்
கடுக்கனுடன் பச்சைவடம் பட்டையமும் தான்வாங்கி
திருக்கச் சிறப்பும் பெற்றுச் செல்லவென்று புறப்படுவான்
செல்லவென்று புறப்படுவான் தீராண்மையுடன் சென்ற போதே

3560 மன்னன் மதிப்பன் — இவர்களைப் பற்றிச் செண்பகராமன் பள்ளுவில் சொல்லப்பட்டிருக்கிறது.

புறப்பட்டு நின்றவனும் பின்னையுந்தான் ஏது சொல்வான்
சேவகனும் சொல்லுவேனு செட்டியாகச் சொல்லுவேனே
காவலுள்ள பாளையத்தில் கடிந்து நல்ல வேலையுண்டு
போவதற்கு வகையேதன்ன யுக்திபல யோசிப்பானும்
புத்தியஞ்சு பஞ்சவும் பொருந்த நன்ற யொத்தபோதே
அத்தனுடயடியனும் யாண்டி வேஷம் கொள்ளுவானும்

### 3. சீர் சிந்து

காலில் சிலம்பணிந்தான் கமண்டலமும் கையெடுத்தான்
மேலுக்கு நீறணிந்தான் வெண்புலித் தோலுடுத்தான்
உடுத்த புலித்தோலும் ஒட்டியாண முந்தான் சாற்றி
எடுத்தான் பிரம்பதுவும் ஏழுநீலக் கப்பரைகோலேந்தி
கப்பரை பொக்கணமும் ரெண்டு கையில் துளசிமணியும்
உந்திச் சுழியழகர் முன் சாத்து வெங்கலமாம்
வெண்கலைக் கோமணமாம் புயமேறிட்ட பூணூலாம்
சங்கு வடமணிந்தான் காதில் சாற்றின் முத்திரையாம்
சாற்றும் திருநீறுமிட்டான் தாவடமும் மாலைகளும்
மாத்திரை கோலழகும் நல்ல வட்ட;திருச்சடையும்
சடை மேலிளம் பிறையாம் மெய்யில் சாற்றிய சந்தணமும்
விடையேறும் ஆண்டியைப் போல் வேடங் கொண்டான் ஆண்டியுந்தான்

### அடி வேறு

எழுந்து யெல்ல சிலம்பலம்ப ஏகாந்தமாய் நடந்தான்
கொழுந்து பச்சை செம்பருந்தி கொத்தாலி குடமல்லிகை சூடி
எழுத்தின் விதியினாலே யிடர் வாரதறியாமல்
கழுத்தறுகருங கத்தி தன்னை கந்தைக்குள்ளே யடக்கஞ் செய்தான்

3660 மன்னன் மதிப்பன் ஆகிய இருவரையும் கொன்று வரக் கன்னடியன் ஒருவனை அனுப்புகிறான்

3684 கன்னடியன் அனுப்பிய ஒற்றன் ஆண்டி வேடம் பூண்டு பாண்டியன் படையை அடைந்து இரவு நேரத்தில் எல்லோரும் உறங்கும் பொழுது மன்னன் என்னும் வன்னியனது கழுத்தை அறுத்துவிட்டான். இச் சம்பவம் 'செண்பகராமன் பள்ளு' என்ற நூலில் கூறப் பட்டுள்ளது. மன்னவனும் மதிப்பனும் பரதவர்கள் என்பது அப்பள்ளு ஆசிரியர் கருத்து.

அடக்கமாக நடப்பானும் ஆண்டி வேடம் பூண்டு கொண்டு
குடக்கையிலே கமண்டலமும் வடக்கையிலே தெண்டு கோலும்
வடக்கே நின்று தெற்கேனோக்கி வருவானுமந்த ஆண்டி
வேஷமது மாறினதும் வேறொரு ரறியாமல்
நாடியதோர் செப்பரையும் வராசவல்லி துறையுமிட்டு
தாண்டும் புகழ்தான் பொருந்தித் தகைமையுடன் தேற்கே போனான்
தெற்கனோக்கி நடப்பானும் செல்லப் பிள்ளைபாண்டியவன்
அக்கினிமாலை மார்பன் யலைந்துலைந்து பெருவழியே
பெருவழியே துணையாகப் பிறப்பட்டதோல் ஆண்டியவன்
ஒருவழி கொண்டதொரு நொடியில் ஓடியோடி செல்லுவானும்
ஒட்டு முன்னே திடியூரும் வூட நல்லூர் தனைக்கடந்து
பட்டப்புரம் வெளிதனிலே பாண்டியர்கள் பாளையத்தே
பாளையங்கள் தோறுஞ் சென்று பரிவிடன முது வாங்கி
வேளையங்கள் தான் பார்த்து இடந்தேடித் திரிவானும்
திரிந்தெட்டு நாளையிலே சென்றதற் பின் ஆண்டியவன்
பருந்து போல ஊசாடிப் படைக்கஞ்சா வன்னியர்கள்
இருந்து வாழும் பாளையத்தேயிடம் பார்த்துச் செல்லுவானும்
செல்லுமந்த நேரத்திலே செய்யசனி வாரத்திலே
அண்ணனுந் தம்பியுமாய் எண்ணை வார்த்துத் தலைமுழுகி
வனமற்ற துடைமார்பன் மன்னன் மருப்பன் பாளையத்தே
உண்ணயிலே போடும் நேரம் ஓடியோடிச் செல்லும் நேரம்
எங்கிருந்து வாரீர் காண் என்னுடைய தம்பிமாரே
கெங்கையுடன் நல்ல பாவனாசம் குருசேத்திரம் கேதாபுரி
சங்குதீர்த்த மாமாங்கம் சவணையும் தீர்த்தமாடி
எங்கும் புகழ்கொண்ட கும்பகோணம் ராமேசுவரம் தீர்த்தமாடி
தென் குமரியாடப் போறேன் சிக்கெனவே பசியுமுண்டு
பெரும்பசி கொண்டேழுந்தருளிப் பிறப்பட்டதோ தம்பிரானே
இரும்பசி தீர்ந்தெழுந்தருளும் என்று மங்கேயிருத்தி வைத்தார்

3660 —வன்னியர்களான மன்னன், மதிப்பன் (மருப்பன்) இருவரைப் பற்றிக் கூறும்—இவர்களைப் பரதவர் என்று செண்பகராமன் பள்ளு கூறும்

பசிபெரிது பக்தாவென்று பகருமொழி தனைக்கேட்டு
உடனே யங்கேயிலை போட்டு ஒக்கயிருந்தமுது செய்தார்
அமுதுண்டு கைவிளக்கி ஆதரவாய் வார்த்தை சொன்னார்
குழுந்தம் வாரதறியாமல் கொடுத்தாரே யிலைபிளகு
இலைபிளகு தானறிந்தீர் யெங்கும் திருநீறணிந்தீர்
தலையறுக்க வந்ததொரு சத்துரு வென்றறியாமல்
சத்துரு வென்றறியாமல் தம்பிரானென்றவனை வணங்கி
இரவுயிங்கே தங்குமென்று யிங்கிதமாய் வார்த்தை சொல்லி
இரவு பசியில்லையப்பா எனக்கமுது தான் வேண்டாம்
பெரிய வயசானதினால் போக மாட்டேன் ஒரு இடமும்
நித்திரையும் உங்களிடம் நிலம் வெளுக்க நான் போவேன்
தெண்டுங் கமண்டலமும் திருநீற்றுக் கப்பரையும்
கண்ட மாலை தாவடமும் கழற்றி வைத்தான் கந்தைகளும்
பொக்கணமும் தலைக்குள் வைத்து புலித்தோலும் தான் விரித்து
சிக்கெனவே யுறங்குவானாம் தேசாந்திரி யாண்டியவன்
ஆண்டியுறக்கங் கண்டு அதிசயித்துத் தங்களிலே
பாண்டியற்கு முன்பான படைத்தலைவர் வன்னியர்கள்
உண்டுடுத்துப் பூசித்து உறக்கம் வைத்த நேரத்திலே
கண்டிருந்த வாண்டி மெல்ல கலங்காம லெழுந்திருந்து
கட்டிச் சுற்றி வலுத்திருக்க கடுகச் சோட்டை யரையில் சேர்த்து
எட்டிக் கொண்டு முட்டாமல் இடம்பார்த்து நாலுதிக்கும்
நாலு திக்கும் பாடியவன் நற்றூக்கம் தான்பார்த்து
காலனைப் போலூசலாடி கலங்காத மனத்தோடே
மனந்தேறி செல்லும் நேரம் மன்னனையும் மதிப்பனையும்
தினந்தோறும் காத்திருந்த சேவகரு முறங்கிவிட்டார்
எல்லோரு முறங்கி விட்டார் இடம் வாய்த்ததென்று சொல்லி
கொன்று குலை சூடவென்று கூடார வாசலிலே

3619 —84—பண்டாரம் தீர்த்தமாடி வருவதாகச் சொல்லுகிறான் —சரவணைப் பொய்கையென்பது முருகன் கோயில் கொண்டிருக்கும் ஊர்களில் இருக்கும் தீர்த்தம்.

3734 — ஒக்க—கூட 3929—தம்பிரான்—சிவனடியார் கைவிளக்கி-கை கழுவி நிலம் வெளுக்க-விடிய (வில் 2.மா. வ)

3746 —பொக்கணம்—பொட்டணம்

3759 —குலை சூட (கொன்று குடலை மாலையாகப் போடுவேன் என்று கோபத்தினால் சபதமுரைப்பதுண்டு, குலை என்றும் ஈரக்குலையென்றும் குடலைக் குறிப்பதுண்டு.

கூடார வாசலிலே குதித்து மெல்லச் செல்லுவானும்
சென்று நின்று யசுபறிந்து தீரநல்ல உறக்கமென்ன
மன்னனுட தலையை மெல்ல மதியாமல் சலியாமல்
உறக்கத்திலே சிறுத்தொண்டர் சிறு குழந்தையறுத்தாற் போல்
ஒழி பழியத்துப் போச்சே யுற்றமன்னன் தலைதானும்
அற்ற விழுந்த தலைதான் அஞ்சாமல் கையிலெடுத்து
ரெத்தமெல்லாம் போகாமல் இதமாகத் தான் துடைத்து
சில்லி ரெத்தம் போகாமால் சீலையினால் தான்துடைத்து
பழந்துணியில் பொதிந்து சுத்தி பதறாமல் வெளியில் வந்தான்
ஒரு நொடிக்குள் போகவென்று யுற்றதொரு சோளிக்கைக்குள்
சோளிகைக்குள் போகவென்று நடந்தானே பாளையத்தே
நடந்தவனும் பழிமேலே நாட்டாதங்கரை கடந்தான்
கடந்தவனும் வழிமேலே கலங்காமல் நடந்தானும்
வழிமேலேயவன் போக மருப்பனவன் விழித்துவிட்டான்
பழியாளன் விழித்திளகி பார்த்தானே தமையனைத் தான்
தமையனிருந்த விடம் தப்பாமல் பார்த்த போது
அண்ணனவன் படுத்தவிடம் ஆடு கொன்ற களம் போலே
ஆடு கொன்ற களந்தனிலே யறுபட்ட குருதியிலே
பாடு கண்டான் தமையனும் பசுந்தலையைக் கண்டானில்லை
கண்டாற்ற மாட்டாமல் கண்ணீரும் பாய்ந்திடவே
திண்டாடி மனங்கலங்கி தெளிந்தானே பிள்ளையுந்தான்
உண்டான காரியத்தை யொருவருக்கு முரையாமல்
சண்டாளனிப்படியோ சதி செய்தானெனவே
பண்டார மிருந்திடத்தைப் பார்த்தானே மருப்பனும் தான்
பார்த்திடவே யிருந்தவிடம் பண்டாரத்தைக் கண்டதில்லை...
காத்து நகையறுக வந்த கள்ளனிவனென்றறிந்து
வாய்த்த மலர்த்துடை மார்பன் மற்றொருவர் முரையாமல்
ஒருவருக்கு முரையாமல் நமசி வாயமென்ன
திருத்தமுடன் கச்சை கட்டி சிவனே பாருமெனவே
வருத்தமுடன் ஓடுவானும் வழிமேலே மருப்பனும் தான்
வழிதனையுமிடத்தே விட்டு வலத்தே சுற்றியோடுவானும்
பழியெடுத்த வாண்டியவன் பாளையத்திற் செல்லுமுன்
செல்லுமுன்னே ஓடியோடி செப்பரையு முருவிவிட்டான்
அண்ணர் தாமிங்கே வரவுமில்லை ஆரவாரந்தானுமில்லை
கோலியானூலருக்கவில்லை கொடியிடத்தே பாயவில்லை

3763 —இவ்வடியில் மன்னன் என்னும் வீரனது தலையைப் பண்டாரம் அறுப்பது கூறப்பட்டது.

வெற்றி சங்கு ஊதவில்லை வீரியங்கள் பேசவில்லை
ஆரவாரங் காணாமல் அயர்ந்து நன்றாய் மனம்தேறி
வெல்லும் வகை யெப்படியோ மீண்டானே சேவகனும்
மீண்டவனும் வழிமேலே விசனமெல்லாம் விட்டுவிட்டு
இன்னுமொரு பாட்டும்பாடி முசியாமல் செல்லு நேரம்
முசியாமல் செல்லுவானும் முறைப்படியே சேலையுமாய்
முசியாமல் சோத்தையுண்ட பண்டாரம் முடுக வந்தான்
வந்ததெதிர்த்த பாண்டியவன் வாய்ச் சாத்தங்கேட்ட போது
அந்தி நேரந்தான் பயந்து அவனை யவனாரடா வென்றான்
ஆரடா வென்றமந்த வாண்டிமுந்தி கேட்டபோதே
ஆரடா நானும் வந்தேன் மருப்பனவன் வார்த்தை சொல்வான்
மருப்படருத்திண் புயந்தான் மன்னனெங்கள் கன்னடியன்
செவ்வந்தி பூவழகன் தென்னருட பாளையத்தே
தென்னருட பாளையத்தேயொரு சேவகனை விட்டாராம்
மன்னனையு மதுக்கினையை மருப்பனையுந் தலையறுக்க
இன்னமுந்தான் மீண்டதில்லை ஏழெட்டு நாளாச்சு
என்னையுந்தான் விட்டு விட்டார் இத்தலையை யறுக்க வென்று
விட்டு விட்ட சேவகன் தான் விரைய வந்தேன் நானுமென்று
தட்டியவன் தலையைத் தானறுத்துக் கொண்டு வந்தேன்
அறுத்தது தான் பொய்யோ மெய்யோ அவன் தலையை நானறியேன்
செறுத்து நின்று விட்டாயென்று செப்புவானும் மதிப்பனும்தான்
மறுத்து மொழி சொல்ல வேண்டாம் கொண்டு வந்தேன் தலையையென்றான்
அப்பொழுதுபாண்டியவன் தனக்கு வாரதறியாமல்
மெய்ப்புடனே ஆண்டியவன் விசாரியாமல் தரையில் வைத்து
அரையிலிட்ட கத்தி தனனை அறியாமல் கையிலெடுத்து
உரியை யொற்ற மாலை மார்பன் வலத்தே ஏறிச் சுற்றி நின்றான்
கங்காளத்தைத் தோளில் போட்டு கவந்து மெல்ல குனிந்து நின்றான்

3783 முதல் 3801 வரை உயிரிழந்த மன்னனது தம்பி ஆண்டியைச் சந்தேகித்தல்

பொக்கணத்தை யவிழ்க்கையிலே போட்டானே பிடறியிலே
பிடறியிலே வெட்டுப்பட்டு பெலிக்கு மவெட்டுங்கிடாய் போலே
கட கடென புரண்டிடவே கழுத்தை மெல்ல அறுத்து விட்டான்
சத்துருவின் தலைதனையும் தமையனுட தலைதனையும்
ஏற்ற புகழ் மாலை மார்பன் ரெண்டு மொன்ருய் தூக்கிக் கொண்டு
பல பலென விடியுமுன்னே பாளையத்தில் வந்து விட்டான்
பாளையத்தில் செல்லும் நேரம் பாண்டியனும் பெரும் படையும்
தக்க கேடுண்டாச்சு தென்று தட்டபுரிந்து மயங்குவாராம்
மயங்கி வந்த பாளையத்தில் வன்னியரைக் காணுமல்
கலங்கியங்கே தேடிடவே கண்டாரே மன்னனுடல்
பறந்த படை நாலுதிக்கும் பஞ்சமா சத்தமென
சிரந்தனையும் தூக்கிக் கொண்டு சென்றுவிட்டான் மருப்பனவன்
சத்துருவின் தலைதனையும் தமயனுட தலைதனையும்
மூத்தளக்கும் பாண்டியனுர் முன்னே வைத்துத் தொழுது நின்றுன்
தொழுது நின்ற சேவகரைத் துங்க முடிப் பாண்டியரும்
அழுத கண்ணீர்தனைத் துடைத்து யன்புடனே தழுவிக் கொண்டு
எழுத்து மணி பச்ச வடம் இலங்கு முத்துமாலையிட்டார்.
பழுதறவே வார்த்தை சொல்லி பகுக்கன் பச்சாடங் கொடுத்தான்
வாய்த்த மணி மாலை மார்பன் வள்ளியூர்க்குத் தெற்காக
நாச்சியார் கொளத்துப் பத்து நாற்பது மாதிலமு மிட்டார்
வாரமின்றிக் கடமை வலவேலையூழியங்கள்
ஊழியங்கள் தான் விலகியுற்ற நிலந்தானுமிட்டு
எல்லை தோறும் கல்நாட்டி யிறைகூலியுந்தான் கொடுத்தார்
தண்டிகையும் பளிக்க மிட்டு சமரிலும் யொருவனுக
வாட்ட மற்ற மாலை மார்பன் மதிப்பன் அங்கே வீற்றிருந்தான்

3822 —ஆண்டி கையிலிருந்த பொட்டணத்தைத் திறந்துபார்த்த மதிப்பன் அதனுள் தன் அண்ணனது தலையைக் கண்டான். பண்டாரத்தைக் உடனே, கொல்லுகிருன்

3840 —3844— மதிப்பனுக்கு அரசனளித்த இறையிலி நிலங்கள் தனக்காக உயிர் விட்டவனுக்கு அளிக்கும் நிலத்திற்கு இரத்த காணிக்கை எனப்பெயர்

### கன்னடியன் செய்தியறிதல்

அன்றையுள்ள விசன மெல்லாம் அங்கிருந்த கன்னடியன்
சென்றவர்கள் சொல்லக் கேட்டு சிந்தையெல்லாங் குளிர்ந்தாரே
மகிழ்ந்து வந்த கன்னடியன் வார்த்தை ஏது சொல்வானும்
இடைகிடை பொன் கொடுத்தாலும் இந்த ராச்சியத்தைக் கொடுத்தாலும்
கடல் சூழ்ந்த வைய கத்தில்
கண்டதுண்டோயிப்படி தான்
என்னருகே வந்திருந்தால் ராச்சியத்தை யாளவைப்பேன்
பொன்னும் முடி சூட்டி வைப்பேன் புவனமெல்லாங் கொடுத்திடுவேன்
மன்னனுக்குத் தானினைய மருப்பனைத்தான் காணவேணும்
காணவுந்தான் பெற்றிலோன கால் கடிகை சேவகனை
யாரொருவனிப்படியே இந்த அம்புவியில் கண்டதில்லை
கண்டதில்லை யென்று சொல்லி கன்னடியன் வார்த்தை சொல்வான்
அண்டையிலே நின்ற தொரு அறிவழிந்து முகத்தைப் பார்த்து
பார்த்திருந்த கன்னடியன் பகருவானும் ஒரு வார்த்தை
மருந்து தன்னைத் தூற்றினானே மாயம்பல செய்தானே
வருந்தியிந்தக் கன்னடியன் ஒரு வார்த்தையேது சொல்வானும்
கொண்டு வந்த குருதிப்படை குலையானை அத்தனையும்
மண்டபமுஞ் செம்பாதி மன்னனுக்குக் கொடுத்திடுவேன்
இன்னமுந்தான் போக வேண்டாம் என் மகளைத் தாரேன் என்றான்

### பாண்டியனிடம் கன்னடியன் தூதனுப்புதல்

பின்னையொரு தண்டேறியைப் பேச வென்று விட்டு விட்டார்
விட்டு விட்ட தண்டேறியும் விரைவிலங்கே தானடைந்து
ஓட்டும் முன்னே திடியூரும் ஓம நல்லூர் தனைக்கடந்து
பட்ட புரத்து தெளி தன்னிலே பாண்டியர்கள் பாளையத்தே
திட்டெனதே கோட்டைக்குள்ளே தென்னவன் தன்சேனை கண்டான.
சென்று நின்ற தூதுவரையும் தென்னவனோடேது சொல்வான்
மணஞ் செய்ய மாட்டே னென்றாய் மகுட முடிப் பாண்டியனும்

இன்று வந்த கன்னடியன் வேற்க மற்ற படையோடே
நின்றெதிர்த்துப் பொருவ தெல்லாம் நீரல்லாது வேறு முண்டோ?
ஒருவருண்டோயும் மைப் பொலித்த யுலகுதன்னில் கண்டதுண்டோ
கோர்த்த முத்து மாலை மார்பா குலசேகரப் பெருமானே
திருத்த முடன் அடியேனுஞ் செப்பும் விண்ணப்பம் கேளாய்
பாசமுள்ள மந்திரி மாரும் பதினெட்டு மந்திரி மாரும்
தேசமெல்லாமோர் குடைக்குள் செலுத்தியரசாளுகிலாம்.
செலுத்தி யரசாளுகிலாம் செங்கோலும் நடத்திடலாம்
முருக்கிதழ்வாய்ப் பெண் கொடியை முனிந்து மணம் செய்யவேணும்
மணம் புணர வேணுமென்று வந்துரைத்த சொல்கேட்டு
குணம் பெரிய பாண்டியரும் கூறுவானும் ஒரு வார்த்தை
இணங்கும் மொழி சொன்னயில்லை இயல் பெரிய காரியத்தை
பிணங்க வென்று பேச வந்தாய் பேச்சை யெல்லாம் விட்டு விட்டாய்
விட்டு விடா கன்னடியன் மெல்லியரைக் கொள்வதுதான்
சிட்ட மண்ணும் பச்ச மண்ணும் துணையீரம் ஒட்டுமோடா
கெட்ட வார்த்தை பறைந்தாயென்று கீர்த்தியுள்ள மன்னர் சொல்ல
சுட்டாலும் சங்கதுதான் துய்யநீர் குன்றிடுமோ
அரைத்தாலும் சந்தானந்தான் அதிக மணம் குன்றிடுமோ?
இணைத்திடினுங் காரம் எங்கும் மணம் வீசிடுகாண் !
எதிர்த்து நின்ற துரையவனும் ஏது வார்த்தை சொல்லுவானும்
கன்னடியன் மகளைத் தான் காவலிலே வைத்ததினால்
கருத்துடனே கன்னடியன் கனம் போலே வளர்த் தெடுத்தோன்
மருத்து மகள் வாடாமல் மாலையிட வேணு மென்றார்
மாலையிட வேணு மென்று வந்துரைத்த சொல்கேட்டு
வேலையுட முண்டவர் போல் வெகுண்டானே பாண்டியனும்
கடுக நீ போய்விட்டால் கையிக்கணப் வாராமல்
வடுகனுட மகள் தனைத்தான் மன்னவர்கள் கொள்வதுண்டோ?
முடுகி நின்று பறைந்ததெல்லாம் முழுது முனக்குத்தமல்லோ
குலமடந்தைக் குமரிதன்னை

3799 — ஆளுகலாம்—ஆளலாம்

கொள்ள வந்த வானவரைப் போல்
தலையரிப்பு தானல்லோ தாகமுடன் பறைந்த தெல்லாம்
தாக்குடனே கோட்டை தன்னில் சற்று வங்கே முடுகி வரில்
காக்கையது கத்து மாப் போல் கண்ட கண்ட
திசைகளெல்லாம்
பறக்கடித்துப் பொருவது தான் பார்ப்பாரோ போடா
வென்றார்
என்றாரே பாண்டியரும் இவன் தானும் சொல்லிய பின்
ஒன்றாலும் கேட்பதில்லை ஊக்க முடன் தானுரைத்தார்
கன்றாத மனத்தோட கன்னடியன் துரையவனும்
சென்றானே கடிதாகச் செப்பறையில் பாளையத்தே
பாளையத்தில் செல்லும் நேரம் பார்த்திருந்த கன்னடியன்
வேளையத்தை விட்டு விட்டு விசன மெல்லாங் கேட்பானும்

தூதுவன் கன்னடியனிடம் திரும்புதல்

தண்டேறி சென்றுரைத்து தான் தொழுது நின்றபோது
உண்டான காரியத்தை உண்மை பெறச் சொல்லுமென்றான்
அப்போது தண்டேறியும் தானேது வார்த்தை சொல்வான்
கல்லுருவஞ் சென்ற துண்டால் கற்பசுவும் நின்றிரங்கும்
வல்லி வல்லி வார்த்தை சொன்னேன் மாறியேறி
தானுரைத்தார்
கடல் சூழ்ந்த வையகத்தில் கரிபரியுங் காலாளும்
அடல் பெரிய பாண்டியரே உம்மைத் தூக்கிவைப்
பேனென்றான்
வருத்த மெல்லாம் பட்டிடினும் மலையேறிப் போய் விடினும்
ஒருக்காலும் கன்னடியா உன் மகளைக் கொள்வதில்லை
மங்காத பாண்டியனும் மாறி மெத்தச் சீறி விட்டான்
மாறி விட்டானென்ற சொல்லை மகவாசையாலழிந்து
நீரிவிட்ட தீபம் போலே நெடு மூச்சு தானறிந்து
மீறிவிட்ட சிங்கம் போலே வெகுண்டானே கன்னயன்

கன்னடியன் படை தெற்கு நோக்கி சென்றதுச்

அந்த நேரத்திலே யிந்த கன்னடியன் படையும்
ஆரவாரத்தோட கூடிச்சேர ருவுத்தன்மாரும்
இந்த நேரத்திலே கோட்டை கொள்ள வேணுமென்று
யேகப் படை
எழு கடலும் மறந்தாப் போலே வெகுண்டானே
கன்னடியன்

சங்கர மாரசலுப் பரோடே சாதி பதினெட்டு சாதி
தாள கடல் போலே படையும் யானைப் படையும் செல்லவே
வெண்கல திடிமன் போட வெள்ளி வெஞ்சாமரைகள்
விளங்கு மின்னி பாளையமு மிக்க குளத்தூரு வீச விட்டு
சிங்கி குளத்து வெளியும் ஓம நல்லூரு மிட்டு
சென்று விட்டான் கன்னடியன் தேசமெல்லாம் தூசியாக
தூசியிலே சென்ற படை துங்கப் பரியும் கரியும்
தொட்டி பெற வேணுமென்று எட்டுபடையாச் செல்லுமே
பாசியும் நீரும் போலே பற்றி வந்த கன்னடியன்
பட்டபுரத்து வெளியைக் கிட்டவே முடுகி விட்டான்

### பாண்டியர்கள் போருக்குச் செல்லுதல்

முடுகி படை செல்லவே முன்னிருந்த ராசனைத் தான்
முகிலப் பெருமாளும் நல்ல முடுகிடும் பெருமாளும்
கடுகதம் பட்டம் போட்டு காவலற்குச் சொல்லி விட்டான்
கன்னடியன் சேனையிங்கே கை கலந்ததென்று சொல்லி
பாண்டி பெருமாளும் பச்சை பெருமாளும் சொல்லி
பாரப் பரப்புக்களும் சேரப்படை சூழவே
முண்டி படை செல்லவே முழங்கி கடல் போலே பறந்திடவே
முத்தும் பெருமாளும் முடிசூடும் பெருமாளும்
பட்டபுரத்து வெளியில் பாளையத்திலேயிருந்த
படை சேர ஒன்றாய்க்கூடி கடல் போல பறந்திடவே
கடும்பரியும் காலாளும் மேலாளுமாகவேதான்
கன்னடியன் மேலே சென்று கைகலந்த நேரத்திலே
அங்கிருந்த ஒட்டனேடி வள்ளியூர்க் கோட்டைக்குள்ளே
கூத்தும் பாட்டும் கண்டு கொண்டு குலசேகர ரங்கிருக்க

### போர் வர்ணனை

கோட்டைக்குள்ளே யான் செல்லவே கொடிய படை நின்றது போலே
ஒட்டும் படையு மதிலே நாடுப் படையுஞ் செல்லவே
ஒக்கச் சென்றொருமிக்கவே தெற்கித்திப் பணிக்கன்மாரும்
கட்டு முட்டெனவே வந்த கன்னடியன் தன் சேனை
தட்டி யொட்டி வெட்டித் தலைகள் குப்புற விழுவார்
தாண்டிபரி பிடித்து மீண்டு வருவார் சிலர்
திட்டு முட்டாய்ச் சென்ற பரி வட்டமிட்டிட தேயேறி
கெடுதியாக வெட்டி விட்டு சடுதியாகச் செல்லுவாராம்
கொண்டாடிக் குதிரைக்காரர் கட்டுகள் மரித்தாப் போலே

குத்துகள் கலந்துபடப் பித்துகள் கலங்கிடவே
சுட்டார் சில பேர்கள் சூஸ்திர வெடிகள் பட்டு
துளைத்த மரங்கள் போலே களத்தில் விழுவார் சிலர்
சீரிட்ட பரிசைக்காரர் திட்டு முட்டெனவே வெட்டி
செவிட்டிலே வெட்டுபடத் தியங்கி விழுவார் சிலர்
நேரிட்ட பரிசைக்காரர் எனக் குனக்கெனப் பகுத்திட
நெருங்கும் பாளி பச்சை போலே நிலங்கள் யெதிர்த்து நிற்பார்
அந்த நேரத்திலே யிந்த அரசன் திருத் தம்பிமாரும்
ஆனைப்படை தன்னைக் கண்டு யாவித் தொழும் சிங்கம் போலே
பத்தி பத்தியாக வந்த கன்னடியன் தன் சேனை
பறக்கடிக்க வேணுமினி பாரு பாரெனவே
பச்சைப் பெருமாளும் பாண்டிப் பெருமாளும்
பதினாறுயிரங் குதிரைப் படையை பாங்குட நிறைத்திடவே
எச்சப் போனுமையா நாங்கள் எங்கே யோடிப் போவே மென்ன
எதிர்த்து சிலர் பொறவே எதிராமல் நின்ற படை
உங்காணிக் குளத்தூரும் தருவை வழியுமிட்டு
தரியாமல் விட்ட படை தனம் பொருத மாட்டாமல்தான்

அடி வேறு

ஏறிப் பொருத படை எனக்குனக் கென்னவே
எழுந்த நாவலர் கிளர்ந்து பொரவே
மாரி பொருத படை மயங்கித் தவிக்கவே
வடு கச்சி மலை மட்டும் வாங்கி விட்டான் கன்னடியன்

அடி வேறு

வடு கச்சி மலையிலிம் செங்களக குறிச்சியிலும்
வாங்கி பித்தங்கிருந்த கன்னடியன் சொல்வான்
கடுகிச்சி, முடுகிச்சி, வடுகிச்சி கலியாணம்
கண்டு கொள்ளலாமே நாளைப் போரி லென்னை
முடுகிச்சி நாமளிங்கிருந்து விட்டோமேயென்ன
மூத்தனையமாக இருந்த படை சேர
முத்துப் பெருமாளும், முடி சூடும் பெருமாளும்
பத்தியுடன் நல்ல பச்சைப் பெருமாளும்
பாண்டிப் பெருமாளும் பதினெட்டு மந்திரிமாரும்

3983 வாங்கி விட்டான்—பிடித்து விட்டான்

கொட்டி முழங்கித் திடிமனும் போட்டு
கோட்டைக்குள்ளே படைய வாங்கி விட்டாரே
வாங்கியவரங்கிருக்க மற்ற நாள் விடியு முன்னே
எழுந்தோங்கு கன்று புரவியுஞ் சூழ
சிங்காரக் கட்டதுங் கட்டியிறுக்கி
கொடிக் குளினிக் கோட்டை கொள்ள வேணுமென்க
நூறாயிரம் புரவி தன்னையுங் கட்டி
படிக்குள்ளே யானை துவைத்து மிதிக்க
பதினாறாயிரம் புரவி யொக்க மிதிக்கவே
எட்டணியாகப் படையும் வகுத்து
இடங்கை, வலங்கை நெத்திகை யொக்குக
பட்டத்துக்குப் பெரிய யானைகள் சூழ
பல பலென விடியு முன்னமே சென்று
சதிமான மாயவன் கோட்டையை முட்டி
தங்கள் படை நாலு திக்கிலும் வகுத்து
பதினேழக் ஸ்ரேணி பனி போலே சென்று
பல சக்கரத்தை நிறுத்தி விட்டானே
நிறைந்த படை சென்று கோட்டையு முட்டி
நேரே வடக்குக் கோட்டை வாசலிலே
பரந்த படையைக் கொல்ல வேணு மென்ன
பார்த்து வக்க விளக்கி விட்டாரே
குப்பைப் படையும் குதிரைப் படையும்
குடைக்காரனைப் போட்டுகுட்டுதே யுண்டை
வலங்கையில் போனபடை சேர வந்து
வலத்தே யேறிக் மேல்க் கோட்டையை முட்டி
இலங்காபுரிக் கோட்டையில்ப் பொருவது போல
இரையுந் துவக்கை யிளக்கி விட்டாரே
ஆனையும் பட்டு குதிரையும் பட்டு

3994—படையை வாங்கி விட்டார்—படையைப் பின் வாங்கிவரச் செய்தார்

3999—நான்குனேரித் தாலுகாவில் உள்ள ஊர்கள்

4003 இடங்கை, வலங்கை, ஒத்திகை இரண்டு பிரிவுகள் தான் முக்கியமானவை. இடங்கை, வலங்கைப் பிரிவுச் சாதிகளைப் பற்றிச் சாசனங்கள் கூறுகின்றன. நெத்திகை என்பது மூன்றாவது பிரிவு. ஒருப்பிரிவு என்பது பொருள் மூன்றுகை வேளைகாரர்களைப் பற்றிக்கோயில் சாசனங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் மூன்றாவது பிரிவு யாரைக் குறிக்கிற தென்று தெரியவில்லை.

4018—இராமனது வானரப்படை

ஐநூறு மூன்னூறு காலாளும் பட்டு
ஊன்படக் கொன்று உருட்டி உருட்டி
ஒன்று மேலொன்றாய் மிதிக்குதே யானை
அடித்து மிதித்துத் தவிடு பொடியாக்கி
தன்படை தன்னையும் கொல்லுதே யானை
இலங்கையில் போனபடை போலவே இன்று
இடத்தே யேறிக் கீழ்க் கோட்டையை மூடி
அடங்கலுஞ் சொல்ல வேணுமென்று சொல்லி
ஆனைத்துவக்கை யிளக்கி விட்டாரே
திரண்ட படையும் குதிரையும் பட்டு
சேரடிக்காரனை நேரே யெரித்து
புரண்டு புரண்டுடங் குருண்ட படையை
புணக்காடாக அடுக்குதே யுண்டை
வெப்பத்துடனங்கே வந்தபடை சேர
வெளிதனிலோடிச் சிலவங்கள் தட்டி
கப்பல் கவிழ்ந்தது போல் கன்னடியன் சேனை
தன்னிலே பட்டு கனைபட்ட நேரம்
இப்பொழுதிலே வெட்ட வேணுமென்று சொல்லி
இளைய ராஜக்கள் தான் ஒக்க கூடினார்

### 4. சீர் சிந்து

கோட்டை தனைத்திறந்து கோடிப்படை மரித்தது போல்
கேட்டமுடன் குதிரைப்படை சேரவலங்கரித்து வாருமென்றார்
கேட்ட பொழுதந்த சாரியப்போ கேவலமில்லா குதிரைப்படை
ஒட்டு படையாக வேணுமென்று ஒரு நாழிகைக்குள் அலங்கரித்தார்
காரிகுல்லா நம்பிரானைக் கார்முகில் யானையை யலங்கரித்தார்
மருவலனையு மலங்கரித்தார் மங்கை குழல் தன்னையு மலங்கரித்தார்
கழுத்து வெள்ளைச் சாம்பல் போறான் கஞ்சா குடிக்கும் குழலாலும்

4033 — புணக்காடு — பிணக்காடு (பிணம் — புணம்: பொணம் (பா. வ. — குமரி, நெல்லை)

4044—4045 காரிகுல்லா, நம்பிரான், கார்முகில்யானை. காயாம்பு நிறத்தான் மருவலன், மங்கை குழல்—இவை குதிரைகளின் பெயர்கள்.

முழத்து நல்ல மார்த்தாண்டனும் முகத்து வெள்ளை சாம்பல்தான்
விடத்தலமும் சென்னரையன் மேகந்திரை கொண்டானையும்
பஞ்ச வர்ண நிறத்தானையும் பறக்குஞ் சிறு குளவியையும்
அஞ்சு வர்ணப் போரானையும் அழகுபெற யலங்கரித்தான்
கேசகனை யலங்கரித்தார் கிட்டயனைத்துக் கல்லனை யிட்டார்
காயாம்பு நிறத்தானை கல்லனையிட்டுக் கொண்டு வந்தார்
இன்னமெண்ணத் துலையாதே யேக்கமற்ற குதிரைப் படை
வர்ணமாயிரம் புரவியையும் வகைப்படியே யலங்கரித்தார்
அலங்கரித்து வரும் நேரம் ஐவோருக்கும் மருமகனுர்
இலங்கமுத்து மாலைமார்பன் இளவரசப் பெருமாளுக்கும்
அலையிலிடும் துரும்பதுபோல் ஆடல்பரி கொண்டு வாரு மென்றுர்
விலையில்லா முத்து மாணிக்கம் விளங்குமணி சூத்திரி யிட்டான்
சூத்திரியிட்டு மல்லம்வைத்து துடைவாரும் கடிவாளங் கட்டி
மாத்திரைக்குள் சென்று மீண்டு வர்ணப் புரவிக்குத் தானிலங்க
பவள முத்து மாணிக்கமும் பதித்த முத்து கல்லணையிட்டான்
குவளையிட்ட பலகரையுமிட்டான் கோலவர்ண சதங்கை தண்டை
கழுத்து பொன்னினுலே கால்படியும் பொன்னினுலே
முழுதத்தொரு தலையாட்டி முகமூடியும் பொன்னினுலே
கசையுமது பொன்னினுலே, குசையதுமது பொன்னினுலே
துள்ளும் பரியங்கே வாழ்விக்கவே சூழமுடிகட்டி யலங்கரித்தார்
வெள்ளிச் சிலம்பிட்டு கால்தனக்கு வீரதண்டை யிட்டலங் கரித்தார்
பொன்னிட்டெழுதின வல்லையமும் புலித்தோலும் உரைவாளும்
பன்னிட்டெழுந்தந்த புரவிமேலே பக்கரெண்டிலும் தான் சேர்ந்தார்
முன்னட்டவர் கோட்டை வாசலிலே மொஞ்சும் பரியொக்க நெருங்கிடவே
இச்சைபடும் பெண்கள் மணவாளன் இளவரசப் பெருமாளுக்கு
அச்சப்பட வெட்டவேணுமென்ன ஆடல்பரி மேலேறு வானும்

4055 — ஐவர் பாண்டியருக்கும் மருமகன் போருக்குச் செல்ல குதிரை கொண்டு வருகிறுர்கள்

பச்சப் பெருமாள் பாண்டிப் பெருமாள் பதினாயிரம் குதிரைகளாம்
மச்சக் கொடியூன்றிப் பொருவார் வடக்குக் கோட்டை வாசலிலே
பொன்னும் பெருமாள் போருக்கு முன்னே வெட்டும் பெருமாள்
முன்னே செல்லும் முத்தின் பெருமாள் முகிலப் பெருமாள், நகிலப் பெருமாள்
கன்னமத யானைக் கூட்டங்களும் கரியும் பரியும் காலாளும்
வண்ணப்பரி எண்ணத் துலையாத வலங்கையிலே பொருவாளும்
சென்ற திசை வென்ற பெருமாளும் திக்கெல்லாம் புகழும் பெருமாளும்
வென்று திரையிடும் பெருமாளும் விருதராசப் பெருமாளும்
அந்தகுலப் பெருமாளும், அழகு நல்ல பெருமாளும்
மருத மொழிப் பெருமாளும் வளர்த்துருவாக்கும் பெருமாளும்
உலகுடைய பெருமாளும் மலைதாங்கும் பெருமாளும்
பலகுடைகள் நிழலிடவே பதினாயிரங் குதிரைகளாம்
சொல்லியிணைத் துலையாது தூசியிலே சென்றபடை
எல்லையில்லா படையோடே இலங்கையிலே பொருவாரும்
அங்கவரு மிங்கிவருமாகப் பொரு நேரம்

ஈரடி சிந்து

அயலாயிருந்து கொண்டு பூசல் காண வேணுமென்று
கொங்கை நல்லார் ஆடல்பாடல் கொற்றவரும் பார்த்திருக்க
கோட்டைக்குள்ளே வீற்றிருந்த குலசேகரப் பெருமாள்
பக்கமெல்லாம் மந்திரிமார் பகலவனொளி போலே
பச்சப் பெருமாளும், பாண்டிட் பெருமாளும், திக்கடங்களும் புவியும் சேரனும் பயப்படவே
சேனைப்படையோடே சென்றானைப் படை பயப்படவே நெருங்க
அந்தரவதத்தளவு அளந்தோங்கிருவரும் வெள்ளானை

4074 மச்சக்கொடி — மீன்கொடி
4092 பச்சப் பெருமாளும், பாண்டிப் பெருமாளும் திகடங்களும் புவியும் சேரனும்
4095—அந்தம்—வானம். வானத்தைத் தொடும் உயரமுடைய யானை.

அயிராவதத்தின் மேலே தேவேந்திரன் வந்தாற் போலே
சுந்தரத்துடையானென்று யானை மேலேறிக் கொண்டு
துங்கக் கொட்டு வாச்சியங்கள் சங்கு கடல்போல முழங்க
முத்தினால் நிலாவெரிக்க கொற்றக் குடைசூழ்ந்திருக்க
முடுகி படைமேலே கடுகச் செல்லும் நேரத்திலே
புத்தி சொன்னான் பாண்டியற்கு காலிங்க வில்லவனும்
பூழியனே கோட்டையிட்டுப் பிறகே போகதே யென்ன
ஈன்றெடுத்த தாயாரை இறைஞ்சித் தொழுது கொண்டு
ஈசானத்தாலிட்ட கோட்டை ஆசனத்தின் மீதே
மூன்று முகங்கொண்ட அம்மனுட சன்னதியில் நின்று கொண்டு

3. சீர் சிந்து

ஆடல்பரி ஏறிட்டார் சிலர் ஆனைத்தோளர் வீசினார் சிலர்
கோடைக்கே சொரிமாரிக்கே நிகர்க்கோடி காலனைத் தூவி விட்டார் சிலர்
ஆனைப்பாகனை மோதிட்டார் சிலர், யாகத்தேறவே தொட்டாரகனை
வானத்துயிடி போலொத்த வெடி நேரிட்டே பொருவர் சிலர்
நேசத் தூணெனவே விட்டார் சிலர் பாரிட்டரசி
கூரிட்டே குன்ன பாகத்திரு கூரிட்டார் சிலர்
தட்டியொட்டியே சிலர் குத்தவே தட்டியொட்டியே சிலர் பட்டதே
பொட்டு பொட்டென சுட்ட வெடிபட்டு திட்டுதிட்டென விழுவார் சிலர்

கூடி வேறு

கட்டி வந்த சேனைகளும் கன்னடியன் பெரும்படையும்
தட்டரிய மட்டுதல்லோ தரியுமானுங் கொண்டுதல்லோ
திட்டெனவே கண்டு நின்ற திருநீலகண்டனோட்டன்
தொட்டி பொருகின்ற படையை கண்டு நின்று
குத்திரத்தின் மையறும் கோதாவும் பட்டுதல்லோ
குறப் பயலும் பறப்பயலும் சேரமியா ராவுத்தரும்
ஒப்பமுள்ள மெய்மியாலும் முதச்சி பெருமாள் படையும்

4102 பூழியன — பாண்டியன்

4104 மூன்று முகங்கொண்ட அம்மன்-வள்ளியூர் கோயில் அழிந்து பட்டது. உலகமுழுதுடையாள் இவளே என்பார் தே. வி பிள்ளை. இவள் கோயில் ஒழுகின சேரியில் இல்லை.

தப்ப மதியில்லாமல் சமர் களத்தே பட்டுவிட்டார்
பல பலென விடியுமுன்னே பலர் கூடிச் சென்ற படை
அற்ப முந்தான் சலியாமல் அந்தியளவு பொருதபடை
அந்தியளவும் பொருதலுத்த யானே குதிரைப் படை
கொடுத்து
வந்த படையத்தனையும் தட்டு கெட்டுப் போச் செனவே
விட்டுப் போன பெரும்படையும் மீண்டு போன குதிரை
களும்
பட்டுச் சேண முள்ள தெல்லாம் பாளையத்தில் வந்து
கூடுதடா
கோடை படை பட்டு குதிரைபட்டு கோட்டைதனைக்
கொள்ள மாட்டாமல்
வாடி முகஞ் சம்பி மன்னவனும் வடுகச்சி மலையிலே வாங்கி
விட்டார்

4. சீர் சிந்து

வாங்கியங்கிருந்த போதே கன்னடியன் தானும்
மகள் தன்னைக் கூட்டியிங்கே வரவேணுமென்ன
தாங்குஞ் சிவிகைமாரும் சில தண்டிகை மாரும்
தந்திரமாக நடந்து பதினெட்டு நாளதிலே
ஒங்கு புகழ்க் கன்னடியன் முன்னே கொண்டு வந்தார்
ஒன்டொடியும் கைதொழவே கன்னடியன் தானும்
என்றிசையும் கன்னடியன் மகள் முகத்தைப் பார்த்து
எந்த விதந்தனிலும் ரெண்டிலொன்று காண்பேனென்ன
வாய்த்த புகழ் கன்னடியன் வடுகச்சி மலைதனிலே

2. சீர் சிந்து

கொடு முடியான் சோதிரியும் கோட்டையது பறித்திடவே
குற்றமில்லா வள்ளி நகர் குலசேகர மன்னன்
கெடுமதியால் கோட்டையிட்டுகேடுவந்து தான் பிடித்து

## இடைச்சி கதை

செஞ்சி மன்னர் மலை ஏறிக் கெட்ட வியாதியாலேயன்று
ஐவரிட்ட கோட்டைக் கொரு யழிவு வருங் காலத்திலே
மைவிழியாள் இடைச்சியவள் வந்த கதை கேளுமினு
வினை வளைக்கை யிடைச்சியவள் விடி வேறு தானழகி
பழையப் பத்தியுமிட்டுப் பசு கிடைக்கு தட்டையிலே
அழைக்க வரும் கைப்பிடித்து யசுபத்திலே செல்லுவாளாம்

4125 தட்டுகெட்டு—அழிந்து போய் (தட்டுக் கெட்டுப் போய் அலைகிறான். திண்டாடுகிறான்)

இளைய செம்பொன் தன்மடவார் யிரவிலங்கே தங்கி விட்டாள்
விடியு முன்னே தானழகி விலைமோரும் பானையுமாய்
வடி வுடை யாரிடைச்சியவள் வழிமேலே தான் நடந்து
செல்லியென இடைச்சியவள் திட்டெனவே மோரு கொண்டு
கொல்லுமந்த நமன் வரைக்கும் குடுக்கை கூத்துவன் தான்
சொல்லிந் தனைக் கடந்து தேர் கடந்த வூருமிட்டு
குன்றடர்ந்த சோலைவிட்டுக் குடமாடி மலையுமிட்டு
தென்றல் செறிகின்ற தீர்த்தத் தட்டை சிறந்த நெல்லி வனங்கடந்தாள்
கருவைத் தடமும் விட்டுத் தட்டைப்பாறை வெளியும் விட்டு
பருவத்திள முலையாள் பாங்கியருந்தானுக
ஒழுகு பாறை தன்னைவிட்டு உச்சி பொத்தைதனைக் கடந்து
எழுத வொண்ணு பெண் கொடியாளிச்சருவிலே யிறங்கி
மச்சினங்களெடுத்து வாழும் வங்கணத் தொண்டாறும்
அஞ்சனங்கண் விழி மடவார் அடி வாரத்தின் விளைவுமிட்டு
தயங்காத வேல்விழியாள் தையல் நல்லாள் இடைச்சியவள்
குரங்காறு தனைக் கடந்து கோசலையா ளிடைச்சியவள்
கண்டு கொண்டான் மாணிக்கத்தின் வயலதுவுந் தான் கடந்து
கைவீச்சங் கொருவிதமே கட்டழகாய்த் தான் நடந்தாள்
வண்டேறு பூங்குழலாள் மங்கை நல்லாளிடைச்சியவள்
வள்ளியூரு விலக்கும் விட்டு வடகிழக்காய்த் தானடந்தாள்
சன்னசி குளம்விட்டு தந்திரமாய்த் தான் நடந்தாள்

3. சீர் சிந்து

சாய்ந்த கொண்டை தானசைய ஆயத்துறைதனைக் கடந்தாள்
தென்னவர்கள் கோட்டைக்குள்ளே மோரு விற்க வேண்டுமென்று
சீவலப் பேரிகைக் குளங் கரை தனிலே சென்று
வந்து குளக்கரைதனிலே வடகரைக் கொம்பதிலே

4152 இடைச்சியின் மோர் குடுக்கையைக் கூத்துவன் (யமன்) என்று கூறுவர். ஏனெனில் இதுவே குலசேகரனது கோட்டையின் அழிவுக்குக் காரணமாயிருந்தது.

154 குடமாடி—மலையும் ஓடையும்

153—4167—இடைச்சி மலையையும் பல ஊர்களையும் கடந்து வள்ளியூர் போய்ச் சேர்ந்தாள்.

மன்னவர்கள் வைத்த கள்ள மடைதனிலே யிறங்கி,
கொந்து செறி பூங்குழலாள் குடுக்கை தனைத் தானெடுத்து
கோதிக் கோதித் தண்ணீர் தனை மோருக்குள்ளே கலந்து
முந்தானைத் தானொதிக்கி முகமுஞ் சற்றே மினுக்கி
முக்கால் பானை மோரு தன்னை முழுப்பானையாக்கி
குடுக்கை தனை மிதக்கவிட்டு கோசலையாளிடைச்சி
கொசுவமதைக் கொய்துடுத்தி கோசலையாளிடைச்சி
ஆசையுடனிடையிறுக்கி யருகே வரும் நேரம்
அடுத்து நின்ற குடுக்கையது சுழிக்குள்ளாகப்பட்டு
ஆழத்தாள் போக வென்று சுழலச் சுழல வருமாம்
தந்திரமாய்த் துயிலுடுத்தி தந்திரமாயி றங்கி
தன் குடுக்கை பொன் குடுக்கை தன்னையவள் பிடிக்க
கடுகனவே சுழிய முக்கி கையில் நின்று பறித்து
கள்ள மடைக்குள்ளே மெள்ளக் கவிந்ள்ளே குடுக்கை
குடுக்கை தனைக் காணாமல் கோசலையாளிடைச்சி
கொங்கையிலும் வயிற்றிலும் குத்தியடித் தழுதாள்
நடுக்கமுடனழுதழுது யிடைச்சி யவளப்போ
நாடியலைக் கரை தோறும் தேடியல மலந்து
பண்டி வயிற்றிலும் பற்றி யடித்தழுது
பகவானே என் குடுக்கை கண்டெடுப்ப தெப்போ
தாக முடனழுதழுது கண்ணீர் ஆறாய் ஓட
தாய் தகப்பன் தந்த இந்த குடுக்கை தனைக் களைந்தேன்
பூணுங் கட்டி நல்ல குடுக்கை பூதலத்தில் கண்டதில்லை
காண வேணுமென் குடுக்கை கருப்பன் சொரி ஐயனாரே
அந்த முள்ள குடுக்கை தன்னைக் களைந்து வீட்டில் சென்றால்
தந்தை தாய் தகப்பனுந்தான் சதை சதையா யறிந் தெறிவார்
எந்தனுடைய ஐயனாரே என் குடுக்கை தன்னைக்காணில்
ஏற்ற தொரு பாலும் பொங்கி யிளநீரும் தான் படைப்பேன்
ஏற்ற வார்த்தை சொல்லியந்த யிடைச்சியவள் தான் போனாள்

### 3. சீர் சிந்து

ஆக்க முள்ள குடுக்கையது யார் கையிலகப் படுமோ,
அன்ன நடை மின்னி நடையாளயர் சடித்த மனத்தோடே
தென்னருட கோட்டைக்குள்ளே தெருக்கள் தோறுஞ்

4175 கோதி—கோரி, அள்ளி (நெல்லை பா. வ)
4177 முழுப்பானையாக்கி - தண்ணீர் விட்டு நிரப்ப குடுக்கை கை தவறிமடைக்குள் விழுந்து விட்டது.

மோரு பானைதனை எடுத்து முசியாமல்தான் கடந்தாள் சென்று
இஷ்டமுடன் மோரு விற்க என்ன யுக்தி செய்யலாமென்று
நாச மெல்லாம் விளக்க வென்று நாமுமிங்கே வந்தோ மென்ன
நாழி கொண்டு மோரு விற்று நாணயமும் தான் வாங்கி
விற்று சேஷம் மோருங் கொண்டு வெகுமானத் தோடே யவள்
சற்று தண்ணீர் கோதிவிட சடுதியில் நீராவியிலே
நீராவிக் கரை தனிலே நீர் கோதிவிடச் சென்றாள்
கோதிவிடச் செல்லுகின்ற தோர் மதியிடைச்சியவள்
குடுக்கன் என்ற கூத்துவனைத்தான் மிதக்கக் கண்டவரும்
குடுக்கை தன்னைக் கண்ட போதே கோசலையாளிடைச்சி யவள்
கொண்டு முதலைப் பிள்ளை கொடுத்த வந்த கதை போல
மாயமோ என் குடுக்கை யிங்கே வந்து மிதப்பதென்ன ?
அலைந் தலைந்து குடுக்கையது அலைதனிலே சேரகக் கண்டு
ஆயிழையாள் குடுக்கை தன்னை யன்புடனே சென்றெடுத்து
மனம் மகிழ்ந் தாளிடைச்சியவள் மலக்க மெல்லாந் தான் தீர்ந்தாள்
காண நல்ல திரவியங்கள் கண்டெடுத்தே னென்று சொல்லி
கண்ணிலொத்தி மனம் மகிழ்ந்து தன் தனத் தோடே தானணைந்தாள்
எந்தனுடை மூதாக்கள் தந்த இந்தக் குடுக்கை
ஏழெட்டுத் தலை முறையாய் யாண்டிருந்த குடுக்கை
மங்கிலியந் தரித்தயன்றே நீர் வார்த்தக் குடுக்கை
மாமி மார் சீதனமாய்த் தந்த திந்தக் குடுக்கை
கண்டெடுத்துக் கொண்டது மென் பாக்கியமோ என்றாள்
இறந்தவர்கள் இன்று வந்தாரென்று சொல்லி யிடைச்சி
கண்டு கொள்ளலாமே யினி மோரு விற்ற தெல்லாம்

4200 படைப்பேன்-நிவேதனம் செய்வேன்

4210 முதலைப் பிள்ளை—முதலையுண்ட பாலனை அழைத்த கதை சுந்தரமூர்த்தி நாயனார் முதலையுண்ட பாலனை உயிரோடு அழைத்த கதை. அதுபோல குடுக்கை கிடைத்தது.

4210 குடுக்கன் — (கூற்றுவனுக்கு ஒப்பிட்டிருப்பதால் இந்த அஃறிணைப் பொருளைக் குடுக்கன் என்று உயர்திணை ஆண்பாலாக்கினார்.) கூத்துவன் - கூற்றுவன் - எமன்.

மீண்டங்கே தானேடி வழிகளெல்லாங் கடந்தாள்
இனி பிழைத்தேனென்று சொல்லி யிசைந்து வழி நடந்தாள்
தேன் மொழியாளிடைச்சியவள் தென்பனைக்கேறி வந்தாள்
அன்று தங்கி விடியு முன்னே மோர்ப் பானை தானெடுத்து
அம்மையப்பன் தன்னோடே உண்மை யெல்லாஞ் சொல்வாள்
குன்றெடுத்த திண்புயத்தார் ஐவர் ராசாக்கள்
கோட்டைக்குள்ளே போகாமல் கேட்டையெல்லாம் விளக்க
கன்னடிய பாளையத்தில் மோரு விற்கச் சென்று
கைவீச்சுந் தோளிலிட்ட கலையதுமாய் நடந்தாள்

இடைச்சி கன்னடியன் பாளையத்திற்குச் சென்றது

உண்ணு முன்னே கன்னடியன் பாளையத்தில் சென்று
ஊழியக்காரர் தெருவில் உலாவி மோரு விற்றாள்
மோரு விற்ற காசு தன்னை முந்தியிலே முடிந்து
முறையு மிட்டாளூழியக்காரர் முந்தி தன்னைப் பிடிக்க
அபய மிட்டாள் மோரு விற்ற காசு தனைப் பறிக்க
அபய மிட்டாள் முறையு மிட்டாள் ஆவலாதியாக்கி
மாரு தட்டி யாரு பொட்டி நீ எனவே வைதார்,
மடி பிடித்தாரடி பிடியாய் மனிதர் பலர் கூடி
பாரு கெட்டேனென்னுடைய முந்திதனைப் பிடித்தான்
பறித்தெடுத்தான் குடுக்கை தன்னை நிலத்தோடே யறைய
ஆகெடுவாயென் குடுக்கை தனைப் பறித்தெறிந்தாய் நீயும்
அநேக மெல்லாம் பாடுபட்டேன் என் குடுக்கை காண
நேசமுள்ள என் குடுக்கை நேற்று பிழைத்ததுவே
நொந்த புண்ணில் தீ வாரியிட்ட வகை போலே
பாராமல் நின்றவர்கள் பரிசாரம் பிடிக்க
பாலிழந்த குடுக்கை வந்த பண்புரைப்பாயென்ன
ஆயிழையாளிடைச்சி சொல்ல ஐவரிட்ட கோட்டை

4230 மோர் விற்றுச் சேர்த்த காசைப் பிடுங்க கன்னடிய வீரர்கள் முனைந்தனர். தற்செயலாக இவளைப் பிடித்தார்கள். ஆனால் கள்ளமடை இரகசியத்தை அறிந்து கொண்டார்கள். கள்ளமடையை அடைத்து விட்டால் வள்ளியூர்க் கோட்டைக்குக் குடிதண்ணீர் வராது.

4240 ஆவலாதி - குற்றம் கூறுதல் (பா.வ)

4241 மாரு—மார்பு

4241 பொட்டி - வசைச்சொல்

அழிய வேணுமென்று சொல்லி மொழிகளெல்லாஞ்
சொன்னாள்
செல்வமுள்ள மன்னவர்கள் ஐவர் ராஜாக்கள்
சொந்த வள்ளியூர் தனிலே மோரு விற்க வேணுமென்று

### கள்ளமடை ரகசியம் அறிதல்

சீவலப் பேரிக் குளத்தில் கரை தனிலே சென்று
மோரு விற்று மீண்டு வர நேரஞ் செல்லுமென்ன
முந்தியிலே முடிந்து வந்த சோத்தை யவித்துண்டேன்
நீரு மொள்ள கரை தன்னிலே குடுக்கை கொண்டு
சென்றேன்
நெடுஞ் சுழியிலுறிஞ்சி விட்டு குடுக்கை கண்டேனில்லே
கண்ணில் முகம் வயத்தோடும் யடித்தழுது கொண்டேன்
கண்டதில்லே யென் குடுக்கை யெங்குந் தேடியலேந்தேன்
காவலர்கள் வீற்றிருக்கும் கோட்டைக்குள்ளே சென்று
ஆவலுடனழு தழுது மோரு கொண்டு விற்று
அர்ச்சலித்த மனத்தோடே நீர் குடிக்கச் சென்றேன்
காணுமல் போனதொரு கண் மாணிக்க மென் குடுக்கை
காவலர்கள் நீராவிக் கரை தனிலே கண்டேன்
கண்டெடுத்துக் கொண்ட தென் கண் மாணிக்கமென்ன
கன்னடியன் பாளேயத்தில் மோரு விற்க வந்தேன்
இன்று அந்தக் குடுக்கை தன்னே நிலத்தோடே எறிந்தான்
என்றுமந்த யிடைச்சி சொல்ல வூழியக்காரருந்தான்
அன்று நன்ருய் மனமகிழ்ந்து யிடைச்சி தன்னேயனுப்பி
அறியாமல் செய்த பிழை பொருத்திடு நீ என்ன
நீயுள்ளளவும் மன்னனுட சந்ததி யுள்ளளவும்
உண்டுடுத்துக் சுகிக்கமுத லுண்டாக்கித் தருவேன்
காராருங் குழலாளே கண்ணியே நீயிடைச்சி

### கள்ளமடையைக் காட்ட வேண்டுதல்

கள்ளமடை தன்னேயிங்கு காட்டிட வேணுமென்று
கைப் பிடியாய்க் கன்னடியன் முன்னே கொண்டு விட்டார்
செப்பமுடன் கண்டு நின்ற யூழியக் காரனேடி
செய்தி யெல்லாங் கன்னடியன் செவி கேட்கச் சொன்னான்
காவலனேத் தொழுது நின்று விசேஷமெல்லாஞ் சொன்னான்
செய்தி யெல்லாம் நன்றெனவே நமக்கு இனியின்று
தங்கையரே இடைச்சியரே முடுக வாருமென்ன
மணிச் சேலேப் பருகு மணி பட்டு விளிம்பதுவும்

மணிப் பதைக்கமுஞ் சவடி முத்து மாலைகளும் கொடுத்து
வங்கிஷத் திலுள்ளவர்கள் தங்களுக்கும் பிழைக்க
கதை வகை கொடுத்த பின்பு காரிகையைதான் நோக்கி
கள்ளமடை தன்னை வந்து காட்டிட நீ வேணுமென்று
அணிக் கணியாய் யானை விட்டு யிடைச்சி சொல்லும் போது
ஏந்திழையாள் யிடைச்சி தன்னைக் கைப்பிடியாய்க் கொண்டு சென்று
என்று முன்னே தானடைந்து அங்கே மெல்லச் செல்லுவாள்
வஞ்சனங் கண் விழி மடவாள் ஐவராசாக்கள்
அணியந்தச் சேலைகளில் மோரு விற்பாரைப் போலே
மெய்யாக வழி நடந்து மெல்லி நல்லாளிடைச்சியவள்
கற்பனை சொரி ஐயனுட காவலதுவுங் கடந்து
பள்ள மது மறுகாலும் பதுங்கி மெல்ல தானடந்து
கள்ளமடை தன்னையங்கே சொல்ல மெள்ளச் சென்று
இவ்விடங் காண் என் குடுக்கை களைந்தவிடம் என்ன
என்று சொல்லி ஊழியக்காரர் மடைச் சுழியும் கண்டார்
மைவிழி வேல் கண் மடவாள் மாபாவி இடைச்சியவள்
வள்ளியூர் அழிக்க மருந்திட்டவர்கள் தனைப்போலே
வன்பணைய பதிதணிலே சொல்லி மெள்ளத் தான் போனார்
கதிமையுடன் கண்டு நின்ற ஊழியக்காரனோடி
கன்னடியன் முன்னே சென்று உண்மை யெல்லாஞ் சொல் வானும்

கன்னடியனிடம் ஊழியன் கூறுவது

அழிவு காலம் வந்தது காண் ஐவருட கோட்டைக்கென்றுன்
மெள்ள வந்து கள்ளமடை அடைக்க வேணுமென்று சொல்லி
கள்ளமடை யடைக்கக் கன்னடியன் பெரும்படை தான்
கொள்ளை வெள்ளம் பரந்தாற் போல் கொழுந்து விட்டுச் சாயுதடா
முட்டாமல் குழிகள் வெட்ட முன்னூறு பேருக்குக் கர்த்தன்
ஒட்டனோடு தண்டேறியும் கட்ட மண் வெட்டிக்காரர்களும்
வெட்டியங்கே மடையடைக்க விரைந்து படை சாயுதம்மா
ஒட்டமா நடப்பார்களாம் கூட்டமிட்ட படையோடே

4297 களைந்த—தொலைந்த (குமரி மாவட்டம் பா. வ)
4297 மருந்திட்டவர்கள் தனைப்போல்—நுனியம் செய்பவர்கள் கொடுக்கும் வசிய மருந்து
4301 பணையபதி - பணகுடி

நாட்டாத்தான் கரையும் விட்டு நம்பி கருங் குடியும் விட்டு
தெற்கே நோக்கி நடந்த படை செங்கல் சுள்ளை மருகாலும் விட்டு
திருகுன்றுமலை கடந்து நேரே மேற்காய் நடந்தபடை
கற்பன் சொரிஐயன் கோவில் கட்கு கள்ளமடைக்கு செல்லுதடா
இஷ்டமுடன் ராமருக்கு எழுபது வெள்ளம் பொருபடைதான்
வட்டக் கடல் தனையடைக்க வானரங்கள் வந்தாப் போலே
குட்டை மண் வெட்டிக் காரர்களும் குந்தாலிக்காரர்களும்
எட்டுத் திக்கும் வெட்டி வெட்டி எடுத்துவிட்ட மண்ணை யெல்லாம்
குட்டை மண்ணும் கரண்களுந்தான் கொண்டு சென்று போடறப்போ
கட்டியன்றிக் கசைக்குதடா கள்ளமடையில் செவிட்டுப் பூதம்
கயத்துக் கோணி மேல் தேங்காய் போலே மடையிலிரங்கிக் கொண்டு
வயலுக்குள்ளே பூந்தால் போலே மண்ணையெல்லாங் கரைக்குதடா
முக்குளித்துச் சிலபேர்கள் முகவாயில் முக்குதடா
கரைக் கிடுக்கே பதுங்கிக் கொண்டு கழுத்தை முறிக்குதடா
கழுத்தளவு வெள்ளத்திலே கள்ளமடை செவிட்டு பூதம்
அலக்கழித்து நிக்குதடா அடைக்கட்டாமல் ஒரு பூதம்
முடுக்குதடா பூதமது முன் பின்னுய் விரட்டுதடா
கடுகெனவே விரட்டுதடா கல்லும் இரும்புங் கொண்டெறியுதடா
கட்டி வந்த பெருமுழக்கு கன்னடியன் பெரும்படையைத் தான்
விரட்டுதடா நாலு திக்கும் முட்டு முழங்கால் முறியுதடா
முகமதிலும் சென்னியிலும் மூக்கிலும் கல்லடிகள் பட
சுகத்தோடே வந்தவர்கள் சோரை யோடே ஒரு வரும்

4320 கரண்களும்—புல் வளர்ந்த மண் கட்டிகளும் போடறப்போ—போடுகிற பொழுது (அப்போ, அப்பொழுது—இப்போ, எப்போ—நெல்லை பா. வ)

4323 பூந்தால்—புகுந்தால் (பா. வ)

4324 முக்குளித்து—தண்ணீரினுள் முழ்கி (பா. வ)

4324 முக்குதடா—முழு கடிக்கிறது. (பா, வ)

4327 அடைக்கட்டாமல்—அடக்க முடியாத

புல்லில் சிந்தும் தவிடும் போலே போன போன திசைகளெல்லாம்
பல்லுகளும் உதடுகளும் படலோடே போச்சுதென்பார்
சல்லி கல்லுகள் வாங்கி தவிடு வாங்கி ஒக்கப் போச்சே
கல்லும் எலும்பு கொண்டு கால் முறிய எறியுதடா
குறட்டிலே கல்லுப்பட்டு குடுக்கை தலையுமத்து
பல்லுகள் தகர்ந்து தல்லிப் போச்சு தென்பார் சிலர்
கறட்டுக் கல்லெலும்புங் கணக்காய் நெரியப்பட்டு
கவிழ்ந்து விழுந்தெழுந்து கன்னங்கள் தகர்ந்ததென்பார்
உண்டைக் கல்லுகள் பட்டு உருண்டு விழுவார் சிலர்
புடரியிலே கல்லுப்பட்டு புரண்டு விழுவார் சிலர்
பரட்டைச் செருக்கியிந்த இடைச்சி தன் வார்த்தை கேட்டு
சிறட்டை தகர் விழுந்து உருண்டோட எழுந்திருந்து
சிரத்திலும் கல்லுப்பட்டு இரத்தம் வடிவார் சிலர்
கன்னத்திலே கல்லுபட்டு கவிழ்ந்து விழுவார் சிலர்
மார்பிலே கல்லுப்பட்டு மலந்து விழுவார் சிலர்
கட்ட மண்ணடி தணிலும் காட்டிலும் பதுங்கிக் கொண்டு
கட்டியுங் கல்லுங் படுமென்றே எட்டிப் பார்ப்பாரும்
வேட்டு கல்லு பட்டு தலை விட்டுப் போச்சு தென்பாரும்
வீழ்ந்து எழுந்திருந்து வெள்ளம் போலே ஓடுவாரும்
சமட்டி மிதித்தேறி குதித்தோடிப் போவாரும்
குட்ட மண் வெட்டிவிட்டு குந்தாலி போட்டாடு வாரும்
கொண்டாடியப்படியே குளக்கரையுமுடையும்
கோரை சாஞ்சாப் போலே சாஞ்சு எங்குந் தான் பறந்து
கன்னடியன் பெரும் படையும் கள்ள மடையில் செவிட்டுப் பூதம்
கண்ட கண்ட திசைகளெல்லாம் கல்லெறி பட்டுதடா
தென்னருட குளக்கரைக்கே திமிலைகுமிலை படும் நேரம்
மேடையிலே கோட்டைக்குள்ளே வீற்றிருந்த பாண்டியற்கு
தேடி வைத்த திரவியம் போல் திருநீலகண்டனெட்டன்
ஓடிவந்து சொன்ன போதே உடைந்ததல்லோ பெரும்படை தான்

மடை, அணை, கோயில், கோட்டை, புதையல் இவற்றைப் பூதம் காப்பதாக கிராமீய நம்பிக்கை உண்டு. பூதத்தைத் திருப்தி செய்ய நரபலி கொடுப்பது வழக்கமாயிருந்திருக்கிறது.

4335 படல்—கொத்தாக

4343—புடரி—புடதி—கழுத்தின் பின் புறம் (நெல்லை வழக்கு)

4353—சமட்டி—உதைத்து (குமரி—பா. வ)

4359—திமிலை குமிலை—கூக்குரல் (அமளி குமளி)

கட லுடைந்து நாலு திக்கும் கடல்கள் பரந்தாற் போலே
அடல் படைத்த பாண்டியர் ஐவரவர் ராசாக்கள் படை
ஆக மெல்லா மிகச் சினத்து அடர்ந்து போர் செய்யவென்று
திடு திடென ஓடிப்படை சென்று முன்னே யுடைக்குதுகாண்
கன்னடியன் குளங்கரையும் கற்பனை சொரி ஐயப்பன் கோவிலும்
மன்னவர்கள் பெரும்படைதான் மயிலாடும் பாறையுமாய்
ஏழானை கொண்ட ஐயன் இணையடியைப் போற்றி செய்து
தாளாமல் பொருத படை சன்னல் பின்னலாகுதடா

### 3. சீர் சிந்து

ஐவர்க்கும் மடையடைக்கப் போகாதென்ன
அரசன் பெரும்படையை அடர நெருக்கவே
இருவரு மெதுக்கவே யாவரும் நடத்தவே
இரண்டுங் கலந்து வெட்டிப் புரண்டு மடியவே
வட்ட மிட்ட தூசியிலே வார குதிரை தன்னை
வளைந்து சிலரை வெட்டி களத்தில் மடியவே
தளத்தில் மடிந்து சிலர் தடியுமாருங் கொள்ளவே
ஒட்டாபட்டுத் தலை கொட்டி முட்டி போலுருள
ஒட்டனொரு தண்டேரியும் குட்டமண் வெட்டிக்காரர்களு
ஒதுங்கி வடுகிச்சி மலையை நோக்கி யோடவே
மதுரை வெட்டு மாறனும் வல்வேல் மாறனும்
மலையைக் குடைய வெட்டு மருப்புலி மாறனும்
மங்கைப் பெருமாளுடனே சிங்கப் பெருமாளுமாய்
குதிரை விட்டுக் குத்தியே குடல்மாலை சூடிடுவார்
கூட்டப் புலிதன்னைக் குத்தி மாட்டுப் புலிபோலே
தாண்டிக் குத்துவார் சிலர் ஒண்டிக்கிடப்பார் சிலர்
சரங்கள் பட்டுப்பருத்த மரங்களென விழுவார்
மண்டிப் போட்டிருந்து வெட்டி மடிந்து விழுவார் சிலர்
மடையுங் குளங்கரையும் படையும் பிணமாகவே
குளத்துக் கலைமாறு கொண்டு சென்று போட்டாப் போலே
கோடிப் பெரும்படையைக் கொண்டு வந்து கன்னடியன்
தளத்திலகப்பட்டுத் தரிப்பு மாறுங் கொள்ளவே
கூட்டப் பெரும்படையைக் கொண்டு வந்து கன்னடியன்

4270—சன்ன பின்னல்—சின்ன பின்னம் (நெல்லை பா. வ) —பொருள் விளங்கவில்லை

4279—தண்டேரி — தண்டியல் என்னும் பல்லக்கு ஏறிவரும் அதிகாரி

களத்தில் படக் கொடுத்துக் கால் கிளம்பி யோடிடவே
தண்டிப் பொருதப் படைதானுங் கெக்கலித்து
ஒப்பத்துடன் கன்னடியன் ஒதுங்கியந்தப் படையோடே
எப்படியும் படை பொருது வென்று மடைக்க வென்று
செப்பத்துடனே கூடிச் சிறப்புடனே இருந்த நாளில்
பத்தெட்டு பொறுத்து பாண்டியருஞ் சலித்த போது
பாதியிரா வளவும் பகல் முழுதும் அடைபடாமல்
மன்னவர்களனை வோரும் மயிலாடும் பாறையிலே
தன் படையுந் தானுமாகத் தானையமாய்த் தானிருந்து
கன்னடியன் பெரும்படைதான் கள்ளமடைஅடைத்த வரை
பின்னையும் விரட்டுதடா பிணம் பிடுங்கிப் பூதமது
சோதிரியைத் தானழைத்துத் துக்கிசமாய்க் கேட்ட போது
நீதியுடன் சொல்லுவாளும் நிலைமையுள்ள சோதிரியும்
செப்பேடு கண்ட போது செய்தி சொல்வான் சோதிரியும்
அப்போதேயுள்ள பூதம் ஆளுலும் வெல்லொணுது
மனிதரையும் பெலி கொடுத்து யொரு மதயானையும் மறுத்திடுகில்
தனித் தொருவடைத்திடினும் தானே யடைபடுங்காண்
சொன்ன தொரு சோதிரிக்குத் தூங்கமுடன் பூதத்துக்கு
கர்ணனைப் போல் கொடை கொடுத்து கனக தண்டிகைத் தான் கொடுத்தான்
இந்நிலமுங் கொண்டாட இஷ்டமுடன் பூதத்துக்கு
நானிலமுங் கொண்டாட நரபலியுந்தான் கொடுத்தான்
ஆனை தனையுமறுத்து அலங்காரப்பெலி கொடுத்தார்
ஐவருந்தான் கோட்டைக்குள்ளே யடைபடவும் வேணுமென்று
கையர மாயடைபடுங்காண் கள்ளமடைப் பொழுது
அப்படியே செய்தபோது யடைபட்டுதாம் கள்ளமடை
மடையடைபட்ட போதே மனமகிழ்ந்து கன்னடியன்

4400 கொச்சலித்து—துரவாரமிட்டு
4403 தானையமாய்—மறைவாக.
4406 துக்கிஷமாய்—துக்கத்தோடு (பா. வ. நெல்லை)
4408 செப்பேடு—சூனியம் வைப்பவர்கள் செப்பேட்டில் எழுதி மந்திரித்து வைப்பார்கள். இது சூனிய நம்பிக்கையைக் காட்டும் (Folk belief)
4410 பெலி—பலி.
4415 நரபலி—மடையைக்காக்கும் பூதம் விலக நரபலி கொடுத்தார்கள். இது போலவே புதையல் வெடுக்கவும் நரபலி கொடுப்பார்கள்.

காக்கும் பூதத்திற்கு நரபலி கொடுத்ததாக சின்னத் தம்பி கதையில் சொல்லப்படும்.

படையோட வந்து விட்டான் பாண்டியர் கோட்டைக் குள்ளே
சளையாமல் பின்னையுந்தான் தானெதிர்த்துப் படை பொருதான்
படை யானை பரிகுதிரை பரிகலங்களுள்ள தெல்லாம்
இடையறவே தண்ணீருமில்லை யென்று மனஞ்சலித்து
பேராவித் தண்ணீரும் புரமடைக்கரைத் தண்ணீரும்
நீராவி தண்ணீரும் நெடுங்குளத்துத் தண்ணீரும்
அவசரம் வரதறியாமல் அநேக நாளைக் கேற்றி வைத்து
தவசக் கட்குத் தேங்காயில் தண்ணீருந்தான் குடித்தான்
என்று மந்தக் கன்னடியன் லக்கமற்ற படையோடே
ஆறுமாதம் பின்னையுந்தான் அசையாமல் படை பொருதார்
படை பொருது நிற்கும் நேரம் பழி படைத்த சோதிரியும்
மடையதுவு மடைபட்டுதே மன்னவரும் குலைப்படுவார்
இணை பெரிய பாண்டியனுரிட்ட கோட்டையுந்தானழியும்
கணப் பொழுதில் கோட்டை தன்னை கன்னடியன் கொள்வாவெனன்ன
கண்ட மண்டிப் பொருதுகின்ற கன்னடியன் நிற்கும் நேரம்
நாட்டுக்குக் குலுக்கு மென்று நடந்து விட்டான் சோதிரியும்
பாண்டியர்கள் மாளிகைக்கே பாதி ராவு தீயும் வைத்து
மூண்டு வந்த அக்கினியால் விரையவங்கே நடப்பானும்
சதிராகச் சோதிரியும் தானொளித்துப் போனபோதே
மதிக்க வொண்ணுப் பாண்டியரும் மந்திரிமாரும் ஒன்றுய்க் கூடி
படை பலிப்புக் காரியமும் பரிந்து படைத் திருப்பானென்று
அடக்கமுடன் கேட்க வென்ன ஆள் விட்டார் சோதிரிக்கு
ஆளோடி வீட்டில் செல்ல அவன் பதியில் காணுமல்
மீண்டோடிப் பாளையமும் மிகுந்ததொரு படைகளெல்லாம்
கடைத் தெருத்தனையும் கண்ட கண்ட விடங்களெல்லாம்
தேடியெங்கும் காணுமல் திருநீலகண்டானுட்டன்
ஓடிவந்து தெண்டனிட்டு உள்ள லெல்லாஞ் செல்லுவானும்
வண்டு சுற்றும் துடை மன்னர் மன்னவனே பாண்டியனே
உண்ட சோத்துக்கு ரெண்டகஞ் செய்து உபாயமிட்டு வந்தவன் காண்
கண்டுத் தில்லைச் சோதிரியை கடந்து விட்டானிவிடம் விட்டு

4416—யானை பலியிடுவது எந்தப் பாடலிலும் வராதது. புதுமை
4416 —பெலி—பலி
4440 —ராவு—இரவு (நெல்லை, குமரி பேச்சு வழக்கு)
4453 கண்டுதில்லை—கண்டதில்லை (திரிபு) பேச்சு
4454 சம்பி—சார்ந்து, சுருங்கி (குமரி பு. வ)

கடந்து விட்டானென்ற பொது காவலரு மிகக்கலங்கி
வீபிஷணன் சொல் கேளாமல் வெகுண்டு இலங்கை யழிந்து
வீடழிந்து கலங்கி நின்ற ராவணனைப் போல் சலித்து
வாடி முகஞ் சம்பியங்கே வயனவனை நினைப்பானும்
நினைத்து மினிப் பயனுமுண்டோ நிலையழிந்த காவியத்தை
அனைத்துலகுங் கீர்த்தி பெறயமரர் பொற்றேர் வேணு
மென்றார்
செப்பமுடனவனிருக்கச் சேரவடச் சோதிரியும்
மெய்ப்புடனே கன்னடியனுக்கு விசேஷமெல்லாஞ் சொல்லு
வானும்
கோட்டை தன்னை வளைத்துக் கொண்டால்
இஷ்டமுடன் சொல்லுகிறேன் இனியுனக்கு தாமதமேன்
உடைக்கு முன்னே கோட்டை விட்டு உண்மை சொன்ன
கன்னடியர்
அடக்கமுடன் கேட்டிருந்து யதுக் கிசைந்து கன்னடியன்

3. சீர் சிந்து

அப்படியே கன்னடியன் தானு மங்கிருக்க
ஐவருந்தான் கோட்டைக்குள்ளே தானிருந்து சொல்வார்
இப்படிப் படை பொருது இங்கிருந் தோமானால்
இனி நமக்குப் போக்கு நீக்கு கண்டிருக்க வேணும்
கண்டிருக்க வேணுமென்று குலசேகரர் சொல்வார்
பண்டு முன்னாளில் தெய்வ பாண்டியரிட்ட கோட்டை
பலசக்கரப் படை வரினு மங்கே செல்லொண்ணாதே
கண்டிருக்கு மொழியாருங் கடனை பாளையமும்
கனபரியுமாகத் தக்க கருவலமுங் கொண்டு
கொண்டு சென்று சுரத்து வயல் வழியாலே யேற்று
கோட்டைக்குள்பள ஆதானித்து சிலரிருக்க வேணும்என்ன
இருக்க வேணும் படை பொருது நாளுமிங்கே

4459 —இனி வெற்றிபெறப் போவதில்லை, அமரருலகிற்குங் பொற் றேரில் போக வேண்டுமென நினைத்தான். (வீரசுவர்க்கம்)

4460—சோதிடத்தால் ஏமாற்றிய ஒற்றன் கன்னடியன் படை வீட்டிற்குப் போய்விட்டான்

4469 போக்கு நீக்கு (நெல்லை, குமரி பா. வ) விட்டுக் கொடுத்தார்

4474—கண்டிருக்கு மொழியார்—கற்கண்டு போல் இனிக்கும் மொழியுடைய உரிமைச் சுற்றமான பெண்டிர்.

475—கருவலம்—கருவூலம். 4476 ஆதானித்து—தங்கி

இடம் பார்த்து நமக்கு மலையேறிக் கொள்ளாமலே
உற்சாகம் பலதும் சொல்லி நீட்டுகளுமெழுதி
ஒட்டன் திரு நீலகண்டன் கையில் கொடுத்தாராம்
எப்போதும் வல்லா திரு நீல கண்டா
என்று முன்னே காரியங் கண்டிருக்க வேணும்
திருத்த முடனிருந்த வார்த்தை குலசேகரர் சொல்ல
திரு நீலகண்டன் தெற்கு வள்ளியூர் கடந்தான்
வள்ளியூரும் விட்டு பனையப்பதி கடந்து
செப்பத்துடன் முப்பந்தலுந் தோவாளையுங் கடந்து
அற்பத்துடனேடியாடி வடசேரி விட்டு
அசிக்காள் குளமுங் திருவடக் கோடுங் கடந்து
வண்டு சுற்றும் வள்ளியாறும் நின்னைய குளமும்
வடத்திலேயேறித் தெற்கு வாசல் கடந்தானே
செண்டயப் பதியில் சென்று திரு நீலகண்டன்
சேரன் பெருமானிருக்கும் கோவில் காவில் சென்றான்
கோவில் காவில் சென்று நின்று பொற்கதவைத் தள்ளி
குலசேகரர் விட்டு விட்ட ஒட்டனென்று சொன்னான்
சேவிக்கும் துரைக்காரர் வாசல் தன்னை துறந்து
சேரப் பெருமாள் முன்னே சென்று சொல்லுவானும்
தென்னவர்கள் கட்டுமட்டும் தேச நீதியதுவும்
சேரமான் கட்டொருக்கால் குலையாத மார்பா
பொன்னிலங்குங் கொடியோனே பேரரசரே
பூமியருக் கழிந்திடினும் பொய்யுரையாமலே
பன்னு தமிழ் யாவருந்தான் பாடுதெல்லாங் கேட்டு
பன் பொன்னு நாடழிந்த பார்புகழுஞ் சேர
தெங்கினுட கனியுதிர்ந்து கமுகுகுலை சிதறி
செங்கதலிக் கனியுதிருந் தெய்வ மலைநாடா
பண கமுகு பழக்காயும் மந்தி கனியுண்ண
பச் செருக்கன் கனி கண்டு பழமதிலே விழுமாம்
அதைக் கண்டிருந்த குருவிகளும் தாராவும் புள்ளும்

4480—உற்சாகம் பலதும் சொல்லி—உற்சாகம் ஊட்டக் கூடிய பல பேச்சுக்களும் பேசி. நீட்டு—அரசர் எழுதும் கடிதம் (குமரி வழக்கு) 4482—வல்ல—பெரிய—(மலையாளம்)

[illegible] பனையப்பதி—பணகுடி. 4486 முதல் 4492வரை. வள்ளியூரில் இருந்து செண்டையப் பதிவரை உள்ள ஊர்களை வரிசை யாகச் சொல்லப்படுகிறது. இன்றும் இவ்வூர்கள் தெற்கு நோக்கிச் சென்றால் வரிசையாகவே இருக்கின்றன வள்ளியூர் —பணகுடி—முப்பந்தல்—தோவாளை—வடசேரி—அரிக்காங் குளம்—திருவடக்கோடு வள்ளியாறு, செண்டைப்பதி.

க்கரை சேர்ந்து மேய்ந்தடையு மந்தமலை நாடா
என்னிலமுங் கீர்த்தி பெற்ற சேரர் பெருமானே
எம்பிரானே தம்புரானே ஏருய் விண்ணப்பம்
உடலோடே சொக்கம் பெற்ற வங்கிவித்துக்கரசே
ஒருக்காலு மாண்மை நெறி சுருங்காத மாலே
கடல் போலெ கன்னடியன் படையெடுத்து வந்து
காவலர்கள் பொருதலுத்த கைக் கொள்ள மாட்டாமல்
மடலோடே செண்பகங்கள் பூக்கும் வஞ்சி நாடா
உன் மச்சின மாரிங்கு வர கேட்டு விட்டார் மன்னு
ஒட்டன் சொன்ன வார்த்தை கேட்டு சேரப் பெருமாளும்
உண்மையான மந்திரிமாரை யொக்கவரவழைத்து
நீட்டு வாசித்துக் கொண்டுள மகிழ்ந்திருந்து
நேசமுள்ள அச்சனங்கேது மொழி சொல்வான்
வட்டமிட்டு மயிலாடும் வள்ளியூரு விட்டால்
மன்னவர்க்கு நாங்களுண்டு கலங்கவும் வேண்டாமே
கண்டோடே கருவலமும் கரிபரிகள் காலாளும்
காவலர்கள் தம்மையிங்கே கடுக வரச் சொல்வாய்
மோசமில்லை வருவதற்கு திருநீலகண்டா
தனம் விழுந்தால் வயிறல்லவோ தாங்குவது மன்னு
நேசமுடன் சென்று சொல்லொன்றுக்கு மஞ்சாதே
சென்று தாமதியாமலே சென்று சொல்லொட்டா
அந்த நேரத்திலே யிந்த திருநீல கண்டனோட்டன்
ஆகாச கெவுன மோடு மலர்களைப் போலோடு வாரும்
முந்தியொரு நாழிக்குள் பிரிசப் பிரியமென்ன
முளுகிக் கடித்தாயோடி முப்பந்தல் தனைக் கடந்து
முந்திப் பனையப்பதியும் சந்திரப் புளி மூடும்விட்டு
சிற்பங்கள் சிறந்து இருக்கும் வள்ளியூருக் கோட்டைக் குள்ளே
தென்னவனைக் கண்டு நின்று செய்தியெல்லாஞ் சொல்லுவானும்

4. சிர் சிந்து

சென்று கண்டேனும்முடைய மச்சாவிமாரை
சேரப் பெருமாளருளிச் செய்தி கேளும்
நன்று நன்று வருவது தானென்று மந்தவரசர்
நம்முடைய மச்சினன் மார் நாமிங்கே இருக்கச்சே

4536 மச்சாவி—மைத்துனன் (மலையாளம்) குமரி மாவட்டத்தில் வழங்கும் உறவுச் சொல் 4540—இருக்கச்சே—இருக்கும் பொழுது (குமரி. பா. வ)

இரத்தின சிங்கா சனமும் பெரிய உடைவாளும்
தாரிலங்கு கோதண்டராமன் பதக்கங்களும்
அவர் தங்களுக்கு வென்று சொல்லிதான் கொடுத்துவிட்டார்
கொடுத்துவிட்ட போதிலந்த குலசேகரப் பெருமாள்
கோட்டைவிட்டு நாமுமலே நாட்டிலொதுங் கிடுகில்
எடுத்தேற கன்னடியன் பின்துடர்ந்து வரும்போது
எல்லையில்லாக் குதிரைப்படை கொல்லைமட்டுஞ் செல்லும்
கொல்ல முதல் வல்லக்கரை கொச்சி கோழிக் கோடும்
குழித்துறையுந் திருவட்டாறு மந்தப் புரமட்டும்
செல்லி சென்டைப் படைவீடு சிறந்த மலைநாடும்
ஒன்றுக்குந்தான் சலியாதே என்று மந்தவரசர்
உறுதி பல வார்த்தை சொல்லியழைத்து விட்டார் மன்னு
மச்சாவி மார் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு
மனங்கிளர்ந்து களிகூர்ந்து குலசேகரர் சொல்வார்
எச்சாதியபட்டு நமக்கிவ்விட முறையாது
ஏது பண்டம் நாம் கொடுப்போம் என்று சொல்லியவர்க்கு
எழு நீலத் திருவிளக்கு பொன்னின் கலமதுவும்
திருவஞ்சிக் களையன் ஒருசேர யழிந்திடுமாம்
நம்மாலே மலைநாடு அழித்த தென்ன வேண்டாம்
நம்மையவர் வேண்டாமென்று சொல்லுவாரோ
சும்மா தானிருந்தாலும் வகையல்லவே நமக்கு
சூதான பலதுஞ் செய்து நாமிருக்க வேணும்
ஆகத்தக்க கருவலமும் கரிபரிகள் காலாளும்
ஆடல்பரி கலந்தாரும் தேவிமாரு மொக்கவே
போகத் தக்கதாக அவர் கடிதாகவொருமித்து
பூரணமாய்க் காரங்கொண்டு புறப்பட்டாரே
தெற்கே நோக்கிப் போக்குக் காட்டி மலையருகே யொதுங்கி
திருமா மருப்புமிட்டு செம்பொத்தையுங் கடந்து
கற்குன்று காடுகளும் களந்தை மலைகடந்து
கடுகெனவே யத்தியூருக் காலுங் கடந்தாரம்
சூரத்துவல்லி வழியாலே யொருத்தரறியாமல்
சொரிமுத்துப் பாறைவிட்டு தட்டப்பாறை கடந்து
தனத்தோடே சென்றிருந்து கோட்டையது மிட்டு

4447 கோதண்டராமன் (பிற்காலப் பாண்டியர்களது பட்டம். காசுகளில் இப்பெயர் காணப்படும்).

4452 யொதுங்கிடுகில்—ஒதுங்கிவிடில்.

4455 — 4457 கொல்லம் முதல் செண்டைப் படைவீடு — இது படந்திருந்து விடும்பொழுது தெற்கேயுள்ள ஊர்கள் ஆனால் வரிசையாகக் கூறப்படவில்லை.

4562 சூதானம் - கவனம்

தந்திபரு நிற்கவொரு பந்திவேறே கட்டி
சூதானமாய் மலைக்குள்ள வரிருக்க தொட்டி தொட்டியாய் பொருத கன்னடியன் தானும்
மாதாவுக்கு ரெண்டகம் நினைப்பாரைப் போலே
வடசோதிரி சொன்ன வார்த்தை தன்னைக் கேட்ட போதே

## 4. சீர் சிந்து

வார்த்தைதனைக் கேட்டபோது கன்னடியன் தானும்
மன்னரைச் சேர்த்துக் கொண்டு வாரோமென்று சொல்லி
பார்த்த பார்த்த திசைகளெல்லாம் படையாப் பறந்து செல்ல
பாரக் கன்னடியன் படையும் வாரானென்ன
அடைக்குங் கடலுடைத்து நிலத்தில் பரந்தாற்போலே
அலறிப் புலருமுன்னே ஆதித்தனுதிக்கு முன்னே
தலைக்கோழி கூவு முன்னே சமத்தருஅரும்பு பூன்னே
தக்கவட வன்னியர்கள் நொக்க முழிக்கு முன்னே
தலைக் கட்டுக் கட்டிக் கொண்டு வளையும் அவர்களைப் போல்
மன்னரிட்ட கோட்டை தன்னை வளைந்தானே கன்னடியன்
மன்னவர்களாரவாரம் கேட்ட பொழுதிலே யிறங்கி
எதிர்த்துப் பொர வேணும் ரெண்டிலொன்று இன்றெனவே
எல்லோருங் குதிரை தன்னைக் கல்லணை கொண்டு
செஞ்சையனும் தொண்டமானும் திருமங்கையாழ்வானும்
தெற்குக் கோட்டை வாசலினை திறந்து விட்டார் படைகளெல்லாம்
வஞ்சமில்லா ராவுத்தரும் மணியீட்டிக்காரர்களும்
வாசிக்கு மீண்டானுமந்தத் தோழனைப் பிரியானும்
மிஞ்சு புகழ்க் காலிங்கனும் வெட்டுமாறனும் தும்பிச்சியும்
மேலக் கோட்டை வாசலிலே சாலத் தொட்டியா பொறவே
மன்னர் பச்சப் பெருமாளும் மாரியாடு பெருமாளும்
எந் நிலமுங் கீர்த்தி பெற்ற இளவரசப் பெருமாளும்
எங்கிருப்பாரெனவே மங்கைப் பெருமாள் படையும்
வண்ண முற்ற மந்திரிமார் வாணாதி ராசனோடே
வடக்குக் கோட்டை வாசலிலே யடக்கிப் படைபொரவே
வாய்த்த கீழ்க் கோட்டையிலே மல்லன் கொண்டான் தொண்டான்
மடியில் குருவியும் மர்பனீச்சன் பிலாழத் தேவன்
ரச்சம் பிலாழத் தேவனேக்கமுள்ள மந்திரிமார்

4570 கடுகென — விரைவாக.

இளவரசப் பெருமாள் படையும் மற்றெல்லோரும் நின்று பெற
கோட்டை பயணந் தோறும் தொட்டிப் பொருவார் சிலர்
ஈட்டித் தன்னை நீட்டிச் சிலர் பொருது
கோட்டை கிடங்குக்குள்ளே போட்டுப் புதைப்பார் சிலர்
ஆட்டுத் தலைகள் போலே போட்டுச் சிலர் பெரவே
தொட்டிப் பொரவே எனவே கூட்டக்குதிரை விட்டு
தோக்குப் படுமெனவே சூழ வருவார் சிலர்
ஆனைத் தலைகள் தோறும் நாணலைப் புல்லுகள் போரலே
அம்புத் தாங்கு சென்று கொம்புக்கிடையில் தைக்க
வானத்திடிகள் போலே யானைக்குச் சென்று

அடி வேறு

வாயில் குழை பறித்து மோதித்து தலையுருட்டிடவே
அப்படியே படைபொருது ஐவருந்தான் கோட்டைக்குள்ளே
அடைத்துக் கொண்டிருந்தாலும் அவசரம் வருமெனவே
இப்பொழுதே கோட்டையைத் திறந்து வெட்ட வேணு மென்ன
இளைய ராசாக்களும் மந்திரிமாரு மொக்கவே
தெற்குக் கோட்டை வாசலிலே கன்னடியன் படைசேர்ந்து
செஞ்சையன் தொண்டமானைச் சேர்த்துக் கொண்டு போகக் கண்டு
அரயத்துக்குளம் ஓடி திருநீல கண்டனேட்டன்
ஆன்தோறு மந்திரியை சேர்த்துக் கொண்டு போறே னென்ன
தன்னுடைய மந்திரியையும் சேர்த்துக் கொண்டு போகக் கண்டு
பற்றுப் படுகிற கோட்டைக்குள்ளே போகக்கண்டு யிளவரசப் பெருமாளும்
மன்னருமார் கருவ நடத்த பன்னிப்பன்னியே மிதிக்கும்
அன்பத்தோரடி பாயும் சரம்வங்கனி மிதிக்கும் பேரானை மேலே
ஊறுமுன்னே யேற்க கோட்டையைத் துலைத்து நாலுவெட்டு
எட்டுக் கடலுடைத்து நாட்டியமரீந்தாற் போலே
பக்கமங்கு மந்திரிமார் பாவாயுள்ளிகள் போலே
பச்சைப பெருமாளும் பாண்டிப் பெருமாளும்
பதினாயிரங் குதிரைப் படையை யிறக்கிடவே கூடுவது
வண்ணப் பரியேறும் பொன்னின் பெருமாளும்

பொன்னிடைய வாளை ...... தோலுறை உருவி
யிமைத்து முழித்து முன்னே இடசாரி வலசாரி
அமைக்கும் பரியேறி சுழற்றி வருவாரும்
இட்ட குதிரை தன்னை மட்டுகுள குளமடிந்து
வட்டத்துடை மார்பன் வெட்டத் துடங்குவானும்
எட்ட எழுந்தான் உளதான யிந்தப்படி
வெட்டியும் மூடியும் போல வெட்டி விழுவார் உவறு
தாங்காமல் வெட்டுப்பட்டு தலைகள தானுமத்து
கப்பாசு வெட்டுப் பட்டுக் காலுந் தலையுமத்து
குப்புற விழுவார் சிலர் குத்துக்கள் வாள்கடுவ
தானும் தலையுமத்து தோருஞ் செவியுமத்து
மீளாப்படிக்கு ஏந்துவாளும் சலிக்க பெட்டி
மெய்யுஞ் சலித்து மன்னன் கையும் சலிக்க வெட்டி
சேர்த்துக் கொண்டு போனதொரு செகசயனும் தொண்டமானும்
பார்த்துக் கொண்டெல்லோரும் மறித்துக்கொண்டு வார நேரம்
வேவத்திக் கொட்டும் கொட்டிக் கொண்டு வந்து எழுந்தருள
வெஞ்சாமரை சுவரிவீச பஞ்சவாத்தியம் முழங்க
ஈட்டத்துட மன்னனும் கோட்டைக்குள்ளே வார
இளவளரசர் வட்டப்பாறை எல்லையிலே செல்லும் நேரம்
மகரம் பரிஞ்சு நின்றொருவன் வயத்திலே நின்றடி பட்டு
பார்த்திரு வயத்தில் சூர்சாவும் பட்டு
மூக்குமயிலச் சாய்ந்து மன்னன் சுத்திவரும் நேரத்தில்
மயக்கத்துடன் கலங்கி தியக்க மூத்தவந் நேரம்
பல குதிரைக்காரர் பரதேசி ராகுத்தன்மாரும்
பாண்டியனைக் கண்டு 'ஐயோ மாவினை' என்பாரும்
மந்திரிமார் சுற்றம் பத்துவளைய நெருங்கிக் கொண்டு
மன்னவனைத் தாங்கிக் கோட்டைக்குள்ளே கொண்டு போர நேரம்

இக்கதி லோகநாதன் ............

4641 தலையுமத்து — தலையுமற்று அத்து — அற்று.

4648 வார—வருகிற (பேச்சு) மூத்த—முற்ற

4649 முழுவதும் விளங்கவில்லை,

4651 ஈட்டத்துட — கூட்டத்தோடு

4654 சூர்சா — பொருள் விலங்கவில்லை மகரம் — குதிரையின் பெயராகவும் சூர்சா—ஒரு போர்க் கருவியாகவும் இருக்கலாம்

எழுந்தருளி விட்டார் இளைய பெருமாளும்
அந்த நேரம் கண்டு நின்ற ஒட்டன் ஓடி கோட்டைக்குள்ளே
அப் பெரிய குலசேகரன் அண்டையில் சென்றே சொல்வான்
தெற்குக் கோட்டை வாசலிலே கன்னடியன் சேனை வந்து
செஞ்சயன் தொண்டமானை வெட்டியே இழுத்து கொண்டு, விலக்கிக் கொண்டு
சேத்துக் கொண்டு மந்திரியை மீண்டு கொண்டு வாரநேரம்
மட்டில்லாத் திண்புயனே குலசேகரப் பெருமாளே
மருமகனும் குண்டுபட்டு மடிந்து விட்டாரெனவே
மடிந்து விட்டாரென்ற வார்த்தை தன்னைக் கேட்ட போது
முடிந்ததோ தென்னருட வங்குசம் எல்லாமெனவே
முகத்திலறைந்து கண்ணீர் திருமுகத்து விழத்தட்டி
கண்மணி போலே எந்தன் மருகன் பட்டுக்கிடக்க
கண்டு கொண்டு கோட்டைக்குள்ளே இருப்பேனோ என்று சொல்லி
மன்னுலகை யாண்டிருந்த குலசேகரப் பெருமாள்
வன்னப் பரியேறி பொன்னிட்ட வல்லயம் வாங்குவனும்

(வேறு)

பொன்னிட்ட வல்லயம் புகழ் பெத்த வல்லயம்
பொன்னின் பெருமாள் தம் கையில் வல்லயம்
சன்னை பெத்த வல்லயம் மன்னர் கொண்ட வல்லயம்
சத்துருக்களை குடல் சரிக்கும் வல்லயம்
கொல்லாதிருக்குமா அவர்கள் உயிரை வல்லயம்
வெத்தி மாலை சூடுவார் அவர் கையில் வல்லயம்
செல்லும் செல்லும் காண்பவர் கையில் வல்லயம்
செல்லாதிருக்குமோ திருக்கையில் வல்லயம்
வல்லயத்தைத் திருக்கையில் வாங்கியே
எல்லையத்த சேனையோடே செல்லவே
வாசல் தோறும் செல்லுகின்ற படையெல்லாம்
சேர வாரும் என்றளவிட்ட போதிலே

வேறு

நல்ல நல்ல தென்று சொல்லி திரு நீலகண்டனொட்டன்
பதினாயிரங் குதிரை அரபியர் தொடர

4671 வங்குசம்—வம்சம் (பா. வ. நெல்லை)
4679 பெத்த—பெற்ற
4681 வல்லயம்—ஈட்டி போன்ற ஆயுதம்
4683 வெத்தி—வெற்றி

ஓட்டிக் கொண்டுதான் வரவே நல்ல குலசேகரரும்
காடு வெட்டி, வேரறுத்து கடலும் திசையும் எனவே
கண்ட விடமெங்கு படைகொண்டு மண்டி படையேறிட
கொண்டலொத்த வாச்சியமும் கொம்பு தாரையு முழங்க
குலசேகரப் பெருமாள் குதிரை மீது வரவே
அண்டவரும் மெய்ய வரும் கண்டு பயந்தோடிடவே
ஆகாசமும் பூதலமும் ஏதென்றறியாமலே
பண்டைப் பிரபுக்களும் பழைய பணிக்கன் மாரும்
ஏகிக் குதிரைப்படை லட்சமாய் நெருங்கிட
தண்டில் ஒரு படை சற்றே நெளிந்திடவே
தட்டழிய வெட்டுவனும் முத்தளக்கும் பாண்டியனும்
சுத்திப் பொருத படைவிட்டுதே வடக்கே நோக்கி
தோற்ற கன்னடியன் பார்ச்சேரா மலே கடந்து
பாச்சு கத்தி ஓடை வடுகச்சி மலேவிட்டு
பாளேயத்திராதே படை பசுக்கள் போருப் போலே
போக்கு நீக்கத்து மத்த நீக்கு நிலேயுமத்து
நெல் குன்றுமலே தனக்கு நேரேதென் கிழக்கதாக
காச்சு மூச்செனவே வந்த கன்னடியன் தன் படையை
கண்டு வளேந்து சுத்தி மண்டியவன் பட்டுவிழ
காட்டு மிருகம் போலே நாட்டைவிட்டு...
பொன்னு முடிப் பாண்டியரும் மற்ற சுத்தத் தனேவருமாய்
போன போன திசையெல்லாம் பொறிக்கல் குத்திடவே
களந்தைப் பதியை விட்டு கிளவைக்கல் அடியும் விட்டு
கல்லணைக் குறிச்சி விட்டுக் கன்னடியன் தனது சேனே
குழந்தைப் பிள்ளேயும் கொண்டு காக்காச்சி தனேயும் விட்டு
கோப்பாறை தனேக் கடந்து தங்கம் பாதையில் பாதையன்ன
கட்டுக் குலேயாமல் வந்த கன்னடியன் சேனே
கண்ட கண்ட திசைகளெல்லாம் நண்டுகள் பறந்தாப்போலே
அந்திப் பொழுது படை....விட்டுப் போனூர்
ஆத்தாமல் விட்டுப் போனூர் கன்னடியன் படைதானும்
அக்கறைக்கே கல்லூரு பெரும்பதி போய் இருந்தார்
மாத்தாடி பொருதிருந்த பொன்னின் முடி பாண்டியர்கள்
குளத்திலும் ஒலிப்புலி பாறையிலும்
சித்தமுடன் என்றகன்று படை தங்கியிருக்க

4713—களந்தை—களக்காடு என்னும் ஊர்
கிளவைக்கல் அடி—ஊரின் பெயர்

4721 கல்லூரு—ஊர் மலேயில்

4723 ஒலிப்புலிப் பாறை—ஓர் இடம்

சிக்கனமாய்க் கன்னடியன் நதிக்கரை கடந்தான்
எல்லையத்த குதிரைப்படை மட்டதும் போதாமல்
மருத்துவன் சினத்துடனே வாய் மதங்கள் பேசி
வள்ளியூர்க் கோட்டை விட்டால் மத்துமொரு இடமும் முண்டோ
கொடிப் படையாய்க் கன்னடியன் பின் துடர்ந்துவருகில்
கோழியுங் குஞ்சும் பருந்து போல் ஆக்கிவிடுவார்
இத்தனை நாளாய்ப் பொருவதெல்லாம் நமக்கல்லவோ வெத்தி
இடம் பார்த்து ... ... பெறுவதே க்ருமம்
அத்தனையும் சொல் கேட்ட குலசேகரப் பெருமாள்
அது நமக்கு வெத்தியோதான் சமர்க்குப் பொருவதெல்லாம்
படுகிலும், கெடுகிலும் இத்தலத்தை விட்டு
பட்டுப் போகிலும் இவ்விடம் விட்டுப் போவதுண்டோ
சடுதியிலே இந்த வார்த்தை குலசேகரர் சொல்ல
சமத்தருக்குத் தலைவன் காலிங்கனும் சொல்லுவான்
பாண்டவர் ... ... ... வருக்காக
பன்னிரண்டு ... ... ... வருவாருமி மில்லையோ
இளரிடையாள் ... ... ... ... ...
தியதரதனைத் தாண்டிச் சேர்ந்திருந்தோமில்லையோ...
லெட்சுமியைச் சிறையில் வைத்து இராதோரும் இல்லை
உயராண்டவனே குலசேகரப் பெருமானே சினத்தை
ஆத்திக் கொண்டு நாமும் மலை ஏறுவதே கருமம்
அமச்சரது சொல்ல குலசேகரப் பெருமாள்
அதுவே கருமம் என்ன காவற் படைகள் சூழ
இமைத்து முடிக்கு முன்னே சாத்து வயல் கடந்து
ஏத்ததினே எறிபடை ... ... ... ... ...
சேத்திதுபது நேரத்திலே ஒட்டனும் சென்று
ஆத்துப் பொருத படை தூத்துப் பரந்திடவே
ஏத்த வேண்டுமென்று சிலர் சினத்துடனன்னேரத்திலே
... ... ... ... உருவி ஒரு கணையால
இவரும் அவருமாக யாரென்று அறியாமலே
மருப்புற்ற கரிகள் மணிகள் கிலுகிலுவென

4735 படுகிலும்—இறந்தாலும், கெடுகிலும்—கெட்டாலும்
பட்டுப் போகிலும்—இறந்தாலும்

4740 மூதல் 20 வரிகள் பழைய பிரதியில் சிதைந்து காணப்படுகின்றன. புதிய பிரதியில் 17 பக்கங்கள் இப்பகுதியில் இல்லை. எனவே பழைய பிரதியைப் பின் பற்றி இப்பகுதி முடிந்தமட்டும் எழுதப்பட்டது.

... ... ... ... மலைகளெனச் சுத்தி
அதிகமுள்ள துடிபட்டது கிடுபிடிகள்
... ... ... ... திடிமனடி படவே
குதிரையொடு, குதிரை விழ அவர்கள் மதிலே
குசவர் விடு திருகையெனவே வளையவரும்
திமி தருத மொடு சமர் பொருதிடவே
சமர் பொருதிட மருவலர் பரிவிட கனடியரு மதிலே
அங்கவரும் பரிவிட்டு மறுத்தனர் கதி வகையது தள்ளல் போலே
கங்கைத் திரளது போலவே மன்னவர் கங்கைப் பரிசூழ
கிட்டவே கன்னட மன்னவர் வந்து முட்டி சமரதிலே
துங்கப்பரிகளை யார் ... ... ... ... ரில விட்டவர்கள் வளர்ந்திடவே
தூசிகளானது மேவியே கதிரவன் ஒளியை மறைந்திடவே
ஒளிகள் மறைந்திட மன்னர் வனமலர் ... ... ...
குலாவி குதிரைகள் விட்டு அவர் உடல் சிரமற்று விழ
துள்ளினாராம் சோனகர்கள் யாங்குப் பகைவரெனவே
கத்தியது கொண்டு சிலர்
துடர்ந்தனர் அலகை கண்டு அசந்தனர்கள் மதில்
கடிந்தனர் குருதியுண்ண
குருதித் திரள் தன்னில் நரியும் நாய்களும்
அதிரவே கடிமதில்
தலை வலித்திட மூளை உரிந்திட கண்டனர் மதிலிலே
உதிர் பிணமது தின்றிட நாய்களும் வெருகுகளானதுவும்
ஏத்தவர் இருவரு மெத்தவே முடுகினர் சுத்தி வளைத்திடவே
பத்தினர் தென்னவர் மன்னவரும் படையும் முட்டிய வன்னியனும்
பட்டயம் வல்லயம் வாளொடு வாங்கி முட்டியே வெட்டு வாராம்

வேறு

கன்னடியன் தன் படைக்குள் கனக தண்டியல்காரன் பட்டான்
தென்னவனிள தம்பிமாரில் திக்கெல்லாம் புகழும் பெருமாள் பட்டான்
ஒன்னலரைத் துரத்தி வெட்டி ஒருகளத்தே பட்டு விட்டார்

4781 —கனக தண்டியல்காரன்—பல்லக்கேறும் அதிகாரி

பட்டு விட்ட வார்த்தை யெல்லாம் பாண்டியனும் சகியாமல்
எட்டாமல் குதிரைபடைப் உள் மலைக்கு வாங்கிவிட்டான்
உள்மலைக்குள் ஆனபோது ஓடியொரு ஒட்டன் சொல்ல
கண்மலர்கள் மூந்துருள கதறுவாராம் தம்பியைத் தேடி
வெம்பி விட்ட மனத்தோடே விழுவார் மருகு வாராம்
...விழிசிவந்து அமச்ச ரெல்லாம் எடுத்தணைத்து
தொழுதிடவே அமைச்சரெல்லாம் துயரமெல்லாம் தீர்ந்தபின்பு
துயரத்தாலும் தம்பி பட்ட துக்கத்தாலும் பசியாமல்
ஆவலுடன் மூன்று நாளாய் அன்ன தண்ணீர்தான் மறந்தே
நீர் தீண்டாப் பட்டினியாய் நிலையழிந்து தடுமாறி
நாவுலர்ந்து செவியடைத்து நலமழிந்து வார நேரம்
சோர்ந்து வந்து மன்னவனும் சுரத்து வயல்வெளி தனிலே
பூத்து நல்லா.........கரத்தை நீட்டுவானும்
நீட்டுதிடி......... புளி பூத்து
தின்று மெல்ல தானிரக்கி செவியடைப்பு தீர்ந்தபோதே
இன்றளவும் கன்றுப் புளியாய் எப்போதும் நில்லுமென்ன
அன்றன்றுய்ச் சாபமிட்டு அரிய பெரும் தம்பி தன்னை
கொன்றவரைக் கொன்றொழியக் குளிப்பதில்லை யென்றுரைத்தார்
குளிப்பதில்லை யென மொழிந்த குல சேகரப் பெருமானை
பழிப்பில்லாத தம்பி மாரும் வந்து மனந் தேத்தி
மனந் தேத்தி சுரத்து வயல் வெளி தனில் கருகாமல் ஆறுமல் வைத்து
தளர்ந்த தென்னவன் தம்பிமார் தவிலை அங்கே முழக்கு மென்றார்
தவலடித்தான் பாறையிலே தவில் காரன் தனையும் வைத்துப்
பூலோக மாரும் மன்னர் பொன்னிட்டான் கயமும் கண்டார்
கண்டு மலையறுக்கும் கச்சை பருவட்டம் தான் கொடுத்து
அந்தியங்கே திசைகாட்டி அசையாத கயங்காட்டி
குலையாத மன்னவர்கள் குதிரை கட்டும் தளமும் கண்டார்
குதிரை கட்டும் தளமும் கண்டார் கோவில் கால சுவடு கண்டான்
மதுரை வெட்டுமாறனங்கே மலையேறி வீத்திருந்தான்
விண்ணரச ரொடு மேதினியை யாண்ட மன்னன்
மண்ணாசை யிழந்து விட்டு மலையரசர் போலானார்
மன்னவர் களிங்கிருக்க மலையாங் குளத்து வெளி

4797—புளியம் பூவைத்தின்று பசியாறினார்கள்.
4814—மலையரசர்—இப் பெயருள்ள காட்டுமக்கள் செல்வம் எதுவும் இல்லாதவர்கள்.

கன்னடியன் கோரையாத்தங் கரைதனிலே பாளையமாய்
பின்னையுந்தான் மலை நோக்கி பிழைபத்தி வந்தபடை
மலை தனிலேயேறி சில பருவரைகள் உருட்டிடுவார்
தலைகளெல்லாம் உருண்டிடுமே... திரும்ப
வள்ளியூரில் கோட்டையிலே போய் வையகத்தை ஏற்றிடுவோம்
தெள்ளியதோர் சொல் கேட்டு தெக்கு நோக்கி நடப்பாராம்
நடை திடிமன் அடிபடவே நாடதெல்லா தென்காசி
குடை பெரிய பாண்டியனரிட்ட கோட்டை கண்டேது சொல்வார்
தெய்வந்தான் இருப்பிடமோ சிறந்த வெள்ளி பொருப்பாமோ
வையகத்தில் கண்டதுண்டோ மானிடர் தான் செய்ததுண்டோ
மாணிக்கக் கோட்டைகளும் மணிமாடக் கூடங்களும்
ஆசார வாசல்களும் அஞ்சளாத் தொட்டி முத்த வெளியும்
சித்திரங்கள் சிறந்தாப்போலே ஒரு தேசத்திலும் கண்டதுண்டோ
பத்திர மாகாளி தெய்வம் பாண்டியர்க்கும் உதவியல்லோ
ஏரிலங்கும் கோட்டை தன்னை இடிக்கத்தான் கைவருமோ
ஆருமில்லாக் கோட்டை தன்னை அழிப்பதுவுந் தன்மையாமே
என்று சொல்லி வந்த பெரும்படையைத் திருப்பி விட்டான் கன்னடியன்
திருப்பி விட்ட பெரும்படை தான் சிங்கி குளம் குளத்தூரும்
பறம்பை விட்டு வீரூங் குளத்துப் பாளையமுந்தான் கடந்து
கடந்து சென்ற பெரும் படையும் கரிபரியுங் காலாளும்
மடந்தையருந் தேவி மாரும் மணப்படை வீட்டிருந்தார்
இருத்தி வைத்து கன்னடியன் லெக்கமற்ற படையோடே
கருத்துடனே யானைப் படைக் கணக்கில்லாச் சேவகரும்
தம்பியென்ற யுதச்சியையும் தானுபதி தன்னையும் வைத்து
நம்பியங்கேயிருத்தி வைத்து நாடெல்லாந் தனக்காக்கி
நாணயமாயாளும் வைத்து நாடெல்லாந் தனக்காக்கி
தானையு மாயாளும் வைத்து தான் வடக்கே தான் போகவே
போன பொழுதந்த மலைக்குள் தெய்வ பாண்டியன் கோட்டை

4828 பாரக்கிரம பாண்டியன் கட்டிய பெரியகோயில்கள் 1· நூற்றுண்டு.

4835—கன்னடியன் பாண்டியரை வெற்றி கொண்டபின், வட நோக்கித் தன் படையைத் திருப்பினன்.

பொன்னிட்டான் கசமு நல்ல சொரிமுத்துப் பாறையிலும்
ஆனைப்படையும் குதிரை தேவிமார் கருவலமும்
அங்கே சிறிது நாளிருந்த குலசேகரப் பெருமாள்
நானிலமு மென்னவரும் நாஞ்சி நாடு காண்போ மென்ன
நடந்தங்கசும்பு வழி துடர்ந்த மலையினூடே
துடர்ந்த மலையினூடே வாணிச்சி பாறையில் வந்து
சுற்றும் பிற்றும் பாளையமாய் பத்து நாளதிலிருந்து
அடர்ந்து மணங்கள் வீசும் பொற்றிய பழந்தனிலும்
ஆலைக்கல் வடியுமரை பாரதுவுந்தான் கடந்து
முடந்தை கடம்பினூடே நாரணம் புத்தூரிலே
மூர்த்தியைப் பிரதிட்டை செய்து யேற்றிச் சிலநாளிலிருந்து
ஏற்றிச் சில நாளிலிருந்து ஸ்ரீ ராமரையும்
இயல்பூத நாதரையும் செந்தீ சுரரைப் போற்றி செய்து
தோவாளையில் சென்றிருந்து கோட்டைக் குத்தலங் குறித்து
கோட்டையும் வைத்துக் குருவித்தலைகள் வைத்து
குதிரை விட்டு நாஞ்சிப் படை சில தானையமதிலிருந்து
நாட்டுக்குள் வட சேரியும் கோட்டத்திலும் பாளையமாய்
நாஞ்சி நாடு தன்னை மன்னனுண்டிருந்த நாளையிலே
ஆண்டி ருந்த தோவாளையில் கோட்டை யிட்டுத் தானிருக்க
அந்த விசேஷத்தைச் சிலர் முந்தி சென்று சொல்வார்
தூண்டிக் காரனுக்கு மிதப்பலைப் போலிருந்துதைச்சி
துங்கக் கொட்டுங் கொட்டிப் படை நோக்கிப் புறப்பட்டார்
நோக்கிப் புறப்பட்ட படை வள்ளியூரு விட்டும்
போந்து பனையப் பதியும் காலாளுமாய்ச் சென்று
தோவாளையில் கோட்டையிலேதொட்டிப் பொருநேரம்
அங்கு பொருத்தமாயிருந்த தானையும் படையும்
அரசனுக்குக் கொட்டாரத்தில் யான் ஓடவிட்டு
சிங்கஞ் சினத்தாப்போலே கோட்டையைத் திறந்துவர
சீறிப் பொறவே யுதைச்சி யானைப்படை யோடே
ஆனைக்கிடு மணிகள் மோதிக் கிணு கிணெனயோசை
ஆழக் கடலுடைத்து ஞாலத் தெழுந்த தென்ன
சேனைக் கடலுடைத்துத் தூசிப் படு களத்தில்
சேரக் குதிரை விட்டு வாளில்ச் சிலரை வெட்டி
ஆடல் புரவி விட்டு மோதிக் கன்று குத்தி
ஆனைத் தலையறுத்து மீளுவார் சிலரோடி
கோடி கணை தொடுத்த மாரிகள் பட்டு

4840 கன்னடியன் தம்பி உதைச்சி என்பவன் தோவாளைக்குச் சென்று குலசேகரனோடு போர் செய்தான்.

4862 நாஞ்சில் நாட்டில் தோவாளையில் கோட்டை கட்டி, சுற்றுப் புறமான நாஞ்சில் நாட்டை ஆண்டுவந்தான்.

குடல் புறத்தே சாடினுர் சிலபேர்
மாவுக் கல்லணையிட்டு நீளச் சிதற வெட்டி
வாளுக்கு இரைகள் விட்டு மீளுவார் சிலர்
ஆவிக் கஸைவு தட்டி மோகுத்தரிடிபட்டு
ஆனைப் புறத்தோடே நகருவார் சிலபேர்

நான்கு சீர் சிந்து

அங்குமிங்கு மிப்படி பொருதக் கொத்து யுதச்தி
வெங்கலத் தவில் முழங்க வேகித்து எதிரே நடத்தி
வேந்தர்படை கொட்டாரத்திலே வெவ்வளித்திடவே
வெவ் வெளித்திடவே கண்டு உதைச்சிப் படை மேலேறி
வேந்தர் படையிருக்கும் கொட்டாரத்திலும்
ஆள் சொல்லவே
பல வாழிக் கடல்கள் போலே யுதச்சிப் படை
கோட்டாத்திலே
அப்பட்டணமட்டாளச் சொல்லவே பாண்டியர்கள் ஏது
சொல்வார்
நன்று நன்று நம்மையோர் இடத்தில் இருக்கவொட்டான்
நாடிக்கொண்டான் உதைச்சி கொடிப்படையோடே
என்று சொல்லியன்று குலசேகரப் பெருமாள்
எல்லையில்லா குதிரைக்காரர் உதைச்சியனேடே

மூன்று சீர் சிந்து

மாட்டாமல் விட்டு வரும் படையை மாரெடுத்துப்
போட்டானுதைச்சி
எதிர்ப்பூழியர் கொண்டு கொண்டாடி தென்னிலங்
கைபேரும்
ஜோனும் ஸ்ரீராமரும் போல் பொருதார் மன்னவர் ரெண்டு

விருத்தம்

விட்டனர் படையும் மற்ற வேந்தரும் மந்திரிமாரும்
குட்டென வாங்கிச் சண்டைப் பகுதியிலும் சொல்லாமல்
கட்டிய கரிமாவோடே கட்டிய பட்டணத்தை நாடி
கெட்டியாயப் பாண்டி மன்னர் கெடியுடனிருந்த நாளில்
பாண்டியர் மேலும் செண்டைப்பதியிலும் உதைச்சி சேனை
ஈண்டிய கடல்கள் போலே இரைத்திரைத்தெழுந்ததென்ன

4886 மோகுத்தர்—மாவுத்தர்

4903 கெடி—காவல் (கடி)

தாண்டவர் புரமெரித்த தன்மை போலாகத்தானே
மூண்டுதான் சென்று கண்டு முடிவு நாளிறுதி என்றே

நான்கு சீர்சிந்து

படையோடே செண்டைப்பதி தனிலிருந்து
பாரமுள்ள சேரன் திருத்தம்பிமாரும்
அடவிச்சனமும், அரசியல்பரிசனமும்
ஆறு வரையில் பிரபுக்களும் கூடி
குன்று மேல் நின்றங்கே வந்த படைதானும்
கொல்லத்து வில்லி வடக்கப்பணிக்கரும்
என்றுஞ்சருக்காத காத வீதிச்சவளமும்,
இடைநாட்டிலுள்ள பெரும் படைதானும்
சென்று குலசேகரர்க்குதவியாகவே

ஈரடிச் சிந்து

அரசர் பெரும் படையும் கன்னடியர் சேனைகளும்
அம்மான் குவித்து வெளிகளிலேதானிருந்து
பலசக்கரப் படையைப் பாண்டியன் மறித்துப்
பத்துமுப்பது துரைகள் அங்கும் பட்டிடவே
அங்குமிங்கும் பட்ட ரெதவம் ஆறுபோலோடக்கண்டு,
அம்மாங்குபித்து வெளி செம்மானம் போலவே
பொங்குபடையாற்றுமலே வள்ளியூர்க் கோட்டைக்குள்ளே
போவதே கருமமெனச் சாவடைந்த பட்சியைப் போல்

விருத்தம்

ஊர்வது புருவைக்கண்டால் யோசனை பறக்கும் பட்சி
சாவது காலமானால்தான் படுங்கண்ணி தோற்று
மாவலங்கை மன்னவனும் வடுகச்சி மலையிலன்று
ஆவதேயென்ன சொன்னேன் அரசர்கோன் காட்டிலென்ன

8 சீர் சிந்து

கோட்டையில் மன்னவர் இருக்க கன்னடியன் அங்கிருக்க
குலசேகரப்பெருமாள் இரவு புறப்பட்டுத்தான்
நாட்டமுண்டு உள்மலைக்குள் கருவங் குதிரைகளும்
நமக்கெல்லாம் ஒரு தலத்தில் ஆக்கிக் கொள்ள

4816 சிவன் திரிபுரமெரித்த புராணக்கதை.
4910 அடவிச்சனம்—காட்டு மக்கள் தலைவர்கள். அரசியல்-மந்திரி மார்கள். ஆறுயோகம் என்ற பிறமக்கள்,

காட்டுவிரியன் பிடித்துக் கொடுக்கும் வகைபோலே,
காவலவன் சுரத்துவாசல் தனைக்கடந்த நேரம்
சூட்டும் விழி தள்ளித் தள்ளிக் கன்னடியன் தன் படைக்குள்
துடிபடக்கிடு பிடிகள் திரமுரத்தி அதிரமுரசோடு
திடிமன் குழலூத துமிலை குமிலையதிர அரசர் செவி புகுத
மதுர மொழியரசர் குலசேகரர் வருமளவும்
மருவலோடமர் பொருவதில்லை என்று சொல்லும்
விதிடன் வருவது சிறிதுமறியாமல்
விகடதலை மூடியரசர் பொரவென்னவே,
வந்து கன்னடியன் படை சேர்ந்து பொரும் நேரம்
வழிந்து கடல் தானுடைந்து சூழ்ந்து வளைவது போல்
கன்னடியன் சேனைகளும் காவலவர் தன் படையும்
கரிநரியும் காலாளும் மேலாலுமாகவே
ஒன்னலரைச் சென்று வெட்டி ஒக்க நெருங்க வெட்ட,
உண்ட சோத்துக்கு வருமானம் கண்டு சொல்கிறேன்
கருத்த கடல் தனை வேறுக்கிப் பால்கடல் தன்னை
கண்டு கொள்ளாமலே இங்கு தண்டிப் பொருவதுதான்
குமுகுமென களத்தில் குருதியது சிந்திடவே
துடிப்பார் சிலர் பட்டு துள்ளி விழுந்தோவோர் சிலர்
குலையில் விடும் புரவியும் இவர்கள் விடும் புரவியும்
சூறுவளியில் துரும்பு சுழல்வது போல்
அலையில் துரும்பு போல கடலும் திரையும் போலே
அவரும் இவருமாக எவரென்றறியாமலே

3 சீர் சிந்து

அந்தி பொழுதிலே பொன்னும் பெருமாள் மக்கள்
அடவாய் பரி ஏறிச் சென்று நேரிட்டாரே
சிங்கத் திரளில் வேங்கை போலவே சீறி
முத்தின் பெருமாளும் முடி சூடும் பெருமாளும்
முகிலப் பெருமாளும் நகிலப் பெருமாளும்
தத்துங் குதிரை மேற்று மெனக் கண்டு
தட்டியவர் குத்த யொட்டியவர் வெட்டி
பட்டு விழுந்தானே கன்னடியன் தம்பியும்
பக்கத்துக் குதிரை களொக்கப் புடை சூழ

4950 முதல் 4964 வரை —குலசேகரன் தம்பியரும், கன்னடியன் தம்பியரும் போரிட்டு, மன்னவன் இறந்தான். தம்பி இறந்தபின் கன்னடியன் போருக்கு வந்தான்.

முட்டு விசையினுல் விட்டுக் குதிரையை
முகிலப் பெருமாளும் நகிலப் பெருமாளும்
அளவற்ற துரைகளு மொக்க நெருங்கவே
செருமி பொருத நேரம் கன்னடியன் கண்டு
சீறிச் சினத்தவரேறி நடத்தவே
வந்த படை சேர வெட்டத்துணிந்தவர்
மாறுந் தடியும் போலே பட்டு வீழ்ந்தார்கள்

விருத்தம்

படுகளங் கண்டபோது பட்டனர் ராசர் சேனை
முடிவினுல் முகிந்த சென்னூலிட்ட நாளெல்லை தானே
சடுதியோ யரசர்க் கெல்லாம் சுட்டனர் காடுபோலே
கொடுமையாகக் குடிநீரென்னக் குருதி களாறுபோலே

4. சீர் சிந்து

படுகளத்தைக் கண்டபோது பதறித் திருநீலகண்டன்
கடுகவங்கே யோடுவாளும் காவலர்க்குச் சென்று சொல்ல
அம்புபட்டுத் தாமிருந்து யாக மெல்லா முளைவது போல்
வெம்பிவிட்ட மனதோடே விரைந்து மலைதனிலேறி
மூன்ருத்தன்கரை கடந்து மூத்து சொரி முத்துப் பாறை விட்டு
ஈன்றெடுத்த தாயைத் தேடியோடும் இளங் கன்று யோடு வாளும்
சென்று நின்று தான் தொழுது திருநீலகண்டனேட்டன்
பட்டபாடும் படுகளமும் பாரரசர் செவிதனிலே
அந்த வார்த்தை கேட் கொட்டாமல்
ஐவரில் பாண்டியன் சொல்லுவார்
கொண்டல் விலங்கிட்ட மன்னன்
கோத்திரத்தில் பிறந்தவன் தான்
அண்ட முற வந்த கொங்கை ஐவருட புத்திரி நீ
நீயுமொரு தெய்வக் கெங்கை நானும் தெய்வப் பாண்டியன் காண்
மயங்கியந்தத் திருநீல கண்டன் வார்த்தை தன்னைக் கேட்டளவும்
கலங்காத நீ கசமே என்றரச னமைத்துனரும்
உரைத்திடவே யார் மனது யிருக்குமந்த நேரத்திலே
செப்ப முற்ற திருநீலகண்டன் தென்னவனேடேது சொல்வான்
மன்னவரே நீ மலைக்குள் வந்திருக்கக் காரியமேன்

4983 மூன்ருத்தன்கரை-மூவாறுகள்.

கன்னடியன் கோட்டை தன்னைக் கடல் போலே வளைத்துக் கொண்டு
தென்னவரேயும் முடையே திருத்தம்பி மார்களெல்லால்
ஒன்னலரைச் சென்று வெட்டி யொரு களத்தே பட்டு விட்டார்

4. சீர் சிந்து

பட்டாரே யும்முடைய தம்பிமார் சேர
பக்கத் தண்டேரிகள் யொக்கப் பட்டார்கள்
மட்டாருந்திண்புயன் மங்கைப் பெருமாளும்
மன்னருக்கிளைய மருப்பனும் பட்டான்
மறுப்பனோடே குறுக்கிட்டானும் பட்டான்
வாணுதிராயனும் தம்பியும் பட்டான்
இருபக்குபாய மிட்ட துப்பரசி பட்டான்
ஈச்சம் பிலாளத் தேவனும் பட்டான்
வல்லாள தேவனும் கொண்டையன் கோட்டை
மற்றமுள்ள கொற்றங்குடி மறவரும் பட்டார்
சொல்லாளும் செஞ்சையன் தொண்டமானும் பட்டான்
தீரன் திருமங்கையான் தானும் பட்டான்
சொல்லாடும் சொல்வீரனும் பட்டான்
சுந்தரத் துரையானைச் சேர்த்துப் பிடித்தார்
எல்லோரும் காலிங்க வில்லவனொழிய
இறந்தாரே மன்னரெனத் தொழுது நின்றான்

விருத்தம்

இறந்தனர் அமைச்சர் தம்பிமார் களெல்லோரு மின்று
பிரிந்த சொல்லோட்டன் சொல்லப் பேசிக்கேட்ட மன்னன்
மறந்தனர் தேவிமாரு மற்றுள்ள அமைச்சர் தானும்
துறந்து பொன்னுட்டையாள துணிந்தொரு வார்த்தை சொல்வான்

4 சீர் சிந்து

பட்டு விட்டார் என்ற போது பாண்டியர்க்குப் பழம் புண்ணிலே
சுட்டுவிட்ட தீப்போலே சோர்வு வந்து மன்னன் சொல்வான்

4999 — திருநீலகண்டன் குலசேகரரிடம் தம்பிமாரும், அதிகாரிகளும் போரில் இறந்து விட்டதைக் கூறுகிறான்

அரசர்பட்ட களந்தனிலே அப்போ போய் அறிந்து மீண்டிடவும்
உரை தவறு ஒட்டன் தன்னை உகந்து நன்றாய் முகந்தடவி
முகந்தடவி வரவழைத்து முகம் நோக்கி ஏது சொல்வார்
மலை தனிலே தேவிமாரும் வைத்திருந்த கருவலமும்
கருவலமுந் தேவிமாரும் காத்துக் கொண்டு நிற்பார் என்ன
அருள் பெறவே சம்மதித்து யதுக்கிசைந்த நேரத்திலே
மருவலர்கள் ......... வடிவாளை யிடை யுருவி
வேந்தனுட குலைக்காரன் வெட்டி விட்டா .........
வெட்டியங்கே விழுந்திடவே தன் விதனமெல்லா மனதடக்கி
கட்டி வைத்த கருவலமும் கலசப்பானை பொன் சருவம்
சருவப்பானை பொன்னின் கண்டி சாட்டுக் கிடாராம் சட்டுவமும்
பெருகத்தாலே பொன்னின் கலம் பிள்ளை சேனைகால் படிக்கம்
உருவத்தாலே பொன்னுருவம் யொக்கசத்திலே தள்ளிப் போட்டு
கண்ணுக்குள்ளே வைத்திருந்த கன்னி நல்லார் தங்களையும்
தண்ணீர்க்குள்ளே தள்ளிப் போட்டுச் சத்துருக்கள் போலானார்

அடி வேறு

தள்ளிப் போட்டு மன்னவனும் துள்ளிப் பரிமீதேறி
தக்கப் படையும் குதிரை யொக்க ஒருமித்துடனே
வெள்ளிச் சிலம்பு தண்டை துள்ளித்தறிச் சிலம்பு
வெட்டி ஏறும் வலக்காலைத் தட்டி மீறு இடக்காலை

குலசேகர ராஜா பிடிபட்டது

வெட்டுப் படத்தக்க பேர்கள் என்னோடே வாருமென்ன
வேண்டாத பேர்களெல்லாம் மீண்டோடிப் போகுமென்ன
துஷ்டப் பரிமீதிலேறித் தட்டப் பாறையுங்கடந்து
சுரத்து வயல் கடந்து சொரி முத்துப் பாறைவிட்டு
கட்டிச் சென்று படையோடே கல்லிடைக் குறிச்சிவிட்டு
களந்தைப் பதியும் விட்டுக் கோட்டைக் குள்ளே வாரநேரம்
பொன்னு முடித்தம்பிமார்கள் பொராத களந்தனிலே

5025 கருவலம் — அரச குடும்பப் பெண்கள் மலையில் ஒளித்து வைத்திருந்த பொக்கிஷம்

மன்னர் குலசேகரர் வந்து கண்டுடன் சொல்வார்
கொண்டல் குடைத்தம்பிமாரும் பதினெட்டு மந்திரிமாரும்
கண்டதுண்டமாக வெட்டிக் கையருகே கிடக்கக் கண்டு
கண்ணுருவிப் பாய்ந்திடவே களந்தனிலே கண்டபோது
உண்ட சோத்துக்குவமானம் உண்மையுடன் கேளுமெல்லாம்
பண்டெழுபது வெள்ளஞ் சேனையை நாகபாச மறுத்திட
சென்று நின்ற ஸ்ரீராமர் திகைத்தாப் போலேங்கி விட்டார்
தியக்கமுற்ற பாண்டியன் தன் செம்பொன் முடிதனிலே
முகத்தறைந்து காலிங்கனு முறிந்த மரங்கள் போலே
விழுந்து கண்ணீர் சொரிய வேந்தர் தமக்கழுதான்
அழுது விழுந்தவனை அரச ரெடுத்தணைத்து
அணைத் தங்கிருபேரும் யானைக் குரல் போலழுதார்
துணைத் தம்பிமாரும் நீரும் கோட்டை திறவாதிருங்கோ
என்ற வார்த்தை கேளாமல் விதியன் கொடுத்தானே
யென்ன

## 4. சீர் சிந்து

அன்று மனந்தேறி விதி நமக்கென்னவே தான்
ஆடல் புரவியை யலங்கரித் திடுமென்ன
வென்றுத் திடுமந்தப் புரவியது தனிலே
வீர கொடிகட்டிச் சூத்திர மிட்டுத்தட்டி
மாணிக்கத்தால் கல்லணை வைத்து மேலே
மாணிக்கத்தினாலே சுவடு வைத்திலங்கவே
ஆணிப் பொன்னினாலே முகமீது மிட்டழகாக
அங்குந் தலையாட்டியது வெள்ளிக் கம்பியாலே
பொன்னுஞ் சிலம்பிட்டிலங்கே நாலுகாலுக்கும்
புலம்பத் தண்டையிட்டுப் பூக் கொண்டையு மணிந்து
வர்ண மயில் கட்டி வீசு வாருமிறுக்கியே
வாறு ரெண்டுக்கும் வடிவர சோற்றிலங்கவே
சுத்துஞ் சல்லி கட்டி நடை நாலு காலுக்கும்
தோம் தோமெனச் சிலம்பு புலம்ப மிதித்திடுமாம்
கொற்ற குதிரைக்கும் மதியொற்ற முகத்திலே
கோலக் குறியிட்டுக் குங்குமத்தால் பொட்டு மிட்டு
வெத்திப் பரியேறிக் குலசேகரப் பெருமான்
வேண்டும் பணிபலர் பூண்டு பொருதன்றும்
சுத்தும் பித்தும் கூடப் படத்தக்க பேரோடே

4987 — குலசேகரர் இறுதிப் போருக்குத் தயாரானார். சாகத் தயாரானவர்கள் மட்டும் தன்னோடு வரவேண்டும் என்று சொல்லுகிறார்

தூசிக் களந்தனில் சென்றெதிர்த்த நேரத்திலே
சாதிக் கதிரவன்தனைக் கண்ட பாணம் போலே
கன்னடியனும் அளவற்ற துரைகளும்
சோதித்திருமுகம் காணவேணு நமக்கென்ன
சுற்றும் வாங்கி நின்ற வட்ட வெளிதனிலே
வட்ட வெளிதன்னிலே வரவிட்ட புரவிதான்
மாரீசனுஞ் சீதைக்காக வந்த மான்போலே
கிட்ட வாரு மன்னு பிடிக்கலாமென்பாரும்
கீரிலாகாசம் போய் மண்ணில் திரிகுமாம்
கொட்டுங் குமடும் சல்லிகையு முழக்கிடும்
கூத்துப் பிடித்தவர் தனைப் போலே மிதித்திடுமாம்
அட்ட திக்கு மெட்டி எட்டியே மிதித்திடுமாம்.
ஆருமொரு பாங்கவரரே டெதிர்த்திடலாம்.
பண்டு முகில் தன்னை விலங்கிவிட்டு வைத்தவர்
பாரவுடை வாளைத் திருக்கையில் வாங்கியே
பாண்டவர் தன் குலத்தில் பாரவாள் வீமனைப்போல்
வெட்டுமவர் கையைப் பார்த்து விருப்பமுடன் கன்னடியன்
கன்னடியன் தானுமப்போ கண்டு மனமகிழ்ந்தானே
கையு மெழும்பிடுமோ காவலனை வெட்டவென்ன
கொண்டல் குதிரைகள் கூட்டமிட்டு நிற்குநேரம்
குதிரை தன்னை விட்டாரவன் மேல் சினத்துடனே
குத்துங் கலந்துதே குதிரைக்கும் யானைக்கும்
கோடி படை எங்கும் காடு பறந்தோடுதே
மெத்தப் படுகுதே வெட்டுகள் செவிட்டிலே
வெள்ளம் பறந்தாப் போலே படை எட்டுத் திக்கிலும்
எட்டுத் திசையிலும் விட்டுப் புரவியை
விட்டுத் தளமது தட்டி நீயது வென்ன
தொட்டித் திடிமனு மடித்துப் பொருமென்ன
அப்படையதினில் கொல்லும் புலிகள் போலே
வெட்டிய பொருதுதே யெக்கிக் குடலது
பக்கக் குதிரைகளொக்கக் கடைமிசை பட்டுத் தலைசெவியத்திட்டார் சிலர்

அடி வேறு

காடு வெட்டி யாயறுத்துக் கைசலித்த மனுஷரைப்போல்
கூட வந்த படையும் பட்டுத் குதிரைக் குந்தான் காயம் பட்டு
காயம்பட்டு விழுந்திடவே கண்டு நின்று சானியப்போ
வாசவில்லும் மருத்து வில்லும் வானத்திலும் கடும்பரியை

எய்யு முன்னே கொண்டு வந்தான் எழும்பிஎன்ற நம்பிரானை
பாயும்புலி போல் குலசேகரர் பகுந்தேறு நேரத்திலே
ஆகந் தெளிந்த முழுகி வந்துஅடி தொழுதங்கேது செல்வான்
அடியேன் வெட்டுப் பட்டல்லோ யரசே நீர் வெட்டுப் படுவதுதான்
கட்டிய தேவருக்கும் கைக் கொள்ளாத கன்னப்புரவியின் மீதேறி
முடியுமின்றைக்குப் போரெனவே மூன்று முனையிட்ட வல்லையத்தை வாங்கி
எட்டணிக்கும் பின்னணியாக ஒட்டி நின்ற கன்னடியன் மேலே
ஓங்கிப் படை குத்த வேணுமென்ன ஓடும் படை தன்னைத் திருப்பி விட்டார்
மண்களதிரவே படை கிழிய மன்னர் திருக்கண்கள் பார்த்து நிற்க
கண்களமைத்தவர் விழிக்கு முன்னே கன்னடியன் மேல் படை செல்லவே

4. சீர் சிந்து

கன்னடியன் மேல் காலிங்க வில்லவன்
உண்ணு பரி மீதி லேறிச் சென்று ஒருமித்தே குத்தி விட்டான்
வர்ணக் கரமும் சுற்று மார்பிலுந்தான் குத்துப்பட்டு
பின்னும், புறங் காட்டாத பிரதானிக ளொக்கக் கூடி
கூடி வளைந்து கொண்டு குதிரைக்குப் போக்குமத்து
ஓடி வளையவரும் வாளித் தெளிந்திருக்கும்
கோடிப்படை நடுவே குதிரையுங் காலிங்கனும்
ஆடுந் திரிகை போலே அலையும் துரும்பு போலே
தும்பி பிறந்தாப் போலோ துள்ளுமிர்தம் போலே
போத முரசதிரப் பொன் வண்டு வட்டம் போலே
வட்டக்களரியிலே வாள் வாங்கிக் காலிங்கனும்
விரட்டிச் சிலரை வெட்டி விழுந்தாரே பரியின் மேல்
தட்டிச் சிலரை வெட்டிச் சாய்ந்தார் மூக் கொம்பிலே
மூக் கொம்பிலே விழுவாரும் பக்கத்திலே சாய்வாரும்
ஒக்கச் சிலரை வெட்டிக் கவிழ்ந்து விழுவோர் சிலபேர்

மேற்படி வேறு

கலார் கலா ரென்று காலிங்கனும் வெட்டிடவே
கையும் தலையும் துணிவார் சிலபேர்

நில்லு நில்லு என்று நேரே வளைந்து கொண்டு
நேரிய தலைவன் தன்னைக் கட்டிப் பிடிப்பார் சிலர்
மாட்டுத் தொழுவுள்ளே கூட்டப் புலியைப் போலே
கூட்டப் படையை வெட்டிக் கொன்றுனே காலிங்கனும்
நின்ற களந்தனிலே நேரே செல்ல மாட்டாமல்
அன்று பிறகே சுற்றி யணு யணுவாக ஒருவன்
சென்று கடவிலாவில்சிக்கெனக் குத்தி விட்டான்
குத்தும் பரிக்கு முன்னே குதிரையை மாற விட்டான்
காலும் கரமுமறக் காலிங்கனும் வெட்டிவிட்டான்
விரட்டிச் சிலரை வெட்டி விழுந்தாரே பரியின் மேலே
கட்டும் பரியை விட்டுக் காலிங்கனுஞ் சாய்ந்து விட்டான்
களந்தனிலே பட்டுக் காலிங்கனும் விழவே
கன்னியர்கள் ரம்பையர் கவுரிகள் வீசவே
முழங்கிட்ட வாச்சியம் பல முழங்கிடவே
முன்னும் பின்னும் தெய்வ ரம்பையர் சூழவே
சிறந்த பொன்னுட்டிலே போயிருப்போ மென்ன
சீக்கிரத்தில் சென்று வீற்றிருந்தாரே
உள்ளமது நொந்ததோர் பாண்டியன் தனக்கு
உகமை சொல்ல இனிமேல் ஒருவருமில்லையே

விருத்தம்

இளவரசர் தளத்திலிடை கூற்று வந்த தென்று
அளவில்லாத் துயரமுற்று அமைச்சரும் நடுங்கி நொந்து
கண்மணி போலே யொத்த காலிங்கனிறந்த போது
எண்ணிலா விசார முற்று யிறைத்தவர் வாடினரே

அடி வேறு

பட்டு விட்டாரென்ற போதே பாண்டியரு மதிமயங்கி
த டழிந்த மான் போலே தானே தான் தனித்து விட்டார்

5144 கலார் கலார்—வாளோடு வாள் மோதும் ஒலி

5158—போரில் வீரத் தோடு சண்டையிட்டு மாய்ந்தவர்கள் வீர சொர்க்கம் புகுவார்கள். அப்பொழுது ரம்பையர்முதலியோர் நடனம் ஆடி அவர்களை வழியனுப்புவார்கள் என்று நம்பிக்கை இங்கு காணப்படுகின்றது. இது உலக முழுவதிலும் வீரயுகத்திற் காணப்படும் நம்பிக்கை இக்கதை நிகழ்ச்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் வீரயுகம் இல்லாமற் போனாலும் இக்கதாபாத்திரங்கள் பழைமையான வீர நினைவுகளில் மூழ்கியுள்ளன.

5164 உகமை—(பா. வ.) உவமை. (பகளம்—பவளம் போல)

தானே தான் தனித்து விட்டார் தம்பிமார் பட்ட களந்தனிலே
நானுமெழுவியும் பூவத்தாளும் நடுவே தனித்தோமே என மயங்கி
சென்று மனத்தாளம் மனுட திருத்தாளையடி தொழுது
வென்று தர வேணுமம்மா வென்று வீரவுடைவாளைக் கையிலெடுத்தார்
எடுத்தவர் கைசலிக்க வெட்டி என்னிட தம்பிமார்களுடன்
தன்னுடனே பட வேணு மென்று சமர்க் களந்தனிலே வந்து நின்றார்
அடுத்து நீர் வெட்ட வேண்டாமென்ன மன்னர் பெருமாளைச் சேர்த்துக் கொண்டு
பிடித்து நீ யிங்கே வாரு மென்ன பின்னையுந்தான் கன்னடியன்
உங்கள் மேல் வெட்டுப் பட்டிடினும் அங்கவர் மேலமுந்தாமல்
இங்கு நீர் சட்டையுடம் பிக்கிடு தலைக்கிடும் இரும்பாமே
இஷ்டமுடன் நீர் பொருவீரென்ன ஏவினனே கன்னடியன்
இரும்புச் சட்டை தலைக்கீடு எடுத்தணிந்து வரும் படைக்குள்
மருப்படர்ந்த புயத்தானை வளைந்தானே யெதிர்ப்பதற்கு
அன்னந்தனைக் காகமது சேர வந்து வளைத்தாப் போலே
அங்கங் களரியிலே யரசர் வந்து கூடிய பின்
கலந்தாரே எல்லோரும் கைகலந்த நேரத்திலே
காவலவன் தன்னையங்கே கட்டிச் சேர்த்து பிடிப்போமென்ன
அலர்ந்த புலியாட்டின் மேலே யாடங்கே பாய்ந்தார் போலே
அட்ட திசை ஒடுங்கிடவே வெட்டுத்தான் கைகலந்து
வெட்டுக்கள் கலந்திடமச் சட்டைகளுந்தானு மற்று
வெண்கலக் கடை புகுந்து யானை சென்றுழப்பினளீ போல்
வெட்ட வெளிதனிலே கிட்டவர வொட்டாமலே
வளைய வரும் குயவர் திரிகை போலே தொட்டுப்
பிடிக்கு முன்னே எட்டுத் திசையும் வரும்
சூறுவளியுந் துரும்பு போலே வளைய வளையவரும்
அலையுந் துரும்பு போலே கடலுந் திரையும் போலே
அவருமிவருமாக எவரென்றறியாமலே
அங்கப்படியே வெட்டி யானைத் திரள் தனிலே
சிங்கம் புகுந்தாப் போலே சென்று இப்படி வெட்டுவாராம்
மெய்யுஞ் சலித்து மன்னன் கையுஞ்சலிக்க வெட்டி
மேலாட்டமானபரி காலாட்டமு மடங்க
செய்யுஞ் செயலறியாமல் தியங்கியே வரும் நேரம்

சேர்த்துப் பிடித்தாரே தென்னர் பெருமாளை
தென்னர் பெருமாளை சேர்த்துக் கொண்டு போவது தான்
அன்னந் தன்னைக் காகமது யனைய வளைந்து கொண்டு
தன்னுடைய யில்லிடத்தில் தான் கொண்டு போவது போல
முத்துக் குடை விரிக்க மூடாவுக்குள் வைத்து
பத்தி பத்தியாக யங்கே பவுஞ்சு பிடித்தவர்
சத்த சமுத்திரம் போல் தன் படை சூழ்ந்துவர
சின்னம் பணிமாறத் திரள் வாச்சிய முழங்க
மன்னர் பெருமாளை வடுவகச்சி மலையை நோக்கி
குற்ற மறியா மலவர் கொடு போர நேரத்திலே

## 4. சீர் சிந்து

நேரந்தனிலந்த யோட்டனவனிமைத்த கண்கள் முழிக்கு முன்னே
தூரந்தனில் நின்று சொப்பனங்கள் சொல்லக் கடிதாக ஓடிச் சென்று
விரைந்து சன்னடியன் விரும்பி பெற்ற மெல்லியரை கண்டங்கே சொல்வான்
சொன்ன மொழி கேட்டு பெண் கொடியாள் துயரத்தால் கொண்டமால் தீர்ந்து
நல்ல மொழி கொண்டு வந்தானென்ன
நளினத் திருமங்கைப் பரிச முற்று
பிரியத்துடன் பச்சை வடங்கொடுத்து
பேடை மயிலொத்த பிறை நுதலி
வரிசை கொடுத்த வளங்கே நிற்க மகிழ்ந்து
சிவியார்கள் விழிமேல்க் கொண்டார்
கொண்டு சிவியார்கள் வந்திடவே
கொல்லும் சிலை வீரன் குலசேகரர்

## வேறு

கண்டு நினைத்துத் தன் தம்பிமார் பட்ட களத்தில் கூடப் பட்டுக் கிடவாமல்
பட்டுக் கிடவாமல் கன்னடியன்தன் பாவைதனைச் சென்று மாலையிட

5204 குலசேகரபாண்டியன் கன்னடியர் படையால் பிடிக்கப் பட்டான்.

4390 சிவியார்—சிவிகை சுமக்கும் போகிகள் (பா.வ)

எட்டுத் திசையு மாண்டிருக்க நன்றே வென்று நகைத்து பஞ்சா வேர்த்து
ஏற்றமரகதச் சிவிகையிலே யொருவரறியாமல் மூடா உள்ளே
சித்தந்தனில் வைத்தஞ் செழுத்தை யுன்னிச்
சிவனே சிவனே யென்று சிறு கத்தியால்
சின்னஞ்சிறு கத்தாபவளக் கட்டால் சேத்துப் பிடியும் பொன்னுலெழுதி
பொன்னின ஞாணில் தனக்கிணங்கப் பூட்டிகிடக்கின்ற கத்தியாலே
கையில் தடியூன்றிக் கழுத்தில் வைத்துக் காசினி இனிஆள வேண்டாமென்ன
சிவ சிவா, தெய்வஸ்திரி வந்து மாலையிட்டுச் சேர்ந்தார் சிவலோக மன்னேரத்தே
அந்த நேரங்கழியாமல் அடர்ந்த வடுகிச்சி மலையில் செல்லச்
முந்தக் கன்னடியன் மனமகிழ்ந்து மூடாவை நீக்கிப் பார்க்க லுற்றான்
மூடாவை நீக்கியவேவோரு முந்தமன்னனைப் பார்க்கலுற்றார்
வாடாக் கமலம் போல் திருமுகந்தான் வாட்டுக் கமலம் போல் முகமும் வாடி
பாடாய்க் கிடக்கக் கண்டவேவோரும் பதறிச் சத்தமிட்டே யழுதார்
துஞ்சி உறங்குவதறியாமல் சுமந்து கொண்டுவந்தார் சிவிகை யாரும்
என்று புலம்பியே கன்னடியன் இரங்கி மகளைக் கண்டங் கேது சொல்வான்
மன்றல் செறிகின்ற குழலாரே மயிலே நான் பெற்ற மங்கையரே
மன்னர் தனக்குன்னை மாலையிட்டு வையகந்தனையு முன் வசமதாக்கி
செங்கண் மதயானைப் பரிகலமும் சேரவுனக்காக்கித் தருவே னென்ன

5233 அரை நூலில் கிடந்த கத்தியால் கழுத்தை யறுத்துக் கொண்டு குலசேகரன் உயிர் விட்டான். வேறோர் வாய்மொழிக் கதையில் அவன் வைரம் தின்று உயிர் விட்டதாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

5237 மூடா— மூடுதிரை—பல்லக்கை மூடிய திரை

5240— துஞ்சி உறங்குவது—செத்துப் போனது.
துஞ்சுவது போலும் சாக்காடு—குறள்.

என்று கலங்கியே கன்னடியன் இரங்கி மகளைக் கண்டேது சொல்வான்
பொன்னின் மகளே நானிதுக்கோவுனைப் போற்றி வளர்த்தேன் என்ன அழுதான்
அழுத போதந்த கன்னடியன் ஆகந்தனைத் தேற்றிப் பெண் கொடியாள்
கலங்கி மயங்காதே ஐயாவென்னக் கன்னடியனு மழுதிரங்கி
அழுதங்கிரங்கின பெரும்படையை யந்தக் காதலி கையமத்தி
தொழுதங்கெதிர் நின்று தகப்பனுடன் தோகை மயிலொத்த பிறை நுதலி
பழுது வருமென்றறியாமலே பண்டை விதியின் பயனாலே
பண்டை விதியின் பயனாலே படத்தின் வடிவு கண்டாசை கொண்டேன்
கொண்ட துயரங்கள் தீர்ந்தேனில்லை குலத்துக் கிழுக்காக்கி வைத்தேனென்றான்
குலத்துக் கிழுக்கென்று குலசேகரரும் கூட படை மன்னர் தம்பிமாரும்
செலுத்தி யரசாளு மிளவரசர் தேவி மார்களும் கருவலமும்
தேவி மார்களும் கருவலமும் சேரமடிந்தங்கேயிறந்து போனார்
ஆவி தனித்து நானிங்கிருந்து யரசர் திருமார்பில் சேராமல்
சேர அவருடைய பெரும் படையும் தெய்வ பாண்டியர்க்கிளை முழுதும்
பாரிலிறந்தாரே நம்மாலே பாவியொருத்தி நான் பெண் பிறந்து
காவில் கருங்குயில் விழி மடவார் கரைந்து உருகினாள், மெழுகது போல்,
மெழுகு போலுருகியுள்ளம் வேண்டும்படி மையல் தீராமல்
அழுது மால் கொண்டேனுலகறிய யாசை துயரங்கள் தீர்ந் தேனில்லை.
தீராமயில் தீரச் சிறந்தணைந்து செம்பொன் மலரணை மெத் தையின் மேல்
அகங் குளிரவே யணைத்துருகி யன்புத் துயரங்கள் தீர்த் தேனில்லை
சேர அவருட பெரும் படையும் தென்னர் திருத்தம்பி மாரும் மந்திரியும்
வாரம் சிறந்த தோர் மக்களும் மதயானை பரிகலமும்

5251— கன்னடியன் மகள் அழுது அரற்றிக் கூறுவது
5255— கருவலம் - கருவூலம் (திரிபு)

பரியுங்கரி சூழ் மணவரையில் பாவித்தரசர்கள் பலரும் வந்து
சரியுங் குழல் மங்கை தேவிமாரும் சகல தோழிமார் புடை சூழ
பிரியத்துட னெந்தன் அரண்மனையில் பெண் களாலாத்தி யேந்தி நிற்க
விரியுந்தமிழ் வாணர் கவிபாட விஞ்சையால் வெஞ்சா மரை வீச
அயன் தனக்கும் பொறுத்திலேயோ யாசையால் கொண்ட பாவையாலே
பாவியாலே தானிவரிறந்தால் பார்த்திங்கிருப்பானேன் பாங்கியரே
கன்னடியன் மகள் துயரங்கண்டு கன்னி நல்லார் முகத் தறைந்தார்
முகத்தறைந்தவர்கள நீர்க்கடன்கள் முன்னர் செய்யவும் நீதியில்லை,
விதியில் வெகு வாசை கொண்டு வேழ முண்ட கனி போலானேன்,
பதியுமிழந்தவர் பாடுகண்டேன் பாரிலுள்ளோர்கள் தாமறிய
பாரிலுள்ளோரறிய மாலையிட்டுப் பகுத்தாயிருந்து நான் பஞ்சணை மேல்
கலவி நலங்கள் பாராட்டி காதல் கொண்ட மாதீரர்மேல்
பகலவனொளி போல் பஞ்சணை மேல்ப் பட்ட படுகளங் கண்டேனிப்போ
காணவெனக் குத்தான் விதி தானுண்டு காண் விதிப் பயன் விடுமோ காண்
வீணையவனும் தானிறக்க விதியின்படி வந்து முடிந்ததென்ன
பதியிலிருந்த தோர் தோழி மாரும் பக்கம் பந்தடிக்கும் பெண்களும்
பெண்கள் புடை சூழ வெழுந்திருந்து பேடை நுதலெங்கள் பிறை நுதலி
கண்கள் விழிமலர் மையெழுதி காதில் ரெத்தினத்தோடு மிட்டு
இட்டாள் நவரத்தினக் கொத்து மாலை ஏர்வடம் பச்சை வளையணிந்து
பொட்டு திருநுதல் மீதிலிட்டுப் பூம்பாளை நெற்றிப் பட்டங் கட்டி
சுட்டியுடன் பச்சைத் திருநுதல் மேல்த் துய்ய திருநீறுப் பொட்டுமிட்டனர்

5284—கன்னடிய இளவரசி உடன் கட்டையேறு முன் மணக் கோலங் கொள்ளல்

பட்ட பிணத்திலே மாலையிடப் பரமேசுவரனிட்டப் படிதா னென்ன
என்று மனதிலே கருதிக் கொண்டு ஏற்ற மகளையும் மணந் தேற்றி
நன்று நன்றெனத் தகப்பனுடன் நளினத் திருமகளேது சொல்வாள்

4 சீர் சிந்து

கொண்டல் தன்னை விலங்கிலிட்டோன் மண்டலத் தாளு வோனே
கொம்பிலுக்காய் மடிந்தே பூமி எங்கு மொரதாகுமோ
மண்டலத்தோர் தங்களுக்கே வந்தெதிர்த்தேனையா
வங்கிஷப் பூழியன் தனக்காசை கொண்டேனே நானென்றுள்
என தரத்தோர்களிலிருந்து யியம்பிடப் பார்தனிலே
என்னினத் தோடிருந்து நானுமென்ன சொல்லிப் பேசிடு வேன்

அந்தரத் தோருஞ்சவத்தை மணம் புணர்ந்தாலும்
மைந்தனைத்தான் பெறுவேனோ மண்ணுளச் செய்வேனோ
என் தரத் தானோடிருந்து யிப் பாண்டியன் தனைச் சேர
என் தகப்பன் சலித்தாலுங் யின்றெனக்கு யாகிடுமோ
சந்தனக் காவணங்களிட்டாலும் தங்கத்தாலலங்கரித் தாலும்

தங்க முத்தாலலங்கரித்து யடப் பந்தலிட்டாரென்றுள்
முன்னரத்தான் மொழி சொல்லத்தான் முனியிட்ட தீயிலே
முங்கியிடத் தன்றியிப்போ முனையிடத் தீருமே
அந்த மொழி தானுரைக்க அகம் நொந்து கன்னடியன்
முந்த விதியின் படியிது காண வந்து முடிந்ததென மனந் தேறி

சந்தணத்தால் கால் நாட்டித் தனியே குல்லாப் பந்தலிட்டு
பந்தலிட்டுத் தூண்களெல்லாம் பவள முத்தாலலங்கரித்து
பொன்னாலே தகடு கொண்டு போதவே பந்தலிட்டு

5303—கன்னடியனிடம் அவனது மகள் தனது மனநிலை யுரைத்து உடன்கட்டையேறுவதாகத்தான் செய்திருக்கும் முடிவைக் கூறுகிறாள்

வேறுகதைப் பாடல்களில் உடன் கட்டையேறும் செய்தி வந்த போதிலும் இப்பகுதியில் காண்பது போன்ற வருணனை வேறு பாடல்களில் காணப்பட வில்லை. உடன்கட்டை ஏறும் செய்தி வரும் சில பாடல்கள் முத்துப்பட்டன கதை, மதுரைவீரன் கதை, காத்தவராயன் கதை முதலியன,

வர்ண வர்ணப் பூக்கள் தூக்கி மாணிக்க முத்துமரிய தூக்கி
வெள்ளிலையும் பழுக்காயும் விரை கமழும் மாலை தூக்கி
தெள்ளு புகழ் பந்தணங் கொண்டு சிறக்க நன்றாய்த் தரைமெழுகி
பத்தி பத்தியாய் விளக் கெரியப் பரலோகக் கோலமிட்டு
முத்திறலே முளை தெளித்து முகூர்த்த கும்பக் குடமும் வைத்து
மாணிக்க முடிப் பாண்டியனையும் மங்கைதனையு மலங்கரித்து
ஆணிப் பொன் பலகை யிட்டு யதின் மேலே தானிருத்தி
மாலையிட்டுக் கைப் பிடித்து மணவாளக் கோலஞ் செய்து
பாலை யொத்த மொழி மடவாள் பாண்டியருக் கெனப் புகுந்தாள்
தன்னுடைய தகப்பனுக்கும் தாதியர்க்கும் வார்த்தை சொல்லி
என்னைத் தேடி வருந்த வேண்டாம்; என் விதியித்தனை தான்
சந்தணமும் பன்னீரும் தான் பூசித் தானடக்கி
இவ்விதமா யெடுத்தடக்கி இளவரச ராசாக்களோடு
பந்தமிழ் சேர் மாலை மார்பன் பாண்டியரையும் பள்ளியறையில்
அந்த மயில் சாயல் நல்லாள் யாடல் பாடல் கண்டிருந்தாள்
கண்டிருந்தயயலிள்ளோர் கருமமா என்பாரும்
பாண்டியவரளோடே வாழ்ந்து பள்ளியறை மீதிருந்து
கொண்டவரோடே வாழக் குலத்திலுள்ள விதிப்படித்தான்
பாண்டியர்க்கு விதியிதுவோ பார்க்க வந்த முலைமடவர்
வட மயில் போலவரோடே வாழவென்று மனந்துணிந்து
துணிந்து மயில் போலே யொத்த தோகையிளங் கொடி யிடையாள்
அணிந்து வந்து பல பேர்களாட, அவள் முன்னே நின்று
ஆடிடுவார் பல பேர்களங்கே வீராண முழங்க
நாடு தனில் கண்ட துண்டோ நாமும் முன்னாள் கேட்டறியோம்
கேட்டறியோ மென்பாரும் கிளிமொழியாள் தன்னழகும்
சேட்ட முள்ள குலசேகரர் திருமுகத்தின் வடிவழகும்
வடிவழகைக் கண்டவர்கள் மையலானவரே
படியாளுங் குலசேகரர் பட்ட பிணந்தனிலே தான்
பிணந்தனிலே பிர்மாவின் விதிப்படியோ
அனைத்தவளைச் சேர்ந்திடுவார் அவரவரே பாடிடுவார்
கூட்டிடுமந்த மஞ்சங்களெல்லாம் கொண்டு வந்து யவர் மேலே
போட்டிடுவார் பொடி சந்தனம் புனுகு பன்னீர் சவ்வாதெனவே

சாவாளாய்த் துணிந்து கொண்டு தந்தை முகம் பாராமல்
வாகாகத் தீக்கு வளைந்து தெற்கே வந்து நீட்டி
யேகாந்த மாகயங்கே ஏற்ற நல்ல நீராட்டி
நீராடிப் புரவியின் மேல் நேரிழையாள் வரும் பவனி
காராரும் பூவுலகில் கன்னியர்கள் புடைசூழ
பாராளும் பூவுலகில் பார்க்கவந்தோர் மனமுருக
செத்திறந்த ராசனுக்கு தீக்கடன் நீர்க்கடன் செலுத்த
எள்ளும் தண்ணீரும் இறைத்து எல்லா சடங்கும் முடித்து
அவர் தனக்கு தென்திசையில்
ஆயிழையாள் தீக்குழியில்
பரமசிவன் பார்வதியை பரவிணையாய் மனத்திலுன்னி
தீக்குழியில் விழுந்திறந்தாள்; சேயிழையாள் வடிவு அம்மானை!
வன் குலையாய் மடிந்ததினால் மாய வரம் வேணு மென்று
பரமசிவன் பார்வதியை பாவிணையாய் அடி தொழுது
சேர சோழ பாண்டியர்கள் தேசத்திலும் பூசையுண்ண
எங்களைத்தான் வணங்குதற்கு ஈடேற வரம் வேணு மென்று
என்ன வரம் வேணு மென்று ஈஸ்வரரும் கேட்கலுற்றார்
குறும்படக்கி குடி வளர்க்க கோடி வரம் வேணு மென்றார்
பரமசிவன் பார்வதியும் பாவனையாய் மனமகிழ்ந்து
வேணுமென்ற வரங்களெல்லாம் விருப்பமுடன் தான் கொடுத்தார்
அதிக வரம் வாங்கிக் கொண்டு அவர்களெல்லாம் வந்த போது
ஆலயங்கள் பதி தோறும் அவர்களெல்லாம் பூசை கொண்டார்
தேசமெல்லாம் பூசையுண்டு
சிறப்புடனே அரசிருந்தார்
இந்த கதை தனைத் தான் யெழுதிப் படித்தோர்கள்
கத்து நன்றாய்ப் படித்த வரும் களறியிட்டுக் கேட்ட வரும்
உற்று நன்றாய் அகமகிழ்ந்து உள் பொருள்கள் தெரிந்த வரும்
பாடிப்படித்தவர்க்கும், பணிமுரசுட மானங் கொட்டி
ஆடியலங்காரம் செய்து அம்புவியில் கீர்த்தி பெற்றார்
நித்தம் கன்னியாதானமாக நீடூழி வாழ்கவேதான்

முற்றிற்று

ஐவர் ராஜாக்கள் கதை மூலத்திலுள்ள
பிற்சேர்க்கை

# வீணுதி வீணன் கதை

# வீஞ்ஞதி வீணன் கதை

வீஞ்ஞதி வீணன் கதை நன்ருக குருவே துணை
நாஞ வண்ணம் தொழிலெடுத்து
நகர் சேர் புரியப் படியுண்டு
வாஞல் மயங்கித் தள்ளாடி
மறையோர் தெருவிலிரந்துண்டு
கொள்ளாமல், காசு எடுக்க வென்றே
குடக் காசுடனே எடுபடுத்த
வீஞ்ஞதி வீணன் கதை தனக்கு
வேழ முகவன் கப்பாமே.

குலசேகரன் ஆட்சி

பாண்டி மண்டல முழுதும் ஆண்ட குல சேகரன் செங்கோல்
பண்பு பொருனேக் காஞ்சி கம்பையாறு மட்டும்
ஆண்ட செங்கோல் நீதி முறை
ஆண்ட தம்பி மாரும்
அரசுரிமை செய்திருந்த வளமை தன்னைப்பாட
வாஞ்சை வைத்துத் தானிருந்த நாஞ்சி நாடு தன்னில்
வான் புதுவையூரில் சுப்பிர மணியன் மகராசன்
நற்குருபரர்க்குக் குமரன் பொற்பதந்துணையே
நாஞ்சிக் கோட்டை மூன்றுமுக நாச்சியரைப் போற்றி

_, கஸ்தீசுவரம் பிரதியில் இப்பகுதி பிற்சேர்க்கையாயுள்ளது. அருஞசலக்கவுண்டர் பிரதியில் இது கோட்டை கட்டிய வரலாற்றிற்குப் பின் உள்ளது. இது தனிக் கதையாயிருந்து இக்கதையோடு சேர்க்கப்பட்டதாகவே தெரிகிறது.

4 வாஞல்—வாழ்நாள். (வாஞலே வாங்காதே—உயிரை வதைக்காதே—நெல்லேவழக்கு)

15 இவ்வில்லுப் பாட்டு எழுதியவரைக் குரு வென்றழைக்கிறது இப்பாடல். வேறு பகுதிகளில் இப்பெயர் இல்லே. பெயர் சுப்பிரமணியன் மூனறு மூகநாச்சியார்—ஒழுகினசேரி அம்மன். இதே அம்மன் கோவில் வள்ளியூரிலும் இருந்தது.

கதை

கங்கை குல வேளாளர் வம்சத்திலே வந்தோன்
மூலமான தாய்தகப்ப ரெல்லாமே யொடுக்கி
மோசமில்லாத செல்வத்தையும் நாச காலமாக்கி
இறக்கப் போற வேளையிலே சிரிக்கப் போறாரென்று
எட்டு நாளாய் வீட்டடைத்துப் பட்டினியும் பார்த்தான்
சரிக்குச் சரியாயிருந்தா உத்தார முமுண்டு
சத்தே தாட்சி வந்தாலுத் தாரமுமில்லை
இத்தலத்திலே கிடந்தால் செத்துப் போவோமென்று
இராத்திரியாய் வீடடைத்து யாத்திரையாய்ப் போனான்
வித்தகமாய் வெளியிலவர் ஒரு நினைவு வந்து
வேண்டிக் குடித்தே பிழைப்போம் ஆண்டிக் கோலங் கொண்டு
கம்பு போட்ட சொட்டைக் காதில் சொய்புதூக்கினாக்கால்
கருத்திலே கவலை யில்லை யென்று முருக்கன் வீட்டில் சென்றான்

வண்ணானிடம் வேலை கேட்டல்

"தம்புரானே யொன்று மில்லை தட்டழிந்து போனேன்
சாதிக் கிழிவாக என்னை சோதிக்காதே தெய்வம்
பந்தி நீக்கு வார்களென்று கந்தை தூக்க வந்தேன்
பத்திரமாய்க் காதிலொரு முத்திரை போடென்றார்"

வண்ணான் பதில்

நொந்த வார்த்தை சொல்லிக் கொண்டு வந்தவனைப் பார்த்து
"ஒனக் கிணையாய்ப் பூதலத்தில் சமர்த்தரில்லை அப்பா!
புத்தி கெட்டேனென்று சொல்லி மெத்தச் சடையாதே
பூட்டிமையாய் நாட்டுக் கொரு வீட்டுக் காரனாவாய்
பித்தருட வேடத்துக்கு முத்தி வீடு தூரம்

29 பிழைக்க வழியை நினைத்துப் பார்க்கிறான். பிச்சையெடுக்கலாமா, துணி துவைக்கலாமா என்று யோசிக்கிறான்.

32 தம்புரானே—அரசனை அழைப்பதற்குரிய விளிச்சொல் வண்ணானை அழைக்கப் பயன் பட்டது.

32 —வண்ணானுக்கு அக்கால அடையாளம் "காதிலொரு முத்திரை"

பிச்சை வாங்கச் சொல்ல வில்லை கச்சை தொட்ட தெய்வம்
உண்மை கிடையாத தொழில் பண்ணிக் கொள்ள .வேண்டாம்"
யோகக் காரன் நீ யென்றே போகச் சொல்லி விட்டான்

### வீணாதி வீணன் நினைத்தல்

எண்ண முள்ள புண்ணியத்தை நண்ணியல்லோ வந்தேன்
இட்டமாக ஆண்ட வீடு மொட்டையாகிப் போச்சு
எந்தனுட கால வினைதான் இந்தப் படியாச்சு தென்று
காட்டு வழி கேட்டு வள்ளியூர் நாட்டுவழி வந்தான்

### வள்ளியூர் வருதல்

மத்தக மதக் களிறு கத்துகின்ற கோட்டை
மல்லருட வாசல் விட்டு மெல்ல வந்தான்
ஏகாந்த வன்னியர் களெங்குஞ் செருமிய வாசல்
ஏத்த தெருவிலக் கிடக்கின்ற ஒட்டை யெடுத்து
மங்கலப் பெண்களிருக்கின்ற கூடத்து வாசல்
மாதா வே பிச்சை யிடம்மா' எனவே உரைத்தான்
கூடத்துக் கட்டிய சங்கிலி நாயுங் குலைக்க
கோல் கொண்டு சின்னக் குழந்தைகள் குண்டியில் குத்த
மூடிக் கிடக்கின்ற காடிக் கஞ்சி விடு பூன்னே

### பிச்சையெடுத்தான்

முக்குருணி குண்டு வெள்ளட்டி வார்த்தது மூக்கில்
சஞ்சி புளிக்குப் பருக்கை யஞ்சாறு கலந்து
கையோட்டில் விட்டவள் தள்ளி யடைத்தாள் கதவை
பிஞ்சின நீரைக் கொண்டு சென்றானே பின்னுமோர் வீட்டில்
நீக்குங் கதவுக் கப்பால் நின்று சத்தத்தை விட்டான்
கூப்பிட்டாப்பிலே "குத்து, வெட்டு, கொல்லும்" என்று
கோவித்து வாசல் கதவிலெறிந்தான் குறட்டால்,
சாப்பிட்டது போது மென்று கண் காணாமல் தப்பி
தள்ளாடி தள்ளாடி பின்னு மொரு வீட்டில் சேர்ந்தான்
கிறக்கப் பொழுது மங்கிருக்கப் போகாது என்றே
எரிகின்ற கும்பியை நெத்திக்கும் நெஞ்சிக்கு மிட்டான்

57 முக்குறுணி—தானிய அளவை 3 மரக்கால்
57 வெள்ளாட்டி—வேலைக்காரி

அரித்த தலைமயிர் கொண்டையை யுச்சி மேலாச்சி
அரகரா தெய்வம் குரு தர்மம் பிச்சையிடம்மா
பண்டு பாடம் பண்ணு கண்ட மானப் பாட்டுப் பாடி
பானவி லாடப்பரதேசி போலே பகட்ட
வண்ட வெள்ளாட்டியோர் மூண்டச்சி சீக்கிரம் வந்து
"வந்தீரோ பண்டாரம் திண்ணைக் குள்ள சாப்பிடவாரும்,
வாங்கிக் குடிக்கவே, மூங்கிலும் போல் வளர்ந்தாய்!
மாப் பிள்ளைக் காகாத காப்பிலிக் கூத்தி மகனே,
தாங்கி பிடித்துச் சமைக்கின்ற ஒரெத்தினை தந்தால்
சாகிற வேளை கயிலாசம் காட்டித் தருவாயோ"
சட்டிக் கறி கள்ளுஞ் சாறுக்குக் காணும்
சட்டிக் கன்னத்தில் போட்டுப் பயலைக் கயிற்றினால் கட்டி
திட்டியடித்தந்த மொட்டச்சி வாரியலைக்கொண்டு
சீவனைக் கூட்டிக் கொண் டோடினான் மீண்டும் தெருவில்
"பணத்துக் கரிசி பதக்காகிலு மிந்தப் பாடடா
பார்த்துக் கொள்ளடா குமரப்பா" வென்றே போய்ப் படுத்தான்
கணக்குள்ளதாய் விடிவெள்ளி உதயத்தைக் காட்ட
கவ்வையைக் கூட மூடுக்குதே கும்பியின் காந்தல்
வெளுக்கும் பொழுதிலே பல்லையுங் கூட மினுக்கி
வேலாயுதத் தெய்வம் உண்டென்று தொட்டான் விபூதி

காட்டுக் காய்கறி வியாபாரம்

சுருக்குள்ள யாவாரஞ் செய்திட வென்று துணிந்து
சுண்டைக்காய் முருங்கைக்காய் காட்டு முருங்கைக்காயை
இடங் கொண்ட வேட்டியில கட்டித் தலையிலெடுத்தான்
உலர்ந்த கடலுக்கு முசுட்டக்காரு தன்னையுருவி
ஒன்றிரண்டாகக் கடித்து விட்டான் தொண்டைக்குள்ள
மேல் படி தண்ணீர் குடித்து வயித்தை மினுக்கி
மீண்டு மவன் வள்ளியூர்க கோட்டைக்குள்ள விரைந்தான்
மார்க்கமாய் வாசலை மட்டுப் படுத்தியே மல்லர்
வேட்டியைப் பிரியே ஆளுக் கொரு பிடிஎடுத்தார்
பூ வண்டன் மாரோடு தீ வெட்டிக் காய்ந்து மூவந்து
பொன்னலிற கையை விட்டு அள்ளிக் கொண்டு வா போ

73 ஒரு வேலைக்காரி அவனைச் சாப்பிட அழைத்து சொத்திருந்தால் கலியாணம் செய்து கொள்ளுகிறேன் என்று சொல்லுகிறாள்.

88 யாவாரம்—(பா. வ) வியாபாரம் காட்டுக்காய்

தூவிட்ட காயைப் பிறக்கி வேட்டியில் சுமந்து
துரை மக்களோடே பறித்துக் கொண்டானென்றும் சொன்னான்
நெட்டையுருவம் போலே கேளாமல் சந்தியில் நின்றான்
நேட்டோடப் பாயக்குன்னி நடக்கின்ற நேரம்,
கட்டையன், மெத்தக்கருப்பன் துரை ஆயக்காரன்
காட்டுவாய் சீட்டெங்கே, காசெங்கே என்றான் இடும்பாய்,
இடும்பாவனத்திலே சீட்டெடுத்து முத்திரை செய்து,
இச்சைப்படியாய் அவரும் கொள்ளையிட்டார்
"தொடர்ந்தபடிச் செய்யாதே ஆயக்காரா" என்று செப்ப,
செவிட்டுக்கு நேரா ரெண்டு சபாட்டான் அந்தச் சீமான்
வட்டியைக் கீழே இறக்கி படுவாதிவாதி
வாச்சிதே என்றேயந்த ஆயக்காரன் வச்சு வாங்க
பட்டினிக்காரனை இத்தனை புட்டப்படுத்தி
பண்டு கெடுக்கிறான் தெயங்கு மகன் டாலப்பாரு,
என்றென்று சொல்லியழுதாலும் கேட்பார்களில்லை
எடுத்துக் கடையிலே கூறு போட்டங்கே இருந்தான்
பேணியை ராணுவத்தாருக்குச் சமைக்கின்ற பெண்கள்
"பிச்சைக்காரா, தம்பி, காசு தருவேன் பிறகு"
ஆனதைக் கூட்டிக் கொதிக்க வைத்தாரடுப்பில்
அந்தத் தலைவாசல் கூடத்து அடையாளம்
சீக்கிரம் வாவென்றே யஞ்சாறு கூட்டித் திரட்டி
செப்பக் கறி வாரிப் போட்டுக் கொண்டப் புறம் சென்றார்
தூக்கி என் காசைப் போடென்று கையதைத் தொட
தொட்டான் முலையதை என்றவள் தொலிந்தாட
பரத்தைச் சிறுக்கிக்கு உபகாரியான பயல்கள்
பம்பைத் தலைமயிர் ஒன்று மில்லாமல் பறித்தார்
கூட்டி முடிக்கப் பத்தாமல் போச்சுதே கொண்டை
என்றென்று உழத்தி யழுதவன் பிச்சை யெடுத்து
இருப்பின் கருப்பாறக் கிடந்தானே திண்ணையிடத்தே

100 —காட்டில் கிடைக்கிற காய்களைப் பொறுக்கி விற்கக் கொண்டு வந்த போது, வாயில் காவலர் பிடுங்கிக் கொண்டார்கள். காட்டு ஆயக்காரர்கள் ஆயங்காசு கேட்டார்கள். முதலில்லா வியாபாரத்திலும் அரசு ஊழியர்கள் லஞ்சம் கேட்டார்கள்.

122 —23 காய்கறியை காசு கொடாமல் எடு
தொட்டு காசு கொடு என்று கேட்டான்
என் முலையைத் தொட்டான் என்று கூக்குரல

விறகு வியாபாரம்

"பன்றிக் காட்டில் போய் விறகெடுத்தின்றைக்குப்
பார்ப்போம்"
பச்சிலையுங் காயுந் தின்று தெளிந்தான் பசியை
உச்சிக்காலம் விட்டு சாயங்காலமே இரந்தெடுத்து
ஊன்றி தகையாறிக் கொண்டு வந்தான் கோட்டையூரில்
வச்சிரமா யொட்டி வாசல் கடந்து வருங்கால்
மலைக்குத்தகைக் காரப் பயல்கள் விறகை மதித்தார்

வேறு

(ஏமாற்றப்பட்டான்)

"எங்கடா கொண்டு போறாய்? பிறகுதான்
இறக்கடா" என்று யுருக்கி யதட்டினான்
"உங்கள் பங்கல்ல எனக் குல சேகரன்
உள்ள கிராமத்தில் போற விற கெ"ன்றான்
நாங்களும் வன வீட்டுப் பயலென்றே
நாலிரண்டு கொள் கைக்கு வாரினான்
பாங்கில் நின்ற வரு நடை முண்டச்சி
"பறிக்கப் போறார் விறகிங்கே கொண்டுவா
சோறு கஞ்சி வயிற்றுக்குத் தாரேன் நான்
சுமக்கும் கூலியும் கூடத் தருகிறேன்"
கூறு போட்ட விறகிலோர் பங்கிதை
கொண்டு போய் விற்றான் அவள் வீட்டில்
விறகை வீட்டுக் குள்ளாக்கி வெளி கொண்டு
வீதியில் சென்று லாவித் திரிகிறாள்
உன்னைச் சோறு தருகிறேனென்றந்த
வித்துப் போட்ட இடந்தனில் கூலியைப் போடென்றான்
கண்ணுக்குத் தெரியா தோர டையாளம்
கண்ட பேரெல்லாம் காசு தருவாளோ?
வீட்டுக் காரியைக் கூப்பிட்டுக் கொண்டாள்
விருந்துக் காரியை "ஏண்டா பயல் ஆட்டினாய்
திருட டுக்காரன் விறகு கொடுப்பானா?
செம்புக் காசு தேடித் திரி வானா?
பெண்களோட உனக் கென்னடா பேச்சு
பெரிய பட்டாணியை கூப்பிடுங்க பின்னர்,
கண்ணுமூக்கும் சிமிட்டுறான் பாருங்கோ
கயிறு கொண்டுவா கள்ளனைக் கட்டெ"ன்றாள்
போச்சு போச்சு திந்த வள்ளியூர் தாயம்
போதும் போது மென்று அயல் போயினான்
வைத்துப் போன விறகை யாங் கவர்

வாரிக் கொண்டு மறையப் போனார்களே
மந்திரிமார்கள் வாசல் பிரதானிகள்
மன்றில் அம்பல காரத் துரை மக்கள்
தந்திரச் சொல் கண்டி கொள்ளச் சேவகர்
கூறுவ பேருக்கும் அறிய முறையிட்டார்
மேனியின் மினுக் கொன்றில்லையா மாகில்
வேடிக்கை சொன்னாலும் வீணுக்குக் கேளாது
ஊனமுள்ள பெரும் பசி தேர்ந்திட
ஓட்டிலே பிச்சை உதட்டுக்குப் பத்தாது
வீணிலே பேச்சு கேட்க விதிதுரத்த
மேனி யெல்லாம் விதன மூண்டாச்சுதே
ஊணும் இல்லை, உறக்கமுமில்லையே
ஊருக்கெல்லாம் நாடும் ஒருத்தனைக் கண்டுதே
என்றிலை வாணிச்சி திண்ணை பேறினான்
நொந்த சத்தத்தைக கேட்டிலை வாணிச்சி
"நோக் காட்டுக் காரன் யார்?" என்று கேட்டனள்
"காடு தேடி விறகு சுமந்திட்டேன்
காசு காணாத பாவியால்ப் போயினேன்
மாடு பூட்டி உழுகின்ற பேர்மத்த
வைக் கோலைப் போட மறுத்துக் காவலன்
பட்டினியாய்ப் பத்து காசுந் தொட்டு

### கிழவியின் உதவி

பத்தெட்டு நாளாச் சுதம்மா வென்றான்
கட்டிச் சோதுக்குள் கருவாட்டையும்
கட்டினாள் ஊட்டினாள் தொண்டை மட்டுக்கும்
பெத்த தாய் செத்துப் போய்ப் பிறந்தாளென்றே
பேச்சு மூச்சு விடாமல் விழுங்கினான்
சுத்தமாய் பசிப் பேய்க் குணம் விட்டபின்
தூக்கம் பெயர்ந்து மேல்பட்டி தொட்டு தாம்
கோழி கூவக் கிழவியைக் கூப்பிட்டு
கும்பிட்டான் காட்டில் போய் வருவேனென்றான்
வாளைக் கண்டம் வடிகஞ்சி சாதமும்
வார்க்க வார்க்கக் குடித்தானே மாடு போல்
பேணிப் பாக்கு வெட்டரு வாளொன்று
பின்பு வாங்கி புறங் கொண்டு போயினான்
"வாணிச்சி வாழ்வு குன்றாமல் காத்தருள்
வள்ளியூர்த் தெய்வமே!" என்று கும்பிட்டான்
வாய்க்குள் பாக்குப் போட்டுக் கொண்டோடினான்
மதி கெட்டான் பாட்டு பாடிக் கொண்டே போனான்

### பொந்தந்தடி செய்யச் சொல்லுதல்

அடித்துக் கொல்லாமல் கஞ்சி தந்தீரென்றான்
கத்தி கொண்டு விறகுகளை வெட்டியே
கட்டிக் கொண்டவள் கொல்லையில் சாத்தினான்
மத்தியான மொரு கட்டுச் சாத்தினான்
மாலை நேர மொரு கட்டுச் சாத்தினான்
மீண்டும் மீண்டும் போய் ரெண்டு நாளைக்குள்ளே
விறகுக் காடாக்கினான வள் வீட்டையே
கண்டொரு நாள் விறகு கொண்டு வந்தே
குத்தியைத் தச்சன் வீட்டில் கொடுத்தனன்
வள்ளியூரை வலஞ்சுத்தியாடுது
வங்கிசத்தோர் வணங்கிடும் ஊர்த் தெய்வம்
அங்கும் மிங்கும் பிழைக்க வொட்டாமல்
அடித்தடித்துக் குதிக்குதே தச்சனே
வீசி வீசிக் குதித்துக் கொண்டாடவே
வெண்டயத் தடிப் பொத்தியுண் டாக்குவாய்
கூசிடாமல் சுமையென்று சொல்லியே
கொண்டு வந்தான் விறகவள் வீட்டுக்கு
விறகுவாணிச்சி வித்து முடிகிறாள்
விருந்துக் காரரைப் போலிவன் சாப்பிட்டான்
இறுதியாக ஒரு நாளை வேளையால்
ஊரும் பேரும் முறையென்று கேட்டனள்

வேறு

(தன் வரலாறு கூறுகிறான்)

வெம்பனூரம் பலத்துல
வீத்திருந்த கரையாளர்
கண்டிடாத ஆத்திக் குட்டி
பெரிய பணக் காரனவன்
பூமாலை மனையாட்டி
புத்திரனில் லாதிருந்தாள்

210 உழைத்து பிழைப்பது கடினம் என்பதைக் கண்ட வீணாதி வீணன் தச்சனிடம் பொந்தந்தடி செய்து தடிக்காரர் உதவியோடு வரிவசூலிக்கத் துணிவதற்கு பொய்க் காரணம் கூறுகிறான். ஊர்த்தெய்வத்திற்குக் கொடை கொடுத்து கோமரம் ஆடப் பொந்தத்தடி செய்யவேண்டும் என்று கேட்கிறான். அவற்றை வைத்துக் கொண்டு ஒரு படை தயாரித்து, வரிவசூல் செய்ய திட்டம் இடுகிறான்.

தவசி பண்ணுமவ ரிடத்தில்
சந்ததியாய் நான் பிறந்தேன்
இவனெங்கள் தேவனென
சன்றவர்கள் பெருமைப் பட்டார்
தவழ்ந்து விளையாடு முன்னே
தகப்பனார் தீப்புகுந்தார்
கூண்ட முலைப் பாலூட்டி
கொண்டு திரிந்தே வளர்த்தார்
பாலுகுடி மாறினபின்
பாவையரும் போய்க்களைத்தாள்
ஏலவே பணத்தை யெல்லாம்
எதிரி பறித்துக் கொண்டான்
வைது வைது சோறு தந்தாள்
மட நாய் போல் கிடந்து கொள்வேன்
மெய்துவள அரையாட்டு
வேலை செய்யும் பக்குவத்தில்
பணம்பிறித்த யெதிராளி
பருவிலங்கிவிட்டனனே
இணங்கியந்தப் பரு விலங்கில்
எட்டு நாள் கிடந்து விட்டேன்
அள்ளி யள்ளி தருவதற்கு
ஆணுமில்லை பெண்ணுமில்லை
வள்ளியூர்க் குமரனை நான்
மறக்காமல் நினைத்திருந்தேன்
நினைத்திருந்த படி தானே
நெறி விலங்கு தெறித்ததம்மா
வனத் துணையாய்க் காத்திருந்த
மறவரையுங் கடந்து விட்டு
கருத்துடனே காவல் விட்டுக்
கடந் தோடி வரும் போது
கரைக் கூடுதாறு மென்று
தொழுதேன் நான் குருக்கள் தன்னை
சாத்திரத்தைப் பார்த்தவனும்
தரமாட்டோ மென்று சொன்னான்
கூத்தி மக்கள் வீத்திருக்கும்
கோட்டையில் வந்தழவே
விறகு வித்துக் காய்பறித்து
வித்த தெல்லாம் பறித்தார்கள்
அறுதலிக்குப் பிறந்த மக்கள்

அநியாயஞ் செய்தார்கள்
"அப்பனும் நீ அம்மையும் நீ
ஆறுமுக தெய்வமும் நீ
எப்படியுங் காத்தருளுவாய்"
என்னுரைத்துப் பின்பு சொல்வான்
விருப்பமு டனப்போ தான்
வீணா வீணனம்மா
வருத்த மெல்லா மறிந்தவளே
மாதாவே யென்றுரைத்தான்.

வேறு

கட்டுப் பெட்டிய விழ்த்துத் துப்பட்டி கொடுத்தார்
காதுக்குத் தங்கக் கடுக்கனையும் போட்டார்
தொட்ட சுவடாக முத்துப்பருப்பாகக் கடுக்கனிட்டு
சுந்தரச் சிவப்புடைய சந்தர காவிக் கட்டி
சந்தனப் பொட்டுக்கு மேலே சிந்தூரப் பொட்டிட்டு
தஞ்சாவூர்ப் பட்டுக் கயிறு அஞ்சாறு தூக்கி
கொழுந்து பிச்சிப்பூ கொழுந்து கொண்டைக்குலம் மணக்க
கோலஞ் செய்து புலிக்குட்டி வாலுருவி விட்டனள
வில்லைச் செருப்பு அஞ்சு பணம் வேட்டியோ வராகன்
வெத்திலையுங் கையுமாக வீதியிலே சென்றான்
கொல்லைக் குள்ளே நின்று பெண்கள் கூடிக் கூடிப்பார்ப்பார்.
கோவலனோ வள்ளியூர்க்குச் சீவகனோ என்பாள்
வச்சிரமாய்ச் சீக்கிரத்தில் தச்சன் வீட்டில் சென்று
வந்து நின்று சாதிலிங்கம் பொந்தித்தடி கேட்டான்
குச்சு போட்ட வெண்டையக் குடக்கிலுக்கும் போடு
கொண்டு திரி வீம தண்ட மென்றவன் கொடுத்தான்
வள்ளியூரில் கந்தப்பனை மெல்லவே நினைந்து
வந்து புகுந்தாரெனராய் சந்தியிடமாக
கள்ள பத்தார் கொத்தரடி கொள்ளை ராணுவத்தார்
கம்பளத்தார் நித்தம் பத்து சம்பளத்தார் கூட்டப்
க்ஷத்திரியர் ராஜ புத்திரருங் கூட்டம்

275 —வாணியக்கிழவி வீணாதிவீணனுக்கு உடை முதலியன கொடுத்து அணிந்து கொண்டு வெளியே போகச் சொன்னாள்.

290 வீணாதிவீணன் கொல்லனிடம் பொந்தந்தடிகளை வாங்கி, பல பேரைக் கூலிக்கு அமர்த்தி ஒரு படையைத் தயாரித்தான்.

சண்டையிட்டுக் கூச்சலிட்டு பட்டாணிகள் கூட்டம்
தத்தி தத்தியாக நின்ற பத்தியால் புகுந்தார்
தந்திரஞ் சொல் மந்திரிமேல் பொந்தித் தடிபாய
முட்டுக் காரர் நட்டுவர்கள் தட்டுப் பட்டு வீழ
மூர்க்கங் கோலங் கொண்டு புலி தாக்குவது போல
தட்டிக் கேட்டிடாத சில கெட்டிக் காரர் தன்னை
தாங்கியெடுத்தப் புரத்தில் வாங்கிப் போகச் சொல்வான்
கப்பங் கொண்டு வந்தவர்கள் கணக்குஞ் சொல்ல வந்தார்,
காரியக் காரர், மணியக்காரர் மந்திரி மார்கள்
அப்புறமும் இப்புறமு மாக்கி நடுவே போய்
ஆண்டவனே குலசேகரா என்று கும்பிட்டானே.
தென் மதுரைப் பாண்டியர்க் குலசேகர பெருமாள்
திண்ணமுள்ள காளிங்கனுய்த் தாயக் காரனும்
என்னை நினைத்தானரசன் முன்னுந் தடிவீணன்
எட்டுப் பத்து நாளாய்த்துசம் கட்டித் தொழுதானே
அன்று போலவே காளிங்கன் மூன் சென்று முகங்காட்ட
அன்னங்குல சேகரனுய்ப் பண்ணினதாய்க் காணும்
என்றிவர் குறித்துக் கொள்ள வீணுதி வீணன்
என்ற பேர் கொழுந்து விட்டு சென்று தென் திசைக்குங்
சாதி கேள்க்கவில்லையூரும் பேருங் கேட்கவில்லை
பாத்து குடக் காசுக்கு யுத்தாரங் கேட்ப தென்ன?
பாண்டியன் முகத்தில் சிரிப்பாணி யொன்று போதும்
கைத் தடியுந் தந்து பாண்டிக் கொற்றவன் கற்பித்தான்
காசு வேண்டு மென்றவன் கடையில் சென்று நின்றுன்.
வெத்திலைக் காடிக்குக் காசு வேண்ட வேணு மென்றுன்
மேலும் பாக்கு பைக்கறைக்கு வேண்டுமெனவே காசு
கடைத்தலையில் விறகு வித்து கிடைத்த தில்லை
கைத்தடியும் கையுமாகச் சுத்திப்பார்க்க வந்தாய்
அடித்துப் போட்ட பாம்பு வந்து கடித்திடுமோ பெண்கள்
அதட்டுகிறுளென்று முன்னே யுதட்டில் இடி போட்டான்
ஆ கெடுவாய் என்கு முன்னே தாடியில்கை போட்டான்
ஆண்டவனே! காளிங்கனே! பாண்டியனே கூ கூ
கா கூ வென்றிரு முன் போகவே மறித்தான்
கள்ளக் கோலென்றவன் தன் வெள்ளிக் கோல்முறித்தான்
பொட்டுக் குலைந்தே வெத்திலைக் கட்டுக் ௫
போகப் போக மிதிபட்டு சாகப் போறீர்

320 முதல் 330 வரை—வீணுதிவீணன் தடியைக் வரி வசூல்செய்தான்.

கட்டிக் கொண்டு மன்ருடி கிட்டநின்ற பேர்கள்
கச்சக்காலடித் திட்டாலும் வைச்ச காசு சுடுமா
"பேசியந்தக் கூட்டத்தார்கள் சஞ்சி வாங்கிக் கொடுத்தார்
பொரளி கிணத்தங் கரையோரம் பிடித்தே சென்ருன்
பாச முடன் அப் பெண்களைப் பார்த்தவன்
படிக் கல்லிலே வத்திடுங்கோ, குடத்துக் கொருகாசு
பாண்டியன் மேலாணையிட்டால் தோண்டி போய் போமா?
பட்டுச் சட்டைக் காரனைத் தட்டிப் பேசப் போமா?
வேண்டுவாரே காசெனவே கூடிப் பெண்கள் நிற்க
மேலுங் குடங் கொண்டு வந்தாள் காளிங்கன் வெள்ளாட்டி
குடந்தனையு மிறக்கி வைத்து,நடந்த செய்தி கேட்டாள்
"கோட்டிக்காரன் பேச்சல்லாமல் சீட்டுக் கேட்டதுண்டா?
விடிந்து போச்சுதென்றே காசு முடிந்து போக வந்தாம்!
வேண்ட மாட்டாளெண்டி பெண்கா தோண்டி"
போடுனென்ருள்.
துட்டுத் தடியை அசைத்துக் கிட்ட வந்து நின்று
"சூரத்தனமாய்ப் பேசினுயே கோதிக் கொள்ளுவாயே!
குட்டச்சி சொல் கேட்டால் குடம் கொண்டு
போகமாட்டீர்.
கொள்ளக் குறையாக்க வந்த சூர்ப்பனகை யென்ருன்!"
"முண்டச்சிகள் காலில் மிதிபட்ட கொண்டைக் காரன்
"வாரியலைப் போலப் பரந்த மீசை தன்னைப் பாரும்
காவிப்பாக்குப் போட்டுக் கொண்டான் சோவிப்
பல்லுக்காரன்
காளிக்குப் பலி கொடுங்கோ மூளிக்கிடாய் தன்னை
வாவிக்கரைப் பெண்களைச் சேவிக்கவோ வந்தாய்
மாப்பிள்ளைக்கு ஆகுவாயோ பேய்ப்பரச்சி மகனே
நாட்டிலே குடக்காசு வாங்கும் பொட்டைப் பிணமே நீ
நாய்க்கும் பேய்க்கும் வள்ளியூரில் மூப்புவந்து போச்சோ
ஊட்டி தெறிக்க கிணத்துக் குள்ளே தள்ளிப் போட்டு
உண்டைக் கல்லைத் தாவெடுத்து மண்டையில்
போடென்ருள்."
"கழுத்துக் கட்டி தாணில்லாம கொழுத்துதெ கிடாரி
கள்ளக் காளையோடு மேய்ந்து துள்ளிக் கொள்ளலாச்சே

342 — குடத் தண்ணீருக்கு ஒரு காசு வசூலித்தான். இதற்குக் குடக் காசு என்று பெயர்

345 வெள்ளாட்டி — வேலைக்காரி

349 —364 முதல் 20 அடிகள் வீரணுதிவீரனுக்கும் காளிங்கன் வீட்டு வேலைக்காரிக்கும் நடக்கும் வாய்ச்சண்டை

ஐழுப்பியந்தக் காளிங்கனை பிணைத்திடாமல் பாயும்
மாடு தனக்குத் தடியால் சூடு போட வேணும்."
"தாடகைக் கோலஞ் சமைந்து நாடகத்தைச் செய்தால்
தத் திம் மென்று கொட்டுதற்கு மத்தளமேயில்லை
பாடும் பாட்டுக் கேட்டுத் தலையாடும் தெய்வமில்லை
பரத்தையென்று சொல்லியுன்னை சிரிக்கப் போறார்
பெண்கள்
கொத்துக் காரருங்கள் வீட்டுச் சொத்தை விலையாக
கொள்ளும் போது பெண்கள் கூடித்தள்ளு வாரு
முண்டோ?
புத்திக் காரியாகிக் காசை வைத்துப் போ"வென்றானே!
"பூச்சியங் கெடுப்பேன் வீட்டில் போய்த்திரும்பு முன்னே
என் கையாலே வெட்டியுன்னை வன் கழுவிலிட்டு
ரத்தப் பொட்டும் போடு வேனென்று நீளாக் கோரி
தன் குடத்தைக் கோரியவளோ கரையில்வைக்க
தந்திர மாய்க் குடத்தை தடி பொந்தி கொண்டு
போட்டான்

வேறு

பொந்தித் தடிபட்டுக் குடமுடைந்து
புனைந்த கோயதகந்தான் குலைத்து
சிந்திக் குடமோடு தன்னை யெடுத்து
திரண்டு பெண்கள் முறையிட்டாளாம்
கிந்தி இடுப்புக்குள் நோக்காடென்றே
கெடுதி யோட்டினைத் தலையில் வைத்து
கையைத் தாங்குவார் சில பெண்கள் தான்
கா கூ வென்பார் சில பெண்கள் தான்
வையத் தொடுத்தாரே சில பெண்கள்தாள்
வழியிலழுதாரே சில பெண்கள் தான்
கடிதாக் காளிங்கன் முன்னே சென்று
கண்ணீ ரொழுகவே அவய மென்பார்
நடுவாயிருந்த தோர் துரைமக்கள் தான்
நடந்த செய்தியைக் கேட்டிருந்தார்
எல்லாச் செய்தியும் கேட்டிருந்தார்
நேரெடுத்துப் புகன்றாரே காளிங்கனும்
"பொல்லாப் புழுக்கச்சி தவக் குறையால்

382 பெண்கள் கூறுதல் 400 —அவர்கள் அவை
யிட அவன் வீணுதிவீணன் அரசனுடைய
கூறுகிறார்

புத்தி குறைவந்து கொண்டது காண்
பார்த்தாலொரு செப்புக் காசாலே
பண்ணைக் கொடுத்தாளே பழிகாரி
ஆர்த்தங் கழுதாய் அடிபட்டாலும்
அரசன் கற்பனை யழிக்கப் போமோ
குடிக்கத் தண்ணீர் தான் வேண்டு மென்றால்
குடத்துக் கொரு காசு கொடுப்பாயென்றான்
இடுப்பு நோக்காடு தான் போச்சு
இரங்கியழுதிடுங் குரல் போச்சு
படித்துக் கொடு வந்த பிரட்டும் குருடும்,
பிரிந்து போச்சு பாவையர் குடுமி
பிடித்துத் தாங்கி எடுத்து வந்த
பெண்கள் கூட்டமும் பிரிந்தார்கள்
மூத்த மந்திரி காசெனவே
முந்தக் கொடுத்தவள் கோரி போனாள்
தோத்துப் போனாரே பெண்கள் என்று
துட்டுத் தடி காரன் வித்துக் கொண்டான்
வள்ளியூர்க் கொரு மணியத் தண்டல்
மத்த நாட்டுக்கும் மணியத் தண்டல்
கள்ள நாடு திருச் சிராப்பள்ளி
காஞ்சிபுரம் மட்டும் மணியத் தண்டல்
ஒரு நாளைத் தண்டலுக் கொரு பட்டரை
யுள்ள குடக்காசு கூடியதாம்
விரியாமப் போற காசு வெள்ளிக் காசு
வேண்டிய நிலவறை தோண்டிப் போட்டான்
வீணாதிவீணன் குடக்காசுக்கு
வேந்தன் இறைகூலி பற்றாது
காணாக்கரு மலை மரத்தை வெட்டி
கல்லுமாளிகை தான் சமைத்தான்
கூடஞ் சாவடி காசுப்புரை
கோட்டை வாசல் முகப்பு கண்டால்
பாடும் புலவர்க்கும் பிராமணர்க்கும்
பாலுக் காயிரம் பசு கொடுத்தான்
மீண்டு காளிங்கனறிய வென்றே
வெள்ளிக் கதவொன்று சமைக்கச் சொன்னான்

412 வீணாதிவீணன் குலசேகரனுடைய பெரிய மந்திரி என்று நினைத்து வரிக்காசு கொடுத்தார்கள்.

424 — குடக்காசு சேர்த்து நிலவறையில் ஒளித்து வைத்தான்.

பாண்டிய ராசர்களறிய வென்றே
பவளத் தூண்களும் நிறுத்துவானும்
நாட்டிலிருப்பவர் அறிய வென்றே
நாழிகை மணி தூக்குவானும்
கொடுத்த பணத்துக்கு வட்டி வாங்கி
குதிரை யிருபதுங் கட்டிக் கொண்டான்
விடுத்த பொந்திலி காங்கிலியர்
வெள்ளித் தடிகாரர் நூறு பேரும்
"வேந்தன் சேவகரிடும்பு செய்தால்
விலங்கில் போடுவேன் வெகு காலம்"
சாந்த குணத்துக்கு சமர்த்துக்காரன்
தடியால் கொடுக்கவும் சமர்த்துக்காரன்
மேல வெம்பனூர்க் கரையாளன்
வீட்டில் கலியாண முடித்துக் கொண்டான்
மேலுஞ் சோறிட்ட இலை வாணிச்சி
வீட்டைக் கல்வீடாய்க் கட்டிவைத்தான்
மூத்த மந்திரி வெள்ளாட்டியை
மூடி வாங்கி ஆனந்த லட்சுமி யென்பான்
கூத்துக்கு இருக்கின்ற சலுகைப் பெண்கள்
குடலைப் பிடுங்கியே வெருட்டிடுவான்
இரந்து திரிவாரை வேலை கொண்டு
லெச்சம் பணக்காரனாக்கி வைப்பான்
பார்க்குந் திசை தோறும் சுமை சுமையாய்
பணங்கள் தான் வந்து குவிந்திடுமாம்
புல்லுப் பறிப்பார்க்குக் கேள்வியுண்டு
பொருளைப் பறிப்பார்க்கு கேள்வியில்லை
செல்வ பாண்டியனறிவதற்காய்ச்
செய்யாத தொழில் வேணுமென்றான்
கொத்தளங்கள் கட்டினான்.
காஞ்சிபுரத்துக்குந் தென்குமரிக்குங்
கையில் பணம் அஞ்சு கல்யாணத்தில்
வாஞ்சியாய்க் கேட்டு வாங்க வென்றே
வலது தோளில் தடியெடுத்தான்

வேறு

அன்றைக்குந்தான் வள்ளியூர்க்குள்ளே களி"
அரமனை ராணுவத்தாரோட சேர்வை'

—தன்னுடைய தடிக்காரர் கூட்டத்தை
கலியாணத்துக்கு வரி வசூலித்தான்

மூன்றிலே காவனப் பந்தல் சடங்கு முடித்து
மூரியிடமான தாரைகள் பேரிகைகள் முழங்க
மாப்பிள்ளை யருகத்திடம் பெண்ணைப் பலகையில் வைத்து
மங்கலஞ் செய்திடும் பந்தலில் வீணனும் வந்தான்
கூப்புட்டுப் பொருந்தித் தடியதைச் சுற்றி
கொற்றவன் கற்பித்தான் யஞ்சி பணம் தாருமென்றான்
காப்புலி போலவன் மாமன் சமுதாட்டுக்காரன்
காட்டில் பறியாமல் வீட்டிலும் வந்தானோ கள்ளன்
குடக்காசு ஆதாயம் போதாதென்றே கொட்டிக் கொண்டான்
கோட்டையில் ராணுவத்தார்க்கு முண்டோ இந்தக் கொள்ளை
கடத்திச் சமுசாரி வீட்டினுள் கூத்தைப் போய்க் காட்டு
கத்திரிக்கு அவர் வரி வைத்திடுவாறென்றே கண்டாய்
நட்டமாய்க் காளிங்கன் வெள்ளாட்டியல்லோ நாங்கள்
நாட்டுக்குங் கோட்டைக்குங் எங்கள் வழக்கோ நடக்கும்
தாட்டிமை பேசினால் வெட்டுங்க வந்திடும் வேண்டாம்
வீறுடன் பேசி நூறெண்பது பேர்கள் வெகுண்டார்
கத்திக்காரனவர் வித்தாரமாய் நீட்டுங் கையில்
கைத்தடி கொண்டடித்தான் கீழே விழுந்து தேகத்தில்
சுத்தி வளைந்திடும் மாகுத்தன் மாரைத் துரத்தி
தூக்கிக் கீழே போட்டுக் காண்பவராய் போலேது கைத்திறன்
இந்த ஊர்ப்பட்டன் சாட்சி சொல்ல நின்றானென்றே
ஏழெட்டு வெள்ளித் தடிக்காரரும் மாரிலிடித்தாரே
கந்தை வெளுக்கின்ற வண்ணானுடன் சண்டைக்காரன்
காணாமலே கோழிக் கூட்டுக் குள்ளே சென்று கலந்தான்
பெண்ணுக் கிருந்தவள் கொண்டை குலைந்திடக் கண்டு
பேய்ப் பயல் மாப்பிள்ளை கையை விட்டோடிப் பிழைத்தான்
கண்ணான மூப்பன் காரியக்காரர்கள் கண்டு
கலகம் பண்ண வேண்டாமென்று பிடித்தார்களே கையை
பைப் பண மஞ்சும் வெற்றிலையுங் கொட்டைப் பாக்கும்
படியுங் கொடுத்து வாங்கிப் பயணப் படுத்தி
அய்யாவுந் தீர ஓர் கூர் எழுதியனுப்பி
அட்ட திசைக்கும் நடக்குதே வீணன் கதை
சாவுக் கஞ்சு பணம் வாங்கிட வென்று சமைந்தான்
சன்னாசித் தெய்வமாய் போனாரோ பாண்டியராசாக்கள்
பாவாடைக்குள்ளே சுமந்த பிணந்தன்னைப் பார்த்து

497—கூர்—எழுத்து 501—பாடை மீது சுமந்து செல்லப்படும் பிணத்துக்கு வீணாதிவீணன் வரி வசூலித்தான்

பாரத் தடியோடு சென்றான் சுடலைப் பரப்பில்
செத்தவர்க் கஞ்சு பணமென்றே யுத்தாரஞ் செய்தான்
சீக்கிரம் தந்து யனுப்புங்கோ வென்றே உறைத்தான்
புத்தித் துரைமக்கள் பல்லக்கு காவித் திரியும்
பூவண்டன் மாரைத் துடருமோ உன் அண்டப் பொய்தான்
மாட்டாத பேருக்குச் செல்வத்தைத் தெய்வம் வகுத்தால்
மாயன் பிணம் பணம் தந்திடு மென்றாக்கால் வாங்கு
கொட்டாலைக் காரா நீ போவென்று கோபித்து
கொட்டிக் கறவாமல் கொச்சைப் பசு பால் கொடாதோ
கீமந்துக் கட்டையைப் போல வொண்ணு எறிந்தால்
எல்லை சுழன்றிடுங் கொள்ளிக் குடத்திடி
செம்பரைப் பயல் செண்டைச் சாவையுந் தீர்த்தான்
தீச்சட்டிக்காரனோ ஒளிந்தானே கீத்தனுஞ் செடிக்குள்
கொண்டைச் சனங்களை சூரைச் செடிக்குள் கெடுத்து
குப்பைக் கழுதை போல பூவண்டன் மாரைக் குமைத்தான்
அண்டையில் நின்றோர்கள் சண்டை வராமல் மத்தி
அடித்துப் பறித்தான் கலியாணத்தில் பணமஞ்சும்
வள்ளியூர்ப் பாண்டியன் குலசேகரன் சொன்னவரி
மலையைப் பிடுங்கும் பணத்தைப் பிடுங்க மாட்டார்கள்
துள்ளாமல் காசைக் கொடுத்துப் பிணத்தைச் சுடுங்கோ
தோதகக் கூத்தாட வேண்டா மென்றெல்லோருஞ் சொன்னார்
அறியாமல் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளப்பா
அஞ்சு பணம் கொடுத்து வழிவிட்டனுப்பி
சேரியுந் திரளோடே வீணனும் வீட்டிலே சென்று
தேசத்துக் கெல்லாமெழுதி விட்டானந்தச் செய்தி
மண்டலந்தானெல்லாம் வீணாதி வீணன் மணியம்
மலைகடலுள்ள அரசர்க்கெல்லாம் குத்தகை வைத்தான்
தண்டல் கடமையும் மாயமு கோவில் தலமும்
சருவ விசாரிப்பும் வீணாதி வீணன் தனக்கே
நாட்டுக்குப் பாண்டியனுக்கினை என்று நடக்கும்
நாலு திசைக்கும் வர்த்தகனாய் நடந்தான்
காட்டில் பறித்தாலுங் கேள்விகளில்லாத காலம்
காரியக் காரருடனே சமர்த்தனிருந்தான்

507—முதல் பத்து அடிகள் பூவண்டன் என்ற படை வீணாதிவீணன், தாக்கியதைக் குறிக்கும்.

530—535 பெயருக்குப் பாண்டியன்
லாம் வீணாதி வீணன் வரி வசூல்

## குலசேகரன் ஒற்றறிதல்

### வேறு

கள்ளர் தனைக் கண்டால் கொல்லப் போமோ
கடுவாய் புலியன்றி கொல்லப் போமோ
உள்ளபடி யன்றி ஒளிக்கப் போமோ
யுத்தாரமின்றி நடத்தப் போமோ
பயிரை யழிக்கின்ற யானை பன்றி
வயிரக் கலி போன்று அழித்தவனை
வைத்துச் சுடுகல்லால் கொல்ல வேணும்
புத்திப் பொதியோர்க்குப் பிழைகள் செய்தால்
பொசிப்புக் கொடுத்ததை யறுக்க வேணும்
எத்தும் பல பொய்யு மிருப்பவர்கள்
ஈசன் பூசையை நடத்த வேணும்
கோவிலுடமையைக் கொள்ளையிட்டால்
குமரி வடகாசி காணவேணும்
வாவிக் கிணறுகள் தூர்த்தவர்கள்
வழியில் மடங்கட்டிப் பார்க்க வேணும்
மங்கிலிய மில்லாதவளைத் தொட்டால்
வாணாள் குறைந்து போமவர்களுக்கு
பங்கமாய் கர்ப்ப மளித்தவர்கள்
பண்ணின புண்ணியம் பாவமாமே
இந்தப் படியுள்ள உலக நீதி
எவர்க்கு மறிவித்துப் பறைசாற்றினனே
"அந்தப் பறைக்குள் நடக்கின்றதோ
அதுன விதனமாய் நடக்கின்றதோ
"கோட்டை தனைச் சுற்றிப் பார்க்க வேணும்
கூடவா திரு நீலகண்டா"
நீட்டக் கருங் கச்சை குறுங் குல்லாவும்
நெடிய மந்திரவாள் கேடகமும்
பிடித்துக் கரியானை வலஞ் சுத்தியே
பெருகு துரை மக்களறியாமலே
இடத்துப் பதுங்கியே இருளிலவர்
எதிரே வருகின்ற கிழவி சொல்வாள்
குடக் காசு வைத்துக் குலசேகரன்
கொடிய பாவஞ் சுமந்து கொண்டான்

536—504—குலசேகரன் நாட்டைச் சுற்றிப் பார்க்க வருகிறான். ஆட்சி முறை நீதி பிழையாமல் நடக்கிறதா?—என்று பார்க்க நீலகண்டனோடு வந்தான்.

நடக்குங் கொடுமையால் குலசேகரன்
நாட்டிலிருந்திட மாட்டாரென்றாள்
கேட்டுத் திரு நீலகண்ட பட்டன்
கிழவி யுரைத்ததைக் கேளு மென்றான்
இட்ட முடனோடிச் சென்றே
இந்த ஊர் பேரை எனக்குச் சொல்வாய்
"வள்ளியூர் என்று சொல்வார்—பலர்
"வழியைக் காட்டித்தா கிழவி" என்றான்
துள்ளும் நடையோடே பழகையிட்டுச்
சொன்ன மொழி தன்னைச் சொல்லுகிறாள்
மறந்து போயிப்போ நினைத்துக் கொண்டேன்
வள்ளியூர்ப் பாண்டியன் குலசேகரன்
இறந்து போனானோ இருப்பானோ!
எடுத்தான் குடத்துக் கோர் காசு என்றாள்
பாண்டியனதைக் கேட்டுக் கொண்டு
பல வேலைக்காரர் தெருவில் வந்தான்
பூண்ட பிணியாலே ஒருத்தி வீட்டில்
புருசன் செத்துப் போய் அவள் அழுதாள்
"கிளையு யென்னுடனிருந்தாரில்லையே
கேட்டாலொரு காசு தருவாரில்லை
குழிக்குள் போட்டுப் புதைத்தாலுங்
கூடச் சுமப்பதற் காருமில்லை
பாட்டில் கிடப்பானைக் காட்டிலிட
பச்சரிசியுங் கிடையாதே
வீட்டைப் பிடுங்கியே விறகிட்டாலும்
வீறாதி வீணன் விடுவானோ
மெழுகு தாலிமேல் பொன்னிருந்தால்
வித்துப் பணமஞ்சு கொடுக்கலாமே
ஒழுகு வள்ளியூர்க் குமரப்பனே
உனக்கே அபயமெ"ன்றே ழுதனளே,
அழுகுரல் கேட்டுப் பாண்டிய மன்னன்
அருகு சிறுக்கனை முக நோக்கி
வழுவாதவள் வீட்டில் கதவு தன்னில்
"மாறாகக் குறியிட்டு வாருமெ"ன்றான்
துடுக்காய் நடவாமல் பையச் சென்று

567—597 குலசேகரன் வள்ளியூர் வந்து பற்றி அறிதல்.

587—605— இறந்து போனவன் வீட்டில் முடியாமல் அழுத குரலைக் குலசேக

சுண்ணக் குறியிட்டுத் திரும்பி வந்தான்
கர்த்தன் பாண்டியன் கோயில் காலை சென்றான்
கதிரோன் உதயத்தைக் காட்டினனே
உதய வேளையில் தளகர்த்தரும்
ஊரில் துரைமக்கள் ராகுத்தரும்
பதினெட்டு நாட்டு ராணுவத்தார்
பக்கமிருபுறம் சேவிக்கவே,
மூத்த மந்திரி தன்னையழைத்து
மொழிந்தான் பாண்டியன் அருகிருத்தி
"கர்த்தன் காலத்தில் விளைவில்லையே
காலமாரிகள் பெய்த துண்டோ?
தேசம் திசை மன்னர் கொள்ளையுண்டோ?
செங்கோல் வழுவாமல் நடக்கிறதா ?"
பேசும் வார்த்தைக் கேட்டிருந்து
பின்பு காளிங்கன் எடுத்துரைப்பான்
"அரசர் கற்பனை யல்லாமல்
அதனமாய் ஒன்றும் நடக்கவில்லை"
வினய மந்திரி உரைத்த பேசது
வேந்தன் ஒட்டன் முகம் நோக்கி
"கங்குல் குறியிட்ட வீட்டினுளை
கடுக வரச் சொல்லிக் கண்ணைக் காட்டி
மங்குல் விடிந்த பின் ஒட்டன் சென்று
"மன்னன் சமூகத்தில் வருவாய்" என்றான்
"பொள்ளல் வீட்டிலே பிணங் கிடந்தால்
புகுந்து நாய் நரி பிடுங்காதோ ?
வள்ளல் எந்தன் மேனி தன்னை
மறைத்து வருக வோர் சீலையில்லை
இந்தக் கோலத்துக் கண்ணீரோடே
எந்தப் படியங்கே வருவேன்" என்றாள்
"கோதுங் குழலாளே அழவேண்டாம்
கூட வரும் போது குறை யொன்றில்லை
இட்டப் பாயிலே பிணஞ்சுருட்டு
இடிந்த கதவையும் எடுத்துச் சாத்தி
ஒட்டனுரைக்கும் வார்த்தையிலே
உள்ளம் பத்தியே உடனே போனாள்
கூட்டத்துரை மக்கள் சமூகத்திலே
குல சேகரன் தன்னைத் தொழுதனளே
இட்டும் பெண் கொடி முக நோக்கி
"இரவிலே என்ன சொல்லி யழுதாய்" என்றான்.

623 கங்குல்-இரவில்.

''மாலையிட்டவன் பிணமாய்ப் போனான்
வீட்டிலே குழந்தைகள் அஞ்சாறு உண்டும்
ஓலையொதுக்கில்லை கூரைக்குள்ளே
உப்புச் சிரட்டையும் காணாது
சுடலைக் காட்டிலே புகையைக் கண்டால்
துட்டுத் தடிக்காரன் வருவானே
மடவார் குடத்துக்கும் பிணம் தனக்கும்
வரியுண்டாச்சுதே என்று அழுதேனன்றி
கெடுதியாய்ச் சொல்லி அழுதேனில்லை
கேள்வி ராசாவே'' எனச் சொல்லினாள்
பெண்ணின் முகம் நோக்கிக் குலசேகரன்
பின்னும் செலவுக்குப் பணம் கொடுத்தார்
வன்ன மடவாளைப் போகச் சொல்லி
மந்திரி முகம் பார்த்து ஏதோ சொல்வார்

வேறு

''தடிக்கான் என்பவனாரடா?
வேண்டிச் சொல்கிற மந்திரி யாரோடா?
பேணியே குடக்காசு வாங்கவும்
பிணத்துக் கஞ்சு பணம் வாங்கச் சொன்னது
கலியாணத்துக்கு அஞ்சு பணம் வாங்கவும்
கண்ட பேர்க் கெல்லாம் காணியாய்ப் போச்சுதோ?
தலையாரிகளைக் கூட்டி வாருங்கோ
தமுக்குப் போட்டுக் கழுவுஞ் சமையுங்கோ
மதுரை நாட்டுக்குக் குதிரைக் காரர் சென்று
மந்திரி வீட்டை முத்திரை போ''டென்றான்
கதுவிப் பாளையக் காரரைக் கண்காட்டி
காரியக்காரர் தம்மை கொண்டு வந்தார்
தஞ்சாவூரில் வடுகரைக் கண்காட்டி
தம்பிமாரை மறித்துக் கொண்டு வந்தார்
குறிஞ்சிக் கூட்டந் தன்னை மிட்டக் கூப்பிட்டு
''கோட்டை வாசலில் கழுவதை நாட்''டென்றான்
அளவிடைப் பிரமாணத்தில் நில்லாமல்
ஆசை வைத்தால் அழியாதோ காளிங்கா
களவு செய்வானைக் கச்சை தொட்டாடவே
கன்னக் கோலுக்குத் தெய்வமுண்டோ
கெங்கைக்கும் சிப்பாணிக்குமாய்ப் பெண்கள்
குச்சு காத்துக் கிடக்கவே தேடினேன்
செங்கோல் தப்பி நடக்கின்ற காலத்தில்

சேரக் கூடியே தெய்வத்தை நேருவார்
உலகம் கூடி ஒருவனைத் திட்டினால்
ஓடிப் போய் சென்று ஒதுங்கத் தலமுண்டோ?
கலக நாடும் தடி வீணாதி வீணன்
கருவூலந் தேடி தரவென்றோ கற்பித்தாய்?''
என்று பாண்டியன் கோபித்த நேரத்தில்
இறைஞ்சிக் காளிங்கன் ராசாவுக் கேது சொன்னான்?
''அன்று பொந்தித் தடியால் அதிரு முன்னே
அஞ்சாறு நாளாய் சந்திப்பு காட்........
என்றபடி என்னிடத்தில் சந்தித்தான்.
பெருகும் சம்பளம் தான் வைத்தானோ இல்லை
அன்பினாலே கிராம மணியமாய்
அடியேன் கற்பித்து விட்டவனல்லவே
திருட்டியால் தொட்ட தெய்வத்தின் கோட்டி
தேவருத்தார மென இருந்தேனையா
மருட்டினான் நாட்டையும், கோட்டையும், காட்டையும்
வளைந்து தன்னுட நகருக்குள்ளாக்கினான்''
காளிங்கன் இப்படிச் சொல்லிக் காட்டவே
காரியக்காரர் தம்பி மாரைக் கேட்பார்
மேலுங் காளிங்கன் போலவே நாங்களும்
காளிங்கன் தன் சமூகத்துக் காணவே
கலகக்காரனைச் சீக்கிரம் காட்டென்றான்
கோல் வெள்ளித் தடிக்காரர் ஓடிப்போய்
''கொற்றவன் சொன்னார் நீ இப்போ' வா''வென்றார்
''வா'' என்று சொல்லிப் ''போ'' என்று சொல்லியே
மல்லரை விட்டு ''வாசலடை'' என்றான்
வைத்த தூதுவர் காவலன் முன்னமே
இடித்துத் தள்ளி அடைத்தான் கதவென்றார்
''தேசத்திலே விசாரிப்புக் குன்றினால்
செத்துப் போவது புத்தி தீரமே'' என்றார்
கோசி மெய் காரர்தான் பின் கெட்டு
கூட்டி வந்திட மாட்டாமல் கூசினார்
கப்பல் காரர் மிலேச்சரைக் கண்காட்டி
''காப்பிலி மார்களைக் கூப்பிடவா'' வென்றார்
அப்படிக் கவர் யெதிரே போய் நின்று,
''அரசனுத்தாரம் வா'' வென்றழைத்தனர்

வேறு

வள்ளியூர் ஆளும் குலசேகரப் பெருமான்
மன்னன் போனானென்று கேட்டது மூணு வருடம்

தெள்ளிய, தம்பிமார் காளிங்கனோடே திரண்டே
.........ஆய்ப் போனது உலகெட்டென சொல்
இன்றைக்கிருக்கிறுரென்றே திருவாலியேதோ
இந்தப் பொய் சொல்லியோ கூட்டி வந்தீர் நீங்கள் என்ருர்
அன்ருடம் கால்ப்பணத்துக்குத் தேடி உண்ணுமல்
அடித்துப் பறித்தவன் இப்படிச் சொல்லவும் ஆச்சோ
தூக்கினுன் முந்திப்பிடி கட்ட வாராயோ "என்று
சொன்னுன்.
என்று துடுக்காகச் சொல்கின்ற பட்டாணி சொன்னுன்
வாக்கது சொல்லுமுன் அஞ்சாறு கன்னத்தில் வைத்து
மட்டு விட்டுத் துள்ளிப் பூட்டிக் கொண்டான் தலைவாசல்
சேரத் தலைவிரி கோலமாயோடி முன் சென்று
"தேசத்தை யாள்கின்ற ராசதுரை யானதென்ன?
பாரிலுனக்கில்லை வீணுதி வீணன் தனக்கே பட்டம்
பாண்டி நாட்டை விட்டுப் போவதே உங்க ஆணை எடுப்ப
தட்டிச் சொன்னேன்; இரு கன்னத்துப் பல்லைத் தகர்த்தான்
சம்பளம் தந்து நீர் சேவகம் கொண்டது சட்டம்
கிட்ட இருந்து துரைமக்கள் சொல்லை கேட்டு
"கிணத்தங்கரை காசிருந்து விளைகின்ற கேடு
வைத்துப் பார்த்தால் கெட்டி வராது சுத்தி வளர்த்து
மதங் கொண்ட யானையை விட்டே இடியுங்கோ வாசல்"
தம்பிமார்க்காரியக் காரரும் ராணுவத்தாரும்
சந்தியில் வந்தவர் போர்க் கோலங்கேட்டுச் சமைந்தார்
கொம்புக் கரியின் துதிக்கைக்கு உலக்கை கொடுத்தார்
குழல் காரனுக்கு துப்பட்டி தலைப்பா கொடுத்தார்
வெள்ளைக் குதிரை மேல் பட்டாணி தடிகள் வீச
"வீணுதி வீணனே வா" வென்று வையாணி விட்டார்
"கொள்ளைக் குடக்காசையள்ளிக் கொண்டோடி வாவே"
குதிரைப்படை யோடவே கச்சந்திக்காரருங் கூடி
"பாண்டியன் தன்னை எதிராளியாகப் பகைத்தான்
பதினெட்டின் இன செல்வத்தை யெல்லாம் பறித்தான்"
கரண்டக்கை மேவிய ஒட்டன் திருநீல கண்டன்
காரியக்காரரை எல்லாம் அமர்த்தினுன் கையால்
வாசலில் நான் போய் ஒரு வார்த்தை சொல்லி வருமட்டும்
வந்த படையெல்லாம் நிக்கச் சொல்லி போனுன் வாசல்
அந்த ஒட்டன் போய் வீணுதி வீணனுக்கே
ஆசனத்தில் போயிருந்தவன் வார்த்தை யளந்தான்

வேறு

குடக் காசு வாங்குதற்கு
கொடுத்தவனுத் தாரமுண்டோ?

நடக்கு மென்று சொன்னார்கள்
நன்மை தின்மைக் கஞ்சு பணம்
சொன்னவரைச் சொல்லி விடு
சொல்லாதிருந்த துண்டால்
கன்னமிட்ட காசிருந்தால்
கழுவேறப் போவானேன்?
காசு கண்டாலரசர்கள்
களவு சோதிப்பாரோ?
பேசு வதற்கு வாராமல்
புறங்காட்டியிருப்பாயோ
வீடு தன்னில் பணமிருந்தால்
விதனச் சொல் கேட்பாயோ?
நாடு கட்டியாளு தற்கு
நற் கால முண்டாச்சு
தலையளவு வந்தாலும்
சடைவு வர விடுவாயோ?
குல சேகரனி டத்தில்
கூட 'வா' வென்றுரைத்தான்,
உருவின வாளொரு கையாலே,
உயர்ந்த பொந்தித் தடியொருகை
திருகு முளைச்ச தோடு
சேர்த்தானே யொரு புரத்தில்
பிடிக்கடங்கா பொன்னரை ஞாண்
பெருகு குஞ்சிப்பட்டரை ஞாண்
குடக்கடுக்க நாழிப்பணம்
கொண்டை முத்துக் கடுக்கனிட்டு,
தொண்ணூறு களஞ்சிப்படி
தூசிப் பொன் பதக்கனிட்டு
காதவழி மணக்கு மந்த
கைத் தூரி தான் பூசி
தூதுவருஞ் சேவுகனும்
சுத்திவர வே நடந்து
செம்பு கம்பளிக் காரன்
சிறுக்கன் முன்னே யடைப்ப மிட
கெம்பியக் கட்டியக் காரர்
கிளர்ந்த சங்கீதம் படிக்க
பொற்பாதக் குறடுமிட்டு
புலி முறுக் குப்போல நடந்தான்.
தட்ட ராணுவத்தார்
தள்ளி நிற்கச் சட்டமிட்டு

நடுச் சபையில் வந்து நின்று
நாடியிலே தடி யூன்றி
வடுப்படா பாண்டியனை
வணங்காமல் நின்றனனே
" கூத்தாடி யானாலும்
கும்பிடுவான் வந்து நின்று
காத்தவனைக் கொண்டாடுங்
கைத்தடிப் பேயாட்டமுண்டோ ?
சந்திப்பு வைக்கவில்லை
தாள்ச் செருப்பு நீக்க வில்லை
வந்த செய்தி சொல்லவில்லை
மடை உடியில் பூதமிதோ ?
விறகெடுத்த புத்திதன்னை
விழுங்க வந்த புத்தியிதோ ?"
முணு முணுத்துச் சனங்களெல்லாம்
முழுக் கோவங் கொண்டு நிற்க,
அடக்க முடன் பாண்டியனார்
அறியாத வகை நகைத்து
" குடக் காசுக் குத்தாரங்
கொடுத்த தார் ?" எனக் கேட்டார்
" அடியேன் வந்தேனென "வே
அஞ்சலி செய்தே வணங்கி
" காடு வெட்டிப் பயிரெடுத்த
கையறிய மாட் டேனோ ?
பாடுபட்டு வியாபாரம்
பண்ணுதற்கு
என்னைப் போல வீட்டுவழி
இரந்து குடித்தாருமுண்டோ ?
மின்னிடை யார் தன் காலால்
மிதிபட்ட பேரு முண்டோ ?
பாண்டியனே நீ என்னைப் போல
பட்டினியாய்க் கிடந்ததுண்டோ ?
வேண்டாத தன்பமதை
விலக்கி வைக்கத் திறமுமுண்டோ ?
ஊர் முழுதும் அழுதழுது
ஓலமிட்டுந் திரிந்தேனே
சாருமிந்தச் சன முழுதும்
சாகாமலிருந்தீரோ ?
அழுதபிள்ளைக் கிரங் காட்டால்
அம்மையுண்டோ ? அப்பனுண்டோ ?

தொழுவேறி விழும்புலியை
துரைமக்கள் குத்தாரோ ?
உங்களுக்குத் தண்டி வரும்
ஊர்ப் பகுதி குறைந்ததுண்டோ ?
தங்களுக்குக் கேள்வியுண்டு
தனித் தவர்க்குக் கேள்வியில்லை.
பணங் கொடுத்துக் கன்னடியன்
படை கூட்ட மாட்டானோ ?
களத்திலுள்ள பாண்டியனைக்
கழுத்தறுக்க மாட்டானோ ?
வெட்டவருஞ் சேவகனை
விலக்காதோ குடக்காசு ?
கட்டி யென்னை வெட்டி வைத்தால்
கரும்பூதமாக வந்து
கோட்டை தன்னை தீக் கொளுத்தி
குடி வெருட்ட மாட்டேனோ ?
ஊட்டுகின்ற வாணிச்சி போல்
உங்களுக்குப் புத்தியுண்டோ ?
பாப்பாவை மந்திரியாய்
வைத்திருந்த ராசாவே !
பண்புடைய என்வீட்டில்
பணச் சுமையைப் பாரு மென்றான்

வேறு

கிடக்கின்ற மந்திரியைப் பார்த்து
கீழ் அறைக் காசும் மேலவரட் டென்றால்
பொட்டகம் இருநூறு வருகுதாம்

770—828 வீணாதி வீணனை சிறை செய்து கொண்டு வந்தனர், அவனுக்கும் குலசேகரனுக்கும் நடந்த பேச்சு. வீணாதி வீணன் அரசனை மதிக்காமல் நின்றான். குலசேகரன் வரி வசூலிக்க யார் அதிகாரம் அளித்தது என்று கேட்டான் குலசேகரனை ·நோக்கி வீணாதி வீணன் கூறுவது உழைத்துப் பிழைக்க உன் நாட்டில் வழியில்லை. ஏய்த்துப் பிழைப்பவர், தடியெடுத்து தண்டல் செய்பவர்களுக்கு வழியுண்டு. இந்தச் சமுதாயத்தை மாற்ற வேண்டும். உழைக்கத் தயாராயுள்ளவர்களுக்கு வேலை கொடுத்து, ஆட்சி செய்ய வேண்டும். ஊழல்களை அகற்ற வேண்டும் என்று வேண்டி, தான் கொள்ளையடித்த சொத்துக்களை அரசனிடம் ஒப்படைத்தான்.

பொன்னினால் எண்பது...... ...
வெள்ளிக்காசு மரக்கால் இருபது
வராகன் தானும் மரக்கால் ஒன்பது
தள்ளிவில்லிட்ட காசும் மேல்படி
தங்கக் காசு குறுணியளந்தனன்
இன்னும் வேண்டிய தெல்லா மிருப்பதால்
மன்னவன் அதைக் கேட்டுப் கிளர்ந்துதான்
மதயானை அலங்காரம் பண்ணியே
ஆயிரம் பொன் வெகுமானம் பண்ணியே
அவனி மயக்க பவனி வரச் சொன்னார்
வாய்த்த தம்பிமார் மந்திரிமாரையும்
வள்ளியூர் சுத்திக் கூடவரச் சொன்னார்
பட்டணத்தை வலஞ்சுத்தி வந்தபின்
பாண்டியனை வலஞ்சுத்திச் சேவித்தான்.
"மட்டில்லாத விறகு சுமந்தேன் நான்
மதயானை சுமந்துதே என்னைத்தான்,
முன்னமே உன்னைச் சந்தித்த பாக்கியம்
மூன்று கோடி பணக்காரன் ஆனேன் நான்
உன்னைக் கேளாது உனக் கென்று தேடினேன்
உலகில் குத்தம் எனக்கில்லைதான்" என்றான்.
"புன்மை தின்மைக்கு அஞ்சுபணம் நீக்கினேன்
நாட்டில் அக்குடக்காசையும் நீக்கினேன்
புன்மையான புலையாட்டுத் தேடினேன்
பொக்கிஷத்துக் குள்ளே போட்டுக்கொள்வாய்
ஆறிலொன்று பணத்தைப் பகிர்ந்துதான்
ஆண்டவன் வள்ளியூர் தெய்வத்துக்காக்கினா
மாறிலாறு பங்கை எடுத்தவன்
வறுமை கண்ட பெரியோர்க் கீந்தனன்
பின்னொரு பங்கை எடுத்தவன்.
பிராமணர் வேள்விக்காகக் கொடுத்தனன்.
பின்னொரு பங்கை சிவாலயம்
பூசை செய்திடத் தேசத் திலிட்டனன்
பொக்கிஷத்தில் ஒரு பங்கு போட்டனன்.
புகழும் வீணாதி வீணனுக்கோர் பங்கு
இலக்குத் தப்பாமல் வீணாதி வீணனை
இளைய மந்திரியாய் வைத்துக் கொண்டனன்

## வாழ்த்து

வள்ளியூர் குமரப்பன் வாழிதான்
வன்மை சேர் குலபாண்டியன் வாழிதான்

900 தெள்ளி தான கவிராசன் வாழிதான்
செந்தமிழ் வீரர்களும் வாழிதான்
சுத்த மேகமும் பூமியும் வாழிதான்
சைவ சிந்தாமணிப் புலவோர் வாழி
புத்தி கூர்ந்து படிப்பவர் கேட்பவர் வாழி
பொருளும் இன்பமும் பூதலம் வாழி
வீரோதி வீணன் கதை முடிந்தது.

முற்றும் நன்றாக.

—o—